# யாத்திராகமம்

## வேதவாசிப்புக் குறிப்புகள்



தாமஸ் உவாக்கர்

# யாத்திராகமம்

## வேதவாசிப்புக் குறிப்புகள்

சங்கை தாமஸ் உவாக்கர்

சுவிசேஷ ஊழிய நூல் நிலையம்
95-A, வேப்பேரி நெடுஞ்சாலை
சென்னை-600 007

Pub. No. 320 A - TAMIL

| | | |
|---|---|---|
| First Edition | : | March 1995 |
| Copies | : | 2000 |
| First Reprint | : | November 2007 |
| Copies | : | 2000 |

**BIBLE READINGS ON EXODUS**

The Rev. Thomas Walker, M.A.,

© EVANGELICAL LITERATURE SERVICE 1995

Cover design : T. Allwyn

Type setting by :
Sree Lathaa Computers, Chennai - 600 021

Bhawana Printers, Chennai-79. Tel : 25208976

Discount
Price 36

SAMUEL BIBLE & BOOKS
Opposit Govt. Polytechnic
Palayamkottai Road
THOOTHUKUDI - 8.

# முகவுரை

யாத்திராகமத்திலுள்ள மறைபொருளான அநேக சத்தியங்களை யாவரும் எளிதில் அறிந்துகொள்ளும் வண்ணமாக, சில வருடங்களுக்கு முன்னர், கனம் உவாக்கர் ஐயரவர்களால், இவ்வேத வாசிப்புக் குறிப்புகள் பிரசுரிக்கப் பட்டன. சங்கை உவாக்கர் ஐயர் 1912இல் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இந்த அருமையான வியாக்கியானக் குறிப்புகள் ஏராளமான தமிழ் கிறிஸ்தவர்களுக்குப் பிரயோஜனமாகவும், ஆத்மீக வளர்ச்சிக்கு அனுகூலமாகவு மிருந்தமையால், அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க, முதலாவது 'தனியாள் வேலைத் தீபிகை' என்ற மாதாந்திரப் பத்திரிகையில் பங்கு பங்காக வெளியிடப்பட்டு வந்தது. இப்போதும், இக்குறிப்புகளை ஒரே புத்தகமாக வெளி யிடுதல் அநேகருக்குப் பிரயோஜனமாயிருக்குமென் றெண்ணி, வேத ஆராய்ச்சி வகுப்பினருக்கு உபயோகமாக, ஒவ்வொரு அதிகாரத்தின் முடிவில் அதன் சம்பந்தமான சில கேள்விகளுடன், இவ்விரண்டாம் பதிப்பை வெளியிடத் தீர்மானித்தோம்.

இக்குறிப்புகளின் மூலமாய் யாத்திராகமத்திலுள்ள உன்னதமான சத்தியங்களை அநேகர் ஆராய்ந்து, ஆத்மீக ஜீவியத்தில் வளர்ந்தேறும்படியாக தேவன்தாமே கிருபை செய்வாராக.

**- லிங்கன் உவாட்ஸ்**

# பொருளடக்கம்


| அதிகாரம் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | சிறையிருப்பின் கசப்பை உணர்ந்து கொள்ளுதல் | 1 |
| 2. | அடிமைகளைத் தேவன் கண்ணோக்குதல் | 4 |
| 3. | தூதனை ஆயத்தப்படுத்தல் | 8 |
| 4. | தூதன் புறப்பட்டுப் போகுதல் | 18 |
| 5. | சத்துரு மூர்க்கம் கொள்ளுதல் | 26 |
| 6. | விசுவாசிகள் ஆறுதல் அடைதல் | 31 |
| 7. | தேவனுடைய அடையாளங்களை அசட்டைப்பண்ணுதல் | 35 |
| 8. | கர்த்தருடைய விரல் நீட்டப்படுதல் | 42 |
| 9. | பெரிய போராட்டம் | 46 |
| 10. | வஞ்சனை செய்தல் | 49 |
| 11. | தேவனுடைய கோபாக்கினையைக் கூறுதல் | 54 |
| 12. | விடுதலையை அடைந்துகொள்ளுதல் | 58 |
| 13. | பிரயாணம் புறப்படுதல் | 66 |
| 14. | விசுவாசம் வைக்குதல் | 71 |
| 15. | ஸ்தோத்திர கீதம் பாடுதல் | 78 |
| 16. | வானாகாரம் புசித்தல் | 87 |
| 17. | யுத்தம்பண்ணுதல் | 95 |
| 18. | சகோதர சிநேகம் பாராட்டுதல் | 103 |
| 19. | கர்த்தரை அண்டிக்கொள்ளுதல் | 112 |
| 20. | நீதிப்பிரமாணத்தைக் கற்றுக்கொள்ளுதல் | 117 |

| அதிகாரம் | தலைப்பு | பக்கம் |
| --- | --- | --- |
| 21. | நீதியோடு நடத்தல் | 121 |
| 22. | பரிசுத்தமாய் நடத்தல் | 124 |
| 23. | கவனமாய் நடத்தல் | 127 |
| 24. | தேவனைச் சமீபித்துச் சேருதல் | 130 |
| 25. | தேவநோக்கம் வெளிப்படுதல் | 136 |
| 26. | வாசஸ்தலத்தின் மாதிரியைக் காண்பித்தல் | 144 |
| 27. | பிரகாரத்தின் விசேஷங்களைக் காட்டுதல் | 156 |
| 28. | ஆசாரிய ஊழியத்தை ஏற்படுத்துதல் | 163 |
| 29. | பிரதிஷ்டையாக்கப்படுதல் | 172 |
| 30. | சுகந்த வாசனை உண்டாகுதல் | 182 |
| 31. | ஆவியின் ஞானம் அருளப்படுதல் | 189 |
| 32. | சபை தீட்டுப்பட்டுப்போகுதல் | 192 |
| 33. | தேவசமுகம் தூரமாய் நீங்கிப்போகுதல் | 200 |
| 34. | தேவகிருபையை மறுபடியும் பெற்றுக்கொள்ளுதல் | 207 |
| 35. | காணிக்கையைக் கொண்டுவருதல் | 215 |
| 36-39. | கர்த்தருடைய வாசஸ்தலத்தை ஆயத்தப்படுத்தல் | 220 |
| 40. | வாசஸ்தலம் தேவமகிமையால் நிரப்பப்படுதல் | 227 |

# யாத்திராகமம்

## இவ்வாகமத்தில் விளங்கும் தேவனுடைய சிறந்த நோக்கம்

*பாவத்துக்கு அடிமையானவர்களை மீட்டு இரட்சிப்பதும், தாம் மீட்டவர்களைப் பரிசுத்தம்பண்ணித் தம்முடைய வாசஸ்தலமாக்கிக்கொள்வதுமே தேவனுடைய திருவுள சித்தம்.*

## I. இவ்வாகமத்தின் முக்கியமான பிரிவுகள்

1. **அடிமைத்தன தேசம்:** *அதி. 1-12.*
2. **விடுதலையடைந்த ஜனம்:** *அதி. 13-23.*
3. **கர்த்தருடைய வாசஸ்தலம்:** *அதி. 24-40.*

## II. இவ்வாகமத்தில் அடிக்கடி வருகிற பதங்கள்

*1. 'எகிப்திலிருந்து' அல்லது 'தேசத்திலிருந்து'.*

*2. 'போகவிடு' அல்லது 'அனுப்பிவிடு'*

*3. 'கோல்'*

*4. 'வாசஸ்தலம்' முதலிய இவ்வார்த்தைகள் வரும் வசனங்களில் இவைகளுக்கு அடையாளம் போடுவது நல்லது.*

## பாகம் ஒன்று

# 1ஆம் அதிகாரம்

## அடிமைத்தன தேசம். அதி. 1–12.

## சிறையிருப்பின் கசப்பை உணர்ந்துகொள்ளுதல்

*பிசாசுக்கு அடிமைகளாயிருப்பது மகா கடினமான காரியம் (யோவான் 8:34; அப். 9:5; 2 பேதுரு 2:19; ரோமர் 6:16-20).*

**கவனிப்பு:** *பார்வோன் இராஜா இஸ்ரவேலரைக் கொடுமையாய் நடத்தினதுபோல், சாத்தான் தன் அடிமைகளைக் கொடுமையாய் நடத்தி வருகிறான் என்பது இவ்வதிகாரத்தில் காட்டின போதனை. அவனுக்கும் புதிய இராஜா என்று பெயர் (வச. 8,15,17,18). ஏனென்றால் ஆதியிலே இராஜாவாயிராமல், அவன் இடையில் வந்து தனக்கென்று இராஜரீகத்தைக் கள்ளத்தனமாய் எடுத்துக்கொண்டு, பாவமுள்ள மனிதர்கள் பேரில் அதிகாரம் செலுத்தி வருகிறான்.*

## இவ்வதிகாரத்தில் நாம் கவனிக்கத்தக்க சில குறிப்புகள்

*1.* **பிசாசு கொள்ளும் பொறாமை:** *வச. 9; "நம்மிலும் ஏராளமானவர்களும், பலத்தவர்களுமாய் இருக்கிறார்கள்." தனக்கில்லாத சுகவாழ்வும் தேவ தயவும் மற்றவர்களுக்கு இருக்கலாகாது என்பது அவன் கருத்து.*

*2.* **பிசாசு செய்யும் வஞ்சனை.** *வச. 10: "அவர்களைக் குறித்து ஓர் உபாயம் பண்ணவேண்டும் என்றான்." தன் அடிமைகள் தன் கைவசத்திலிருந்துத் தப்பாதபடிக்குப் பிசாசு நடப்பிக்கும் உபாய தந்திரங்கள் அநேகம் (2 கொரி. 2:11; 11:3; 2பேதுரு 2:14, 18).*

**உதாரணம்** *: அப். 13:7, 8, 44, 45.*

*3.* **பிசாசு சுமத்தும் சுமை.** *வச. 11; "அவர்களைச் சுமைசுமக்கிற வேலையினால் ஒடுக்கும்படி".*

**உதாரணம்** *: மாற்கு 5:2 5; லூக்கா 13:11-16.*

*4.* **பிசாசு ஆளும் ஆளுகை.** *வச. 11; "ஒடுக்கும்படிக்கு அவர்கள்மேல் விசாரணைக்காரரை வைத்தார்கள்". அதைப்போல, தன் அடிமைகள் பேரில் பிசாசு விசாரணைக்காரரை வைக்கிறதுண்டு. குணப்படாத பாவி எங்கே போனாலும், அவனை விசாரிக்கிற சாத்தானின் தூதர்கள் கூடவே போவார்களெனலாம். இது எவ்வளவு பயங்கரமான காவல் (1 யோவான் 5:19; ஏசாயா 57:20,21).*

*5.* **பிசாசு சாதிக்கும் பகை.** *வச. 12, "இஸ்ரவேல் புத்திரரைக் குறித்து ஏரிச்சலடைந்தார்கள்" (வெளி. 12:12, மாற்கு 9:20; அப். 5:17, 18). இரட்சிப்பின் கிரியைகள் எங்கே நடக்கின்றனவோ அங்கே உக்கிர கோபத்தோடே சாத்தான் எழும்பி எதிர்த்து நிற்பான்.*

*6.* **பிசாசு செய்யும் கொடுமை.** *வச. 13, 14; "கொடுமையாய் வேலை வாங்கினார்கள்;" அவர்களுக்கு "அவர்கள் ஜீவனையும் கசப்பாக்கினார்கள்;" "அவர்களைக் கொடுமையாய் நடத்தினார்கள்." சாத்தான் கொடுங்கோலரசன்! (2 நாளா 33:11; மத். 27:5).*

*7.* **பிசாசு எடுக்கும் பிரயாசை.** *வச. 15, 22; சாத்தான் தூங்குவதுமில்லை, சும்மா இருப்பதுமில்லை. தன்னால்*

இயன்ற முயற்சிகளையெல்லாம் செய்து பார்க்கிறான். தன் ஜனங்களை நயமும் பயமுமாய் நடத்துகிறான். இவ்வுலகத்தார் கிறிஸ்து இரட்சகருடைய அடியாராகாத படி, அவன் ஆதிச்சபை காலத்தில் எடுத்தப் பிரயாசங்களைப் பின்வரும் வசனங்களை ஆராய்ந்து பார்த்து, நன்றாய் அறிந்துகொள்க (அப். *4:1-3; 5:1, 2, 40; 6:1; 7:59; 8:1; 9:1, 2, 23, 24; 11:2, 3; 12:1-3; 13:50; 14:5, 6, 19; 15:1*).

**கவனிப்பு:** அடிமைத்தனத்தின் கஷ்டங்களும் கொடுமைகளும் இவ்வதிகாரத்தில் வழங்கிய வார்த்தைகளால் நன்றாய்த் தெரிகின்றன. அவையாவன: 'சுமை' வச. *11*; 'வேலை' வச. *11, 13, 14*; 'கொடுமை' வச. *13, 14*; 'ஒடுக்கம்' வச. *11, 12*; 'கசப்பு' வச. *14*.

**கவனிப்பு:** பிசாசு கொண்டிருக்கிற நோக்கமும் இங்கே முதன்மையாக விளங்குகிறது. "அவர்கள் ... தேசத்தை விட்டுப்போகாதபடிக்கு ஒரு உபாயம்பண்ணவேண்டும் என்றான்." (வச. *10*) தன் ஆதீனத்துக்குட்பட்டவர்கள் முற்றிலும் தப்பித்துக்கொள்ளக் கூடாதென்பது அவன் பிரதானமான நோக்கம். ஜனங்கள் ஜெபம்பண்ணினாலும் வேதம் வாசித்தாலும், ஆராதனை செய்தாலும், வேறெதைச் செய்தாலும் அவர்கள் மனம்மாறிக் குணப்பட்டு, புது சிருஷ்டிகளாகக்கூடாதென்பதே அவனுடைய கருத்து.

**கேள்விகள் :**

1. இவ்வதிகாரத்தைப் பின்வரும் பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு தலைப்பு ஏழுதுக. (அ) வச. *1-7*. (ஆ) வச. *8-14*. (இ) வச. *15-21*. (ஈ) வச. *22*.

2. 'புதிய இராஜா ஒருவன் தோன்றினான்' என்பதற்கு அர்த்தம் என்ன? அவன் யோசேப்பை அறியாதவன் என்று எப்படிச் சொல்லலாம்?

*3. ஆட்சியின் சம்பந்தமான நியாயங்களினிமித்தம் எகிப்திய இராஜா இஸ்ரவேலருக்காக ஏற்பாடு செய்ய அவசியமாயிருந்தது என்று சொல்லலாமா?*

*4. பார்வோன் இஸ்ரவேலரைப்பற்றி ஏற்பாடு செய்தபோது தேவனைப்பற்றி அவன் நினைக்கவில்லையே. நமது காலத்தில் ஆளுகை செய்கிறவர்கள் தேவனை நினைக்காமல் செய்த ஏற்பாடுகள் ஏதாவது உமக்குத் தெரியுமா?*

*5. மருத்துவச்சிகள் பொய் பேசினதினால் ஆண்டவர் அவர்களை ஆசீர்வதித்தாரென்று சொல்வதற்கு இடமுண்டோ?*

*6. இராஜாவின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமற் போனதில் மருத்துவச்சிகள் நமக்கு நல்ல முன்மாதிரிகளா யிருந்தது எப்படி?*

*7. இஸ்ரவேலருக்குப் பிறக்கும் ஆண் பிள்ளைகளை நதியில் போடும்படிக்கு இராஜா யாருக்குக் கட்டளை கொடுத்தான்?*

# 2ஆம் அதிகாரம்

## அடிமைகளைத் தேவன் கண்ணோக்குதல்

*கவனிப்பு : எப்பொழுது அடிமைத்தனம் ஆத்துமாக்களுக்கு மகா கசப்பாய்த் தோன்றுகிறதோ அப்பொழுதே கர்த்தர் தம்முடைய மீட்பை வெளிப்படுத்த ஆரம்பிக்கிறார் (யோவான் 5:5-7)*

*1. **மீட்பனுடைய பிறப்பு.** வச. 1-10; இந்தப் பாகத்தில் 'பிள்ளை' என்பது 10 முறை வருகிறது. இந்தப் 'பிள்ளை' பிறப்பது வெகு விசேஷம். சில காரியங்களில் மோசே நம்முடைய இரட்சகர் இயேசு பெருமானுக்கு ஒத்தவன் என்று சொல்லலாம்.*

அ. **ஜனங்களில் ஒருவன் :** *வச. 6; "இது எபிரெயப் பிள்ளைகளில் ஒன்று." "அவன் தன் சகோதரரிடத்தில் போனான்." (வச. 11; ஏசாயா 9:6; சங். 89:19; எபி. 2:11-18, ஒத்துப்பார்க்க).*

ஆ. **தேவ செயலாய்க் காக்கப்பட்டவன்.** *(வச. 4, 5, 6, 10; மத். 2:10-18 ஒத்துப்பார்க்க).*

இ. **அமைதலோடு வளர்ந்தவன்.** *(வச. 9, 10; லூக்கா 2:39, 40, 50, 51 காண்க).*

ஈ. **வெகுகாலம் பொறுமையோடே காத்திருந்தவன்.** *(வச. 11; அப். 7:22, 23; லூக்கா 2:51; 3:23 பார்க்கவும்).*

*சில காரியங்களிலோ இவனுக்கும் பரிசுத்தமுள்ள இயேசுநாதருக்கும் அதிக வேறுபாடு உள்ளது.*

**கவனிப்பு :** நாம் மோசேயைப்போல கர்த்தருடைய மீட்பைக் கூறும் தாசர்களாயிருக்கவேண்டுமானால் தேவனுடைய பாதுகாப்பு இன்னதென்று நம்முடைய சொந்த அனுபவத்தில் கண்டறிவதோடுகூட, ஜனங்களோடு அனுதாபப்படுகிறவர்களும் ஞானத்திலும் தேவ பக்தியிலும் வளர்ந்தவர்களுமாயிருப்பது அவசியம்.

2. **மாம்ச பிரயாசம்.** வச. 11-22; மோசே தன் சுய சித்தத்தின்படி தன் ஜனங்களை விடுதலைபண்ண ஏற்பட்டதாகத் தோன்றுகிறது.

அ. **பெரியவனானான்.** வச. 11; அப். 7:22, 23. எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் தேறினவன். "வாக்கிலும் செய்கையிலும் வல்லவன்." ஆனாலும் உலக ஞானத்தினாலும், அந்தஸ்து வாக்குவல்லமையினாலும் இரட்சிப்பின் கிரியைகள் நடைபெறாது. அக்கினி அவசியம் வேண்டும் *(யாத். 3:2; அப். 1:8; 1 கொரி. 1:27-29; 2; 1, 2).*

ஆ. **பார்த்துப் பரிதபித்தான்.** *வச. 11; அப். 7:24,* தேவ ஊழியத்தில் அன்பும் பரிதாபமும் மிகவும் அவசியம் *(மத். 9:36; அப். 17:16).*

இ. **முயற்சி செய்தான்.** *வச. 11, 12; அப். 7:24, 25;* அதனால்தான் மீட்பனென்று அவர்களுக்கு விளங்குமென்றெண்ணினான். வீண் எண்ணம்! *(ஏசாயா 55; 8, 9)* நாம் பரிசுத்த ஆவியானவரால் ஏவுதலடைந்து செய்யும் முயற்சிகள் மாத்திரம் நிறைவேறும் என்றறிக.

ஈ. **தவறிப்போனான்.** *வச. 13, 14; அப். 7; 26-28.* தேவனுடைய சித்தத்தையும் காலத்தையும் அறியாமல் தவறிப்போனான் *(எபே. 5:17).*

உ. **பரதேசியானான்.** *வச. 15-22; எபி. 11; 24-27.* அந்நிய இடங்களில் வனவாசம் செய்து, மந்தை மேய்த்து, பலவிதமாய்க் கர்த்தருடைய சித்தத்தை அறிந்துகொண்டு தான் செய்யப்போகிற பெரிய உத்தியோகத்துக்குத் தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இனி *40* வருட காலம் காத்திருக்கவேண்டியதாய் நேரிட்டது *(அப். 7:29, 30).*

மோசே தன் மாம்ச சித்தத்தின்படி நடந்து, வீண் முயற்சி பண்ணியதால் இவ்வளவு தாமதம் நேரிட்டதோ தெரியாது.

ஆ! நாம் ஆவியின்படி ஊழியம் செய்யாமல், மாம்சத்தின்படி ஊழியம் செய்வதினாலே விடுதலையாக வேண்டிய பிசாசின் அடிமைகள் எத்தனையோ பேர் விடுதலை பெறாமல் சிறையிருப்பின் கசப்பை அனுபவித்து வருகிறார்கள்.

மனிதன் தவறினாலும் தேவன் தம்முடைய திருநோக்கத்தை தவறவிடார்.

*3. **கர்த்தருடைய கிருபையின் கண்கள்.** வச. 23-25;* அவர் கிருபையோடே நோக்கிப் பார்த்தால் எல்லாம் ஆகும்.

ஆ. ***அடிமைகளுடைய துன்பம் ஒரு பக்கம்.*** *'தவிப்பு' வச. 23; 'முறைபாடு' வச. 23 பெருமூச்சு' வச. 24.* விடிகிறதற்குமுன் இருட்டு அதிகமாயிருக்கும்.

ஆ. ***கர்த்தருடைய கிருபையின் பார்வை ஒருபக்கம்.*** *'பெருமூச்சைக் கேட்டார்' வச. 24; "உடன்படிக் கையை நினைவுகூர்ந்தார்" வச. 24; 'கண்ணோக்கி னார்' வச. 25; 'நினைத்தருளினார்' வச. 25.*

இவ்விதமாய்க் 'கேட்டார்', 'கண்டார்', 'நினைத்தார்'. அவர் எப்படியும் எழும்பி இரட்சிப்பைக் கட்டளை யிடுவது நிச்சயமே நிச்சயம்.

**கவனிப்பு:** மோசே 'பார்த்தான்', 'கண்டான்' வச. 11. கர்த்தர் 'கண்ணோக்கினார்' வச. 25. மனிதனுடைய மாம்ச பார்வைக்கும் ஆண்டவருடைய கிருபையின் பார்வைக்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு.

**கேள்விகள்:**

1. மோசேயின் பெற்றோர் அவனை மூன்று மாதம் ஒளித்து வைத்ததில் என்னென்ன துன்பங்களிருந்திருக்கும்?

2. கீழ்காணும் மூன்று காரியங்களில் அவர்களது விசுவாசம் எப்படிக் காணப்பட்டது?

அ. அவனை மூன்று மாதம் ஒளித்து வைத்ததில்.

ஆ. அவனை நதியோரத்தில் வைத்ததில்.

இ. மிரியாம் 'என்ன சம்பவிக்கும்' என்று அறியும்படி அவளை நிற்க வைத்ததில்.

*3. எகிப்தியரின் எல்லா ஞானமும் மோசேக்குக் கற்பிக்கப்பட்டது என்று அப். 7:22இல் அறிவோம். எபிரெயரின் பழக்க வழக்கங்களும், மெய்யான தேவனை ஆராதிக்கவும் எப்போது யாரால் அவனுக்குக் கற்பிக்கப்பட்டன?*

*4. மோசே திக்குவாயும் மந்தநாவுமுள்ளவனானால் (யாத். 4:10) அவன் எப்போது, எப்படி வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான்?*

*5. வச. 12, 14இல் மோசே எந்தத் தப்பிதம் அல்லது தப்பிதங்கள் செய்ததாகத் தெரிகிறது?*

*6. 'தன் கையினால் தேவன் தங்களுக்கு இரட்சிப்பைத் தந்தருளுகிறாரென்பதைத் தன் சகோதரர் அறிந்து கொள்வார்கள்' என்று மோசே நினைத்ததற்கு (அப். 21:25) நியாயமென்ன?*

*7. வச. 12, 15, 17, 21இல் மோசேயில் காணப்பட்ட குணாதிசயங்கள் எவை?*

# 3ஆம் அதிகாரம்

## தூதனை ஆயத்தப்படுத்தல்

**கவனிப்பு** *: முந்தித் தன்னை நம்பித் தவறின மோசே இப்போது கர்த்தரை அறியவும் நம்பவும் அழைக்கப் படுகிறான். தேவன் அவனைச் சந்தித்துப் பக்குவப்படுத்தி, பின்பு மீட்பின் நற்செய்தியைக் கூறவும் இரட்சிப்பின் கிரியைகளைச் செய்யவும் அனுப்பப்போகிறார்.*

*1.* **தேவதரிசனம் கண்டான்.** *வச. 1-6.*

*நாம் பிசாசின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, மோட்ச வழியில் அவர்களை நடத்தி விரும்புவோமானால்,*

தம்மை வெளிப்படுத்தியிருக்கிற கர்த்தரை நாம் முதலாவது விசுவாசத்தால் தரிசிப்பதும், அவருடைய சித்தத்தை அறிந்துகொள்வதும் அவசியமான காரியம். அனுபவ சாட்சிகளாய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தால்மாத்திரம் நம்முடைய ஊழியம் செழிக்கும் *(யோவான் 3:11; அப். 26:16; 2 கொரி. 4:13).*

***1. தன் அன்றாடக வேலையைச் செய்துவந்தான்.*** *வச. 1.*

*அ. தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட வேலைகளை உண்மையோடும், ஜாக்கிரதையோடும் செய்கிறவர்களையே தேவன் மேலான ஊழியம் செய்ய அழைத்தருளுவார். (சங். 78:70, 71; ஆமோஸ் 7:14, 15; மத். 4:18 22; லூக்கா 16:10).*

*ஆ. மோசே ஆடுகளை மேய்த்தும் காத்தும் வந்ததால், ஜனங்களை நடத்தவும் ஆதரிக்கவும் தகுதியுள்ளவனானான் பிற்காலத்தில் அவனில் சிறந்து விளங்கின அன்பும் பொறுமையும், மனத்தாழ்மையும் இவ்வாறே உண்டாயிருக்கும் (சங். 100:3; யோவான். 10:14-27; எசே. 34:31).*

***கவனிப்பு*** *: தேவ பர்வதமாகிய ஓரேப் (சீனாய்) மலையிலே* ***மோசே, எலியா, பவுல் அப்போஸ்தலன்*** *மூவரும் தங்கித் தேவசித்தத்தை அறிந்துகொண்டார்கள் (யாத். 3:1; 1இரா. 19:8; கலா. 1:17; 4:24, 25).*

*இப்படியாக நியாயப்பிரமாணிகனாகிய பிரசங்கியும், தீர்க்கதரிசியாகிய பிரசங்கியும், சுவிசேஷகனாகிய பிரசங்கியும் ஒன்றுபோலவே தேவனோடு தனியாக சஞ்சரித்து, அவருடைய பரிசுத்தத்தை நன்குணர்ந்து அவரிடத்தில் கற்றுக்கொண்டு, பின்பு அதிகப் பிரயோஜனமுள்ள ஊழியக்காரராய் விளங்கினார்கள். நாமும் அவரோடு சஞ்சரித்து அவருடைய அரிய பரிசுத்தத்தை உணரவேண்டியது அவசியம்.*

*2. அற்புத காட்சியைக் கண்டான்.* வச. *2, 3.*

அந்த முட்செடி எகிப்தில் உபத்திரவமடைந்த இஸ்ரவேல் ஜனங்களைக் குறிக்கிறதென்றும், ஜுவாலித்து எரிந்த அக்கினியானது அவர்களுக்குண்டான பெருந் துயரத்தையும் துன்பத்தையும் காட்டுகிறதென்றும், செடி வெந்துபோகாத மேன்மை இஸ்ரவேலருடைய ஜனப் பெருக்கத்தையும் அபிவிருத்தியையும் குறிக்கிறதென்றும் வியாக்கியானம் சொல்லுவார் உண்டு. ஆனாலும் நாம் வேறுவிதமாய் அர்த்தம் கொடுப்பது உத்தமம்.

*அ. முட்செடி.* மோசேயையும் அவனைப்போலொத்த பணிவிடைக்காரரையும் குறிக்கும். மோசே முந்திப் பெருமைப்பாராட்டித் தன் அந்தஸ்த்தையும் கல்வி சாமர்த்தியத்தையும் நம்பி முயற்சி செய்து பார்த்திருந்தான். இப்பொழுதோ தான் ஒன்றுக்கும் உதவாத முட்செடிக்குச் சமானமென்று அறியலானான். முட்செடியில் முட்கள் நிறைந்திருந்தது. அவை நம் சரீரத்தில் தைத்து அதிக வேதனையை உண்டாக்குமேயல்லாது வேறில்லை. அப்படிப்பட்ட செடி சுட்டெரிப்பதற்கு தகுதியானதே யொழிய, வேறொன்றுக்கும் தகுந்ததல்ல. அந்தப் பிரகாரமே, எந்தப் பணிவிடைக்காரனானாலும் தன்னில் தானே பெலனும் பிரயோஜனமும் உள்ளவனல்லன் என்பது நிச்சயம் *(1 கொரி. 1:26-29; 2 கொரி. 3:5; 4:7;* யோவான் *15:5).*

***ஆ. அக்கினி ஜுவாலை:*** வானத்திலிருந்து அக்கினி மயமாய் இறங்கிவந்த பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும் *(மத். 3:11; லூக்கா 24:49; அப். 2:3, 4).*

அக்கினி ஜுவாலை எரிந்த செடி அழகாயும் வல்லமையுள்ளதாயும் தோன்றிற்று. கர்த்தருடைய ஜோதியும் மகிமையும் அதில் பிரசன்னமாயிற்று.

முந்தித் தவறிப்போன மோசேக்குத் தேவனுடைய வல்லமையும் மகிமையும் அவசியம் வேண்டும். *(சக. 4:6).*

**இ. அக்கினி நிறைந்த செடி:** தேவ ஆவியானவரால் நிறைந்த விசுவாசியைக் குறிக்கும். முன் உதவாத பொருள் இப்பொழுது வல்லமையும் மகிமையும் பெற்று ஜோதிமயமாய் விளங்குகிறது. கொல்லன் இரும்பைப் பழுக்கக் காய்ச்சினால், அந்த இரும்பு குளிர்ச்சியும் கருமையும் நீங்கி, அக்கினிமயமாகவே தோன்றுகிறதுபோல, ஆவியானவரால் நிறைந்த கிறிஸ்தவனுடைய துர்க்குணங்கள் முற்றிலும் மறைந்து, அவன் தேவசாயலாகவும் வல்லமை பெற்ற பக்தனாகவும் சிறந்து விளங்குவான்.

முன்பு வெறுமையான பாத்திரமாக எகிப்தில் தோன்றின மோசே இப்பொழுது தேவ வல்லமையும் மகிமையும் நிறைந்த தாசனாய்ப் போய் ஊழியம் செய்யட்டும்! அப்பேர்ப்பட்ட ஊழியம் ஒருபோதும் பயனற்றதாய்ப் போகாது.

இதை வாசிக்கும் சகோதரரே, சகோதரிகளே, சத்திய வாசகராகிய நமது இரட்சகர் இயேசு பெருமான் வாக்கருளின அக்கினி ஞானஸ்நானத்தை நீங்கள் பெற்றுக் கொண்டதுண்டா? *(அப். 1:5 8; 4:31; 10:44-46; 19:2-6).*

**ஈ. வெந்துபோகாத செடி :** தூய ஆவியானவரால் நிறைந்தும் அவரால் யாதொரு வருத்தமுமடையாத தேவ அடியானைக் குறிக்கும். பாவியைப் பட்சிக்கும் அதே தேவ அக்கினியானது *(எபி. 12:29).* விசுவாசியை மகிழ்ச்சியாக்கும் *(அப். 13:52).* வல்லமையை அருளுவதோடு கூட, தேற்றரவு செய்வதும் திவ்விய **தேற்றரவாளனுடைய** சிறந்த கிரியை.

தகாத ஆசைகளைத் தங்கள் இருதயத்தில் பேணிக் கொள்ளும் கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரின்

வரத்தைத் தேடுவது மோசமான காரியம். அவர்களுக்கு அவர் பட்சிக்கிற அக்கினியாயிருப்பார். உண்மையுள்ள விசுவாசிகளோ ஒன்றுக்கும் சந்தேகப்படாமல், புத்திக் கெட்டாத இந்த மகா அக்கினியின் ஞானஸ்நானத்தைத் தேடிப் பெற்றுக்கொள்ளலாம்.

***3. கர்த்தருடைய பரிசுத்தத்தை உணர்ந்தான்.*** வச. 4, *5;* நம்முடைய இருதயம், ஜீவியம், ஊழியங்களில் தேவ பயமும் பக்தி ஒழுக்கமும் அவசியமாய் விளங்கவேண்டும் *(எபி. 12:28, 29).*

அவருடைய சந்நிதானத்தில் உலக பெருமைக்கும் மகிமைக்கும் இடமில்லை. அவருக்கு முன்பாக நின்று ஜீவிக்காததினாலும், அவருடைய மகத்துவம், பரிசுத்தம், பிரமாணங்களைச் சிந்தித்து உணராததினாலும் நம்மில் அநேகர் பயனில்லாத ஊழியக்காரராய்ப் போவதுண்டு.

அதைப்போல நம்மைப் பாவத்திலிருந்து இரட்சிப்பது மாத்திரமல்ல, நம்முடைய சுயபெருமையாகிய 'பாதரட்சையைக் கழற்றிப்போட்டு' பரிசுத்த பூமி'யாகிய அவருடைய சந்நிதானத்தில் நின்று, கண்களால் காணக்கூடாத அவரை விசுவாசத்தால் தரிசிக்கிறவர்களாக நாம் ஒழுக்கத்தோடும் பயபக்தியோடும் பணிவிடை செய்வோமாக.

***4. கர்த்தரை அறிந்துக் கொண்டான்.*** வச. 6; தனித்த அந்த இடத்தில் கர்த்தர் தம்மை மோசேக்கு வெளிப்படுத்தினார்.

"நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன்" என்பதில் கர்த்தர் முன்அருளின வாக்குத்தத்தங்களும், செய்த கிருபையின் உடன்படிக்கையும், கொடுத்த உறுதி ஆணையும் அடங்கியிருக்கின்றன.

தம்மை மாறாத கிருபையின் நீதியாக மோசேக்கு வெளிப்படுத்தினார்.

தம்முடைய திருக்குமாரன் மூலமாயும் அருள் வேதத்திலேயும் தம்மை வெளிப்படுத்தியிருக்கிற மெய்யான தேவனை நாமும் அறிந்துகொண்டு அவரோடுகூட வாசம் செய்யவேண்டும். அதற்கென்று அந்தரங்க தலத்தில் அவருடைய தரிசனத்தை நாம் வாஞ்சையோடு தேடிக்கொள்வது மிகவும் அவசியம் (*மத். 14:22, 23; யோவான் 8:16-26; 17:3-8*).

II. **தேவசித்தத்தை அறிந்துகொண்டான்.** *வச. 7-10:*

தம்முடைய தாசனுக்குத் தரிசனமான தேவன் தமது திருவுள சித்தத்தைத் தெளிவாய்க் காண்பித்தார்.

***1. அடிமையின் கஷ்டங்களைத் தாம் நோக்கிப் பார்ப்பதாகச் சொல்லுகிறார்.*** *வச. 7;* 'பார்த்தேன்' என்றும், 'கேட்டேன்' என்றும், 'அறிந்திருக்கிறேன்' என்றும் மூன்று கிருபையுள்ள வார்த்தைகளை மொழிகிறார்.

அதைப்போலவே பிசாசினால் பாவிகளுக்குண்டான கொடிய வருத்தங்கள் எல்லாம் அவருக்கு நன்றாய் தெரியும் (*லூக்கா 15:13-20*).

***2. அவர்களை விடுதலையாக்குவதாக வாக்கருளுகிறார்.*** *வச. 8;* இதற்கென்றே மோசேயை நாற்பது வருட காலமாய்ப் பயிற்றுவித்து வந்திருந்தார். இதற்கென்றே அவனுக்குக் காட்சியும் அளித்தார். பாவத்திலிருந்து நம்மை முற்றிலும் விடுவிப்பதே தேவசித்தம் (*மத். 1:21; லூக்கா 1:71; ரோமர் 6:1-18*).

***3. அவர்களுக்குச் சுதந்திரத்தை ஈந்தருளுவதாகவும் தெரிவிக்கிறார்.*** *வச. 8;* எகிப்து தேசத்திலிருந்து விடுதலையாக்குவதுமல்லாமல், கானான் தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பதாகவும் வாக்களிக்கிறார்.

அதைப்போல நம்மை பாவத்திலிருந்து இரட்சிப்பது மாத்திரமல்ல, நமக்குப் பூரண இளைப்பாறுதலையும் தேவ ஆவியானவரின் வல்லமையையும் தருவதும் ஆண்டவருடைய நல்ல சித்தம் (*மத். 11:29; எபி. 4:3-9; அப். 1:4, 5; எபே. 1:13, 14*).

*4. அவர்களை அழைத்துவரும்படி ஆளனுப்புகிறார்.* வச. 9; "உன்னை ... அனுப்புவேன் வா" என்கிறார்.

முன்பு மோசே தேவனால் அனுப்பப்படாமல் போயிருந்தான். இப்பொழுதோ கர்த்தருடைய அதிகாரத்தையும் கட்டளையையும் பெற்றவனாய்ப் புறப்பட்டுப்போவான்.

நம்முடைய சுயசித்தத்தின்படி தேவ ஊழியத்துக்குப் போவது தவறு. கர்த்தராலே உத்தரவு பெற்றுப்போனால் மாத்திரம் நம்முடைய வேலை பயன்படும் (*எரே. 23:21; ஏசாயா 6:8; அப். 13:2-4*).

III. **தேவவாக்கைப் பெற்றுக்கொண்டான்.** வச. 11-14; "**நான் உன்னோடே இருப்பேன்**" என்பது வாக்கு.

மோசே என்பவன் உடனே சம்மதியாமல் மறுத்து சொல்லும்பொழுது. நீடிய பொறுமை மிகுந்த கர்த்தர்.

*1. திவ்விய வாக்கை அருளுகிறார்.* வச. 11, 12; மோசே தன்னைப் பார்த்துத் தன் பெலவீனத்தை உணர்ந்து "**நான், நான், நான்**" என்று (வச. 11-13), மும்முறை கவலையுற்றுச் சொல்லும்பொழுது, சர்வ வல்லமையுடைய கர்த்தர் தம்முடைய அளவற்ற வல்லமையைப் பாராட்டி, அதையே உணர்த்திக்காட்டி "**நான் நான்**" என்று திரும்பத் திரும்பக் கூறுகிறார், வச. 12.

இவ்விதமாக மோசேயின் 'நான்' என்பதற்குப் பதிலாகக் கர்த்தருடைய 'நான்' என்பது வந்து நிற்கிறது.

மோசேயின் பலவீனத்திற்குப் பதிலாக தேவனுடைய சர்வ வல்லமை தோன்றுகிறது. 'இனி நானல்ல, தேவனே போகிறார்' என்பதுபோல அவன் காரியம் முடிந்தது.

கிறிஸ்து இரட்சகருடைய திருத்தொண்டர்களே, இந்த உபதேசம் நம்முடைய பழக்கத்திலும் சான்றாக விளங்கவேண்டும் *(கலா. 2:20;* யோவான் *15:5;* கொலோ *3:9-11).*

**2. அடையாளத்தையும் கட்டளையிடுகிறார்.** வச. *12;* சீனாய் மலையே அடையாளம் *(ஆதி. 19:1-25).*

நம்முடைய விசுவாசத்தை ஸ்திரப்படுத்தும்படி கர்த்தர் அடிக்கடி வெளியரங்கமான அடையாளங்களை அருளிச் செய்வதுமுண்டு *(ஆதி. 9:13; 15:17; 17:11; நியா. 6:17-21, 36-40).*

**3. கர்த்தருடைய நாமத்தை வெளிப்படுத்துகிறார்.** வச. *14;* "இருக்கிறவராகவே இருக்கிறேன்" என்பதே அவருடைய நாமம்.

மூலபாஷையிலிருந்து இப்படித் திருத்தியிருக்கிற பதத்துக்குப் பற்பல வியாக்கியானங்களைச் சொல்லக்கூடும். என்றாலும் நமக்குப் பயனாக ஒன்றைமாத்திரம் கவனிப்பது போதும். நமக்கு வேண்டிய நன்மைகள் அனைத்தும் சகல சம்பூரணராகிய நமதாண்டவருக்குள் அடங்கியிருக்கிற தென்பதை இந்தத் தேவ நாமம் காட்டுகிறது *(கொலோ. 1:19; 3:11).*

நமக்கு அன்பு வேண்டுமா? 'அன்பாயிருக்கிறவராக அன்பாயிருக்கிறேன்' என்கிறார்.

இப்படியாக நமக்கு அவசியம் வேண்டிய எந்த நன்மையையும் இந்த அற்புத நாமத்தோடு எழுதிச் சேர்த்து வாசிக்கலாம். *(1 கொரி. 1:31).*

**IV. இரட்சிப்பின் செய்தியைக் கற்றும் கொண்டான்.** வச. *15-22;*

தேவன் தம்முடைய தூதனை அனுப்பும்போது, அவன் சொல்லவேண்டிய செய்தியையும் கற்பிக்கிறார். *(மத். 28:19, 20; லூக்கா 24:46-48).*

**1. வெளிப்படுத்துதலினாலேயே தெரிந்த செய்தி.** வச. *15, 16;* மனிதர் தங்கள் சுயபுத்தியினால் கண்டு கிரகித்துக்கொண்ட செய்தியல்ல.

வேறெதையும் பிரசங்கிக்காமல், தேவன் தம்முடைய அருள் வேதத்தால் வெளிப்படுத்தின கிறிஸ்துவின் சுவிசேஷத்தையே பிரசங்கிப்போமாக *(கலா. 1:6-12; 1 கொரி. 2:1-5).*

**2. விடுதலை கூறும் நற்செய்தி.** வச. *17;* "உங்களை எகிப்தின் சிறுமையிலிருந்து நீக்குவேன்" என்கிறார்.

அப்படியே சகல பாவ பழக்கங்களிலிருந்தும் தேவன் பாவிகளை விடுவிக்கிறார் என்கிற இரட்சிப்பின் சுவிசேஷத்தை நாமும் கூறி அறிவிக்க வேண்டும் *(ரோமர் 6:14).*

**3. வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட விடுதலையைப் பற்றிய செய்தி.** வச. *17;* ஒன்றிலிருந்து விடுவிக்கிறார்; இன்னொன்றுக்குள் பிரவேசிக்கச் செய்கிறார் *(கொலோ. 1:12, 13; எபே. 2:7, 19-22).*

ஆவியானவரின் பிரகாரம் எகிப்து தேசத்துச் சிறைகளானவர்கள் கானான் தேசத்து வாசிகளாக வேண்டும்.

**கவனிப்பு :** இந்தச் சிறந்த மீட்பு இடையூறின்றி நடக்காது. வச. *18-22.*

அ. விரோதம் நேரிடாமல், பிசாசின் அடிமைகள் விடுதலை பெறுவதில்லை. வச. *18.*

ஆ. தேவவல்லமை வெளிப்படாமல், பிசாசின் அடிமைகள் விடுதலை பெறுவதில்லை. வச. *19, 20.*

இ. வெற்றி சிறந்து கொள்ளையெடுக்காமல், பிசாசின் அடிமைகள் விடுதலை பெறுவதில்லை. வச. *21, 22.*

இவற்றிற்கு ஒத்த வாக்கியங்களைக் கண்டெடுத்து எழுதுக.

**கவனிப்பு :** மோசே சொன்ன சாக்குப்போக்குகளை நான்காம் அதிகாரத்தோடு சேர்த்து வரிசையாகக் காட்டுவோம்.

**கேள்விகள் :**

*1.* இவ்வதிகாரத்தில் கர்த்தரைக் குறிக்கும் ஏல்லா பதங்களையும் எழுதி அவைகளின் வெவ்வேறு கருத்துக்களைத் தெளிவாய்க் காட்டுக.

*2.* எரிகிற முட்செடி இஸ்ரவேலருக்கு எப்படி ஒப்பனையாயிருந்தது?

*3.* எரிகிற முட்செடியிலிருந்து வந்த சத்தத்திற்கு மோசே உடனே கீழ்ப்படிந்தான். அது கர்த்தரது சத்தம் என்று அவனுக்கு எப்படி தெரியும்?

*4.* மோசே எகிப்தில் *40* வருடமிருக்கையில் எகிப்தியரின் எல்லா ஞானத்திலும் கற்பிக்கப்பட்டான். அவன் வனாந்தரத்திலிருந்து *40* வருடத்தில் எதைக் கற்றுக்கொண்டான்?

*5.* ஆண்டவர் சொன்ன ஊழியத்தைச் செய்யாதபடி மோசே மறுத்தது கிறிஸ்தவ ஊழியனுக்கு நல்ல முன் மாதிரியா, இல்லையா?

*6.* வனாந்தரத்தில் மூன்றுநாள் பிரயாணம் போகவேண்டும் என்று கேட்டதின் நோக்கமென்ன?

# 4 ஆம் அதிகாரம்

## தூதன் புறப்பட்டுப் போகுதல்

***கவனிப்பு*** *: இவ்வதிகாரத்திலே* ***'அடையாளம்'*** *என்பதும்,* **போ** *என்னும் வினைச்சொல்லும் கவனிக்கப்படத்தக்க வார்த்தைகள், மோசே கர்த்தரிடத்தில் உத்தரவும் அதிகாரமும் பெற்று இரட்சிப்பின் கிரியைகளை நடத்தும்படி புறப்பட்டுப் போகிறான். அந்தப் பிரகாரமே நாமும் அவராலேயே தகுதியடைந்து புறப்பட்டுப் போவோமாக.*

I. ***அடையாளங்களைக் கண்டான்.*** *வச. 1-9.*

*இங்கே சொல்லிய 3 அடையாளங்கள் பார்வோன் இராஜாவுக்கு அல்ல, இஸ்ரவேலின் மூப்பருக்குக் காட்டவேண்டியவைகள், இவைகளைக் கண்டுணர்ந்து கர்த்தருடைய கிருபையையும் வல்லமையையும் நம்புவார்கள்.*

*1.* ***கோல் சர்ப்பமாகிறது.*** *வச. 2-5; உயிரற்ற பொருள் தேவனுடைய அற்புதவல்லமையால் உயிருள்ள பொருளாகிவிட்டது. இதனாலே* ***கர்த்தர் ஜீவனுக்கு அதிபதி என்பது விளங்கும்.***

*மோசே எகிப்தில் செய்யும் ஊழியம் அநேகர் ஞான ஜீவன் அடைவதற்கு ஏதுவாகும். அதைப்போலவே சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் ஊழியர் இரட்சிக்கப் படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கு ஏதுவான* ***'ஜீவ வாசனையாக'*** *இருக்கிறார்கள் (2 கொரி. 2:16).*

*மேலும் அந்தத் தடி மோசேயுடைய சரீரத்தின் அவயமல்லாத பிறபொருள் என்றாலும், தேவன் அதை ஜீவனுள்ளதாக்கினாரே. நம்முடைய கை வல்லமையினாலே*

இரட்சிப்பைக் கட்டளையிடாமல், அவர் தாமே நம்முடைய கையிலே அற்புதவிதமாய் ஈந்தருளும் சக்தியினாலேயே இரட்சிப்பைக் கட்டளையிடுகிறார் *(சக. 4:6).*

*2.* **கை வெண்குஷ்டம் பிடித்திருப்பது.** *வச. 6-8;* உயிருள்ள பொருள் உயிரற்ற பொருளைப் போலாயிற்று. அதன் சுகமும் பெலனும் அற்றுப்போயிற்று.

**இதனாலே கர்த்தர் மரணத்துக்கும் அதிகாரி என்பது விளங்கும்.**

மோசே எகிப்தில் செய்யும் ஊழியம் அநேகருடைய மரணத்துக்கும் நாசத்துக்கும் வழியாகும். அதைப்போலவே சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் ஊழியர் கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே மரணத்துக்கேதுவான **மரண வாசனையாக** இருக்கிறார்கள் *(2 கொரி. 2:16).*

மேலும் அந்த கையானது மோசேயுடைய சரீரத்தின் அவயவம் ஆனாலும், கர்த்தர் அதை ஒன்றுக்கும் உதவாத பெலவீன உறுப்பாக்கிப் போடக்கூடும், ஊழியக்காரருடைய கைவல்லமை ஒன்றும் செய்யக்கூடாதென்று பார்க்கிறோம் *(யோவான் 15:5; சங். 44:3).*

*3.* **தண்ணீர் இரத்தமாக மாறுவது.** *வச. 9;*

**இதனாலே கர்த்தர் நீதி இரக்கம் நிறைந்தவர் என்பது விளங்கும்.**

எகிப்து தேசத்துக்குச் செழிப்புண்டாகும்படி அவர் **மகா இரக்கமாய்** நைல் நதியின் தண்ணீரை அருளிச் செய்தார். ஆகிலும் அந்தத் தேசத்தார் மனந்திரும்பாமற் போனால், அவர் மகா நீதிபரராக எழும்பி, அவர்களுடைய நன்மைகளைத் தீமைகளாகவும், அவர்களுடைய இன்பங்களைத் துன்பங்களாகவும் மாற்றக் கூடியவராயிருக்கிறார். *(மல். 2:2).*

நம்முடைய ஊழியத்திலும் பிரசங்கத்திலும் கர்த்தருடைய **நீதியும் இரக்கமும்** வெகுதெளிவாகக் காணப்பட வேண்டும் (சங். 101:2; ரோமர் 3:25).

மேலும் எகிப்தியர் தெய்வம் என்று வணங்கிவந்த நைல் நதியின் தண்ணீரைக் கர்த்தர் பயனற்றதும் அருவருப்புமாய்த் தோன்றச் செய்தால், தம்முடைய சர்வ வல்லமைக்கு எந்தச் சத்துருவும் எதிர்த்து நிற்பது கூடாத காரியமென்றும் விளங்கப்பண்ணினார்.

இவ்விதமாய் யுத்தம் நடக்குமுன்னமே ஜெயம் கர்த்தருடையது என்று விசுவாசிகள் கண்டறியத்தக்கதாயிருந்தது.

II. ***சாக்குப் போக்குகளைச் சொன்னான்.*** *3:11-14, 4:1, 10-17.*

*1.* ***தன்னுடைய அபாத்திரத் தன்மையை உணர்ந்து பேசினான்.*** *3:11, 12.*

**'நான் எம்மாத்திரம்'** என்று கேட்டான். அதற்குக் கர்த்தர் அருளின உத்தரவு என்னவென்றால்: **"நான் உன்னோடே இருப்பேன்"** என்பதே.

நம்முடைய ஒன்றுமில்லாமையை நாம் நன்குணர்ந்து கொள்வது மகா நலமும் அவசியமுமான காரியம். ஆனாலும் இம்மானுவேல் நம்மோடுகூடவருவதால், அவருடைய சர்வ சக்தியைப் பெற்றுக்கொண்டு, நாம் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாகளாமே .(மத். 28:20; பிலி. 4:13).

*2.* ***தன்னுடைய அறியாமையை எடுத்துக் காட்டினான்.*** *3:13, 14:*

அவருடைய நாமம் என்னவென்று அவர்கள் என்னிடத்தில் கேட்டால், **"நான் அவர்களுக்கு என்ன**

*சொல்லுவேன்?''* அதற்காண்டவர்: *''இருக்கிறவராக இருக்கிறேன்''* என்று தம்மை வெளிப்படுத்தி, *"இருக்கிறேன் என்பவர்''* என்னை அனுப்பினார் என்று சொல்வாயாக என்று உத்தரவருளினார்.

உண்மையாகவே, நாம் அறிவீனரும் ஞானமற்றவர்களுமாயிருக்கிறோம். என்றாலும் கிறிஸ்துவின்மூலமாய்த் தம்மை ஜீவனுள்ள தேவனென்றும் இரட்சகர் இயேசு பெருமானென்றும் வெளிப்படுத்தியிருக்கிற கர்த்தரை விசுவாசத்தால் தரிசிக்கிறவர்களாயும், பக்திவைராக்கியத்தோடு கூறி அறிவிக்கிறவர்களாயும், நாம் புறப்பட்டு போவோமேயானால் அவர் தம்முடைய பரமஞானத்தை நமக்கு அருளச் செய்வாரென்பதில் ஐயமில்லை *(மத். 10:19; யாக். 1:5; அப். 6:10).*

***3. ஜனங்களுடைய அவிசுவாசத்தை எடுத்துரைத்தான்.*** *4:1-5;* ***"அவர்கள் என்னை நம்பார்கள், என் வார்த்தைக்குச் செவிகொடார்கள்''*** என்றான்.

அதற்குத் தேவன்: **'உன் கையில் இருக்கிறதென்ன?** உயிரும் பெலனுமற்ற அந்தக் கோலினாலே விசுவாசத்தை உண்டாகச் செய்வேன்' என்பதாகச் சொன்னார்.

***''அவர்கள் நம்புவதற்கு இதுவே அடையாளம்''*** என்றார். நம்மைச், சுற்றியிருக்கிற ஜனங்கள் கொடிய அவிசுவாசிகளானாலும், நம்மோடு கூடச்செல்லும் அற்புத மூர்த்தியாகிய கர்த்தர் அற்பக்கருவிகளைக்கொண்டு அவர்களை விசுவாசிகளாக்க வல்லவராய் இருக்கிறார் *(1 கொரி. 1:27-29; 1 தீமோ. 1:13).*

***4. தன்னுடைய வாக்குவல்லமையின்மையை முகாந்தரமாகச் சொன்னான் 4:10-12; ''நான் வாக்குவல்லவனல்ல, நான் திக்குவாயும் மந்த நாவுமுள்ளவன்''*** என்றான்.

அதற்கு தேவன் "மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்?" என்று சொல்லி "நான் உன் வாயோடு இருந்து, நீ பேசவேண்டியதை உனக்கு போதிப்பேன்" என்றார்.

நாம் இயல்பாகப் பிரசங்க வல்லமையில்லாதவர்கள் என்றாலும், வல்ல ஆவியானவர் நமக்கு அக்கினி நாவையும் வாக்குவல்லமையையும் அருளும்படி வந்திருக்கிறாரே (அப். 1:8; 2:3, 4; 4:13; 6:10).

5. தன்னுடைய மனமில்லாமையை வெளியிட்டான். 4:13-7. "நீர் அனுப்பச்சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும்" என்றான்.

அதற்கு கர்த்தர் "ஆரோன் உன் சகோதரன் அல்லவா? அவன் உனக்கு வாயாக இருப்பான்" என்று உத்தரவருளினார்.

இனிமேல் மோசே போக்குச் சொல்ல இடமில்லை. அவன் சொன்ன மறுப்புக்களையெல்லாம் தேவன் பொறுமையோடு நிராகரித்து, அவனுக்கு வேண்டிய வரங்கள் அனைத்தையும் தயவாகக் கட்டளையிட்டார்.

நம்மைப் பாராமல், சகல சம்பூரணராகிய நமதாண்டவரைப் பார்த்து, அவர் அருளும் கிருபாவரங்களை விசுவாசத்தால் பெற்றுக்கொண்டு, கீழ்ப்படிந்து பணிவிடை செய்வோமாக (அப். 26:15-20).

III. புறப்பட்டுப்போனான். வச. 18-23.

1. தேவ உத்தரவு பெற்றுப்போனான். வச. 19.

"நீ போ" என்றார். வச. 19 "மோசே போனான்" (வச. 20; ஏசாயா 6:8; மத். 8:9, அப். 26:15-19). பெரியோருடைய உத்தரவு பெற்றது மாத்திரம் போதாது. வச. 18. ஆள்கொண்ட எம் கர்த்தருடைய உத்தரவும் அவசியம் வேண்டும். வச. 19.

நாம் பெரியோருடைய அனுமதி பெற்று ஊழியம் செய்கிறவர்களா? கர்த்தரால் நியமனம் பெற்று ஊழியம் செய்கிறவர்களா? (கலா. 1:1).

**2. தடியை பிடித்துக்கொண்டு போனான்.** வச. 20:

அந்த தடி முன்பு சாதாரணமாயும் முள்ளுள்ள கொம்பாயும் இருந்திருக்கலாம். ஆகிலும் கர்த்தருடைய கையில் ஒப்புவிக்கப்பட்ட கோலானதினாலே வல்லமைப் பெற்று அற்புதம் செய்யும் கோலாயிற்று.

நாம் நம்முடைய அவயவங்களையும் பொருள்களையும் ஆண்டவருடைய திருக்கரத்தில் ஒப்புவிப்போமானால், அவற்றை ஆசீர்வதித்து வல்லமைப்படுத்தித் தம்முடைய மகிமைக்கென்றே உபயோகம் செய்வார்.

அல்லது வேறுவிதமாய் வியாக்கியானம் செய்தால், அந்தக் கோலானது **கர்த்தருடைய வசனத்தைக்** குறிக்கலாம். அவருடைய வசனம் வல்லமையுள்ளது. எபி. 4:12, 13 அது ஆவியானவரின் பட்டயம். எபே. 6:17. அது அற்புதக் கிரியைகளைச் செய்து வருகிறது. சங். 33:9; யோவான் 4:50; அப். 2:37.

சகோதரரே, வேதநாயகருடைய வல்ல வசனத்தை முழுமனதோடே நம்பி, அதையே நம்முடைய ஞான ஆயுதமாகப் பிடித்துக்கொண்டு போவோமாக.

**3. தேவனால் போதிக்கப்பட்டுப் போனான்.** வச. 21-23.

அ. செய்யவேண்டிய கிரியைகளைக் கர்த்தர் கற்பித்தார். வச. 21.

ஆ. சொல்லவேண்டிய வார்த்தைகளையும் கர்த்தர் அருளிச் செய்தார். வச. 22, 23.

மோசே தன் சுயமாய் ஒன்றும் செய்யவேண்டியது

மில்லை, ஒன்றும் சொல்லவேண்டியதுமில்லை. 'மோசே அல்ல, தேவனே'.

அதைப்போல நாமும் நடக்கவேண்டிய விதமின்னதென்றும், சொல்லவேண்டிய செய்தி இன்னதென்றும் ஆண்டவரிடத்தில் கற்றுக்கொள்ளக்கடவோம். **'நான் அல்ல கிறிஸ்துவே.'**

இவ்விதமாய் மோசே என்பவன் தேவனுடைய **கட்டளையும் வல்லமையையும் வார்த்தையையும்** பெற்று, ஊழியம் செய்யப் புறப்பட்டுப் போனான்.

IV. **விருத்தசேதனம்பண்ணினான்.** வச. 22-26.

இவ்வளவு தகுதியும் ஆயத்தமுமானபோதிலும், மோசே ஒன்றில் கீழ்ப்படியாமற்போனான். அதினிமித்தம் மகா மோசம் வரத்தக்கதாயிருந்தது. மற்றவர்களை மீட்டு இரட்சிக்கும்படி புறப்பட்டுப்போகிற தேவதாசன் தானே கர்த்தருடைய கோபத்துக்கும் கனமோசத்துக்கும் ஆளாகிவிட்டான் என்று பார்க்கிறோம்.

மோசே தன் மனைவிக்குப் பயந்து, தன் குமாரனை விருத்தசேதனம்பண்ணாமற்போனானென்று தோன்றுகிறது. இது முதல் அந்த ஸ்திரீ தடையாயிராதபடி, அவளைச் சுயநாட்டிற்கு அனுப்பிவிட்டான் என்றும் தோன்றுகிறது (யாத். 18:2).

நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு தேவ ஊழியம் செய்யவேண்டும் (ஏசாயா 52:11; 2 தீமோ. 2:21).

விருத்தசேதனமானது மாம்சக் கிரியைகளை அழித்துப்போடுவதைக் குறிக்கிறது. நாம் மாம்ச சிந்தையைப் பேணிக்கொண்டு ஊழியம் செய்வது கூடாத காரியம்.

கர்த்தர் நமது தாசனை எதிர்த்து, அவனைக் கொல்லப் பார்த்தது எவ்வளவு பயங்கரமான காரியம்!

V. ***துணையாளைக் கண்டு ஆறுதலடைந்தான்.*** *வச. 27-31.*

*1.* ***சகோதரனுடைய சகாயம் பெற்றான்.*** *வச. 27, 28;* *இதிலே தேவ தயவு விளங்குகிறது. தனிமையாக அனுப்பாமல் உதவியாளோடு அனுப்பினார் (லூக்கா 10:2; அப். 13:2; கொலோ. 4:11).*

*இவ்விருவரும் 'தேவ பர்வதத்தில்' ஒருவரை ஒருவர் சந்தித்தார்கள். நல்ல ஸ்தலம்! நாமும் நம்முடைய வேலையாள்களைக் கர்த்தருடைய சந்நிதானத்தில் சந்தித்து, மோசே ஆரோன் பேசினதுபோல் ஆண்டவருடைய வார்த்தைகளையும் கிரியைகளையும் ஒருவருக்கொருவர் தெரிவித்துப் பக்திவிருத்திக்கு ஏதுவாக இனிய உரையாடலை செய்வது எவ்வளவு உசிதமான காரியம்.*

*2.* ***செய்தியைக் கூறி அறிவித்தான்.*** *வச. 29, 30;* *இஸ்ரவேலரின் மூப்பரை வரவழைத்து இரட்சிப்பின் செய்தியை அறிவித்தான்.* ***"கர்த்தர் சொல்லிய சகல வார்த்தைகளையும் சொல்லி, அந்த அடையாளங்களை யும் செய்தான்."***

*சொன்னதெல்லாம் கர்த்தருடைய வார்த்தைகள், காட்டினதெல்லாம் கர்த்தருடைய அடையாளங்கள்.*

*3.* ***அடிமைகள் சந்தோஷங்கொண்டார்கள்.*** *வச. 31;* *கர்த்தர் தங்களைச் சந்தித்தாரென்றும், இரட்சிப்பைக் கட்டளையிடப் போகிறாரென்றும் ஆனந்த பரவச மானார்கள். ஆனாலும் பின்வரும் கஷ்டங்களை மாத்திரம் அவர்கள் யோசிக்கவில்லை.*

*நாம் சுவிசேஷ வசனத்தை அறிவிக்கும்போது, அநேகம்பேர் அது நற்செய்தி என்றறிந்து பிரியமாய்க் கேட்பார்கள். பிறகு வருத்தங்களும் உபத்திரவங்களும் நேரிடும்போது, பலர் பின்வாங்கிப்போகிறார்கள். என்றாலும் நம்முடைய மீட்பரானவர் தம்முடைய*

வல்லமையைக் காண்பித்துத் திரளான பாவிகளை இரட்சிப்பதுண்டு.

**கேள்விகள் :**

*1. மோசே இஸ்ரவேலருக்குக் காண்பிக்கவேண்டிய அடையாளங்களின் உட்கருத்து என்ன?*

*2. இவ்வதிகாரத்தில் அடங்கியதும் தேவ ஊழியனுக்குத் தகுந்ததுமான போதனைகளையெல்லாம் எழுதுக.*

*3. மோசே மீதியானில் தங்கின நாற்பது வருடங்களின் துவக்கத்திலா முடிவிலா அவன் விவாகம் செய்து குமாரரைப் பெற்றான்? இவ்வதிகாரத்திலிருக்கிற சம்பவங்களைச் சிந்தித்து உத்தரவு எழுதுக.*

*4. பார்வோனுடைய இருதயத்தைக் கடினப் படுத்துவேன் என்று ஆண்டவர் முன்னதாகவே சொன்னாரே, அப்படியிருக்கப் பார்வோனைக் குற்றப் படுத்துவதெப்படி? ரோமர் 9ஆம் அதிகாரத்தைப் படிக்க.*

*5. வச. 23. "உன்னுடைய குமாரனைச் சங்கரிப்பேன்" என்று ஆண்டவர் பார்வோனுக்குச் சொன்னார்.*

*வச. 24, 25. "அவனைக் கொல்லப் பார்த்தார் ... தன் புத்திரன்" இவ்விரண்டு வாக்கியங்களுக்குள்ள சம்பந்தத்தைக் காட்டுக.*

*6. விருத்தசேதனத்தின் உட்கருத்து என்ன?*

# 5ஆம் அதிகாரம்

## சத்துரு மூர்க்கம் கொள்ளுதல்

**கவனிப்பு** : *கர்த்தர் இரட்சிப்பின் கிரியைகளை நடப்பிக்கும்படி எழுந்தருளும்போது, சாத்தான் தன் உடைமைகளைக் காப்பாற்றும் பொருட்டாக வெகு*

எச்சரிக்கை செய்வான். கோபாவேசத்தோடு எதிர்த்தும் நிற்பான் *(மத். 12:29; வெளி. 12:17).*

**கவனிப்பு :** இவ்வதிகாரத்தில் **'ஆளோட்டிகள்'** என்பதும் **'வேலை'** என்பதும் முக்கியமான பதங்கள். போராட்டம் நேரிடாமல் இரட்சிப்பு நடப்பதில்லை. பகல் விடியுமுன் இருட்டு அதிகமாய்த் தோன்றும், தன்னுடைய அடிமைகளை விடுவிக்கும்படி தேவன் கிரியை செய்வதைக்கண்டு பிசாசானவன் தன்னால் இயன்ற மட்டும் எதிர்த்துப் போராடி முயற்சி பண்ணுவான் *(மாற்கு 9:25, 26; அப். 9:1, 2; 13:7, 8).*

***1. சத்துரு எதிர்த்து நிற்பது.*** *வச. 1-5.*

***1. கர்த்தரை விரோதித்துப் பேசுகிறான்.*** வச. 2; ***"அவர் யார்? நான் கர்த்தரை அறிவேன்"*** என்கிறான். யுத்தம் செய்யப்போகிற இருபட்சத்தாரை இங்கே தெளிவாய்ப் பார்க்கிறோம். பார்வோன் ஒரு பக்கம், கர்த்தர் ஒரு பக்கம்; இருள் ஒரு பக்கம், வெளிச்சம் ஒரு பக்கம்.

அதே பிரகாரமாய், நாம் எங்கே போனாலும் இவ்விதப் போராட்டம் நடந்து வருகிறது *(1 யோவான் 2:15, 16; 3:8, 9; 5:19).*

***2. ஜனங்களைப்போகவிடேன் என்கிறான்.*** வச. 2; தேவசித்தத்தைத் தடுத்து நிற்கிறான்.

தேவ கட்டளையின்படி மற்ற சராசங்கள் அனைத்தும் கீழ்ப்படிந்து நடக்கின்றன. பிசாசும் அவன் பிள்ளைகளும் மாத்திரம் அந்த நல்ல சித்தத்தை நிறைவேற்றாமலிருக்கிறார்கள். அதனாலே குணப்படாத மனிதருக்குக் 'கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்' என்று பேர். எபே. 2:2.

***3. தேவ ஊழியரை அதிகமாய்க் கோபிக்கிறான்.*** வச. 4, 5; மோசேக்கும் ஆரோனுக்கும் வெகு வருத்தமும் துன்பமும் உண்டாகும். போர்க்களத்தில் இறங்கும் வீரர்கள்

சத்துருக்களுடைய போராட்டத்துக்கு அஞ்சலாகாது. காயம் பட்டாலும் ஓட்டம் பிடிக்கலாகாது.

அநேக பணிவிடைக்காரர் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணும் ஊழியம் வெகு சுகமான ஊழியமென்று நினைப்பதுண்டு. முன் யோசனையின்றி அதற்குப் புறப்படுவதுண்டு. பலவானான பிசாசின் கையினின்று ஆத்துமாக்களைப் பறித்துக்கொள்வது மகா வருத்தமான வேலை என்பதைப் பின்வரும் வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தால் தெரியவரும் (லூக்கா 22:44; அப். 20:31; 2 கொரி. 11:23-28; கலா. 4:19).

**கவனிப்பு :** தேவன் எந்த நோக்கத்தோடு தம்முடைய ஜனங்களை விடுதலைபண்ண எழுந்தருளினாரென்று கவனித்துப் பாருங்கள். **'பண்டிகை கொண்டாடும்படி'** என் ஜனங்களைப்போகவிட வேண்டுமென்று கட்டளை யிடுகிறார்.

அடிமைத்தன தேசத்தில் பண்டிகை கிடையாது; அடிமைகளுக்குக் கொண்டாட்டம் ஏது? நாம் பாவத்திலிருந்து விடுதலைபெற்றால் மாத்திரம் மெய்யான சந்தோஷத்தை அனுபவிக்கக்கூடும் 'கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுண்டு.' விடுதலை எங்கேயோ அங்கே ஆனந்த சந்தோஷமுண்டு (லூக்கா 13:13; அப். 3:7, 8; சங். 126; 1-3).

II. **சத்துரு உபத்திரவம் செய்வது.** வச. 6-23;

பயமுறுத்துவதுமல்லாமல் கொடிய துன்பங்களைச் செய்ய ஆரம்பிக்கிறான்.

**1. அவன் கொடுத்த கொடுமையான கட்டளைகள்.**

அ. "அதிக வேலையைச் சுமத்துங்கள்." வச. 9.

ஆ. "உங்கள் வேலைகளை ஒவ்வொரு நாளிலும் செய்து முடியுங்கள்." வச. 13.

இ. "போய் வேலை செய்யுங்கள்." வச. 18.

அவர்கள் மேல் உரிமைப் பாராட்டி முன்னிலும் அதிகமாய் அதிகாரம் செலுத்தி, அவர்களை கொடூரமாய் ஆண்டு வருகிறான்.

**2. அவன் உண்டாக்கின பலத்த துன்பங்கள்.**

அ. "வேலை" வச. 7, 9, 11, 13, 14, 18.

ஆ. "அதிக வேலை." வச. 9.

இ. "கஷ்டம்." வச. 9.

ஈ. "அடி." வச. 14, 16

உ. "இக்கட்டு." வச. 19.

ஊ. "தீங்கு." வச. 22.

எ. "உபத்திரவம்." வச. 23.

ஏ. "ஆளோட்டிகள்." வச. 6, 10, 14.

முதலாம் அதிகாரத்தில் காட்டிய துன்பங்களின் அட்டவணையோடு இவைகளை ஒத்துப்பார்த்தால் இப்பொழுதுண்டான வருத்தங்கள் அதிகமென்று அறியலாம். இதுதானா விடுதலை? ஒருவறாய்ப் பார்க்கும் பொழுது அவர்களுடைய முன்னிலைமையைவிட அவர்களுடைய பின்னிலைமை மகா கேடுள்ளதாய்த் தோன்றுகிறது.

ஆ! சிலுவையை எடுக்காமல் சீடனாகுவது கூடாத காரியம் (லூக்கா. 14:27-33). முன் குறித்த மூப்பருடைய மனம் இப்போது சோர்ந்து போகிறது. வச. 21.

மோசே ஆரோன் என்பவர்களுங்கூட அவிசுவாசத்துக்கும் மனச்சோர்வுக்கும் இடங்கொடுத்தார்கள். வச. 22, 23. **"நீர் உம்முடைய ஜனங்களை விடுதலையாக்கவில்லையே"** என்று முறையிட்டார்கள்.

***கவனிப்பு:*** *இவ்வதிகாரத்தில்* ***3 கேள்விகள்*** *வந்ததைக் காண்க.*

***1. சத்துருவின் கேள்வி.*** *வச. 4: "நீங்கள் ஜனங்களைத் தங்கள் வேலைகளை விட்டுக் கலையப்பண்ணுகிறது என்ன?" என்று தேவதாசர்களைக் கோபிக்கிறான்.*

***2. அடிமைகளின் கேள்வி.*** *வச. 15: "உமது அடியாருக்கு நீர் இப்படிச் செய்கிறது என்ன? ஐயோ! இன்னும் அந்தப் பழைய எஜமானுக்கு தங்களை அடிமைகள் என்று ஒப்புக் கொள்ளுகிறார்கள்.*

***3. சோர்ந்த ஊழியரின் கேள்வி.*** *வச. 22: "ஆண்டவரே இந்த ஜனங்களுக்குத் தீங்கு வரப்பண்ணினது என்ன?" தேவன் ஒருவர் மாத்திரம் மகா அமைதலாயும் ஞானமாயும் தம்முடைய இரட்சிப்பின் கிரியைகளை நடப்பித்து வருகிறார்.*

***கேள்விகள்:***

*1. பார்வோன் இஸ்ரவேலரை எப்படித் துன்பப் படுத்தினானோ அப்படியே சாத்தான் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்துகிறான். சில உதாரணங்களை எடுத்துக் காட்டுக.*

*2. இஸ்ரவேலரது யாத்திரை இராஜநீதி சட்டத்திற்குச் சம்பந்தமாயிராமல் மார்க்கத்துக்குச் சம்பந்தமாயிருந்த தென்று காட்டுக.*

*3. பார்வோன் கோபத்துடன் சொன்ன வார்த்தைகளுக்குப் பதிலாக மோசே சொன்னதென்ன? இதில் அவன் காண்பித்த ஞானம் என்ன?*

*4. பார்வோன் ஜனங்களைப்பற்றி முறையிட்டான். ஜனங்கள் மோசேயினிடத்தில் முறையிட்டார்கள். மோசேயும் ஆரோனும் ஆண்டவரிடத்தில் முறை*

யிட்டார்கள். இவைகளை ஒவ்வொன்றாய் எடுத்து, முறையிட்டது நியாயம் அல்லது அநியாயம் என்று காண்பிக்க.

# 6ஆம் அதிகாரம்

## விசுவாசிகள் ஆறுதல் அடைதல்

**கவனிப்பு:** அவர்களுக்குண்டான மனச்சோர்வைத் தேவன் கிருபையாக நீக்குகிறார். தம்மை நம்பவும் தைரியங்கொள்ளவும் வகை காட்டுகிறார்.

இவ்வதிகாரத்தில் தேவனுடைய சர்வ சக்தி ஒரு பக்கம், மனிதருடைய பலவீனம் ஒரு பக்கம் என்பதற்காகக் கவனித்துப் பாருங்கள். இஸ்ரவேல் மூப்பர் மோசே ஆரோன் என்பவர்களை அதிகமாய் நம்பினதினாலே அல்லவா வருத்தம் உண்டானவுடனே மனம் சோர்ந்து போனார்கள். இனிப் பெரியோரையல்ல, தம்மையே நோக்கும்படி தேவன் அவர்களுக்குப் போதிக்கிறார்.

I. *கர்த்தருடைய சம்பூரணம்.*

ஜனங்களுடைய மனச்சோர்வை நீக்கும்படி தம்மை வெளிப்படுத்தித் தம்முடைய சர்வ சக்தியையும் இரட்சிப்பின் வல்லமையையும் நோக்கிப் பார்க்கச் சொல்லுகிறார்.

***"நானே கர்த்தர்"*** *வச. 6:29;* ***"கர்த்தர் நான்"*** *வச. 7;* ***"நானே கர்த்தர்"*** *வச. 8;* ***"நான் யேகோவா"*** *வச. 3.*

இவ்விதமாய்த் திரும்பத் திரும்பத் தம்மை நோக்கவும் நம்பவும் வற்புறுத்திச் சொல்லுகிறார்.

***1. அவருடைய "பலத்த கை"*** *வச. 1. (2 விசை)* சோர்ந்த மனம். அந்த வல்லகரத்தைச் சிந்திக்கட்டும் அப்படிச் சிந்திப்பதால் சோர்வு நீங்காதா? *(ஏசாயா 51:9-11; சங். 89:13).*

மேலும் அது **'ஓங்கிய கை'** என்றும் பார்க்கிறோம். வச. 6; தம்முடைய ஜனங்களை மீட்டு இரட்சிக்க 'ஓங்கின கையோடு' நிற்கிறார். நம்முடைய பலவீனத்தை நோக்காமல் அந்த வல்லமையை நோக்கக்கடவோம்.

*2.* ***அவருடைய 'சர்வவல்லமை'*** *வச. 3.* ***"சர்வ வல்லமையுள்ள தேவன்."***

*மனம் சோர்வதேன்? அவரால் கூடாத காரிய முண்டோ? (எரே. 32:26, 27; மாற்கு 10:26, 27).*

*3.* ***"அவருடைய உடன்படிக்கை"*** *வச. 4, 5. (2 விசை):* *சர்வ வல்லவராயும் உண்மையுள்ளவராயுமிருக்கிறார்; சொல்தவறாதவர்; சத்திய வாசகர். தாம் அவர்கள் முன்னோரோடு செய்த உடன்படிக்கையை நினைக்கும்படி ஏவுகிறார்.*

*அவர் சொன்ன ஒரு வார்த்தையாவது தவறக்கூடுமா? கூடாதோ! அப்படியானால் இந்த மனச்சோர்வு எதற்கு? (மத். 24:35; எபி. 6:17, 18; 1 பேதுரு 1:25).*

*4.* ***அவருடைய 'நாமம்'*** *வச. 3:* **'யேகோவா'** *என்பது. அந்த நாமத்தில் கர்த்தருடைய மூன்றும் அடங்கி யிருக்கின்றன.*

*அவர் இரட்சிப்பின் கர்த்தாவாக எழுந்தருளும்போது தான் இந்த விசேஷித்த நாமத்தினாலே தம்மை வெளிப்படுத்தினார். ஆகையால் அவர் இரட்சிப்பின் நிறைவோடு வந்து கிருபை செய்கிறாரென்பதை அந்த நாமம் காட்டுகிறது. இரட்சிப்புக்கென்றே வந்திருக்கிறா ரானால் ஜனங்கள் சோர்ந்துபோவானேன்?*

*5.* ***அவருடைய இரட்சிப்பு.*** *வச. 6-9:* ***"பூரண இரட்சிப்பு"*** *என்று கவனித்துப் பாருங்கள்.*

*அ.* ***"சுமைகளை நீக்குகிறவர்"*** *வச. 6, 7.*

ஆ. "விடுவித்து இரட்சிக்கிறவர்" வச. 6, 7.

இ. "தம்மண்டைச் சேர்த்துக்கொள்ளுகிறவர்" வச. 7.

ஈ. "நல்ல சுதந்திரத்தை அருளுகிறவர்" வச. 8.

இக்குறிப்புகளுக்கு இசைவாக புதிய ஏற்பாட்டிலிருந்து ஒத்த வாக்கியங்களை எடுத்துப் பார்க்கவும்.

இவ்வைந்து பிரிவுகளில் கண்ட முக்கியமான கருத்துக்களைச் சிந்திக்குங்கால், சோர்ந்துபோன மனம் ஆறித் தேறாதா?

II. **மனிதருடைய பலவீனம்.**

கர்த்தரை நோக்கிப் பார்த்தோமே; மோசே ஆரோன் முதலியோரையும் பார்ப்போமாக.

**'இவர்களே'** வச. 15, 19, 25, 26, 27. **'இவர்கள்'** வச. 14; **'அவர்களே'** வச. 9; அவருடைய திவ்விய 'நாமத்தைக்' கவனித்தோமே. வச. 5; இவர்களுடைய **'நாமங்களை'**யும் கவனிக்கவேண்டும். வச. 16.

ஆண்டவருடைய சம்பூரணத்தைப் பார்த்தபின் 'இவர்களுடைய' பலவீனத்தை அறிவது நலம்.

1. **'இவர்களே'**

**"செவி கொடாதவர்கள்"** வச. 9: ஆம், பரலோகத்திலிருந்துப் பேசும் சத்தத்துக்கு எத்தனையோ தரம் செவி கொடாமல் போனோம். மேன்மைப்பாராட்ட இடமுண்டா? எந்த மனிதரானாலும் தவறுதலுடையவர்கள் தானே?

மனிதரையல்ல, கர்த்தரையே நம்புவோமாக (சங். 118:8, 9).

2. **"விருத்தசேதனமில்லாத உதடுகளுள்ளவர்கள்"** வச. 12-30; மோசே அப்பேர்ப்பட்டவனானால் மற்றவர்களைச் சொல்வானேன் (ஏசாயா 66:5).

"நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள்; எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம்?" *(ஏசாயா 2:22).*

*3.* ***'மண்ணானவர்கள்'*** *வச. 14, 15, 19, 24, 25;* ***மாம்ச பிறவிகள்*** *என்று திரும்பத் திரும்ப காட்டுகிறார்.*

*வம்சமென்றும் குலமென்றும் ஜாதியென்றும் பெருமைப் பாராட்டுவது வீண். வெறும் மண்தானே. சங். 103:14.*

*4.* ***"கட்டளை பெற்றவர்கள்"*** *வச. 26; ஆதலால் வேலைக்காரரை நம்பாமல், அவர்கள் யாருடைய கட்டளையைத் தங்கள் சிரசின்மேல் வைத்து நடக்கிறார்களோ அந்தப் பரம எஜமானையே நம்புவோமாக.*

*5.* ***"பயத்தோடும் நின்றவர்கள்"*** *வச. 27-30; பார்வோனுக்குப் பயந்து சோர்ந்துபோனார்களே!*

*சகோதரரே, பயந்து நடுங்கித் தத்தளிக்கும் நாசியில் சுவாசமுள்ள மனுஷரை நம்பவேண்டாம். சகல சம்பூரணராகிய இரட்சகர் இயேசுவை நோக்கிப் பார்த்துத் தைரியமாய் ஊழியம் செய்யக்கடவோம்.*

**கேள்விகள்:**

*கடவுளுடைய நாமத்தை அறிந்துகொள்வதைச் சிந்திக்க.*

*1. இந்துப் பெண்கள் தங்கள் புருஷரின் பெயர்களைச் சொல்லமாட்டார்கள். ஏன்? அதற்கு மூலகாரணம் என்ன?*

*2. இந்துக்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல பெயர்களை வைத்திருந்தும் அநேகமாய் அந்தப் பெயர்களை உச்சரிக்காமல் அவைகளுக்குப் பதிலாக இழிவான பெயர்களை உபயோகிக்கிறார்கள். ஏன்?*

*3. ஒருவனுடைய தொழிற்பெயரிலும் அவனுடைய சொந்தப்பெயர் எப்படி விசேஷமானது?*

*4. தேவன், கடவுள், கர்த்தர், சர்வவல்லவர் என்ற தொழிற்பெயர்களின் அர்த்தங்கள் எவை?*

*5. யேகோவா என்றால் என்ன?*

*6. யேகோவா என்பது உடன்படிக்கைக்குரிய பெயர் என்று சொல்லப்படுகிறது. அதன் அர்த்தம் என்ன? ஒருவன் உடன்படிக்கைக்குப் பெயர் எழுதினால் தொழிற் பெயரா சொந்தப்பெயரா எந்தப் பெயரை எழுதுவான்?*

*7. இவ்வதிகாரத்தில் கர்த்தர் தமது நாமத்தைத் தெரிவிக்கிறதின் விசேஷம் என்ன? ஏசாயா. 52:6ஐயும் எரே. 16:21ஐயும் பார்க்க.*

# 7ஆம் அதிகாரம்

## தேவனுடைய அடையாளங்களை அசட்டைப்பண்ணுதல்

**கவனிப்பு:** இதுவரைக்கும் தேவன் தம்முடைய வல்ல கிரியைகளை எகிப்து தேசத்தில் செய்யவில்லை. இந்த அதிகாரத்திலே அவைகளைச் செய்ய ஆரம்பிக்கிறார். இங்கே **"கர்த்தர் கட்டளையிட்டபடி செய்தார்கள்"** என்ற வாசகம் அடிக்கடி வருகிறது. *(வச. 2, 6, 10, 20).* அவருடைய பணிவிடைக்காரராகிய நாம் பலத்த கிரியைகளைக்கண்டு களிகூர வேண்டுமானால், எல்லா காரியங்களிலும் அவருடைய சொற்படியே நடப்பது அவசியம். **'கடினம்'** என்கிற வார்த்தையும் பலதரம் வருகிறது. *(வச. 3; 13, 14, 22).* ஆண்டவர் கிரியை செய்யும் பொழுது ஒருவன் இணங்காமற்போனால் அவன் இருதயம் கடினமாவது நிச்சயம்.

I. **கர்த்தருடைய கிரியைகளின் ஆரம்பம்.** வச. *1-7.*

அவர் மகத்தான கிரியைகளைச் செய்ய எத்தனிக்கையில், மூன்று காரியங்களை நாம் கவனிக்கலாம்.

*1.* **அவருடைய வேலை:** ஊழியருடைய வேலை அல்ல. கிரியையெல்லாம் தேவகிரியை, **"நான் உனக்கு கட்டளையிடும் யாவையும் நீ சொல்ல வேண்டும்"** வச. *2:* **நீ செய்யவும் வேண்டும். அப்படியே செய்தார்கள்.** வச. *6, 10, 20.*

யுத்தம் கர்த்தருடையது. தளகர்த்தனுக்குப் பின்சென்று அவருடைய சொற்படியே செய்வதுமாத்திரம் நம்முடைய காரியம்.

*2.* **அவருடைய வார்த்தை "என் கையை நீட்டி இஸ்ரவேல் புத்திரரைப் புறப்படப் பண்ணுவேன்"** வச. *5* அந்தத் திருவாக்கை உறுதியாய் நம்பி, மோசே தைரியமடைந்து ஊழியம் செய்யட்டும்.

அந்தப் பிரகாரமே நாமும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்பி முழு நிச்சயத்தோடு பணிவிடை செய்வோமாக (ஏசாயா. *55:10, 11; 49; 24, 25*).

*3.* **அவருடைய வல்லமை. "நானே கர்த்தரென்று எகிப்தியர் அறிவார்கள்"** *5;* எங்கே பலவான் தன் உடைமைகளைக் காத்து நிற்கிறானோ அங்கே சர்வ வல்லவராகிய இரட்சகர் இயேசு வந்து வெற்றி சிறந்து அந்த உடைமைகளைக் கொள்ளையிடுகிறார் (வச. மத். *12:29*).

இப்படிப் பார்த்தால், பிசாசானவன் தன் முதல்தரமான கோட்டைகளைக் கட்டின இந்திய தேசத்தில் கிறிஸ்துநாதர் மகத்தான கிரியைகளை நடப்பிப்பார் என்று நாம் எதிர்நோக்குவது நியாயம்.

*1. **கோலால் செய்த அடையாளங்கள்**. வச. 8-25.*

*4ஆம் அதிகாரத்தில் கானப்படுகின்ற அடையாளங்களுக்கும் இங்கே செய்யும் அடையாளங்களுக்கும் வித்தியாசமுண்டு. அங்கே மூன்று அடையாளங்கள் செய்யப்பட்டன. இங்கே இரண்டு மாத்திரம் வருகின்றன. அவைகள் கர்த்தருடைய ஜனங்களுக்கு விசுவாசத்தை உண்டாக்கக் காட்டப்பட்டன. இவைகளோ பார்வோனை இணங்கப்பண்ணுவதற்குக் காட்டப்படுகின்றன.*

*1. **சர்ப்ப அடையாளம்**. வச. 8-13: இதிலே.*

***அ. தேவன் ஜீவனை உண்டாக்குகிறவர்** என்பதும், (வச. 10).*

***ஆ. தேவன் பொய்யை மேற்கொள்ளுகிறவர்** என்பதும் (வச. 12) விளங்கும்.*

*இவ்விரண்டு சத்தியங்களையும் நாம் நன்குணர்ந்து ஊழியம் செய்வது அவசியம் (எசே. 37:9, 10; எரே. 23:28).*

*2. **இரத்த அடையாளம்**. வச. 14-25. இதிலே.*

***அ. தேவன் நன்மைகளைத் தீமையாக மாற்றக்கூடியவர்** என்பதும் (வச. 20, 21)*

***ஆ. தேவன் பாவிகளைத் திருப்தியடையாமல் திரியச்செய்கிறவர்** என்பதும் (வச. 24) விளங்கும். எபி. 6:8; மல். 2:2; ஆமோஸ். 8:11, 12; எரே. 2:19; ஓசி. 2:8, 9.*

*II. **கள்ளத்தனமான அற்புதங்கள்**. வச. 11, 12, 22.*

*அந்த மந்திரவாதிகள் தந்திரமாக மாயவித்தையினாலே அந்தக் கிரியைகளைச் செய்தார்களோ? சாத்தானுடைய வல்லமையைப் பெற்றுக்கொண்டு அற்புதங்களைச் செய்தார்களோ? இது எப்படியிருந்தாலும், பிசாசினுடைய செய்கையினாலே பொய்யான அற்புதங்கள் நடப்பதுண்டு*

(2 தெச. 2:9, 10). ஆதலால் நாம் வஞ்சிக்கப்படாதபடி எச்சரிக்கையாயிருக்கவேண்டும் (1 யோவான். 4:1-3). சாத்தான் கர்த்தருக்கு எதிர்த்து நின்று தன்னால் இயன்ற மட்டும் முயற்சி செய்வான். தேவனுடைய வல்ல கிரியைகள் எங்கே நடக்கிறதோ அங்கே பிசாசினுடைய கள்ளத்தனமான செய்கைகளும் நடக்கும். தேவன் வெளிப்படுத்தியிருக்கிற திருவுளச்சித்தத்தை எந்தக் காரியத்திலாவது மீறுகிற மனுஷன் அற்புதங்களைச் செய்யினும் நம்பப்படத்தக்கவனல்ல.

நாம் தேவ ஆவியைப் பெற்று ஊழியம் செய்கையில் சாத்தான் வல்லமையோடு எழும்பி எதிர்த்து மனதுமயங்கும்படி அதிசயக் கிரியைகளைச் செய்தாலும், நாம் கலக்கமுற்றுச் சோர்ந்து போகவேண்டாம்.

IV. **கடினமான இருதயம்** (வச. 3, 13, 14, 22).

பார்வோன் இராஜாவின் இருதயம் கடினமானதை பிந்தின அதிகாரங்களில் காணலாம்.

இங்கே அவனுடைய எதிர்ப்பும் விரோதமும் அக்கடினத்திற்குக் காரணமாயிற்றென்பதை மாத்திரம் கவனித்துக் கொள்க.

**"செவிகொடாமற் போனான்"** என்றும் (13, 16, 22) **"சிந்தியாமற்போனான்"** என்றும் (வச. 23) வெகு தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது.

சுவிசேஷ வசனத்தைக் கேட்டும், அதற்குச் செவி கொடாமற்போகிறவர்கள் இப்படிப்பட்ட இருதய கடினத்துக்கு ஏதுவானவர்கள் என்று அறிவோம் (எபி. 3:7-13; 47).

**கவனிப்பு:** நம்மில் சிலர் வயோதிபரானாலும் ஆத்துமாக்களை விடுவிக்கும் ஊழியத்தில் அதிக பயனுள்ளவர்களாயிருக்கலாம். (வச. 7).

பாவிகளைத் தண்டிக்க நேரிட்டாலும் கர்த்தர் நீடிய பொறுமையுள்ளவராய் இருக்கிறார். (வச. 25, 2 பேதுரு. 3:9).

நைல் நதியை அடித்த சமயத்தைப் பார்த்தல் (வச. 15) பார்வோன் அதிகாலையில் எழுந்து அந்த நதியைத் தெய்வமாக வணங்கும்படி புறப்பட்டுப்போன நேரமென்றறிக. சில வேளை பாவம் செய்யும்போதே தண்டனை வருவதுண்டு.

### பத்து வாதைகள்

முதல் பிரிவு: அசுத்தம் உடல் நலக் குறைவு உண்டாக்கின வாதைகள்.

1. இரத்தம் முன்னறிவிக்கப்பட்டது. 7:17, 18.
2. தவளைகள் முன்னறிவிக்கப்பட்டது. 8:2.
3. பேன்கள் முன் அறிவிக்கப்படாமல் வந்தது. 8:16.

இவைகள் மந்திரவாதிகளுடைய முழு பெலவீனத்தோடு முடிகிறது. (8:18, 19).

இது முதற்கொண்டு இஸ்ரவேலருக்கும் எகிப்தியருக்கும் வித்தியாசம் காணப்பட்டது. (8:22, 23).

இரண்டாம் பிரிவு: நோவு கஷ்டங்களை உண்டாக்கின வாதைகள்.

4. வண்டுகள் முன்னறிவிக்கப்பட்டது. 8:21.
5. கொள்ளைநோய் முன்னறிவிக்கப்பட்டது. 9:3.
6. கொப்புளங்கள் முன் அறிவிக்கப்படாமல் வந்தது. 9:8.

இவைகள் மந்திரவாதிகளுடைய முழுத் தோல்வியோடு முடிகிறது.

இது முதற்கொண்டு எகிப்தியரில் உணர்வடைந்து பயந்தவர்களுக்குத் தயவு காட்டப்பட்டது. (9:19, 20).

மூன்றாம் பிரிவு: பயங்கரத் தோற்றங்களோடு வந்த வாதைகள்.

7. கல்மழை முன்னறிவிக்கப்பட்டது. 9:18.

8. வெட்டுக்கிளிகள் முன்னறிவிக்கப்பட்டது. 10:4.

9. காரிருள் முன்னறிவிக்கப்படாமல் வந்தது. 10:21.

இவைகள் பார்வோனுடைய முழு விரோதத்தோடு முடிகிறது. (10:28, 29).

இம்மூன்று வகுப்பிலும் முதலாவது வாதையும் இரண்டாவது வாதையும் முன்னறிவிக்கப்பட்டது என்றும் மூன்றாவது வாதை முன்னறிவிக்கப்படாமல் வந்ததென்றும் காண்க.

நான்காம் பிரிவு: துக்கம் மரணங்களை உண்டாக்கின வாதை.

10. முதற்பேற்றுசங்காரம். இது தனியே நிற்கிற மகாபயங்கரவாதை.

இவ்வாதைகளில்:

1ஆம் வாதை நைல் நதிச் சுவாமியாகிய (Hapi) ஆபிக்கு விரோதமானது.

2ஆம் வாதை தவளைத் தலையையுடைய (Heka) ஏகாதேவிக்கு விரோதமானது.

3ஆம் வாதை பூமாதேவியாகிய (Seb) சேபுக்கு விரோதமானது.

4ஆம் வாதை சிருஷ்டி கர்த்தாவாகிய (Khepra) கெப்ராவுக்கு அடையாளமான வண்டுச்சிலைக்கு விரோதமானது.

*5ஆம் வாதை* (Apis, Isis, Osiris, Hathor) *ஏபிஸ், ஐசிஸ் ஓசிரிஸ், ஹாதொர் என்ற ரிஷப சுவாமிகளுக்கு விரோதமானது*

*6ஆம் வாதை* (Typhon) *தைப்போன் என்ற கருப்பன சுவாமிக்கு நரபலிகளைச் செலுத்திச் சாம்பலை அள்ளித்தூவி* (Nait) *நேயிட் என்ற வானராக்கினிக்கு ஒப்புவிப்பார்கள். இந்தச் சுவாமிகளுக்கு விரோதமான வாதை.*

*7ஆம் வாதை செழிப்பு உண்டாக்கும் தேவதைகளாகிய நீர், அக்கினி, ஆகாயம் இவைகளின் வணக்கத்துக்கு விரோதமானது.*

*8ஆம் வாதை எகிப்திய வெட்டுக்கிளிகள் வராதபடி தடுக்கிற சுவாமியாகிய* (Serapis) *செராபிசுக்கு விரோதமானது.*

*9ஆம் வாதை சூரிய பகவானாகிய* (Ra) *ரா என்பவனுக்கு விரோதமானது.*

*10ஆம் வாதை கொடிய ஆபத்தில் உதவிசெய்ய முடியாத எல்லாப் பொய் சுவாமிகளுக்கும் விரோதமானது (ஆதி. 12:12).*

**கேள்விகள்:**

*1. வச. 1. உன்னை நான் பார்வோனுக்குத் தேவனாக்கினேன் என்ற வாக்கியத்தின் அர்த்தம் என்ன?*

*2. வச. 4. "நானே கர்த்தர் (யேகோவா) என்று எகிப்தியர் அறிவார்கள்." சுவிசேஷ பிரசங்கத்தினால் சகல ஜாதியாரிடத்திலும் நாம் கர்த்தருக்குச் சாட்சிகளா யிருக்கவேண்டும். எகிப்தின் மேல் கர்த்தர் தமது கையை நீட்டினது போல உலகத்தின் இராஜ்யங்களின் மேல் அவர் தமது கையை நீட்டுவதனால் (யுத்தம், கொள்ளைநோய்,*

*பூமியதிர்ச்சி முதலிய ஆபத்துக்கள்) அவர்கள் அவரை எப்படி அறிவார்கள்?*

*3. வச. 10 13. மோசே செய்ததற்கும் பார்வோன் சாஸ்திரிகள் செய்ததற்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் எவை? மந்திர வித்தையினால் அவ்வித காரியங்களைச் செய்வதுண்டா?*

*4. கர்த்தர் எகிப்தியர்மேல் வாதைகளை உண்டு பண்ணுவதின் காரணம் என்ன? சுவிசேஷத்தைக் கேட்கமாட்டாதவர்கள்மேல் ஆண்டவர் உண்டுபண்ணும் நரகத்தண்டனைகளைப்பற்றிப் பேசுவதில் நமது உத்தரவாதம் என்ன?*

# 8ஆம் அதிகாரம்

## கர்த்தருடைய விரல் நீட்டப்படுதல்—வச. 19.

***கவனிப்பு:*** *ஆண்டவர் இப்பொழுது வல்லமையோடு கிரியை செய்கிறார். வாதையின்மேல் வாதையை வரவிட்டு எதிராளியை அடிக்கிறார். திரும்பத் திரும்ப* ***'போக விடு'*** *என்கிற வார்த்தை இவ்வதிகாரத்தில் வருகிறது (வச. 1, 2, 8, 20, 21, 28, 29, 32). அந்த உத்தரவின்படி போகவிடாமையினாலே பார்வோனுடைய இருதய* ***கடினம்*** *அதிகப்பட்டு வந்தது. வச. 15, 19, 32 இதிலே* ***தவளை வாதையும், பேன் வாதையும், வண்டு வாதையும்*** *வந்ததைக் காண்க.*

I. *சத்துரு பாசாங்கு செய்வது. வச. 1-15.*

*சற்று உணர்வடைந்து, பயந்து, பின்பு கபடம் செய்யப் பார்த்தான்.*

***1. பயந்து கெஞ்சுகிறான்*** *வச. 8. மந்திரவாதிகள் தங்கள் மந்திர வித்தையினாலே தவளைகளை வரப்பண்ணியும் பார்வோன் அஞ்சி வருத்தப்பட்டான்.*

கர்த்தர் பாவிகளைச் சிட்சிக்கும்பொழுது அந்தச் சிட்சையினாலே அவர்களுக்கு வருத்தமும் நடுக்கமும் உண்டாகிறதுண்டு *(1 சாமு. 5:7, 10, 12; அப். 5:10, 11).*

**2. பொய் வாக்குக் கொடுத்தான்.** வச. *8:* ஜனங்களைப் போகவிடுவேன் என்றான். ஆகிலும் உள்ளுக்குள் அந்த நோக்கம் அவனுக்கு இல்லவே இல்லை.

அடிக்கடி வியாதியும் வருத்தமும் நேரிடும்பொழுது, சீர்ப்பட்டு ஜீவிப்போமென்று குணப்படாதவர்கள் பொருத்தனை செய்வதுண்டு. அவர்கள் உள்ளத்திலோ அந்த நோக்கம் இல்லாததினால் அந்த வாக்கின்படி செய்யாமற் போகிறார்கள்.

**3. போகவிடாமல் மோசம் செய்தான்.** வச. *15:* 'இலகுவுண்டாயிற்றென்று கண்டு' தன் இருதயத்தைக் கடினப்படுத்திக்கொண்டான், செவிகொடாமலும் போனான். இவ்விதமாய் வாதையினாலே அவனுக் குண்டான உணர்வும் அச்சமும் நீங்கி, முன்னிலும் அதிகமாய்க் கடினப்பட்டான்.

சிட்சையினால் பயமடைந்த பாவிகள் அந்தச் சிட்சை எளிதான பின்பு அப்படியே கடினப்பட்டுத் துணிகரம் காட்டுவதுண்டு.

II. **சத்துரு துணிந்து எதிர்த்து நிற்பது** வச. *16-19.*

**1. திராணியற்றவனாய்க் காணப்பட்டான்** வச. *18:*

"அவர்களால் கூடாமற்போயிற்று." மனிதருடைய வித்தைக்கு ஒரு மட்டுண்டு. பிசாசின் வல்லமை சர்வ வல்லமையல்ல. இதுவே கர்த்தருடைய ஊழியருக்குத் தைரியம் கொடுக்கத்தக்கது. *(ரோமர். 16:20).*

**2. தேவனுடைய விரலென்று உணர்ந்தான்.** வச. *19.*

"இது தேவனுடைய விரல்" என்றார்கள். தங்கள்

திராணிக்கு மிஞ்சின கிரியை கர்த்தருடைய கிரியையென்று அறிந்து கொண்டார்கள்.

**3. திரும்பாமல் அதிகக் கடினப்பட்டுப் போனான்.** *வச. 19:*

*இந்தச் சமயத்தில் அவன் அஞ்சவுமில்லை. கெஞ்சவு மில்லை; வேண்டுமென்று எதிர்த்து நின்றான். கடினப்பட்ட ஆத்துமாவின் பேரில் தேவன் தம்முடைய விரலை நீட்டித் தட்டினாலும் இவ்விதமாக விரோதித்து நிற்பதுண்டு; நிர்விசாரபாவி துணிகர பாவியாகிறான். இருதய கடினம் எல்லா தவறுகளிலும் மகா பெரிய தவறு (எபி. 3:13-15; 4:7).*

III. **சத்துரு தந்திரம் செய்து பார்த்தான்.** *வச. 20-32:*

*தேசத்திலேதானே பலியிடவும், அல்லது அதிக தூரம் போகாமல் கர்த்தரை ஆராதிக்கவும் அவர்களை உபாயமாய்க் கேட்டுப் பார்த்தான்.*

*(பார்வோன் செய்த உபாய தந்திரங்களையெல்லாம் 10ஆம் அதிகாரத்தில் ஒன்றாகச் சேர்த்து வியாக்கியானம் சொல்வோம். ஆகையால் இவ்விரண்டு உபாயங்களையும் இவ்விடத்தில் விவரிக்காமல் விட்டுவிடுகிறோம்.)*

*எதிர்ப்பினால் ஆகாதவைகள் உபாயத்தினாலே ஆகும் என்று சாத்தான் நன்றாய் அறிவான். (2 கொரி. 2:11; 11:3).*

**கவனிப்பு.** *மோசே கர்த்தருடைய சொற்படி செய்தான் (ஆதி. 7:6, 10, 20; 8:17). ஆகையால்* **கர்த்தர் மோசேயின் சொற்படி செய்தார்"** *(வச. 13, 31.) இது எவ்வளவு ஆச்சரியமான வார்த்தை. நாம் தேவனுடைய கட்டளையின்படி நடக்கும்பொழுது அவர் நம்முடைய ஜெபங்களைக்கேட்டருளி நம்முடைய வேண்டுகோளின்படி செய்வார் (யோவான் 15:7).*

***கவனிப்பு.*** இங்கே **'பேன்'** என்று திருத்தப்பட்ட வார்த்தை **கொசுவின்** இனத்தைச் சேர்ந்த ஓர் ஜீவ ஜெந்துவைக் குறிக்குமென்று சொல்லுவதுண்டு *(புதிய திருத்தம் - கொசு).*

***கவனிப்பு.*** *வச. 23இல்* ***'வித்தியாசம்'*** *என்று திருத்தின பதம் மறுபடியும் சங். 111:9; 130:7இல் வருகிறது. அங்கே* ***'மீட்பு'*** *என்றிருக்கிறது. அதன் சரியான கருத்தும் அதுவே.*

*"என் ஜனங்களுக்கும் உன் ஜனங்களுக்கும் இடையில்* ***மீட்பை வைப்பேன்*** *என்கிறார். தேவனுடைய மீட்புத் தானே இஸ்ரவேலரை வித்தியாசப்படுத்தி அவர்களைக் காத்துவரும். குணப்பட்டவர்களுக்கும் குணப்படாதவர்களுக்கும் வித்தியாசம் என்னவென்றால் கிறிஸ்துவின் நித்திய இரட்சிப்பே.*

**கேள்விகள்:**

*1. மந்திரவாதிகளைப்பற்றிப் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதினது என்ன?*

*2. வச. 9. 'மேன்மை' என்னும் பதம் புதிய திருத்தத்தில் 'சிலாக்கியம்' என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறதைக் கவனிக்க. இந்தச் சிலாக்கியம் பார்வோனுக்கு எதற்காகக் கொடுக்கப்பட்டிருந்தது?*

*3. வாதை நீங்கும் சமயத்தைக் குறிக்கும் சிலாக்கியம் தனக்கு இருக்கிறதாக அறிந்த பார்வோன் நாளைக்கு என்று சொன்னதற்குக் காரணம் என்னவாயிருக்கும்?*

*அ. பார்வோன் பாவம் செய்தவனின் வழக்கப்படியே தாமதம்பண்ணினானா?*

*ஆ. உடனே நீங்கவேண்டும் என்று அவன் சொல்லியிருந்தானானால் கர்த்தர் அதை நீக்கியிருக்க மாட்டாரா?*

*4. வச. 26. எகிப்தியருடைய அருவருப்பு என்றால் என்ன?*

*5. வச. 25, 28. இந்த வசனங்களில் பார்வோன் இயன்ற மட்டும் இஸ்ரவேலருக்கும் உத்தரவு கொடுக்கிறானே. மோசே பார்வோனின் வார்த்தைகளை எற்றுக்கொண்டு ஒழுங்கு செய்திருந்தானானால் எப்படியிருந்திருக்கும்?*

*6. உலகத்தாரும் கிறிஸ்தவர்களும் கூடியிருப்பது எப்பொழுதும் கிறிஸ்தவனுக்கு மோசம் என்பதற்கும் உதாரணங்கள் கொடு.*

# 9ஆம் அதிகாரம்

## பெரிய போராட்டம்

***கவனிப்பு:*** *கர்த்தருடைய வல்லமை மென்மேலும் விளங்குகிறது. பார்வோனோடு பலமாய்ப் போராடி வருகிறார். இவ்வதிகாரத்தில்* ***'இன்னும்' ('பின்னும்')*** *என்பதும்,* ***'கடினம்'*** *என்பதுமே முக்கியமான பதங்கள். இதிலே விவரிக்கப்பட்ட பயங்கரமான வாதைகள் என்னவெனில்* ***'கொள்ளை நோய்,' 'கொப்பளங்கள்,' 'கல்மழை'*** *என்பவைகளே.*

I. **சத்துரு பெருமை பாராட்டுவது.** *வச. 1-7.*

*1.* ***கர்த்தருடைய கரம்.*** *வச. 3: முந்தி "தேவனுடைய விரல்" என்று வந்தது (அதி. 8:19). இங்கே அவருடைய முழுக்கரம் வெளிப்படுவதுபோல.*

*2.* ***கொடிதான கொள்ளை நோய்.*** *வச. 3: 'மகாகொடிதான கொள்ளை நோய்' என்றிருக்கிறது.*

*3.* ***கடினமான இருதயம்.*** *வச. 7: அவன் சிறிதேனும் உணரவில்லை, பணியவுமில்லை. அப். 28:25-27.*

II. ***சத்துரு பாடனுபவிப்பது.*** *வச. 8-12.*

இஸ்ரவேலர் பாடுபட்டிருந்த அந்தச் சூளையிலிருந்தே இப்பாடுகள் பார்வோனுக்கு உண்டாயின. *(வச. 8; சங். 7:16).*

கர்த்தருடைய தாசர் **"பார்வோனுக்கு முன்பாக வந்து நின்றார்கள்"** *(வச. 10).*

மந்திரவாதிகளோ **"மோசேக்கு முன்பாக நிற்கக்கூடாதிருந்தது."** *(வச. 11).*

இவ்விதமாய் 'ஜெயம் கர்த்தருடையது' என்று விளங்களாயிற்று.

**கவனிப்பு:** *1.* முதலில், மந்திரவாதிகள் அற்புதக் கிரியைகளைச் செய்தார்கள் *(7:11, 22; 8:7).*

*2.* இடையில் மந்திரவாதிகள் திராணியற்றவர்களாகித் 'தேவனுடைய விரல்' என்று ஒப்புக்கொண்டார்கள் *(8:19).*

*3.* கடைசியில் முற்றிலும் தோல்வியடைந்து நிற்கக் கூடாமற் போனார்கள். *(9:11).*

எக்காலும் இப்படியே இருக்கும். *(நியா. 5:31).*

III. ***சத்துரு மிகவும் பயப்படுதல்.*** *வச. 13-35.*

கர்த்தர் அடித்த இவ்வடிகள் மிகவும் பலத்த அடிகள் என்று சேர்ந்து வந்த உரிச்சொற்களாலே அறியலாம்.

கொள்ளைநோயோ **'மகாகொடிதான கொள்ளை நோய்'** *(வச. 3).* என்றும்,

கொப்புளங்களோ **'எரிபந்தமான கொப்புளங்கள்'** *(வச. 9)* என்றும்.

கல்மழையோ **'மிகவும். கொடிய கல்மழை'** என்றும் *(வச. 18)* வாசிக்கிறோம்.

பார்வோன் சொன்ன 3 வார்த்தைகள் (பயத்தினாலே)

1. "பாவம் செய்தேன்" வச. 27.

2. "இது போதும்" வச. 28.

3. "போகவிடுவேன்," "இனி தடையில்லை" வச. 28.

ஆனாலும் 'இந்த முறை பாவம் செய்தேன்' என்று அவன் சொல்லும்போது மெய்யான மனந்திரும்புதல் அவனிடத்தில் இல்லவே இல்லையென விளங்கும். 'இந்த முறை' மாத்திரமா அவன் பாவம் செய்தான்?

கவனிப்பு. 'இன்னும்' ('பின்னும்') என்ற வார்த்தை திரும்பத்திரும்ப வருகிறதைக் கவனிக்கும் பட்சத்தில் மனந்திரும்ப மனமற்ற பாவிகளுடைய நிர்ப்பந்தமான நிலைமையை நாம் அறிந்து கொள்வோம்.

1. 'இன்னும்' பிடிவாதம் வச. 2.
2. 'இன்னும்' கர்வம் வச. 17.
3. 'இன்னும்' விரோதம் வச. 30.
4. 'இன்னும்' கடினம் வச. 34.
5. 'இன்னும்' குருட்டாட்டம் அதி. 10:7.

கவனிப்பு: இந்தப் போராட்டத்தில் விளங்கினவை.

1. கர்த்தருடைய கரம்-வச. 3-15.
2. கர்த்தருடைய காலம்-வச. 5.
3. கர்த்தருடைய வல்லமை-வச. 16.
4. கர்த்தருடைய நாமம்-வச. 16.
5. கர்த்தருடைய வார்த்தை-வச. 20, 21.
6. கர்த்தருடைய நீதி-வச. 27.

**கேள்விகள்:**

*1. வச. 6. "எகிப்தியருடைய மிருக ஜீவன்கள் எல்லாம் செத்துப்போயிற்று." வச. 19. "உன் மிருக ஜீவன்களையும் சேர்த்துக்கொள்." ஐந்தாம் வாதையில் எல்லா மிருக ஜீவன்களும் செத்துப்போனது மெய்யானால் ஏழாம் வாதையிலும் எகிப்தியருக்கு மிருக ஜீவன்கள் எங்கிருந்து வரும் என்று கேள்வி கேட்கிறவனை எப்படிச் சமாதானப்படுத்தலாம்?*

*2. வச. 20. ஆண்டவர் எகிப்தியருக்கு இவ்விதமாய் இரக்கங்காட்டினதை வேறு சில வேத வசனங்களினாலும் உதாரணம் காட்டுக.*

*3. ஏழாம் வாதையில் மனிதனுக்கு உயிர் சேதமாயிற்று. மேலும் மழை எகிப்து தேசத்தில் பெய்கிறது மகா அபூர்வம். இக்காரணங்களினாலா அல்லது பாவ உணர்ச்சியினாலா பார்வோன் 27ஆம் வசனத்தில் எழுதியிருக்கிறபடி சொன்னான்?*

*4. பார்வோன் பயந்து தான் பாவம் செய்ததாக அறிக்கையிட்டான். பாவத்தைப்பற்றிய மெய்யான மனஸ்தாபத்தில் பயம் எது மட்டும் நல்லது? அது எவ்விதத்திலும் உதவாது?*

# 10ஆம் அதிகாரம்

## வஞ்சனை செய்தல்

*கவனிப்பு: **'கடினம்'** என்பது இதிலே திரும்ப வருகிறது. (வச. 2, 20, 27.) பார்வோனுடைய இருதயம் இதோடு அளவுமீறி கடினமாகிவிட்டதென்றறிக. **'இனி இல்லை'** என்று (வச. 29) கர்த்தர் கடைசி உத்தர வருளினாரே; அதுமுதல் பார்வோனுடைய முடிவு பயங்கரமாயிருக்குமென்பது நிச்சயமாயிற்று. (நீதி. 29:1.)*

ஆண்டவருடைய நீடிய பொறுமைக்கு எல்லை உண்டென்று இதனால் அறிகிறோம்.

*1. **அபாயம் கண்டுணருதல்.***

*பார்வோன் தேவனால் அடிப்பட்டும் தன் ஜனங்களால் எச்சரிப்படைந்தும் அஞ்சி நிற்கிறான். (வச. 7-11).* அதுவுமின்றி, பயந்து தன் பாவத்தை ஒத்துக்கொள்கிறான். *(வச. 16, 17)* அபாயம் நீங்கினபோதோ முன்னிலும் அதிகக் கடினப்பட்டான். இனிமேல் என்ன அபாயம் நேரிட்டாலும் அவன் உணரவும் அஞ்சவும் இடமில்லாத படி முற்றிலும் கடினப்பட்டுப்போனான்.

*1.* **'திரும்பவும்' மோசேயை அழைத்தான்.** *வச. 8.*

*2.* **'தீவிரமாய்' மோசேயை அழைத்தான்.** *வச. 16.*

*3.* **'தந்திரமாய்' மோசேயை அழைத்தான்.** *வச. 24.*

*இவ்விதமாக கர்த்தருடைய ஊழியக்காரரை மூன்று தரம் அழைத்ததாக இவ்வதிகாரத்திலே வாசிக்கிறோம். பாவிகள் இப்படித் திரும்பத் திரும்பக் கடத்திப்போடுவது மகா மோசமான காரியம். கடைசியில் இரக்கத்தின் கதவு பூட்டப்படும். மனந்திரும்புதலுக்கு இடமில்லாதேபோகும் (நீதி. 18:24-32; 2 நாளா. 36:16; லூக்கா 13:34, 35).*

II. **உபாயம் செய்து பார்த்தல்.**

*பார்வோனுடைய உபாயங்களையெல்லாம் இங்கே ஒருமிக்க எழுதியிருக்கின்றன.*

***1ஆம் உபாயம்:*** *"தேசத்திலேதானே பலியிடுங்கள்" 8:25.*

***உத்தரவு:*** *"அப்படிச் செய்யத்தக்கது" 8:26.*

*இதே பிரகாரமாய் ஒருவனுக்குச் சற்றுப்பாவ உணர்ச்சியும் நல்ல ஆசையுமுண்டாகும்பொழுது, சாத்தான் அவனைக் குணப்படாமல் தன் இராஜ்யத்திலே*

வைத்துக்கொள்ளும்படி பார்க்கிறான். கோயிலுக்குப் போகவும், ஜெபம் பண்ணவும், வேதம் வாசிக்கவும் இடங்கொடுப்பான். என்றாலும் முற்றிலும் குணப்பட்டுப் பழைய ஜீவியத்தை வெறுத்துப் புது சிருஷ்டியாவது அவசியமில்லையென்று பலமாய்ப் போதிப்பான். மனமாறாதவனும் உலக சிந்தையுள்ளவனுமாயிருந்து கொண்டே ஆராதனை செய்யும்படி ஏவிவிடுவான். எத்தனையோ ஜனங்கள் இந்த முதலாவது தந்திரத்துக்குட் பட்டுக் குணப்படாதவர்களாய் நமது சத்தியமார்கத்தை அனுசரிக்கப் பார்க்கிறார்கள்.

தேவனோ ***''அப்படிச் செய்யத்தகாது''*** என்று தெளிவாய்க் கட்டளையிடுகிறார் *(கலா. 6:15; கொலோ. 1:13).*

***2ஆம் உபாயம்:*** *"அதிக தூரமாய்ப் போகவேண்டாம்" (8:28).*

***உத்தரவு:*** *''வனாந்தரத்தில் பிரயாணம்போவோம்'' (8:27).*

இதைப்போலவே ஒருவனுக்கு உணர்வும் வாஞ்சையும் அதிகரித்துக்கொண்டிருந்து தான் மெய்யாய் மனமாறிக் குணப்படவேண்டும் என்று தீர்மானித்துக்கொள்ளும் பொழுது, பிசாசானவன் தந்திரமாய் வந்து: "நல்லதாகட்டும், குணப்படுதல் மெத்த நல்லது; ஆனாலும் அரை குறையாய்க் குணப்பட்டால் போதுமே; அளவுக்கு மிஞ்சி நீதிமானாகாதே; முழுவதுமாய் என் ஆளுகையைவிட்டு நீங்காதே; பக்தியில் அதிகதூரம் தேற விரும்பாதே" என்று வஞ்சிக்கப்பார்ப்பான். சகோதரரே, அரைகுறையான குணப்படுதலல்ல *(2 கொரி. 5:17).* சாத்தான் ***'அதிகதூரமாய்ப் போகவேண்டாம்'*** என்று சொல்ல தேவனோ: ***அதிகதூரமாகப்போங்கள்'*** என்பதுபோலப் பேசுகிறார் *(சங். 103:12; நீதி. 30:8).*

***3 ஆம் உபாயம்:-*** *"எவர்கள் போகிறார்கள்? புருஷராகிய நீங்கள் போங்கள்" (10:8-11).*

***உத்தரவு:*** *"எங்கள் இளைஞரோடும், முதியோரோடும், குமாரரோடும், குமாரத்திகளோடும், எங்கள் ஆடுகளையும், மாடுகளையும் கூட்டிக் கொண்டுபோவோம்" 10:9.*

*உணர்வடைந்த மனுஷன் முந்தின தந்திரங்களில் அகப்படாமல், பாவத்தை வெறுத்து இரட்சகரைப்பற்றிக் கொள்ளுகிறவனாய்க் காணப்பட்டால், சாத்தான் மறுபடியும் வலைவீசி அவனைப் பிடித்துக்கொள்ளப் பார்க்கிறான். எப்படியென்றால், நீ மாத்திரம் குணப்பட்டால்போதும். மனைவி மக்கள் முன்போலவே இருக்கட்டும். மற்ற உறவினர்களைப்பற்றிக் கேட்பானேன்? நீ மாத்திரம் பக்திமானாயிரு என்று போதிக்கிறான். பாவத்திலிருந்து விடுதலையாக இருந்த அநேகர் உலக மக்களாகிய இனத்தாராலே இழுப்புண்டு மோசம் போனதுண்டு. அல்லது உறவுகளை எகிப்திலே விட்டுவிட்டு வெளியேறுவதுபோல, அநேக பாவங்களை வெறுத்துத் தள்ளியும், சில பாவங்களைப் பேணிவைத்து அதனால் கெட்டுப்போனதுண்டு. இரட்சிப்பின் காரியத்தில் அரைகுறை உதவாது (மத். 10:37, 38; 8:21, 22; உபா. 6:5).*

***4 ஆம் உபாயம்:*** *உங்கள் ஆடுகளும், மாடுகளும் மாத்திரம் நிறுத்தப்பட வேண்டும்" (10:24).*

***உத்தரவு:-*** *"ஒரு குளம்பும் பின்வைக்கப்படுவதில்லை" 10:26.*

*தன் ஆத்துமாவில் முழுமனதோடே இரட்சகரைப் பற்றிக்கொள்ள இருக்கும்பொழுது, பிசாசானவன் தன் அடிமையை விட்டுவிட மனமில்லாமல் ஏதாவது வைத்துவிட்டுப் போகும்படி தூண்டிவிடுவான். நம்முடைய பொக்கிஷம் எங்கேயோ அங்கே நம்முடைய இருதயமும்*

இருக்கும் என்பது அவனுக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால் உலகப் பொருளையாவது வேறே பாவத்தையாவது நம்மை இழுக்கும் இரையாகவைத்துக் கொள்ளப் பார்ப்பான். யூதாஸ் காரியோத்து அவ்விதமாய்க் கெட்டுப்போனான். **''பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்''** என்று அருமைநாதர் சொன்னது வீண் வார்த்தையல்ல *(லூக்கா 12:15; மாற்கு 10:21, 22; 2 தீமோ. 4:10).*

நாம் பாவத்தை முழுவதுமாய் வெறுத்து, இரட்சகரை முழு இருதயத்தோடே பற்றிக்கொள்வதே காரியமென்று அறிக.

III. **விரோதம் பண்ணித் துரத்திவிடும்.** *வச. 27-29.*

"அவர்களைத் துரத்திவிட்டான்" *வச. 11:* "என்னை விட்டு அப்பாலே போ" என்றான். *வச. 28:*

மோசேயையும் ஆரோனையும் துரத்திவிடும்போது தேவனைத் துரத்திவிடப்பார்ப்பது போலிருந்தது. கர்த்தருடைய கிருபையைப் பாவியானவன் அசட்டைசெய்து, தன்னைவிட்டுப்போகும்படி கட்டாயம் செய்யும்பொழுது, அவன் காரியம் பயங்கரமாய் இருக்கிறது *(எபி. 10:26-31).*

**கவனிப்பு:** 'அப்பாலே போ' என்று சத்துரு சொல்லுகிறான். 'அப்பாலே போ' என்று நாமும் சத்துருவைப் பார்த்துச் சொல்லவேண்டும் *(மத். 4:10).*

**கேள்விகள்:**

*1. வச. 2.* பார்வோனுடைய இருதயம் கடினப்படும், அவன் இஸ்ரவேலரைவிடமாட்டான் என்று ஆண்டவர் அறிந்திருக்க, அவர் மோசேயையும் ஆரோனையும் மறுபடியும் பார்வோனிடத்தில் அனுப்பின நோக்கம் என்ன?

*2. வச. 10.* புதிய திருத்தத்தில் இவ்வசனத்தைக் கவனிக்க. நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் விட்டுவிடுவேனோ? விட்டுவிடுவேனாகில் யேகோவா உங்களோடிருக்கிறார் என்றாகட்டும்; பாருங்கள், நீங்கள் நோக்கியிருப்பது பொல்லாத காரியம். இதில் பார்வோன் கர்த்தரைப் பந்தயத்திற்கு அழைப்பதுபோல் தோன்றுகிறது. எப்படி?

*3. வச. 16-20.* பார்வோன் செய்த பாவ அறிக்கையை யும், காட்டிய மனஸ்தாபமும் குறைவுள்ளவையென்று விவரித்துக் காட்டுக.

*4. வச. 26.* ஆவிக்குரிய ஜீவியத்தில் முதற்படி ஏறினால்தான் இரண்டாம்படி காண்பிக்கப்படும் என்ற பிரமாணத்தை இவ்வசனத்தினாலும் வேறு உதாரணங் களினாலும் விவரிக்க.

*5.* ஒன்பதாம் வாதையினாலுண்டான இருளைக் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத அவிசுவாசிக்கு உண்டாகும் ஆவிக்குரிய இருளுக்கு ஒப்பிட்டுக் காட்டவும்.

# 11ஆம் அதிகாரம்

## தேவனுடைய கோபாக்கினையைக் கூறுதல்

**கவனிப்பு:** இவ்வதிகாரத்தில் சொல்லிய காரியங்கள் மோசே பார்வோனைவிட்டு நீங்கினதற்குமுன் செய்யப் பட்டது *10:29*. அது அதிகத்தெளிவாய் எல்லாருக்கும் விளங்கும்படி இங்கே பிரித்துவைத்து விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இவ்வதிகாரத்தின் பொருளைச் சுருக்கமாய் மாத்திரம் காட்டி முந்தின சம்பவங்களை விளக்கிக்காண்பிக்கும்படி சில குறிப்புகளைச் சேர்த்து எழுதுகிறோம்.

*1. “இன்னும் ஒரு வாதை” வச. 1-5:* பயங்கரமான வாதை! தேவன் அடிக்கும் கடைசி அடி மகா பலத்த அடி (ஆமோஸ் 4:12).

*2. “இன்னும் ஒரு வேலை” வச. 2, 3:* தேவன் விடுவிக்க இருக்கும்போது அந்த விடுதலைக்கு மனிதனும் ஆயத்தம் பண்ணவேண்டும். இப்பொழுது என்கிறாரே. வச. 2, தாமதமின்றி அவருக்கு இணங்கி நடப்பதே காரியம்.

*3. “இன்னும் ஒரு வார்த்தை” வச. 2:* சொல். தேவ ஊழியர் விடுதலையின் சுவிசேஷத்தைக் கூறியறிவிக்க வேண்டும். அப்பொழுதுதான் ஜனங்கள் விடுதலைக்கு ஆயத்தமுள்ளவர்களாய் நிற்பார்கள்.

*4. “இன்னும் ஒரு வித்தியாசம்” வச. 7:* நடக்கப் போகிறமீட்பின் கிரியையே அந்த வித்தியாசம். அதைப்போல ஆக்கினைக்குட்பட்ட அவிசுவாசிகளுக்கும், விடுதலையடையும் மெய் விசுவாசிகளுக்கும் கிறிஸ்துவின் இரத்தத்தினாலுண்டான இரட்சிப்பே வித்தியாசம்.

*5. “இன்னும் ஒரு விரோதம்” வச. 10:* கடைசி பரியந்தம் அந்தச் சத்துரு எதிரிடை செய்து வந்தான்.

## பார்வோனுடைய இருதய கடினம்

இதன் சம்பந்தமாக 3 வாசகங்கள் வருகின்றன.

*1. பார்வோனுடைய இருதயம் கடினப்பட்டது (7:13, 22; 8:19; 9:7, 35)* அவன் இருதயம் தானாய்க் கடினமானதுபோல.

*2. பார்வோன் தன் இருதயத்தைக் கடினப்படுத்தினான் (8:15, 32; 9:34).*

*3. தேவன் அவனுடைய இருதயத்தைக் கடினப் படுத்தினார் (9:12, 10:2, 20, 27; 14: 4, 8).*

இம்மூன்று வாசகங்கள் வருகிற சம்பந்தத்தையும் வரிசையையும் நாம் கவனிக்கும்பொழுது, நமக்குக் காரியம் தெளிவாகும். எப்படியென்றால்:

1. பார்வோனுடைய **'இருதயம் கடினப்பட்டது'** என்று சொல்லப்படும்போதெல்லாம், தேவன் அவனைத் தட்டிக் கீழ்ப்படியச் சொன்னபோதிலும், முற்றும் உணராமலே யிருந்தான் என்பது கருத்து. ஆரோனுடைய கோல் சர்ப்பமான சமயத்திலும் தண்ணீர் இரத்தமாக மாறின சமயத்திலும், பேன்கள் மொய்த்த சமயத்திலும் இந்த வாசகம் வருகிறது. அந்தச் சமயங்களிலெல்லாம் பார்வோன் யாதொரு உணர்வும் பயமில்லாமலும், கர்த்தருடைய வார்த்தைக்குச் சற்றும் இணங்காமலும் இருந்தான் என்று பார்க்கிறோம். கர்த்தர் பாவிகளை நயமும் பயமுமாய்ப் பேசிக் குணப்பட ஏவினாலும், அவர்கள் நிர்விசாரிகளாய் இருந்துவிட்டுக் கொஞ்சமாவது உணராமற்போனால், அவர்களுடைய இருதயம் தானாய்க்கடினப்படும் ஏன்றறிக.

2. பார்வோன் **'தன் இருதயத்தைக் கடினப்படுத்தி னான்'** என்று சொல்லப்படும்போதெல்லாம் வாதைகளி னாலே உணர்வடைந்து அஞ்சிப் பயந்தும் கீழ்ப்படியாமல் எதிர்த்து நின்றான் என்பது கருத்து, தவளைகள் தேசத்தை மூடிக்கொண்ட சமயத்திலும், வண்டு ஜாதிகள் எங்கும் மொய்த்த சமயத்திலும், கல்மழை பயிர்வகைகளை அழித்துப் போட்ட சமயத்திலும், அவன் மனங்கலங்கிச் சற்று உணர்ச்சியடைந்து, இஸ்ரவேலரைப் 'போகவிடுவேன்' என்று சம்மதித்துச் சொன்னான். வாதைகள் நீங்கின போதோ அதற்கு நேர் விரோதமாய் நடந்தான். ஒரு மனுஷனுடைய இருதயத்தில் தேவபயமும், நல்லுணர்வும் உண்டாகும் பொழுது, ஒன்றில் அவன் அதற்கு இணங்கி முற்றிலும் மாறிவிடவேண்டும். அல்லவென்றால் அவன் தன் மனச்சாட்சியை மழுக்கி, வேண்டுமென்றே தேவனுக்கு எதிர்த்து நிற்க வேண்டும். பழுக்கக்காய்ச்சின இரும்பைக்

குளிரவிட்டால் அது முன்னிலும் அதிகக் கடினமாகுமே. தேவனால் உணர்வும் அச்சமும் அடைந்த பார்வோன் வேண்டுமென்றே அந்த நல்லுணர்வை அடக்கி அழித்தபடியால் இளகியிருந்த அவன் இருதயம் முன்னிலும் அதிகக் கடினமாகிவிட்டது. அவன் தன் சொந்தச் செயலினாலே தன் இருதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டான். அதைப்போல பாவ உணர்ச்சியடைந்த பாவிகள் கர்த்தர் அருளும் இரட்சிப்பை வேண்டுமென்று தள்ளிப்போட்டால் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்துகிறார்கள் என்றறிக.

3. கர்த்தர் **'பார்வோனுடைய இருதயத்தை கடினப்படுத்தினார்'** என்றும் சொல்லியிருக்கிறதே. இந்த வார்த்தை முதன் முதலாக 9:12 இல் வருகிறது. அதற்குள்ளாக **ஆறு வாதைகள் நடந்திருந்தன.** அதாவது தேவன் 6 பலத்த அடிகள் அடித்திருந்தபோதிலும் பார்வோன் சற்றேனும் இணங்காமல் மேன்மேலும் எதிர்த்து நிற்கிறவனாகக் காணப்பட்டான். அதுவுமல்லாமல் இரண்டுவிசை வேண்டுமென்று தன் இருதயத்தைக் கடினப்படுத்திக்கொண்டான். 8:15. ஆகவே காரியத்தை நிதானித்துப் பார்க்கும்போது என்ன செய்தாலும் இவன் இணங்கமாட்டான் என்று கர்த்தர் கண்டு அவனுடைய இருதய கடினத்துக்குப் பார்வோனை ஒப்புக்கொடுத்தார் என்பது கருத்து (ரோமர் 1:28). பார்வோன் அதற்கு முன் செய்திருந்ததைக் கர்த்தர் உறுதிப்படுத்தினதுபோலிருந்தது. ஒருவன் அடிக்கடி எச்சரிப்படைந்தும் குணப்பட மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கும்போது தேவன் அவனைக் கட்டாயம்பண்ணமாட்டார். அவனைக் கைவிடவேண்டியது வருமே என்றறிக.

**கேள்விகள்:**

1. வச. 2. இஸ்ரவேலர் கேட்கும்படி கர்த்தர் சொன்னவைகளை அவர்கள் நியாயமாகவும் சம்பள

மாகவும் பெற்றுக்கொள்ள வேண்டியவையென்று சில வியாக்கியானங்கள் சொல்லுகின்றன. அந்த நியாயங்களைக் காண்பிக்க.

*2. வச. 5. "எகிப்து தேசத்திலிருக்கிற முதற் பேறனைத்தும்" என்பது எகிப்தியரைமாத்திரம் குறிக்கிறதா? அல்லது இஸ்ரவேலரையும் சேர்த்துக் குறிக்கிறதா? உமது அபிப்பிராயத்துக்கு நியாயங்கள் கூறுக.*

*3. வச. 7. கர்த்தர் எகிப்தியருக்கும் இஸ்ரவேலருக்கும் பண்ணின வித்தியாசமென்ன?*

*4. 'முதற்பேறு' என்று சொல்லப்படுகிற பிள்ளைகள் ஏன் விசேஷமாய் எண்ணப்பட்டிருக்கிறார்கள்? பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேலருக்கு இக்காரியத்தில் கர்த்தர் கொடுத்த கட்டளைகள் எவை? இந்துக்கள் இக்காரியத்தைப்பற்றி என்ன எண்ணுகிறார்கள்? கிறிஸ்தவர்களாகிய நமக்கு இதில் ஏதாவது போதனை யுண்டா?*

# 12ஆம் அதிகாரம்

## விடுதலை அடைந்துகொள்ளுதல்

*கவனிப்பு: இவ்வதிகாரத்தில் **'ஆட்டுக்குட்டி'** என்பதும், **'இரத்தம்'** என்பதும், **'புசி'** என்பதும், **'ஆசரி'** என்பதும் திரும்பத் திரும்ப வருவதைக் காண்க. ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலேதான் விடுதலை உண்டென்றும், பஸ்காவின் புண்ணியத்தை நாம் விசுவாசத்தினால் (புசிப்பது போல) உட்கொண்டு அனுபவிக்கவேண்டுமென்றும், நம்முடைய இரட்சிப்பாகிய விடுதலையை என்றைக்கும் நன்றியறிதலோடே நாம் ஆசரிக்கவேண்டுமென்றும் இவ்வார்த்தைகளினாலே அறிந்துகொள்ளலாம்.*

*1.* ***விடுதலையின் காலம்.*** *வச. 2, 6, 14, 17, 29, 40, 41...*

வருடம், மாதம், தேதி, நேரம் எல்லாம் வெகு திட்டமாய் காட்டப்பட்டிருக்கிறது. இரட்சிப்பு அடைந்த காலம் முக்கியமான காலம் அல்லவா? தேவன்: இரட்சிப்பின் மாதம் பிரதான மாதம் என்கிறார் *(வச. 2)*. அதுமுதற் கொண்டு இஸ்ரவேலருடைய காலக்கணக்கு மாறிவிட்டது. விடுதலை பெற்றுப்போன வருடத்திலிருந்தே காலத்தைக் கணக்கிட்டு பேசுவார்கள் *(16:1; 1 இராஜா. 6;1)*. மேலும், அவர்கள் விடுதலையடைந்த மாதமாகிய ஆபிப் மாதம் வருடத்தின் முதலாம் மாதமாகிவிட்டது *(வச. 1)*. இரட்சிப்பைப் பெற்ற அந்தப் பெரிய நாளை ஒருபோதும் மறவாமல் அதை என்றைக்கும் நினைவுகூரவும் கொண்டாடவும் கர்த்தர் கட்டளையிட்டார் *(வச. 17)*.

இப்படியிருக்க, பாவியான ஒருவன் பிசாசின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபெறும் நாள் எவ்வளவு முக்கியமான நாளென்று கவனித்துக்கொள்க.

*இன்பநாள்! இன்பநாள்!*

*என்பாவம் தீர்ந்துபோனநாள்.*

தான் இரட்சகரை முதன் முதல் கண்ட நாளும் நேரமும் யோவான் அப்போஸ்தலனுக்கு நன்றாய்த் தெரியும் *(யோவான் 1:39)*. ஏறக்குறைய பத்துமணி வேளையாயிருந்தது என்கிறான். தன் ஜீவகால பரியந்தம் அந்த வேளையை அவன் மறந்தவனல்ல.

தான் குணப்பட்ட தேதியும் வேளையும் பவுல் அப்போஸ்தலனுக்கும் திட்டமாய்த் தெரியும் *(அப். 26:13)*. 'மத்தியான வேளை' என்றிருக்கிறது. தான் கிருபை பெற்ற அந்தச் சமயத்தை அவன் சதாகாலமும் நினைத்துக் கொள்ளுவான்.

சகோதரரே, நீங்கள் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்ட காலம் எந்தக் காலம்? வருடம், மாதம், தேதி உங்களுக்குத் தெரியாவிட்டாலும், பாவத்திலிருந்து விடுதலையானது மெய்யானால், அந்த விசேஷித்த சம்பவத்தையாகிலும் நினைவுகூர்ந்து, அதற்குத்தக்கபடி ஜீவியம் செய்யுங்கள்.

II. **விடுதலைக்குக் காரணம் பஸ்கா ஆட்டுக்குட்டி** வச. 3 5.

அதைக்கொண்டுதான் அவர்களை மீட்டுக்கொள்ளத் தேவன் சித்தமானார் (யோவான் 1:29; 1 கொரி. 5:7; 1 பேதுரு 1:19 காண்க).

**இதிலே கவனிக்க வேண்டிய குறிப்புகள்.** வச. 5.

**1. அது பழுதற்றதாயிருக்கவேண்டும்.** கிறிஸ்து நாதரும் மாசில்லாதவர் (1 பேதுரு 1:19).

**2. அது ஒரு வயதுள்ளதாயிருக்கவேண்டும்.** அது மட்டும் அதற்குப் பூரண பெலன் இருக்கமாட்டாது. கிறிஸ்து நாதரும் 'பூரணரான பின்பு' மாத்திரம் (எபி. 5:9) நாம் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணரானார்.

**3. அது ஆடுகளில் தெரிந்துகொள்ளப்படவேண்டும்.** கிறிஸ்து நாதரும் மனிதர்களில் மனிதராகி, இதற்கென்று தெரிந்துகொள்ளப்பட்டார் (சங். 89:19; பிலி. 2:7, 8).

III. **விடுதலைக்கு ஆயத்தம்.** வச. 6-11. ஆட்டுக்குட்டியை அடித்த பின் செய்யவேண்டியவைகள் என்னவென்றால்:

**1. இரத்தம் தெளிக்கவேண்டும்.** வச. 7: அதைப்போல, நாம் திருரத்தத்தின் புண்ணிய பலனை நம்முடைய இருதயத்தில் பெற்றுக்கொள்ளுவது அவசியம் (எபே. 1:7; யோவான் 1:12, 16).

*2. 'புளிப்பில்லா அப்பத்தோடும்' புசிக்கவேண்டும்.* வச. 8, 17 20: அப்படியே நாம் பாவத்தை முற்றிலும் வெறுத்துவிடுவது அவசியம் (1 கொரி. 5:7, 8).

*3. 'கசப்பான கீரையோடும், அதைப் புசிக்க வேண்டும்'.* வச. 8, அவ்வண்ணமே நாம் பாவத்தினிமித்தம் மனங்கசந்து துக்கித்து மெய் மனஸ்தாபங்காட்டுவது அவசியம் (சக. 12:10; மத். 26:75; 2 கொரி. 7:10, 11).

*4. பஸ்காவை எல்லாரும் புசிக்கவேண்டும்.* வச. 8-10: அந்த விதமே, நாம் எல்லாரும் நன்றியறிதலோடு கிறிஸ்து இரட்சகரை ஞானப்பிரகாரமாய் உட்கொண்டு பெலப்படுவது அவசியம் (யோவான் 6:53-55; எபி. 3:14).

*5. அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும் கையில் தடி பிடித்துக்கொண்டும் நிற்க வேண்டும்.* வச. 11. அந்தப் பிரகாரமே, நாம் தேவசித்தத்துக்குக் கீழ்ப்படிய ஆய்த்தமுள்ளவர்களாயும், பரதேசிகளாயும் விளங்குவது அவசியம் (எபி. 5:9; 1 பேதுரு 1:13-16).

IV. ***விடுதலையின் நிச்சய அடையாளம். வச. 12, 13, 23 அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாயிருக்கும். அந்த இரத்தத்தைக் கண்டு உங்களைக் கடந்து போவேன்.*** ஆகையால் கர்த்தருடைய வார்த்தையின்படி அந்த இரத்தத்தைத் தெளிப்பதே காரியம்.

*1. அன்று இராத்திரி ஒரு குடும்பத்தார் தங்கள் வீட்டில் கூடி ஜெபம்பண்ணுவதினால் இரட்சிப்புண்டாகாது. இரத்தம் தெளிக்கப்படவேண்டும்.*

*2. பஸ்கா ஆட்டுக்குட்டியைக் கசப்பான கீரையோடும் புளிப்பில்லா அப்பத்தோடும் புசிப்பது மாத்திரம்போதாது. இரத்தம் தெளிக்கப்படவேண்டும்.*

*3. 'கர்த்தர் இரக்கமுள்ளவர். அவர் இஸ்ரவேல் ஜனங்களில் ஒருவரையும் அடிக்கமாட்டார்' என்று தங்களைத் தேற்றிக்கொள்வதினாலே பயனில்லை. இரத்தம் தெளிக்கப்படவேண்டும்.*

*சகோதரரே, ஜெபத்தையாவது சடங்காசாரங்களை யாவது வெறும் விசுவாசத்தையாவது நம்பாதேயுங்கள். நம்முடைய இருதயங்களில் மீட்பருடைய திரு இரத்தத்தைப் பூசிக்கொள்வதே காரியம். உங்கள் இருதயத்தில் அந்தத் திரு இரத்தம் தெளிக்கப்பட்டிருக்கிறதா? எபி. 9:22; கொலோ. 1:20).*

V. **விடுதலையின் நித்திய நியமம்** *வச. 14-20. மீட்கப்பட்ட ஜனங்கள் அந்த மீட்பை என்றென்றைக்கும் நினைவுகூர்ந்து அதற்கு எற்ற பிரகாரம் நடக்க வேண்டியவர்கள்.*

***1. நன்றியறிதலோடும்** அதை ஆசரிக்கவேண்டும். வச. 14: நாமும் இரட்சகருடைய அன்பை மறவாமல் நன்றியறிதலைக் காட்டி நடப்பது அவசியம். (கலா. 2:20; 2 கொரி. 5:14, 15).*

***2. பரிசுத்தத்தோடும்** அதை ஆசரிக்கவேண்டும். வச. 15, 17-20: நாமும் சகல பாவங்களையும் நீக்கிக்கொண்டு மீட்பருக்கென்றே ஜீவிப்பது அவசியம் (1 கொரி. 5:6, 8; ரோமர் 6:12).*

***3. சந்தோஷத்தோடும்** அதை ஆசரிக்கவேண்டும். வச. 16, 17 (சபைகூடுதலும் கொண்டாட்டமும்): நாமும் பூரண நிச்சயத்தோடும் ஆனந்தக்களிப்போடும் ஆண்டவரை ஸ்தோத்தரிப்பது அவசியம் (வெளி. 1:6).*

VI. **விடுதலையின் சம்பவம்.** *வச. 21-42. கர்த்தர் வாக்கருளின பிரகாரமே காரியம் சம்பவித்தது.*

*1.* ***விசுவாசிகள் கீழ்ப்படிந்து நடக்குதல்.*** *வச. 21-28.* மோசே கர்த்தருடைய சித்தத்தை விவரித்துக்காட்ட, "இஸ்ரவேல் புத்திரர்போய் அப்படியே செய்தார்கள்; கர்த்தர் கட்டளையிட்டபடியே செய்தார்கள் வச. 28.

*2.* ***விரோதிகள் கூக்குரலிடுதல்.*** *வச. 29, 30:* மகா கூக்குரல் எகிப்திலே உண்டாயிற்று. சாவில்லாத ஒரு வீடும் இருந்ததில்லை, தேவன் சங்கார கர்த்தாவாக எழுந்தருளும்போது அவருக்கு முன் யார் நிற்கக் கூடும்? *(எபி. 10:30, 31; ரோமர் 12:19).*

*3.* ***விடுதலையடைந்து போகுதல்.*** *வச. 31-36:* அவர்கள் வெகு நாள் ஆசித்த பெரிய நன்மை இப்பொழுது கிடைத்தது. அடிமைகள் சுதந்திரம் பெற்றுப்போனார்கள்.

***அ. தீவிரமாய்ப்*** புறப்பட்டுப்போனார்கள். *வச. 33, 34:* அப்படியே குணப்படுதலும் பாவத்திலிருந்து விடுதலையாகுதலும் திடீரென்று நடக்கக்கூடும் *(லூக்கா 7:37, 38, 48; 13:11-16; அப். 9:3-6).*

***ஆ. முழுவதுமாய்ப்*** புறப்பட்டுப் போனார்கள். *வச. 31, 32;* 'ஒரு குளம்பும் பின்வைக்கப்படவில்லை.' அப்படியே கிறிஸ்துநாதர் பாவியான மனுஷனை முற்றிலும் இரட்சித்தருளினார் *(பிலி. 3:7-11; எபி. 7:25; மத். 9:9).*

***இ. ஐசுவரிய சம்பன்னராய்ப்*** புறப்பட்டுப் போனார்கள். *வச. 35, 36;* அப்படியே விடுதலைபெற்ற விசுவாசிகள் வெறுமையாய்ப்போகாமல், கிறிஸ்துவுக்குள் சகல சம்பூரணத்தையும் அடைந்தவர்களாயிருக்கிறார்கள். *(ரோமர் 8:32; 1 கொரி. 3:21-23).*

***ஈ. வழிப்பிரயாணம் செய்தல்.*** *வச. 37-42:* எகிப்து தேசத்துக்கு வெளியே காணப்படுகிறார்கள்! விடுதலை பெற்றாயிற்று! அடிமைத்தன தேசத்தில் **'குடியிருந்த காலம்'**

*(வச. 40)* நீண்ட காலம் என்றாலும், அது இப்போது முடிந்துவிட்டது. இனி அடிமைத்தனம் கிடையாது. **கர்த்தர் அவர்களை எகிப்து தேசத்திலிருந்துப் புறப்படப் பண்ணினார்** *(வச. 42: ரோமர் 6:17; கலா. 5:1).*

**கவனிப்பு:** மோசக்குறி ஒன்றிருக்கிறது. "அவர்களோடே கூடப் பல ஜாதியான ஜனங்கள் அநேகர் போனார்கள்" *(வச. 38: எண். 11:4, 5)* பழைய வாசனை வீசுவது நல்லதல்ல. உலகத்துக்கு இடங்கொடுப்பதும் நன்றல்ல *(2 கொரி. 6:14-18).*

**கவனிப்பு:** விருத்தசேதனம்பெறாத அந்நியர்களுக்கு இந்த விடுதலைக்கடுத்த சிலாக்கியங்களில் பங்குமில்லை பாகமுமில்லை. வச. 43-50. இது விசுவாசிகளுக்கே உரியது. அவ்விதமாய் மனந்திரும்பி ஆவிக்குரிய விருத்தசேதனமடைந்தவர்களுக்கு மாத்திரம் கிறிஸ்துநாதருடைய இரட்சிப்பின் கிரியைகள் வாய்க்கும் *(மத். 7:21-23; அப். 8:21-23; கலா 6:15; கொலோ. 2:11; பிலி. 3:3).*

**கவனிப்பு:** இவ்வாகமத்தின் முதல்பாகம் முடிந்தது. இந்த முதல்பாகத்தின் கடைசி வார்த்தைகள் என்னவென்றால்: "**கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அணியணியாய் எகிப்து தேசத்திலிருந்துப் புறப்படப் பண்ணினார்**" என்பதே.

இதுவரைக்கும் அடிமைத்தன **தேசத்திலிருந்தவர்கள் அடிமைத்தன தேசத்திலிருந்து தப்பிச்** சுதந்தரம் அடைந்தவர்களாய் விளங்கினார்கள். '**விடுவித்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.**' *(யோவான். 8:36; 1 கொரி. 15:57).*

**கேள்விகள்:**

1. இஸ்ரவேலர் இரட்சிப்படைந்த தேதியைத் திட்டமாய்க் குறிக்கும்படி ஆண்டவர் செய்தாரே. நீர்

*இரட்சிப்பைப்பெற்ற நாளையாவது அதை அறிக்கையிட்ட நாளையாவது ஞாபகப்படுத்திக் குறிப்பிட முடியுமா?*

*2. இஸ்ரவேலருக்கும் எகிப்தியருக்கும் 4ஆம் வாதை முதல் 9ஆம் வாதைமட்டும் கர்த்தர் வித்தியாசமுண்டாக்கினார். 10ஆம் வாதையிலும் இப்படி வித்தியாசமிருந்ததா? வித்தியாசமிருந்ததென்றால் இரத்தத்தை வாசற்கால்களில் தெளித்தது ஏன்?*

*3. புளிப்பு என்ற பதம் வேதாகமத்தில் பாவத்தை உவமானமாகக் குறிக்கிறது என்று காண்பிக்க?*

*4. வச. 12இல் "அந்த இராத்திரியிலே" என்றும் வச. 31இல் "இராத்திரியிலே அவன்....போங்கள் என்றான்" என்று வாசிக்கிறோம். எனினும் புளிப்பில்லா அப்பப் பண்டிகை நாட்களில் ஏழு நாளளவும் உங்கள் வீடுகளில் புளித்தமா காணப்படலாகாது என்று வச. 17-19இல் காண்கிறோம். மேற்கண்ட வசனங்களில் அந்த இராத்திரியிலே அவர்கள் புறப்பட ஆயத்தமாயிருக்க வேண்டும் என்றும் ஏழு நாள் பண்டிகை கொண்டாட வேண்டும் என்றும் அறிகிறோம். இந்த இரண்டு காரியங்களைச் சமரசப்படுத்துக.*

*5. வச. 48. இஸ்ரவேலனானாலும் புறஜாதியானனாலும் பஸ்காவைப் புசிக்கும் சிலாக்கியத்தைப் பெறுவதற்குமுன் விருத்தசேதனம் பெறவேண்டியதவசியம். கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தவனானாலும் கிறிஸ்தவரல்லாத குடும்பத்தில் பிறந்தவனானாலும் கர்த்தருடைய பிள்ளை என்று சொல்லி அவருடைய பிள்ளைகளின் சிலாக்கியங்களைப் பெறுவதற்குமுன் ஒருவன் மறுபிறப்பு அடையவேண்டியது அவசியம். இந்த இரண்டு காரியங்கள் ஒண்றுக்கொன்று சம்பந்தமாயிருக்கின்றனவென்று நீர் ஒப்புக் கொண்டால் அந்த ஒப்பனைகளை விவரமாய்க் காட்டுக.*

## பாகம் இரண்டு

***விடுதலையடைந்த ஜனம்.*** *அதி. 13-23:*

இவ்விரண்டாம் பாகத்தில் தாம் மீட்டுக்கொண்ட ஜனங்களைத் தேவன் வழி நடத்தியும் போதித்தும் வருகிறார். புதிதாய்க் குணப்பட்டவர்கள் நடக்கவேண்டிய விதம் இன்னதென்று இவ்வதிகாரங்களில் விவரமாயும் தொடர்ச்சியாயும் காட்டப்பட்டதென்றறிக.

# 13ஆம் அதிகாரம்

## பிரயாணம் புறப்படுதல்

***கவனிப்பு:*** *'புறப்படு.'* என்ற வினைச்சொல் இவ்வதிகாரத்தில் பலதரம் வருகிறது. விடுதலையடைந்த ஜனங்கள் சரியான ஆயத்தத்தோடும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்தும் பிரயாணம் புறப்பட்டுப்போவது அவசியமான காரியம். அப்படியே புதிதாய்க் குணப்பட்டவர்களும் துவக்கமுதல் தேவனுடைய சித்தத்தையறிந்து, அதற்கு இணங்கி நடந்தால் அநேக சோதனைகளுக்குத் தப்பித்துக்கொள்வார்கள் என்பது நிச்சயம்.

***1. நம்மைப் பிரதிஷ்டை செய்து புறப்பட்டுப் போகவேண்டும்.*** *வச. 2, 12, 15:*

"எனக்குப் பரிசுத்தப்படுத்து" 'என்னுடையது' வச. 2.

"கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பாயாக" வச. 12.

"கர்த்தருடையவைகள்" வச. 12.

"கர்த்தருக்குப் பலியிட்டு" வச. 15.

அடிமைத்தன தேசத்திலிருந்து வெளியேறின மாத்திரத்தில் இவ்வார்த்தைகள் இஸ்ரவேலருடைய

காதுகளில் தொனித்தன. தாம் இரட்சித்த ஜனங்கள்பேரில் கர்த்தர் கைகளை வைத்து "இவர்கள் என்னுடையவர்கள்" என்று பங்கைப் பாராட்டுகிறார். விடுதலையடைந்த ஜனங்கள் முதன் முதலாக கேட்ட தேவனுடைய வார்த்தை என்னவென்றால்: 'பரிசுத்தப்படுத்து' என்பதே. ஒருவன் குணப்பட்டவுடனே தன்னை மீட்டு இரட்சித்த இயேசு கிறிஸ்துவுக்கு முற்றிலும் தன்னை ஒப்புக்கொடுத்து, பிரதிஷ்டை செய்து, அவருடைய அடிமையாக நடந்து கொள்வது உத்தமம் (அப். *9:6, 20;* ரோமர் *6:13; 12:1, 2).*

*2.* **நன்றியோடு புறப்பட்டுப்போகவேண்டும்.** *வச. 3, 4-9).*

*"புறப்பட்ட இந்த நாளை நினையுங்கள்" வச. 3.*

*"இந்த நாளிலே நீங்கள் புறப்பட்டீர்கள்" வச. 4.*

*"நினைப்பூட்டுதலாகவும் இருக்கக்கடவது" வச. 9.*

மனிதர் தங்கள் மீட்பரை வெகு எளிதாக மறந்து போகிறார்கள் (சங். *78:11, 42).* நன்றியறிதலைக் காட்டுவது அபூர்வம். தங்கள் இரட்சகரை அன்போடு நினைக்கும் விசுவாசிகள் பாவம் செய்வது அரிது. ஆகையால் தாம் அருளிச்செய்திருந்த இரட்சிப்பை இஸ்ரவேலர் தங்கள் வாழ்நாளெல்லாம் நினைவுகூர்ந்து நன்றியறிந்தவர்களாய் ஜீவிக்கத்தக்கதாக, தேவன் உடனே பண்டிகையை நியமித்தார்; போதனையும் செய்தார். புதிதாய்க் குணப்பட்ட மனிதன் நாள்தோறும் நன்றியறிதலைக் காட்டி, தன் இரட்சகரைப் பாடிப்போற்றினால், அவன் மனம் சோர்ந்து போவதும் வருத்தம்; பிசாசின் கண்ணியில் அகப்படுவதும் அபூர்வம் (கொலோ. *1:12, 13; 3:17;* லூக்கா *17:15, 16; 1* தெச. *5:18).*

'பேரன்பர் என்னை இரட்சித்தார்,
சீராக்கி இன்பம் நல்கினார்;
இன்பநாள்! இன்பநாள்!
என்பாவம் தீர்ந்துபோனநாள்!'

**3. பாவத்தை அருவருத்துப் புறப்பட்டுப்போக வேண்டும்.** *வச. 3-10:*

*"ஆகையால் நீங்கள் புளித்த அப்பம் புசிக்க வேண்டாம்" வச. 3.*

*"உன் எல்லைக்குள் எங்கும் புளித்தமாவும் உன்னிடத்தில் காணப்படவேண்டாம்" வச. 7.*

'புளித்தமாவு' பாவத்தையும் விசேஷமாய் மாயத்தையும் குறிக்கிறதென்று அறிவோமே. *1 கொரி. 5:7, 8; லூக்கா 12:1.* மெய்யாய்க் குணப்பட்டவர்கள் பாவத்தையும் மாயத்தையும் முற்றிலும் வெறுத்து, அவற்றிற்கு சிறிதும் இடங்கொடாமல் நடப்பதே காரியம். *ரோமர் 6:1, 2, 6; யோவான் 5:14; 1 யோவான் 3:8, 9.* எவ்வளவுக்கு அதிகமாய் நாம் பாவத்தை வெறுக்கிறோமோ அவ்வளவுக்கு அதிகமாய் நாம் இரட்சிப்பை மதித்துப் பரிசுத்தத்தில் தேறும்படி விரும்புவோம். பாவத்தை உணரும் உணர்வும் பாவத்தை வெறுக்கும் வெறுப்பும் விசுவாசியில் விளங்க வேண்டியது அவசியம்.

**4. திருவசனத்தை நன்குமதித்துப் புறப்பட்டுப் போகவேண்டும்.** *வச. 9, 16:*

*"கர்த்தரின் நியாயப்பிரமாணம் உன் வாயிலிருக்கும் படிக்கும், இது உன் கையிலேயே ஒரு அடையாளமாகவும் உன் கண்களின் நடுவே நினைப்பூட்டுதலாகவும் இருக்கக் கடவது" வச. 9.*

விடுதலைபெற்ற ஜனங்கள் தேவனுடைய பரிசுத்த வசனத்தைத் தங்களுக்குச் சட்டமாக வைத்துக்கொண்டு

அதன்படி நடந்துகொள்ளவேண்டும். அந்தப் பிரகாரமே இரட்சிப்படைந்த கிறிஸ்தவர்களும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, அவைகளையே பிரமாணமாக வைத்துக்கொண்டு, எல்லா காரியங்களிலேயும் அந்தத் திருவசனத்தின்படியே நடப்பது அவசியமான காரியம் *(சங். 119; 105; நீதி. 8:34; எரே. 15:16; கொலோ. 3:16; 2 தீமோ. 3:16, 17).*

*(1)* 'உன் **கையிலே** ஒரு அடையாளமாக;' அதாவது மீட்கப்பட்டவனுடைய சகல கிரியைகளிலும் இரட்சகருடைய சித்தமும் வசனமும் வெளிப்படவேண்டும்.

*(2)* 'உன் **கண்களில்** நடுவே நினைப்பூட்டுதலாக;' அதாவது, மீட்கப்பட்டவனுடைய சகல சிந்தனைகளிலும் நோக்கங்களிலும் ஆண்டவருடைய சித்தம் நிறைவேற வேண்டும்.

*(3)* 'உன் **வாயில்** இருக்கும்படி;' அதாவது, மீட்கப்பட்டவனுடைய சகல வார்த்தைகளிலும் மீட்பருடைய நாமம் மகிமைப்படவேண்டும். அவன் சாட்சி சொல்லவும் வேண்டும்.

அப்படியே நம்முடைய மனவார்த்தைக் காயங்களினாலே நாம் வேத உபதேசங்களை உதாரணப்படுத்திக் காண்பிப்பது நம்மேல் விழுந்த கடமை.

**5. தகுந்த ஒழுங்கோடு புறப்பட்டுப்போகவேண்டும்.** *வச. 18:*

'அணியணியாய்ப் புறப்பட்டுப்போனார்கள்.'

இஸ்ரவேலர் எகிப்திலிருந்து தீவிரமாய்ப் புறப்பட்டுப் போனபோதிலும், அவர்களுடைய ஒழுங்கும் ஊக்கமும், மிகவும் சிறந்தது. அணிவகுத்துப் போர்க்கோலமாய்ப் பிரயாணம் புறப்பட்டார்கள். பாவமன்னிப்பைப் பெற்ற

விசுவாசிகளும் எல்லாக் காரியங்களிலும் நல்ல ஒழுங்கும் நல்லொழுக்கமுடையவர்களாய்க் காணப்படுவது கர்த்தருக்கு விருப்பம் *(1 கொரி. 14:40; பிலி. 1:27).*

மேலும் இஸ்ரவேலர் போர்ச்சேனையாகப் புறப்பட்டுப் போனதுபோல, மெய்க்கிறிஸ்தவர்களும் யுத்த வீரராய் மோட்ச பிரயாணம் செய்ய வேண்டும். சபையானது சேனையாகவும் வேண்டும். எபே. *6:10-13.* கர்த்தருடைய பட்சத்தில் தைரியமாய் நின்று இவ்வுலகத்தில் போராடி, வெற்றி சிறப்பதுதான் நாம் அழைக்கப்பட்ட திவ்விய அழைப்பு.

*6.* **வழிகாட்டிக்குப் பின்சென்றே புறப்பட்டுப்போக வேண்டும்.** வச. *20-22.*

அவர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டவர் அவர்களுக்கு வழிகாட்டியுமானார். அவர்களை விடுவித்தவர் அவர்களை வழிநடத்தியும் வந்தார்.

*(1)* வழி நடத்தினார். வச. *21.* (இரவும் பகலும்)

*(2)* வெளிச்சங்காட்டினார். வச. *21.*

*(3)* முன் சென்றுபோனார். வச. *21.*

*(4)* விலகிப்போகாதிருந்தார். வச. *22.*

அந்தத் தெய்வீக மேக ஸ்தம்பத்தையும், அக்கினி ஸ்தம்பத்தையும் பார்த்து நடப்பது வருத்தமான காரியமன்று. கர்த்தருடைய பிரசன்னத்தின் ஸ்தம்பம் அவர்களுக்கு வழிகாட்டியும் நிழலும் ஒளியும்' ஆயிற்று.

அந்த விதமாகவே பாவியை இரட்சித்தவர் அவனைப் பாதுகாத்தும் வழிநடத்தியும் வருகிறார் *(சங். 48:14; 73:24; 121:8; 1 பேதுரு 2:21).* அவன் ஒன்றிலும் சுயயோசனையின் படி நடவாமல் தன் இரட்சகரை நோக்கிக் கொண்டே நடக்கக் கடமைப்பட்டிருக்கிறான். வழி நடத்துவது

ஆண்டவருடைய காரியம்; பின்சென்று நடப்பது விசுவாசியின் காரியம். இப்படிப் பின்சென்று நடப்பவனுக்கு ஒரு கவலையும் இராது. பிலி. *4:6, 7.*

*1.* வச. *9*இல் "இது அடையாளமாகவும் நினைப்பூட்டுதலாகவும் இருக்கக்கடவது" என்பதற்கும் *1* கொரி. *11:26*இல் "அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்பதற்குமுள்ள சம்பந்தத்தைக் காட்டுக.

*2.* எகிப்து தேசத்திலிருந்து மீட்கப்படும்படி மாத்திர மல்ல வனாந்தரத்திலும், கானானிலும் அவர்கள் கர்ப்பந் திறந்து பிறக்கிற முதற்பேறனைத்தும் மீட்கப்பட ஆட்டுக்குட்டியைக் கொடுக்கவேண்டும் என்று ஆண்டவர் கட்டளையிட்டார். இதன் நியாயத்தையும், கிறிஸ்தவர் களாகிய நாம் இதனால் அடையவேண்டிய போதனையை யும் விவரிக்க.

*3.* வச. *13.* கழுதையின் தலையீற்றும் மனுஷனுடைய முதற்பேறானதும் ஒரேவிதமாய் மீட்கப்படவேண்டும். அப்படியானால் கழுதைக்கும் மனிதனுக்கும் வித்தியாச மில்லையா? கழுதைக்கும் மனிதனுக்குமுள்ள ஒப்பனை களைக் கண்டுகொள்க.

*4.* வச. *17.* "பெலிஸ்தரின் தேசவழி" இன்னதென்றும், வச. *18*, "சிவந்த சமுத்திரத்தின் வனாந்தர வழி" இன்னதென்றும் தேசப்படத்தில் வரைந்தெழுதுக.

# 14ஆம் அதிகாரம்

## விசுவாசம் வைக்குதல்

**கவனிப்பு:** மீட்கப்பட்ட ஜனங்கள் சுகமாய்ப் புறப்பட்டுப்போனதினாலே காரியம் எல்லாம் நலமாய் முடிந்ததென்றும் இனி ஒரு வருத்தமுமிராதென்றும் நினைக்கலாகாது. அவர்களுடைய விசுவாசத்தைச்

சோதிக்கத்தக்கதான சங்கடங்கள் அதி சீக்கிரமாய் நேரிட்டது. அதைப்போல நாம் மெய்யாய்க் குணப்பட்ட பின்பு பற்பல சோதனைகளும் போராட்டங்களும் உண்டாகும். பழைய பாவங்களும் பின் தொடர்ந்துவரும். சோதனை நேரிடும்போது நாம் வல்ல இரட்சகர்பேரில் விசுவாசம் வைப்பதே காரியமென்பது இவ்வதிகாரத்தில் அடங்கின போதனை.

இவ்வதிகாரத்தில், 'அப்பொழுது என்பதும் (வச. *3, 10, 13, 15, 16, 19, 23, 25, 31*) பின் தொடருவது என்பதும் (வச. *4, 8-10, 17, 23*) அடிக்கடி வருகின்றன.

**'அப்பொழுது' விரோதம்** வச. *1-9* (வச. *9* காண்க).

**பழைய எஜமான்:-** *(1)* விரோதங்கொண்டான் வச. *5. (2)* தன் சேனையைக் கூட்டினான். வச. *6, 7, (3)* பின்தொடர்ந்து போனான். வச. *8, 9, (4)* அவர்களைக் கிட்டிச் சேர்ந்தான் வச. *9*.

தன் அடிமைகள் தப்பித்துக்கொள்கிறார்களென்று சாத்தான் கண்டு அதிக மூர்க்கத்தோடே எழும்பி அவர்களை மறுபடியும் ஜெபிக்கவும் அடிமைப்படுத்தவும் முயற்சி செய்யாமலிரான். பழைய சோதனைகளை வரவிட்டுப் பழைய பாவங்களினாலே அவர்களை வசப்படுத்தப்பார்ப்பான், என்றாலும் சோதனை பாவமல்ல. எபி. *4:15;* சோதனைக்கு இடங்கொடுப்பதுதான் பாவம். நீதி. *1:10,* மேலும் சோதனை காலத்தில் நமக்கு உதவி செய்து ஜெயத்தைக் கட்டளையிடும் வல்ல சகாயர் ஒருவருண்டு. எபி. *2:18,* அவரை நோக்கிப் பார்த்து அவரைப்பற்றும் விசுவாசத்தினாலே நாம் முற்றும் ஜெயங்கொள்ளுகிற வர்களாய் விளங்கலாம். *1* யோவான் *5:4* பிசாசின் 'விரோதத்தை' மேற்கொள்வது கிறிஸ்தவனுடைய விசுவாசமே.

II. **'அப்பொழுது' பயம்** வச. *10-12*. மிகவும் பயந்தார்கள் வச. *10*.

**இஸ்ரவேலர்**:-(1) கண்டார்கள். வச. 10. (2) பயந்தார்கள். வச. 10. (3) கூப்பிட்டார்கள். வச. 10. (4) முறுமுறுத்தார்கள். வச. 11, 12.

அவர்களிடத்தில் விசுவாசம் மாத்திரம் விளங்கவில்லை. கர்த்தரை நினையாமலும் அவர் முன் செய்திருந்த அற்புதக்கிரியைகளைச் சிந்திக்காமலும் தங்களுக்குமுன் இரைச்சலிடும் கடலையும், பின்னாலே வருகிற சத்துருக்களின் சேனா சமுத்திரத்தையும் கண்டு பயந்து திகைத்துப்போனார்கள். முதல் சோதனை வந்த உடனே அவிசுவாசத்திற்கு இடங்கொடுத்தார்கள். மிகவும் விசுவாசிக்கவேண்டிய கூட்டத்தார் மிகவும் பயந்தார்கள் என்று பார்க்கும்போது மகா பரிதாபமாயிருக்கிறது. எலிசா தீர்க்கதரிசியின் நம்பிக்கைக்கும் இவர்களுடைய அவநம்பிக்கைக்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு. 2 இராஜா. 6:15-17. குணப்பட்ட கிறிஸ்தவர்களுங்கூட துன்பகாலத்தில் மனம் சோர்ந்து போவதற்குக் காரணமென்னவென்றால், தங்கள் பெலவீனத்தையும் தங்களுக்கு நேரிட்ட சோதனைகளையும் பார்க்கிறார்களே தவிர ஜெயத்தை அருளுகிற சர்வ வல்லமையுள்ள இரட்சகரை அவர்கள் நோக்கிப் பார்ப்பதும், சார்ந்துகொள்வதும் இல்லை; அவரை நம்புகிற மனுஷன் ஒருபோதும் வெட்கமடையான்; மனம் சோரவுமாட்டான்.

III. **'அப்பொழுது' உற்சாகம்.** வச. 13, 14.

மோசே அவர்களை உற்சாகப்படுத்தினான். அவன் உறுதியோடும் தைரியத்தோடும் சொன்னதென்னவென்றால்: (1) பயமும் வேண்டாம். "பயப்படாதிருங்கள்" வச. 13, (2) அவிசுவாசமும் வேண்டாம். ''கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்'' வச. 13. (3) சுயபிரயாசமும் வேண்டாம். "கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்" வச. 14. "நீங்கள் சும்மா இருப்பீர்கள்."

ஒரு மனுஷனாவது உறுதியான விசுவாசத்தைக் காட்டும்போது எவ்வளவு பெரிய நன்மை உண்டாகிற தென்று காண்க. மற்றவர்கள் எல்லாரும் சூழநின்று வருத்தங்களைத் கவனித்துப்பார்க்கையில், மோசேயின் கண்கள் (கர்த்தர்) மேல் நோக்கமாயிருந்தன (ஏசாயா 45:22).

IV. **'அப்பொழுது' வாக்குத்தத்தம்.** வச. 15-18.

அது மட்டும் பேசாமலிருந்த கர்த்தர் 'அப்பொழுது' திருவாக்கருளிப் பேசினார். அவருடைய வார்த்தை ஒன்றே போதும். (1) விசுவாசக்குறைவைக் கண்டிக்கிறார். 'என்னிடத்தில் முறையிடுகிறது என்ன?' வச. 15. (2) வழிகாட்டிக் கட்டளை கொடுக்கிறார். 'புறப்பட்டுப் போங்கள்' வச. 15. (3) வாக்களித்துத் தைரியப்படுத்துகிறார். 'இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந் தரையிலே நடந்து போவார்கள்.' வச. 16. (4) வல்லமை விளங்க எழுந்தருளுகிறார். 'மகிமைப்படுவேன்' (வச. 17, 18).

இஸ்ரவேலர் இனி சத்துருக்களையாகிலும் சமுத்திரத்தையாகிலும் நோக்காமல், கர்த்தர் அருளின திருவாக்கையே நோக்கிப்பார்த்து விசுவாசத்தோடு நடப்பதே காரியம். சங். 119:49. அப். 27:25.

V. **'அப்பொழுது' தேவசகாயம்.** வச. 19, 20.

கர்த்தருடைய திருவாக்குப் பிறந்தவுடனே அந்தப் பிரகாரம் செய்ய ஆரம்பித்தார். ஏசாயா 38:15. (1) அவர் களுக்கும் மேகத்துக்கும் 'நடுவில்' இரட்சகர் வந்து நின்றார். வச. 19. (2) அவர்களுக்கு வெளிச்சமும் சத்துருக்களுக்கு அந்தகாரமுமானார் வச. 20.

இவ்விதமாய்க் 'கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர்' என்ற வசனம் இஸ்ரவேலர் சரித்திரத்தில் உதாரணமாயிற்று (சங். 27:1).

மெய் விசுவாசிக்குப் பலத்த சோதனை வந்தாலும் அச்சோதனை அவனை அணுகாதபடிக்கு இரட்சகர் இயேசு நடுவில் வந்து நின்று அதை அகற்றிவிடுகிறார். மேலும் ஒளியாகவும் பிரகாசித்து மிகவும் தெளிவாக வழிகாட்டுகிறார். சங். 112:4).

**கவனிப்பு:-** வச. 8-10இல் பார்வோன் பின்னே வருகிறான்; வச. 19, 20இல் கர்த்தர் பின்னே வந்து நின்றார். ஆகையால் சத்துருவுக்குப் பதிலாக வல்ல சிநேகிதர் இப்பொழுது விளங்குகிறார். அந்த வல்ல சிநேகிதர் அப்படி நிற்பதினாலே சத்துருவைப் பார்க்க முதலாய் இடமில்லை.

நாம் சோதனைகளையல்ல அவைகளை மறைத்து நிற்கிற பரம சகாயரையே நோக்கிப் பார்க்கக்கடவோம்.

VI. **'அப்பொழுது' அற்புதம்.** வச. 21, 22.

நடந்த அற்புதம் மூன்று விதமானது: (1) 'ஜலம் பிளந்து பிரிந்துபோயிற்று' வச. 21. அதாவது நீங்காத் தடை நீக்கிவிட்டது. மீகா. 2:13; ஏசாயா 45:2, (2) 'சமுத்திரத்தின் நடுவாக' வழி திறக்கப்பட்டது வச. 22. அதாவது எது முன்பு தடையாக தோன்றியிருந்ததோ அதுவே அனுகூலமாக முடிந்தது. எது பயங்கரமான தடையாகக் காணப்பட்டதோ அதுவே சுகமான வழியாக மாறிவிட்டது. சங். 77:19; 2 இராஜா. 7:2, 15, 16. (3) ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது' வச. 22. அதாவது: பெருந்தடை நீங்கினதுமல்லாமல் அந்தத் தடைதானே துணையாக மாறினது (கலா. 1:23, 24).

கர்த்தருடைய இரட்சிப்பு எவ்வளவோ அதிசயமான இரட்சிப்பு!

**கவனிப்பு** : அக்கினி மதில் (சக. 2:5); தண்ணீர் மதில் (இங்கே) தவிர; எத்தனை மதிலோ தெரியாது (உபா. 33:29).

VII. **'அப்பொழுது' ஜெயம்.** *வச. 23, 29.*

*(1) கர்த்தர் யுத்தம்பண்ணினார். வச. 25, (2) கர்த்தர் எதிர்சேனையைக் கலங்கடித்தார். வச. 24. (3) கர்த்தர் எகிப்தியருக்கு வருத்தமுண்டாக்கினார். வச. 25. (4) கர்த்தர் அவர்களைக் கவிழ்த்துப்போட்டார். வச. 27.*

ஜெயம் கர்த்தரால் வரும் நீதி. *21:31.* இஸ்ரவேலர் போர் செய்யவுமில்லை; ஓர் அடியும் அடிக்கவுமில்லை. யுத்தம் பண்ணினவரும் ஜெயங்கொண்டவரும் தேவனே. செயலெல்லாம் தேவசெயல் *வச. (8, 13-15, 19, 21, 24-27, 30, 31).*

**கவனிப்பு;-** இவ்வதிகாரத்தில் **கர்த்தர்** என்பது பதினாறு விசை வருகிறது. இரட்சிக்கிறது அவருடைய தொழில்; விசுவாசிக்கிறது நம்முடைய தொழில்.

VIII. **'அப்பொழுது' விசுவாசம்.** *வச. 30, 31.*

*ஐயோ! முதலில் வரவேண்டிய விசுவாசம் கடைசியில் மாத்திரம் வருகிறது. (1) 'கண்டார்கள்,' வச. 30, 31. சத்துருக்கள் செத்துக்கிடக்கிறதையும் (வச. 30) கர்த்தர் செய்த மகத்தான கிரியையும் (வச. 31) கண்டார்கள். (2) 'விசுவாசம் வைத்தார்கள்.' (வச. 31)* தோமாவைப் போலக் கண்டு விசுவாசித்தார்கள். ஆனால் 'காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்.' யோவான் *20:29,* இந்த மேலான பாக்கியத்தை இஸ்ரவேலர் இழந்து விட்டார்கள்.

என்ன வந்தாலும் அவிசுவாசத்துக்கு இடங்கொடாமல், நம்முடைய வல்ல இரட்சகரை உறுதியாய்ப்பற்றிக்கொண்டு, அவரை நம்பி நடப்பதே காரியம் என்பது இவ்வதிகாரத்தின் போதனை.

**கவனிப்பு:** இவ்வதிகாரத்தில் மூன்று கேள்விகள் வருகிறது.

*1. சத்துருவின் கேள்வி. வச. 5. 'நாம் இஸ்ரவேலரைப் போகவிட்டது என்ன?'*

*2. அவிசுவாசியின் கேள்வி. வச. 11. 'எங்களுக்கு இப்படிச் செய்தது என்ன?'*

*3. இரட்சகருடைய கேள்வி. வச. 15, 'நீ என்னிடத்தில் முறையிடுகிறது என்ன?'*

**கேள்விகள் :**

1. வச. 3. இந்த வசனம் சொல்லுகிற பிரகாரமாய்த் தேவன் இஸ்ரவேலருக்கு வழி அடைக்கப்பட ஏன் செய்தார்?

2. வச. 15, தேவன் மோசேயைக் கண்டிக்கிறதாகத் தோன்றுகிறது. மோசேயிடம் என்ன குறைவு இருந்திருக்கும்?

3. தேவனின் வார்த்தையை அறிந்தவுடன் 'விசுவாசத்தினாலே' (எபி. 11:29) இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தைக் கடந்துபோகும்படி மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டினான். இஸ்ரவேலரின் கடைசி ஆள் கடந்துவருமட்டும் மோசே விசுவாசித்துக்கொண்டே இருக்கவேண்டும். எப்படி?

4. இவ்விதமான விசுவாசத்தில் தற்காலத்தில் ஊழியம் செய்யவேண்டிய தேவமனுஷருக்கு மோசே எப்படி நல்ல முன்மாதிரியாயிருக்கிறான்?

5. சமுத்திரம் இரு பிரிவாய்ப் பிரிந்தது. எந்தமட்டும் அற்புதமாயிருந்தது? எந்தமட்டும் இயல்பான காரணங்களினாலுமுண்டானது?

# 15ஆம் அதிகாரம்

## ஸ்தோத்திர கீதம் பாடுதல்

**கவனிப்பு:-** முந்தின அதிகாரத்தில் 'அப்பொழுது' என்பது அடிக்கடி வருவதைக் கண்டோம். 'அப்பொழுது' விரோதம், பயம் முதலியவைகளும், கடைசியில் விசுவாசமும் விளங்கினது. அதன் தொடர்ச்சியாக இந்த அதிகாரமும் 'அப்பொழுது' என்ற வார்த்தையோடே தொடங்குகிறது. **'அப்பொழுது பாடினார்கள்' 'விசுவாசம் வைத்தார்கள், அப்பொழுது பாடினார்கள்.'** உத்தம விசுவாசம் எங்கேயோ அங்கே ஸ்தோத்திரகீதமும் கேட்கப்படும். அவிசுவாசிகளுக்குச் சந்தோஷம் ஏது? இரட்சிப்பின் நிச்சயம் பெறாதவர்கள் மகிழ்கொண்டாடுவ தெப்படி?

இவ்வதிகாரத்தில் மூன்று விசேஷங்கள் உண்டு. அம் மூன்றும் ஆத்தும இரட்சிப்பை அடைந்த விசுவாசி களுடைய அனுபவத்துக்குப் பொருந்தினது என்பதைக் காண்க.

I. **ஸ்தோத்திரம்** வச. *1-21.*

தங்கள் இரட்சகராகிய தேவன் பேரில் விசுவாசம் வைத்த இஸ்ரவேலர் ஆனந்த பரவசமடைந்து களிகூர்ந்து பாடினார்கள். அதைப்போல சாத்தானுடைய கைக்கும் தந்திரங்களுக்கும் நம்மைத் தப்புவித்த இரட்சகர் இயேசுவி னுடைய அளவற்ற வல்லமையையும் கிருபையையும் நாம் கண்டுணர்ந்து உண்மையோடு விசுவாசிக்கும்பொழுது நாமும் அன்பும் நன்றியறிதலும் பொங்கி, ஆனந்த களிப்புடனே ஸ்தோத்திரம் செய்வோம் என்பதில் ஐயமில்லை.

மோசேயும் இஸ்ரவேலரும் சிவந்த சமுத்திரத் தண்டையில் பாடின கீதம்.

*1.* **வெற்றிச்சிறப்பைக் கொண்டாடும் கீதம்.** *வச. 21;* **'அவர் மகிமையாய் வெற்றிசிறந்தார்,' வெற்றிசிறந்தோம்'** என்று பாடாமல் **கர்த்தர் வெற்றிசிறந்தார்'** என்றே பாடினார்கள் என்று கவனிக்கத்தகும். ஜெயம் கர்த்தராலேயே வந்தமையால் மகிமையும் புகழ்ச்சியும் அவருக்கேயுரியது.

நம்முடைய ஜீவியத்திலாவது ஊழியத்திலாவது அனுகூலம் உண்டாகும்பொழுது அது கர்த்தராலேயே வந்ததென்று உணர்ந்து, நம்மைத் தாழ்த்தி அவருக்கே சகல கனத்தையும் மகிமையையும் செலுத்துவோமாக.

*2.* **வல்லமையைப் பிரஸ்தாபிக்கும் கீதம்.** *வச. 2, 3, 6, 13.* 'கர்த்தர் என் **பெலன்.**' 'கர்த்தரே யுத்தத்தில் **வல்லவர்.**' உமது வலதுகரம் **பலத்தினால்** மகத்துவம் சிறந்திருக்கிறது.' 'அவர்களை உமது **பலத்தினால்** வழி நடத்தினீர்.'

தங்களை இரட்சித்தவருடைய தேவ வல்லமையை எல்லாரும் அறியும்படி அதைத் திரும்பத் திரும்பப் புகழ்ந்து பாடுகிறார்கள். இரட்சிப்பின் கர்த்தாவாகிய அவருடைய **'மகத்துவத்தையும்'** மறுபடியும் மறுபடியும் பிரசித்தப் படுத்துகிறார்கள். வச. *6, 7, 11, 16.* ஆண்டவருடைய வல்லமையை நாம் நினைத்து நம்பி நடப்போமேயாகில் மனக் கவலை நீங்குவது அரிதாயிராது.

*3.* **விடுதலையைப் பிரசித்தப்படுத்தும் கீதம்.** *வச. 2.* 'அவர் எனக்கு **இரட்சிப்புமானவர்.**' அந்தச் சமயத்தில் உண்டான பெரிய விடுதலையையும் ஜெயத்தையும் இஸ்ரவேல் கண்டுகளித்து அவர் எனக்கு **'இரட்சிப்பு மானவர்'** என்று பாடினது உண்மையும் தகுதியுமாமே. மேலும் **சத்துருக்களை 'கடலிலே தள்ளினார்'** என்று கெம்பீரித்ததும் *(வச. 1, 4, 21).* அந்த விடுதலையைக் கொண்டாடுவதற்காக அல்லவா?

நம்மைப் பின்தொடர்ந்து வந்த பழைய பாவங்கள் கிறிஸ்து இரட்சகருடைய திரு உதிரமாகிய சிவந்த சமுத்திரத்தில் தள்ளுண்டு அமிழ்ந்து போவதை (வச. 4, 5.) நாம் கண்டது மெய்யானால், நாமும் உள்ளங்களித்து விடுதலையின் கீதம் பாடி மகிழ்கொண்டாடுவோம் (சங். 66:10, 116:7-14; மாற்கு 5:20).

*4.* **வழிநடத்துதலைக்கூறி அறிவிக்கும் கீதம்.** *வச. 13, 17, 19:*

*அவர்களை உமது பலத்தினால்* **வழிநடத்தினீர்.** *'பரிசுத்த ஸ்தலத்தில்* **அவர்களை நாட்டுவீர்.'** *'சமுத்திரத்தின் நடுவே வெட்டாந்தரையிலே நடந்து போனார்கள்.'*

கர்த்தர் வழிநடத்தும்பொழுது இடையூறுகள் எல்லாம் நீங்கின. விக்கினங்கள் யாவும் அகன்றுபோயின. கடலும் கரையானது. 'உமது வழி கடலிலும் உமது பாதைகள் திரண்ட தண்ணீர்களிலும் இருந்தது' என்ற வசனம் (சங். 77:19). உதாரணமாயிற்று. இவ்வளவு ஞானத்தோடும் வல்லமையோடும் வழிநடத்தின தயாபரனைப் புகழ்ந்தேற்றுவது உத்தமம் சங். 66:6. இஸ்ரவேலைக் கானான் வாசஸ்தலம்வரைக்கும் நடத்தி வந்த தேவன் (வச. 13, 17). பேரின்ப வாசஸ்தலத்தில் சேரும்பரியந்தம் நம்மையும் வழி நடத்துவார் (சங். 48:14).

*5.* **வாசஸ்தலத்தைக் குறித்துப் பாடும் கீதம்** *வச. 2, 13, 17.*

இந்தப் பாட்டில் இரண்டு வாசஸ்தலங்கள் காட்டப்படுகின்றன.

(1) **தேவனுக்கு ஓர் வாசஸ்தலங்கள் உண்டு.** *வச. 2.* *'அவருக்கு வாசஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுவேன்.'*

*(2)* **இஸ்ரவேலுக்கு ஓர் வாசஸ்தலம் உண்டு.** *வச.13, 17*
**கானான் தேசமே அந்த வாசஸ்தலம்.**

கர்த்தருக்கு வாசஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுவது அவர்கள் காரியம் இஸ்ரவேலுக்கு வாசஸ்தலத்தைத் தந்தருளுவது கர்த்தருடைய காரியம்.

அதே பிரகாரம் நாமும் கர்த்தருடைய வாசஸ்தலமாக நம்முடைய இருதய கமலத்தை ஒப்புக்கொடுப்பதே நம்முடைய கடமை *(நீதி. 23:26; 2 கொரி. 6:16)*. அப்பொழுது மனவாசகராகிய அவர் இம்மையில் நம்மை வழி நடத்தி மறுமையில் மோட்ச வாசஸ்தலத்தில் நம்மைச் சேர்த்துக் கொண்டு நித்திய வாழ்வைத் தந்தருளுவார். இவ்விருவகையான வாசஸ்தலங்களை யோவான் காட்டியிருப்பதையும் காண்க *(யோவான் 14:2, 23)*.

*6.* **விசுவாசத்தைக் காட்டும் ஜெய கீதம்** *வச. 14 18*
**'பெலிஸ்தியாவின் குடிகளைத் திகில் பிடிக்கும்.' 'கானானின் குடிகள் யாவரும் கரைந்துபோவார்கள்.'**

கானான் தேசத்துக்குப் போகுமுன்னமே அங்கே பெறும் ஜெயத்தைக் கொண்டாடுவது விசுவாசமல்லவா? விசுவாசக் கண்களுக்கு இனி நடக்கும் மகத்துவ கிரியைகள் நடந்தாயிற்றென்று தோன்றும். அதோடுகூட விசுவாசத்தின் கெம்பீர சத்தம் இந்தக் கீதத்தில் தொனிக்கிறது. எப்படியெனில் **கர்த்தர் சதாகாலங்களாகிய என்றென்றைக்கும் இராஜரீகம்பண்ணுவார்'** என்று மோசேயும் இஸ்ரவேலரும் மகிழ்ந்து பாடினார்கள். இந்தத் தேசத்தில் நம்முடைய இரட்சகர் இயேசு கிறிஸ்துவுக்கு உண்டாகப்போகிற பெரிய வெற்றிச் சிறப்பையும் இராஜரீகத்தையும் விசுவாசத்தினாலே கண்டு நாமும் கெம்பீர சத்தமிட்டுப் புகழ்ந்து பாடுவோமாக.

**இந்தியா தேசத்திலும் சிலுவை நாயகர் இராஜரீகம் பண்ணுவார்; ஆமென் அல்லேலூயா** *(1 கொரி. 15:25)*.

II. **சோதனை.** *வச. 22-26.*

இஸ்ரவேலர் ஜெய கெம்பீரமாய் பாடும்பொழுது பழைய சத்துருக்கள் மாண்டுபோனதினாலே இனி வருத்தங்கள் உண்டாகமாட்டாதென்று நினைத்திருப்பார்கள். ஆனாலும் அவர்களுக்கு உண்டான விசுவாசத்தையும் புதிய உற்சாகத்தையும் சோதிக்க வேண்டியதாயிருந்தது. மேலும் விசேஷித்த கிருபை கிடைத்தபின்பு பலத்த சோதனைகள் வருவது இயற்கை என்று வேத சரித்திரங்களால் நாம் அறியலாம். யாத். *32:15-20; 20; 1 இராஜா, 18:36-40; 19:1-4; 2 இராஜா. 20:7-11, 13-18, லூக்கா 3:21, 22; 4:1, 2; 2 கொரி. 12:1-4, 7-9.* **ஸ்தோத்திரத்துக்குப் பின்வருவது சோதனை** என்று நாம் அறிந்துகொண்டு அந்தச் சோதனையால் மனம் சோராமல் இருப்போமாக.

*1.* ***'மூன்றுநாள்'*** வச. *22.* வனாந்தரத்தில் *3* நாள் பிரயாணம் செய்வது வருத்தம். மேலும் *3* நாள் தாகத்தைச் சகிப்பதும் மகாகஷ்டம் 'மூன்று' என்ற இலக்கம் அடிக்கடி மிகுதியைக் காட்டும். எண். *22:28;* அப். *11:10.* இஸ்ரவேலுக்கு உண்டான சோதனை பலத்த சோதனை என்று அறிக.

நமக்கு பலத்த சோதனைகள் நேரிடும். அப்படிப்பட்ட சமயங்களிலே நம்முடைய உத்தம விசுவாசம் விளங்க வேண்டும் *(1 கொரி. 10:13; யோபு 13:15; 2 கொரி. 12:9, 10).*

*2. "மாரா."* வச. *23;* மாரா என்பதற்கு **கசப்பு** என்றர்த்தமாம். தாகத்தால் வருந்திய ஜனங்கள் தண்ணீரைக் கண்டவுடன் எவ்வளவோ ஆவலோடு அதைப் பானம்பண்ணத் தீவிரித்திருப்பார்கள். அதை ருசித்துப் பார்த்துக் கசப்பு என்றறிந்தபொழுதோ முன்னிருந்த வருத்தம் ஆயிரமடங்கு அதிகமாகிவிட்டது. சோதனையின் மேல் சோதனை வந்ததுபோலும், சங். *42:7;*

*2 கொரி. 7:5.* பலத்த துன்பங்களுக்கு மாரா என்று பேரிடுவது நியாயம்.

*3.* **'மரம்'** *வச. 25.* மாராவில் விசுவாசம் காட்ட வேண்டிய ஜனங்கள் அவிசுவாசத்துக்கு மறுபடியும் இடங்கொடுத்து **'முறுமுறுத்தார்கள்'** வச. *24.* ஐயோ! அவர்கள் சிவந்த சமுத்திரத்தில் அடைந்த விசுவாசம் அதிசீக்கிரத்துக்குள் அற்றுப்போயிற்றே!

மோசேயோ விசுவாசத்தைவிடாமல் **கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்.'** வச. *25.* ஆபத்துவேளை விசுவாசத்தோடு ஜெபம்பண்ணுவதே காரியம் (சங். *50:15;* பிலி. *4:6, 7*). **அப்பொழுது கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார்.'** அங்கே உண்டாகி வளர்ந்த விருட்சமோ? தரையில் கிடந்த மரக்கட்டையோ? அற்புதவிதமாய் அந்தச் சமயத்தில் தோன்றின மரமோ? தண்ணீரின் கசப்பை மாற்றத்தக்க மரங்களாவது செடிகளாவது அத்திசையில் உண்டாகிறதேயில்லை என்பதுமாத்திரம் திட்டம். ஆதலால் அது அற்புதவிதமாய் அங்கே தேவனால் தோன்றின மரமானாலும் சரி, அந்தச் சமயத்துக்கென்று கர்த்தரால் அற்புத சக்தியைப்பெற்ற இயல்பான விருட்சமானாலும் சரி, அந்த மரமானது தேவ மரமென்றும். வல்ல மரமென்றும், அற்புதமான மரமென்றும் சொல்வதற்கு தடையில்லை.

நம்முடைய சோதனைகளின் கசப்பை மாற்றத்தக்க மரமுண்டு. அதற்கு **"ஜீவவிருட்சம்"** என்று பெயர் (நீதி. *3:18*). நம்முடைய அருள்நாதராகிய கிறிஸ்துவே அந்த ஜீவவிருட்சம். **"கர்த்தர் ஒரு மரத்தைக் காண்பித்தார்"** என்பது அவருடைய காரியத்துக்கு ஏற்றது (யோவான் *3:31*); *1:33, 34*). அவருடைய புண்ணிய பலன் எந்தச் சோதனையையும் நீக்கக் கூடும்; எந்தக் கசப்பையும் மாற்றக்கூடும்.

*4. "மதுரம்" வச. 25.* **"அதை அவன் தண்ணீரில் போட்டவுடனே அது மதுரமான தண்ணீராயிற்று."** ஜனங்களுடைய தாகமும் தீர்ந்துவிட்டது. அந்த மரத்தைத் **தண்ணீரில் போடவேண்டியிருந்தது.** அதைக் கண்ணால் பார்ப்பதும், வாயால் புகழ்வதும், கையால் தொடுவதும் போதாது. அதைத் **தண்ணீரில் போட்டதினாலேதான் மாறுதல் நடந்தது.** அதைப்போல அருமை இரட்சகரை நாம் புகழ்ந்து பேசுவதும் அவருடைய உபதேசத்தை நாம் கற்றுக்கொள்வதும் நம்மில் யாதொரு மாறுதலையும் உண்டாக்காது. அவரைச் சொந்தமாக்கிக் கொள்வது மாத்திரம் நமக்குள் நன்மையைப் பயக்கும். ஆண்டவராகிய கிறிஸ்துநாதரால் உண்டாகிறதெல்லாம் மதுரமே *(உன். 2:3).*

இங்கே:

*(1) மதுரமான ஜலம். வச. 25.*

*(2) மதுரமான வசனம் வச. 26.*

*(3) மதுரமான நாமம் வச. 26. 'யேகோவா ரபீ' ("நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்") உண்டென்பதைக் காண்க.*

தண்ணீரின் வியாதியை நீக்கின கர்த்தர் சகல வியாதிகளையும் நீக்கிப் பூரண ஆரோக்கியத்தை அருளுவதாய் வாக்கருளுகிறார் *வச. 26.*

**கவனிப்பு:** மாராவில் நடந்த காரியத்தில் அடங்கின ஞானபோதனை இருவகை என்று சொல்லலாம்.

**1. வல்ல இரட்சகர் மனிதனுடைய துர்க்குணத்தை மாற்றுகிறவர்.** இதன்படி:

அ. மாராவின் கசப்பான தண்ணீர் பாவியின் துர்க்குணத்தைக் காட்டும். அது கர்த்தருடைய மகா கசப்பாகத் தோன்றுகிறது *(ஏசாயா 5:2).*

ஆ. கர்த்தர் காண்பித்த மரம் கல்வாரியில் தோன்றின ஜீவவிருட்சமாகிய இயேசு இரட்சகரைக் காட்டும்.

இ. அந்த மரத்தின் சக்தி அவருடைய திரு இரத்தத்தின் புண்ணிய பலத்தைக் காட்டும்.

ஈ. அதினாலுண்டான மதுரம் அந்தத் திருப்புண்ணியத்தினால் மனிதனுக்கு உண்டாகும் மறுஜென்ம சுபாவத்தைக் காட்டும்.

இவ்விதமாய் மறுபிறப்பு உபதேசம் இந்தச் சரித்திரத்தில் எடுத்துக்காட்டாகிறதென்றறிக.

***2. பரம சகாயர் துன்பத்தை இன்பமாக மாற்றுகிறவர். இதன்படி:***

அ. மாராவின் கசப்பான தண்ணீர் விசுவாசியின் துன்பங்களைக் காட்டும்.

ஆ. கர்த்தர் காண்பித்த மரம் உயிரோடே எழுந்தருளிச் சகாயம் செய்யும் கிறிஸ்துவைக் காட்டும்.

இ. அந்த மரத்தின் சக்தி அவர் அருளும் ஆவியின் பெலனைக் காட்டும்.

ஈ. அதினாலுண்டான மதுரமே தேவ சகாயத்தினால் உண்டாகும் ஆறுதலையும் இன்பத்தையும் காட்டும்.

இவ்விதமாக மெய்ப் பக்தர்களுடைய துன்பம் இன்பமாக மாறும் விசேஷம் இந்தச் சரித்திரத்தில் உதாரணமாகிறதென்று காண்க.

III. **சுகம்.** *வச. 27.*

**சோதனைக்குப்பின் வருவது சுகம்** என்று பார்க்கிறோம். இந்த 27ஆம் வசனம் 'பின்பு' என்று தொடங்குகிறது. மாராவுக்குப் பின்பு எலீம். எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத்

தரும்' (எபி. 12:11). இந்தக் காரியத்துக்கு அநேக எடுத்துக்காட்டுகள் வேதத்தில் உண்டு (ஆதி. 42:36; 45:27; 28; யோபு 1:20, 21; 42:12; மத். 4:11; 2 கொரி. 12:9).

'ஏலீம்' என்பதற்குப் **பலத்த மரங்கள்'** என்றர்த்தமாம். அங்கே இஸ்ரவேலின் கோத்திரங்கள் இலக்கத்துக்குச் சரியாகப் **பன்னிரண்டு நீரூற்றுகள்** இருந்தன. ஆகவே ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒவ்வொரு நீரூற்றுமிருந்த தென்று பார்க்கிறோம். மேலும் இஸ்ரவேலின் மூப்பருடைய இலக்கத்துக்குச் சரியாக **'எழுபது பேரிச்சமரங்களும்'** இருந்தன.

**நீரூற்றுகளால்** கிடைக்கத்தக்கது நல்ல **தண்ணீரும் சுகமும். மரங்களால்** கிடைக்கத்தக்கது **நிழலும் கனியும் இளைப்பாறுதலுமாம்.**

ஆகவே இளைத்துப்போன இஸ்ரவேலருக்கு நிழலும், கனியும், பானமும், சுகமும், இளைப்பாறுதலும், பெலனும் ஏலீமில் குறைவின்றிக் கிடைத்தன.

நாம் **'கர்த்தருடைய செயலின்முடிவை'** (யாக். 5:12). கவனிப்பது அவசியம். தமது மெய்த்தொண்டர்களுக்குத் துன்பங்களை வரவிடினும், மாராவின் கசப்பை மாற்றுவது மல்லாமல், ஏலீமின் சுக அனுபவங்களையும் அருளிச் செய்கிறார்.

**கேள்விகள்:**

1. 'இஸ்ரவேலர் எகிப்தியரிலிருந்து' இரட்சிக்கப்பட்ட பின்பு இந்தப் பாட்டைப் பாடினார்கள். சூளையிலும், உபத்திரவத்திலும், ஆபத்திலும் இருக்கையிலேயே ஸ்தோத்திரப் பாட்டுகளைப் பாடின சிலரைக் குறிப்பிடுக.

2. இவ்வற்புதத்தினால் இஸ்ரவேலருக்கு இனி வரும் எந்த நன்மைகளைப்பற்றி மோசே பாடினான்?

*3. சிவந்த சமுத்திரத்தைக் கடக்குதல் புதிய ஏற்பாட்டில் எதற்குச் சமானமாக்கப்பட்டிருக்கிறது?*

*4. சிலர் சிவந்த சமுத்திரத்தைக் கடக்குதலைக் குணப்படுதலுக்கு எடுத்துக்காட்டாக உபயோகித்திருக்கி றார்கள். அது எப்படி?*

*5. மாராவிலிருந்த தண்ணீர் கசப்பாயிருந்தும் தேவன் மோசேக்குக் காண்பித்த மரத்தால் அவன் அதை ஆரோக்கியமாக்கி யேகோவாவைப்பற்றிய எந்தப் பாடத்தை ஜனங்களுக்குக் கற்றுக்கொடுத்தான்?*

# 16ஆம் அதிகாரம்

## வானாகாரம் புசித்தல்

***கவனிப்பு:*** *இவ்வதிகாரத்தில் 'அப்பம்' ('ஆகாரம்') என்பதும் 'புசி' என்பதும் அடிக்கடி வருகிற பதங்கள். மீட்கப்பட்ட ஜனங்கள் ஜீவ அப்பத்தைப் புசித்துக்கொண்டு பெலனடைந்து மோட்ச பிரயாணம் செய்வது கர்த்தருடைய தெய்வீக ஏற்பாடென்றறிக.*

***1. 'முறுமுறுப்பு'*** *வச. 2, 7-9, 12 : இந்த வார்த்தை 8 தரம் வருகிறது. இஸ்ரவேலின் 'ஸ்தோத்திரம்' ஒரு விசை மாத்திரம் வருகிறது (15ஆம் அதிகாரம்).* ***'முறுமுறுப்போ'*** *திரும்பத்திரும்ப வருகிறது (15:24; 16:2-12; 17:3). நம்மில் அநேகர் முறுமுறுப்பது அதிகம்; ஸ்தோத்திரஞ் செலுத்துவதோ கொஞ்சம். இது முற்றிலும் தவறு (பிலி. 2:6).*

***முறுமுறுப்பில்:***

***1. அவிசுவாசம் விளங்குகிறது*** *வச. 2, 3: "இந்தக் கூட்டம் முழுவதையும் பட்டினியினால் கொல்லும்படி இந்த வனாந்திரத்திலே அழைத்து வந்தீர்களே" என்கிறார்கள்.*

14ஆம் அதிகாரத்தில் அதிசயமான இரட்சிப்பை அருளிச்செய்தவரும், 15ஆம் அதிகாரத்தில் கசப்பான தண்ணீரை மதுரமாக மாற்றினவருமாகிய வல்ல தேவனை நோக்காமலும் நம்பாமலும் போனார்கள். அதினாலேதான் முறுமுறுக்கலானார்கள். எல்லா முறுமுறுப்புகளுக்கும் காரணம் அவிசுவாசமே (யோவான் 6:41, 43-50). உத்தம விசுவாசி ஒருபோதும் முறுமுறுப்பதில்லை (ரோமர் 8:28; பிலி. 4:11-13; 1 தெச. 5:18).

2. **அநியாயம் தோன்றுகிறது** வச. 3, 7, 8; மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாய் முறுமுறுப்பது பெரிய அநியாயம் ''நீங்கள் எங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதற்கு நாங்கள் எம்மாத்திரம்?'' இருவரும் நன்மை செய்தவர்களேதவிர, ஒருவருக்கும் தீமை செய்தவர்களல்ல (எபி. 13:7, 17). மேலும், ஆபத்து நேரிட்டாலும், அந்தப் பக்தர்கள் என்ன செய்யக்கூடும்?

அப்படியானால் தங்கள் இரட்சகர் இயேசுவுக்கு விரோதமாய் முறுமுறுப்பது எவ்வளவு அதிக அநியாயம். மீட்டவரும் அவரே; பாதுகாத்து வந்தவரும் அவரே. எகிப்தில் அனுபவித்த பாடுகளையும் பட்டினியையும் மறந்து, நாங்கள் இறைச்சிப் பாத்திரங்களண்டையிலே உட்கார்ந்து அப்பத்தை திருப்தியாகச் சாப்பிட்டோம்' என்று பேசுவது நியாயமா? எகிப்திலே அவர்களுக்கு 'திருப்தி' எது? (1:13, 14).

தீமையை நன்மையென்றும் அதிருப்தியைத் திருப்தியென்றும் சாதிப்பது பொய்யும் அநியாயமுமாமே (ஏசாயா 5:20). முறுமுறுப்பான சகல வார்த்தைகளிலும் இவ்விதமான பொய்யும், அநியாயமும் தோன்றும்.

3. **அக்கிரமம் காணப்படுகிறது**. வச. 8: "கர்த்தருக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுத்த உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார்.'' **'கர்த்தருக்கு விரோதமாக'** நாம்

சிந்திப்பதும் சொல்லுவதும் செய்வதும் எல்லாம் பாவமும் அக்கிரமமுமாமே.

முறுமுறுப்பு மகா பயங்கரமான பாவம் எனக்கொள்க.

மேலும் பாவத்தைப் பகைக்கும் நீதிபரர் நம்முடைய முறுமுறுப்புகளை வெகுவாய்க் கவனிக்கிறார் என்றும் பார்க்கிறோம். ஏனெனில், உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார்' என்று மறுபடியும் மறுபடியும் சொல்லி யிருக்கிறது *(வச. 7-9, 12)*. ஆண்டவர் செவிசாய்த்துக் கேட்கிறார் என்று உணர்ந்தோமானால் ஒருநாளும் முறுமுறுப்பினாலே அவருக்கு விசனமூட்டமாட்டோம்.

இவ்விதமாய்ப் பார்க்கும்பொழுது, முறுமுறுக்கிற கிறிஸ்தவன் **அவிசுவாசம், அநியாயம், அக்கிரமம்** ஆகிய இம்மூன்று பாதகங்களுக்குட்படுகிறான் என்றாகிறது.

II. **'மகிமை'** *வச. 7, 10.* **'கர்த்தருடைய மகிமை' அந்த மகா மகிமை.**

***1. தேவனுடைய பரிசுத்த வசனத்துக்கு அடையாளம்.*** *எண். 11:10-12ஐ ஒத்துக்காண்க.*

பாவிகளைப் பட்சிக்கும் பயங்கர மகிமை.

***2. தேவனுடைய அதிசய கிரியைக்கு அடையாளம்*** *வச. 10:*

இஸ்ரவேலரை வழிநடத்தும் மேகஸ்தம்பத்திலே சடுதியாய் இந்த மகிமைப் பிரகாசம் தோன்றினது. அந்த மேகஸ்தம்பத்தை அவர்கள் நம்பாததினால் அல்லவா முறுமுறுப்புண்டாயிற்று? இதோ! அவர்கள் அசட்டை செய்த ஸ்தம்பத்திலே திடீரென்று சொல்லுதற்கரிய தேவ மகிமை பிரகாசித்தது. அந்த மேகஸ்தம்பத்தில் பிரசன்னமான மகிமையுள்ள கர்த்தரால் கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்று அவர்களுக்கு உணர்த்தப்பட்டது.

அதுவுமன்றி, "அவர்கள் வனாந்திரத் திசையாகத் திரும்பிப் பார்த்தார்கள்; அப்பொழுது கர்த்தருடைய மகிமை மேகத்திலே காணப்பட்டது" என்று சொல்லி யிருக்கிறதே. அதாவது, அந்த மகிமை வனாந்தரத் திசையில் தோன்றினது. ஒன்றுமில்லாத பாழ் வானாந்தரத்திலேயே கர்த்தருடைய அதிசய செயலால் சம்பூரணம் உண்டாகு மென்பதற்குக் குறிப்பாக அவருடைய மகிமை அங்கே காட்சியாயிற்று.

***3. தேவனுடைய சம்பூர்ண கிருபைக்கு அடையாளம்.*** *வச. 12:*

*முறுமுறுத்த பாவிகளைக் கடிந்துகொள்ளாமல், அவர்களுக்கும் அருமையான வாக்குத்தத்தங்களை அருளிச் செய்தார்.*

*"விடியற்காலத்தில் அப்பத்தால் திருப்தியாகி நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்பதை அறிந்து கொள்வீர்கள்" என்கிறார்.*

*இவ்வருள்வாக்கின்படியே, கர்த்தருடைய மகிமை மேகஸ்தம்பத்தில் மாத்திரமல்ல; பின்பு அளிக்கப்பட்ட வானாகாரத்திலும் அற்புத கிரியையிலும் வெளிப்பட்டது.*

III. ***'மன்னா'*** *வச. 13-36.*

*இந்த வான ஆகாரம் கிறிஸ்துவுக்கு முன்னடையாளம் என்பது நிச்சயம் (1 கொரி. 10:3; யோவான் 6:30-63).*

*மெய் விசுவாசிகள் வேதவாக்கியங்களை ஜாக்கிரதை யோடே ஆராய்ந்து பார்த்து அவற்றில் வெளிப்படுகிற ஜீவ அப்பமாகிய அருைம நாதரை ஆத்மீக போஜனமாய் உள்கொண்டு பலத்தின்மேல் பலமடைவதே காரியம்.*

***1. மன்னாவின் சிறந்த தன்மை.***

***அ. அற்புதமான அப்பம்.*** *வச. 13, 15* ***'அற்புதமாய் வந்தது'*** *வச. 14.*

அது வருவதை ஒருவரும் காணவில்லை. அது வந்த விதத்தை ஒருவரும் அறியவில்லை. அது வந்தது புத்திக் கெட்டாத அதிசயம். **அற்புதமாய் தோன்றியது.** வச. 15. மன்னா என்பதற்கு 'இது என்ன?' என்று அர்த்தமாம். 'அது இன்னதென்று அறியாதிருந்தார்கள்'.

அதைப்போல கிறிஸ்துவும் அதிசயமானவர் (ஏசாயா 9:6). அவருடைய மானுடவதாரமும் புத்திக்கெட்டாதது (1 தீமோ. 3:16). அவருடைய தெய்வீக தன்மையும் மனிதருடைய மனவார்த்தைக்கும் மேற்பட்டது (யோவான் 6:41, 42).

**ஆ. வானத்திலிருந்திறங்கும் அப்பம்.** வச. 4: "நான் உங்களுக்கு வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப் பண்ணுவேன்" (சங். 78:23-25). **"தூதர்களின் அப்பத்தை மனுஷன் சாப்பிட்டான்."**

அப்படியே கிறிஸ்துவும் வானத்திலிருந்து இறங்கினவர். (யோவான் 6:32, 33, 41, 51, 58). **"நான் வானத்திலிருந்து இறங்கின ஜீவ அப்பம்"** என்கிறார்.

பனிபெய்த பின்புதான் மன்னா தோன்றினது (வச. 13, 14).

அதேபிரகாரம், பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்ததின்பேரில்தான் கிறிஸ்து என்னும் ஜீவ அப்பம் இவ்வுலகத்தில் தோன்றினார் (லூக்கா 1:35).

**இ. பரிசுத்தமுள்ள அப்பம்.** வச. 31. **"வெண்மை நிறமாயிருந்தது."** சுத்த வெண்மை பார்வைக்கு வெளேரென்றிருந்தது.

அவ்விதமாகவே, கிறிஸ்துவும் பூரண பரிசுத்த இரட்கராக வந்தார். "அவரிடத்தில் பாவமில்லை" (1 யோவான் 3:5).

***ஈ. மதுரமான அப்பம்.*** *வச. 31: "அதின் ருசி தேனிட்ட பணிகாரத்திற்கு ஒப்பாயிருந்தது."*

அந்தப் பிரகாரமே, கிறிஸ்துவும் விசுவாசிக்கு மதுரமும் இன்பமுமானவர் (சங். 34:8).

"அவருடைய கனி என் வாய்க்கு மதுரமாயிருக்கிறது" (உன். 2:3).

***உ. திருப்தியாக்கும் அப்பம்.*** *வச. 8, 12: "நீங்கள் திருப்தியடைவதற்கு அப்பத்தைக் கொடுப்பேன்." "அப்பத்தால் திருப்தியாவீர்கள்."*

மெய்யான திருப்தி இந்த வானாகாரத்தினாலே உண்டாகும். முன்பு இஸ்ரவேலர் புத்தி மயங்கி 'அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிட்ட எகிப்து தேசம்' என்று பிதற்றி இருந்தார்கள் (வச. 3). எகிப்து தேசத்து அப்பம் மெய்த்திருப்தி உண்டாக்காது (ஏசாயா 55:2). வானாகாரம் ஒன்றே மெய்த்திருப்தி உண்டாக்கும்.

அவ்வண்ணமே கிறிஸ்துவும் தமது தாசரின் இருதயத்தைத் திருப்திப்படுத்துகிறார் (யோவான் 6:35; பிலி. 3:7, 8).

***ஊ. அனுதினமும் கிடைக்கும் அப்பம்.*** *வச. 4: "ஒவ்வொரு நாளும் வேண்டியதை ஒவ்வொரு நாளிலும் சேர்த்துக்கொள்ள வேண்டும்."*

அதைப்போல, விசுவாசியின் அன்றன்றுள்ள அப்பம் கிறிஸ்துவே (மத். 6:11; நீதி. 8:34). பரமகானானில் அவரை முகம் முகமாய்த் தரிசிக்கும்வரைக்கும் வச. 35. நாம் தினம்தினம் விசுவாசத்தினாலே அவரை ஆகாரமாக உட்கொள்ள வேண்டும்.

***2. மன்னாவைச் சேர்க்கும் வகை:***

***அ. ஒவ்வொருநாளும் அதைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.*** *(ஓய்வு நாளைத் தவிர). பழையது உதவாது.*

வச. *4* நேற்றுச் சேர்த்தது இன்று ஆகாது. வச. *20.* புதிதாய்ப் புதிதாய்ச் சேர்த்துக்கொண்டு புசிப்பதே ஒழுங்கு முறையாகும்.

அப்பிரகாரமே, நாம் பிரதிதினமும் வேதவாசிப்பினாலும் தியானிப்பினாலும் கிறிஸ்து இரட்சகரை கண்டறிந்து, சொந்தமாக்கி அவரைப்பற்றின அறிவில் வளர்ந்தேற வேண்டும் (பிலி. *3:10, 18*). ஒரு நாள் மாத்திரம் இந்த ஜீவ அப்பத்தை அருந்தாதேபோனால், பெலவீனமுண்டாகும்; தோல்வியும் நேரிடும். சிறந்த பக்தன் ஒருவன் அறிக்கையிட்டது என்னவெனில் 'ஒரு நாள் உடல் சோர்வுக்கு இடங்கொடுத்து வேதவாசிப்பையும் தனி ஜெபத்தையும் நான் அசட்டை செய்ததினாலே அன்றுமுதல் என் ஜீவியத்தில் பெலவீனமும் தோல்வியும் தோன்றின. அந்தப் பெலவீனமும் தோல்வியும் முற்றிலும் நீங்குவதற்குச் சில மாதங்கள் சென்றன' என்பதே.

முன்னடையாளத்துக்கும் அது காட்டும் மெய்ப்பொருளுக்கும் இருக்கிற பெரிய வித்தியாசம் என்னவென்றால்: இஸ்ரவேலன் ஓய்வுநாளில் மன்னாவை சேர்க்கமாட்டான்; நாமோ ஓய்வுநாளில் ஏழத்தனையாக ஜீவ அப்பத்தைப் பெற்றனுபவிக்கலாம்.

**ஆ. விடியற்காலத்தில் அதைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.** வச. *13, 14, 21* “வெயில் ஏற ஏற அது உருகிப்போம்.” வைகறையில் மன்னாவைச் சேர்க்காவிடில் அதை இழந்து போவார்கள்.

அதைப்போலவே, நாம் அதிகாலையில் எழுந்திருந்து வேதம் வாசித்து இரட்சகரைத் தேடாதபட்சத்தில் அன்று முழுவதும் நம்முடைய ஆத்துமா பட்டினியாயிருக்கும்; பாவத்தில் எளிதில் அகப்படுவோம். சோம்பலுக்கு இடங்கொடுத்துக் காலைச் சமயத்தைத் ஆதாயம் செய்யாமற் போனால் பின்பு நல்ல சமயம் வாய்க்காது. வெயில் ஏற

ஏற வேலைகளும் பணிகளும் அதிகமாகும்; பிசாசுக்குத் தோற்றுப்போவோம்.

**அதிகாலையிலே** ஜீவ அப்பத்தைச் சேர்த்துப் புசிப்போமாக (*சங். 63:1; நீதி. 8:17; மாற்கு 1:35; யோவான் 20:1*).

**இ. அவரவர் புசிக்கும் அளவுக்குத்தக்கதாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.** வச. 16 18, 21. சேர்த்த மன்னா முழுவதையும் புசிக்க வேண்டும். மீதி வைக்கலாகாது. வச. 20.

அவ்விதமே, நாம் வேதத்தால் அறிந்த சத்தியத்தையெல்லாம் இருதயத்தில் உட்கொண்டு ஜீவியத்தில் வெளிப்படுத்தலே தகும். எத்தனையோ கிறிஸ்தவர்களுடைய வேத அறிவு மீதி வைத்த மன்னாவைப்போல, 'பூச்சி பிடித்து நாற்றமெடுக்கிறது' என்றே சொல்ல வேண்டும் (*யோவான் 13:17; யாக். 1:22*).

வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து ஜீவ அப்பத்தைக் கண்டடைவோம்; விசுவாசத்தால் சேர்த்துக் கொள்வோம்; இருதயத்தில் உட்கொண்டு புசிப்போம்; அதினால் பெலனடைந்து பரிசுத்தமாய் நடப்போமாக.

**கவனிப்பு**: "நன்றியறிதல் வேண்டும்" (வச. 32-34).

**கேள்விகள்:**

*1. வச. 3. இது ஜனங்கள் முறுமுறுத்த மூன்றாம் தடவை, முந்தின இரண்டு முறுமுறுப்புகள் எங்கெங்கே? எக்காரணங்களினால்?*

*2. இஸ்ரவேலர் வனாந்தரத்தில் எல்லாவற்றையும் இலவசமாய்ப் பெற்றார்கள் என்றும், அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து வந்தபடியால் அவர்கள் இலவசமாய்ப் பெற்ற நன்மைகளின் மதிப்பு சரியாய் எண்ணாமல் எளிதாய் முறுமுறுப்புக்கு ஆளாகி*

விட்டார்கள் என்றும் சொல்வாருண்டு. நமது தேசத்தில் கிறிஸ்தவ மார்க்கத்துக்கு வந்திருக்கும் தாழ்ந்த வகுப்பாருக்குள் இவ்விதமான குணமுண்டென்று சொல்லலாமா?

*3. வச. 4.* மன்னாவின்மூலம் கர்த்தர் இஸ்ரவேலரை எவ்விதங்களில் சோதித்தார்? நமது ஆகாரத்தின்மூலம் அதேவிதமாய் நாம் சோதிக்கப்படுவதுண்டா? ஆவிக்குரிய காரியங்களிலும் இதேவிதமாய் அவர் நம்மைச் சோதிப்பதெப்படி?

*4.* மன்னா இயற்கைக்குச் சம்பந்தமாயுண்டான ஒரு பொருள் என்று சிலர் சொல்கிறார்கள். அது முழுவதிலும் அற்புதமாய் உண்டானதென்று பல நியாயங்களினால் காண்பிக்க.

# 17ஆம் அதிகாரம்

## யுத்தம்பண்ணுதல்

**கவனிப்பு:** இவ்வதிகாரத்தில் முக்கியமான பதங்கள் என்னவென்றால்: '**தண்ணீர்**' '**மலை**' '**யுத்தம்**' என்பவைகளே.

**குறிப்பு:** *16ஆம்* அதிகாரத்தில் ஜீவ அப்பம் முன்னடையாளமாய்க் காட்டப்பட்டதுபோல, இந்த *17*ஆம் அதிகாரத்தில் ஜீவ தண்ணீர் முன்னடையாளமாகக் காட்டப்படுகின்றது. அப்படியே யோவான் எழுதின சுவிசேஷத்திலும் இவ்விரண்டு பெரிய விசேஷங்கள் தொடர்ச்சியாய் வருகின்றன. அதி. *6, 7.*

**அற்புதமான தண்ணீர்.** வச. *1-7.*

***1.* தண்ணீர்த் தவனம்.** வச. *1-4:* தாகத்தினாலே மிகவும் வருந்தினார்கள். தண்ணீர் அகப்பட்டால் மாத்திரம்

அந்தத் தாகம் தீரும். அவர்கள் தண்ணீர்த் தவனத்தால் பீடிக்கப்பட்டது உண்மையே; ஆனாலும் அற்புதவிதமாய் ஆகாரத்தைத் தந்த அருள்நாதரை நம்பாமற்போனது மகாபாவம். தங்களைத் தாழ்த்தவும், விசுவாசத்தோடும் தண்ணீருக்காகக் கெஞ்சிக் கேட்கவும் வேண்டியதற்குப் பதிலாக 'முறுமுறுத்தார்கள்', 'வாதாடினார்கள்', மோசேயின் மேல் 'கல்லெறியப் பார்த்தார்கள்'.

சகோதரரே, நமக்குத் தண்ணீர்த் தாகம் இருப்பது நல்லது. எப்படியெனில் பரிசுத்த ஆவியின் ஜீவத் தண்ணீரின் பேரில் வாஞ்சையும் தாகமும் அவசியம் வேண்டும். இவ்விதமான ஆத்மீக தாகமில்லாமையால் ஜீவத் தண்ணீர் அடையாமற்போகிறோம். (சங். 107:8; ஏசாயா 55:1). நாம் ஏசாயா 41:17-20ஐ வாசித்துச் சிந்திக்கும்போது நம்முடைய நாவு தாகத்தால் வறண்டுபோகும்போதுதான் தேவனாகிய கர்த்தர் நம்முடைய வாஞ்சைக்கும் விண்ணப்பங்களுக்கும் இரங்கி, 'உயர்ந்த மேடுகளில் ஆறுகளையும் பள்ளத்தாக்குகளின் நடுவே ஊற்றுகளையும் திறந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகளைக் கட்டளையிடுகிறாரென்று அறியலாகிறோம்.

2. **கன்மலை விசேஷம்.** வச. 5, 6: தண்ணீர் கிடைப்பதற்கு அற்புத கிரியை நடக்க வேண்டும். கன்மலையிலிருந்து தண்ணீரை அருளிச் செய்யத் தேவன் சித்தமானார். அருமை இரட்சகருக்கு முன்னடையாளமாக நடந்த விசேஷங்களில் இது ஒன்று. 'அந்தக் கன்மலை கிறிஸ்துவே' (1 கொரி. 10:4).

இதில் கவனிக்கவேண்டிய குறிப்புகள் என்னவெனில்:

அ. அவர்கள் தேவனை நம்பி, அந்தக் கன்மலையே தஞ்சம் என்று அதை அண்டிக்கொள்ளவேண்டும். வச. 5.

ஆ. தேவன் தம்முடைய சர்வ வல்லமையோடே

*அந்தக் கன்மலையில் எழுந்தருளி வரவேண்டும். "நான் உனக்கு முன்பாகக் கன்மலையின் மேல் நிற்பேன்" வச. 6.*

இ. மோசே அந்தக் கன்மலையைக் கோலினாலே அடிக்க வேண்டும். நீ அந்தக் கன்மலையை அடி. வச. 6.

**கிறிஸ்துநாதரும்:**

ஆத்தும தாகமுள்ளவர்களுக்கு தஞ்சமான கன்மலை *(யோவான் 6:68; 4:10).*

தேவவல்லமை பிரசன்னமாகி விளங்கின கன்மலை *(யோவான் 3:2; கொலோ. 1:19).*

*மனிதரால் அடியுண்ட ஞானக்கன்மலை (மத். 16:21; யோவான் 19:34; அப். 2:12-24, 33).*

*3. **அற்புதமான ஜலம்.*** வச. 6: "அப்பொழுது ஜனங்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும்.'' அந்தத் தண்ணீரை இலவசமாய்ப் பெற்றார்கள்; அற்புதமாய்ப் பெற்றார்கள்; தாகந்தீரப்பெற்றார்கள்; எல்லாரும் பெற்றார்கள்; அடியுண்ட மலையிலிருந்து பெற்றார்கள்; அறையுண்ட இரட்சகரிடத்திலிருந்து மாத்திரம் நாம் பரிசுத்த ஆவியாகிய ஜீவத் தண்ணீரைப் பெற்றுக் கொள்ளுகிறோம் *(யோவான் 1:29, 33; 7:37-39; அப். 2:23-33).*

II. ***அற்புதமான ஜெபம்.*** *வச. 8-16.*

***கவனிப்பு:*** அற்புத தண்ணீரைப் பெற்றவுடனே சோதனையும் யுத்தமும் நேரிட்டன *(லூக்கா 4:12; அப். 9:17, 20-24).* எதிர்த்து வந்த அமலேக்கு மாம்சத்துக்கு அடையாளம் என்றறிக *(ஆதி. 36:12).* ஒருவன் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டவுடனே சாத்தான் அவனுக்கு விரோதமாய் யுத்தம்பண்ண மாம்சத்தைப் பலமாய் எழுப்புகிறான்.

*1.* **யுத்தம்.** *வச. 9, 10* யுத்தம்பண்ணு, யுத்தம் பண்ணினான். போர் செய்யாமல் விசுவாசியின் காரியம் தீராது *(எபே. 6:12; ரோமர் 8:13).* ரெவிதிமிலே அந்த யுத்தம் நடந்தது. எந்த இடத்தில் அற்புதத் தண்ணீர் அருளப் பட்டதோ, அந்த இடத்திலே யுத்தம் ஆரம்பித்தது. பரிசுத்த ஆவி நமக்கு அனுக்கிரகிக்கப்படுவது நாம் பெலனடைந்து போர்செய்து ஜெயம் பெறுவதற்காகவே என்று காண்க.

*2.* **பலம்.** *வச. 10, 11:* மலையுச்சியில் ஏறினார்கள். உன்னத பெலனும் அற்புத ஜெயமும் அந்தப் பர்வதத்திலிருந்து வந்தது. *சங். 121:1.*

விசுவாசத்தோடே அந்தக் கோலை ஏறெடுத்திருக்கை யில் உன்னத பெலனைப்பெற்று ஜெயங்கொண்டார்கள். அதைத் தாழ விடுகையில் தோல்வியடைந்தார்கள். வானத்திலிருந்து வல்லமையைப் பெற்றுக்கொள்ளும்போது மாத்திரம் ஞானப்போரில் ஜெயம் உண்டாகும் என்று இதினாலே தெளிவாய்ப் பார்க்கிறோம் *(சக. 4:6).*

மலையுச்சியில் ஜெபக்கைகளை நீட்டின மோசே பரலோகத்தில் நமக்கு ஜெயமுண்டாகப் பரிந்துபேசி, வேண்டுதல் செய்கிற கிறிஸ்து நாதருக்கு அடையாளம் என்பது அநேகருடைய வியாக்கியானம். ஆனாலும் அவருடைய திருக்கரங்கள் தளர்ந்து போவது கூடாத காரியம்.

யோசுவா செய்த யுத்தம் விசுவாசியின் போராட்டத் தையும் *(1 திமோ. 6:12; எபே. 6:10-17)* மோசே கைகளை உயர்த்தினது விசுவாசமுள்ள ஜெபத்தையும் காட்டுகிற தெனக்கொள்க. விசுவாசமுள்ள ஜெபத்தினாலே நாம் உன்னத பெலனைப் பெறாவிடில், போராட்டத்தில் தோல்வியே நேரிடும். ஜெபமே ஜெயம் *(1 இரா. 18:36-40; 1 சாமு. 7:8-10; அப். 4:23-33).*

***3. திடம்.*** *வச. 12. "மோசேயின் கைகள் அசந்து போயிற்று.* நம்முடைய ஜெபத்திலும் விசுவாசத்திலும் தளர்ச்சி வெகு சீக்கிரம் தோன்றுகிறது. இதற்குப் பரிகாரம் வேண்டும். மோசே தன்னுடைய இரு கைகளையும் மாற்றி மாற்றி உயர்த்தி அற்புத கோலை வானத்துக்கு நீட்டினான் என்றல்ல, இரு கரங்களினாலும் ஒருமிக்க அந்தக் கோலைப் பிடித்து உயர்த்தினான் என்று தோன்றுகிறது. அதினாலே தான் அதிக தளர்ச்சியும் சோர்வும் உண்டாயிற்று இனி அவன் கைகள் சோர்ந்து போகாதபடி நல்ல ஏற்பாடு பண்ணினார்கள். பெரிய கல்லை வைத்து அதன்மேல் அவனை உட்காரவைத்து அவன் கைகளைத் தாங்கினார்கள்.

**ஆரோன்** ஆசாரியத்துவம் பெறத் தேவனால் நியமிக்கப்பட்டவன் ஊர் என்பவன் யூதாவின் பின் சந்ததியான் (1 நாளா. 2:18-20). ஆகையால் இராஜத்துவம் பெறப்போகிற கோத்திரத்தைச் சேர்ந்தவன்.

இப்படியெல்லாம் பார்க்கும்பொழுது:

அ. மோசே உட்கார்ந்த பெருங்கல் தேவ கிருபையைக் குறிக்கலாம். அந்தக் கிருபைதான் விசுவாசியைத் தாங்கத் தக்கது. (ரோமர் 5:2; 1 கொரி. 15:10; 2 கொரி. 12:9). சோர்ந்துபோகிற தாசனுக்குத் தேவன் தம்முடைய அளவற்ற கிருபையைக் காட்டி, 'என் கிருபை உனக்குப் போதும். உன் பெலவீனத்தையும் மனசோர்வையும் பாராமல் என் கிருபையையே பார்த்துத் தைரியங்கொண்டு அதன்பேரில் சார்ந்துகொள்' என்பதுபோல அனுக்கிரகம் செய்கிறார்.

ஆ. மோசே அந்தக் கல்லில் உட்கார்ந்துவிட்டது விசுவாசத்தோடே தேவகிருபையின்மேல் சார்ந்து கொள்வதைக் குறிக்கலாம் (The Rest of Faith) கவலையும் பயமுமின்றி வல்ல கர்த்தர்மேல் விசுவாசமும் நம்பிக்கையும் வைத்து அமரிக்கையோடிருப்பதே

விசுவாசியின் காரியம் மனக்கலக்கமும் தளர்ச்சியுமில்லாமல் அமைதலான இருதயத்தோடே ஜெபம்செய்யும்போது அந்த ஜெபம் திடமாயிருக்கும் *(எபி. 4:3; யோவான் 14:1; ஏசாயா 30:15; 32:17, 18).*

இ. இருகைகளாலே பிடித்தகோல் கர்த்தருடைய வசனத்தை அல்லது வாக்குத்தத்தத்தைக் குறிக்கலாம். அந்தத் திருவசனத்தை ஜெபத்தில் முகாந்தரமாகக்காட்டி, இரக்கங்களைக் கேட்கிறோம். *(சங். 119:49; நெகே. 1:9).* அந்தத் திருவசனத்தினாலே அற்புத கிரியைகளும் நடக்கின்றன.

வச. 6. கோலை இஸ்ரவேலருக்கு ஒப்பிடலாம். அவர்கள் தேவன் மீட்டுக்கொண்ட அவரது சுதந்தரமானவர்கள் *(சங். 74:2).* அவர்கள் மோசேயின் கோலைப் போல தங்கள் சுயவல்லமையால் ஒன்றும் செய்ய இயலாத பெலவீனர்களாயிருந்தார்கள். அவர்கள் பெலனும் ஜெயமுமடைய வேண்டுமானால், அவர்களைத் தேவ சமுகத்திலே உயர்த்த வேண்டும் *(சங். 29:2-9; அப். 2:41).*

ஈ. மோசேயின் கைகளைத் தாங்கின ஆரோனும் ஊரும் ஆசாரியத்துவம் இராஜத்துவம் ஆகிய இவ்விரண்டு விசேஷங்களாலுண்டாகும் சகாயத்துக்கு அடையாளம் எனலாம். ஜெபத்தில் தரித்திருக்கும் விசுவாசியைத் தாங்கும்படி நம்முடைய பிரதான ஆசாரியரும் பரம இராஜாவுமாகிய கிறிஸ்துநாதர் சகாயம்புரிகிறார் என்பதற்குச் சந்தேகமில்லை *(சக. 6:13; லூக்கா 22:32; வெளி. 8:4).*

அதோடுகூட, ஜெபம்பண்ணுகிற நமக்கும் ஆசாரியத்துவமும் இராஜத்துவமும் கிறிஸ்துவுக்குள் அருளப்பட்டிருப்பதால், நாம் உறுதியான விசுவாசத்தோடும் திட நம்பிக்கையோடும் முழுத் தைரியத்தோடும் வேண்டுதல் செய்யலாம் *(வெளி. 1:6; 5:10).*

மோசே, ஆரோன், ஊர் ஆகிய மூவரும் சேர்ந்து வேண்டுதல் செய்தமையால், ஐக்கிய பெலத்தினாலே உண்டாகும் நன்மைகள் இதிலே எடுத்துக்காட்டப்படுகிறது என்று சொல்வாருமுண்டு *(மத். 18:20).*

*4.* **ஜெயம்.** வச. *13, 14* **"யோசுவா** முறிய அடித்தான்." பூரண ஜெயம் கிடைத்தது. 'இதை நினைவுகூறும் பொருட்டு ஒரு புஸ்தகத்தில் எழுது.' ஏனெனில், கர்த்தருடைய உன்னத பெலத்தினாலேயே ஜெயம் வரும் என்பதைத் தலைமுறை தலைமுறையாக நினைவுகூறுவது அவசியமான காரியம் *(சங். 44:3; சக. 4:6; சங். 98:1; 1 யோவான் 5:4).*

'அமலேக்கை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு நாசம்பண்ணுவேன்.' நாம் மாம்சத்துக்குச் சற்றேனும் இடங்கொடாமல், அதையும் அதின் சர்வகிரியைகளையும் தேவ ஆவியின் வல்லமையாலே முற்றிலும் ஒழித்துவிட வேண்டும் *(ரோமர் 8:11-13; எபே. 4:22-24; கொலோ. 3:5-11).*

*5.* **கெம்பீரம்.** வச. *15.* ஜெயக்கொடியை ஏற்றுவதற்குப் பதிலாக மோசே ஓர் பலிபீடத்தைக் கட்டி அதற்கு **'யேகோவாநிசி'** *(கர்த்தரே என் கொடி)* என்று பெயரிட்டான். பலிபீடம் என்றால் 'ஜெய கெம்பீரத்தைக்' காட்டுவதுமல்லாமல் ஸ்தோத்திரத்தையும் பூரண பிரதிஷ்டையையும் காட்டும்.

*16*ஆம் வசனத்தை *3* விதமாய்த் திருப்பலாம்.

அ. தமிழ்த் திருத்தத்தில் கண்ட பிரகாரம், 'அமலேக்கின் கை கர்த்தருடைய சிங்காசனத்திற்கு விரோதமாயிருந்த படியால், தலைமுறை தலைமுறைதோறும், அவனுக்கு விரோதமாய்க் கர்த்தரின் யுத்தம் நடக்கும்,' என்றும் திருத்தலாம்.

அப்படியானால் கர்த்தருடைய சிங்காசனத்தின்மேல் அமலேக்கின் கை விரோதத்தினாலே நீட்டப்பட்டது என்பது கருத்து.

ஆ. 'அமலேக்குக்கு விரோதமாய்க் கர்த்தரின் யுத்தம் தலைமுறை தலைமுறைதோறும் நடக்குமென்று கர்த்தருடைய சிங்காசனத்தின்மேல் (ஆணையிடும்படி) ஒரு கை வைக்கப்பட்டிருக்கிறது' என்றும் திருத்தலாம்.

இதன்படி கர்த்தருடைய திருக்கரமே ஆணையிடுகிற பாவணையாக நீட்டப்பட்டிருக்கிறது என்பதே கருத்து.

இ. அமலேக்குக்கு விரோதமாய் கர்த்தரின் யுத்தம் தலைமுறை தலைமுறைதோறும் கர்த்தருடைய சிங்காசனத்தின்மேல் (இஸ்ரவேலின்) கை வைக்கப்பட்டிருக்கிறது என்றும் திருத்தலாம்.

இதன்படி என்றைக்கும் அமலேக்குக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுவதென்று ஆணையிடும்படி இஸ்ரவேலின் கை நீட்டப்பட்டது என்பதே பொருள்.

**கவனிப்பு.** மலையிலிருந்து ஜீவதண்ணீரும் கிடைக்கிறது, வச. 6. மலையிலிருந்து ஜெயமும் கிடைக்கிறது. வச. 9, 10.

ஜீவ தண்ணீருக்கும் ஜெயத்துக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலே நாம் யுத்தம் பண்ணி ஜெயம் பெறக் கூடும். யுத்தம் 'கர்த்தரின் யுத்தம்' (வச. 16). என்றறிந்து முழுத் தைரியத்துடனே போர் செய்து ஜெயங்கொள்ளக்கடவோம். (ரோமர் 8:37; 1 கொரி. 15:57).

**கேள்விகள்:**

1. வச. 1. ஜனங்களுக்குக் குடிக்கத் தண்ணீரில்லாத இடத்துக்குக் ''கர்த்தருடைய கட்டளையின்படியே'' புறப்பட்டுப் போனார்கள். கர்த்தர் தாமே அவர்களைத் தண்ணீரில்லாத இடத்துக்குக் கொண்டுபோனதற்குக் காரணமென்ன? அவர் நம்மை அவ்விதமாய் நடத்துவதுண்டா?

*2. "கர்த்தருடைய கட்டளையின்படியே" ஜனங்கள் ரெவிதீமுக்குப் பிரயாணப்பட்டிருந்தும்* **மோசேயோடே** *வாதாடி அவனுக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள். இந்தச் சம்பவத்துக்கும் தற்காலத்துக் கிறிஸ்துவ சபையார் தங்கள் போதகருக்கு விரோதமாய் முறுமுறுப்பதற்கும் சம்பந்தம் உண்டா?*

*3. மாசா, மேரிபா என்றால் என்ன? கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா? இல்லையா? என்று இஸ்ரவேலர் சரீர நன்மைகளைக் கொண்டே கர்த்தரைப் பரீட்சித்துப் பார்த்தார்கள். கிறிஸ்தவர்கள் அதே விதமாய்க் கர்த்தரைப் பரீட்சித்துப் பார்க்கிறார்கள் என்பதை உதாரணப்படுத்துக.*

*4. வச. 9. இதற்குமுன் யோசுவாவைப்பற்றி ஒன்றும் எழுதப்படவில்லை. அவனது சரித்திரமென்ன? அவன் தளகர்த்தனானது எப்படி?*

*5. அமலேக்கியர் எந்த நோக்கத்தோடு இஸ்ரவேலருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண வந்திருப்பார்கள்?*

*6. வச. 14. ஒரு புத்தகத்தில் எழுதவேண்டுமென்ற கட்டளை முதல் முதலாக இங்கே வருகிறது. அதை யோசுவாவின் செவி கேட்கும்படி வாசித்தது ஏன்?*

# 18ஆம் அதிகாரம்

## சகோதர சிநேகம் பாராட்டுதல்

**கவனிப்பு.** *இவ்வதிகாரத்தில் வருகிற முக்கியமான பதங்கள் எவையெனில்: 'தப்புவிக்கிறது,' ('விடுவிக்கிறது,') 'விசாரிக்கிறது,' 'தீர்க்கிறது' என்பவைகளே.*

**குறிப்பு:** *முந்தின அதிகாரத்தில் சத்துருக்கள் வந்து விரோதம் பண்ணினார்கள். இவ்வதிகாரத்திலோ சிநேகிதர்கள் வந்து சகாயம் செய்கிறார்கள். உத்தம*

விசுவாசிகளுக்கு சோதனையும் துன்பமும் நேரிட்ட பின்பு சகாயமும் இன்பமும் அவர்களுக்கு அருளப்படுகிறது என்பதற்கு அநேக உதாரணங்களுண்டு *(யாத். 15:22-27; யோபு 42:10; தானி. 3:26-30; 6:22-28; லூக்கா 22:41-43).*

மேலும் எத்திரோ மீதியானில் ஆசாரியனாயிருந்தான். மீதியானியரோ அமலேக்கியரைப்போல ஆபிரகாமின் பின் சந்ததியாராயும் அவர்களைப்போலவே புற மதத்தவர்களாயு மிருந்தார்கள். ஆகையால் புற ஜாதியாரில் அநேகர் மனந்திரும்பாமல் அமலேக்கியரைப்போல் கர்த்தருடைய சபைக்கு விரோதிகளாய் நின்றாலும் இன்னும் ஒரு பாகத்தார் மனந்திரும்பி எத்திரோவின் வம்சத்தைப்போல் அந்தச் சபையோடு சேர்ந்துகொள்வார்களென்பதை இவ்வித சம்பவங்களாலே நாம் அறிந்துகொள்ளலாம்.

I. சகோதர சிநேகம் பாராட்டுதல். வச. *1-12.*

*1.* செய்தி: வச. *1.* "தேவன்...செய்த யாவையும் ... எத்திரோ கேள்விப்பட்டபோது."

தேவன் செய்யும் இரட்சிப்பின் கிரியைகள் அல்லவா மெய் விசுவாசிகளை ஒன்றாக இணைக்கிறது? அந்த இரட்சிப்பின் செயல்கள் தூரமானவர்களையும் இழுத்துக்கொள்ளுகின்றன. 'எத்திரோ' என்பதற்கு 'சிறந்தவன்' என்றர்த்தமாம். இவன் இவ்வதிகாரத்தில் சிநேகத்திலும் ஞானத்திலும் சிறந்தவனாக விளங்குகிறான். இது இவனுடைய பட்டப் பெயர் என்று நினைப்பாருண்டு. இவனுக்கு 'ரெகுவேல்' என்ற மறுபேருமுண்டு 2:18. 'ரெகுவேல்' என்பதற்குத் 'தேவனுடைய சிநேகிதன்' என்றர்த்தமாம்.

சகோதரரே, தேவனுடைய சிநேகிதர் நம்முடைய சிநேகிதராயுமிருப்பார்களாக.

*2.* ***சந்திப்பு.*** *வச. 2-7:* மோசேயினுடைய குமாரரின் பேர்கள் இந்த இடத்தில் எடுத்துக் காட்டப்படுவது சமயத்துக்கும் காரியத்துக்கும் ஏற்றது.

'கெர்சோம்' என்பதற்கு 'அங்கே அவன் பரதேசி' என்றர்த்தம். 'எலியேசர்' என்பதற்கு 'தேவதுணை' அல்லது 'தேவசகாயம்' என்றர்த்தம்.

தான் அந்நிய தேசத்தில் பரதேசியாயிருப்பதினாலும் தேவனால் இரட்சிப்பின் சகாயத்தைப் பெற்றதினாலும், மோசே தன் மக்களுக்கு இந்த நாமங்களைக் கொடுத்திருந்தான்.

இவைகள் சகல மெய் விசுவாசிகளுக்கும் தகுந்த நாமங்கள். நாம் இவ்வுலகத்தில் பரதேசிகளாயிருக்கிறோம் என்பதையும் தேவனுடைய திவ்ய சகாயத்தினால் மாத்திரம் இரட்சிப்பைப் பெற்றவர்கள் என்பதையும் நாம் மறக்கலாகாது.

***கவனிப்பு:*** இவ்விரண்டு பக்திமான்கள் ஒருவரை யொருவர் சந்தித்ததில் நடந்த சில நன்னடக்கைகளைக் கவனித்துக்கொள்க. *வச. 7, 8.*

***அ. மரியாதை.*** 'மோசே தன் மாமனுக்கு எதிர்கொண்டு போய்,' மோசே இப்போது விசேஷித்த முதல் நடுவராயிருந்தாலும் தகுந்த மரியாதை செய்கிறான். உத்தம கிறிஸ்தவர்கள் மரியாதை செய்வதில் நன்மாதிரி களாக இருத்தல் வேண்டும்.

***ஆ. மனத்தாழ்மை.*** 'அவனை வணங்கி' முதியோரைக் கனம்பண்ணுவது விசுவாசிகளுக்கு அழகு.

***இ. அன்புடைமை.*** முத்தஞ் செய்தான். ஒருவரி லொருவர் அன்புகூரக்கடவோம்.

***ஈ. நல்ல விசாரணை.*** ஒருவரையொருவர் சுகசெய்தி விசாரித்துக் கொண்டு, மூலபாஷையின்படி "ஒருவரிடத்தில்

ஒருவர் சமாதானமா என்றான்" என்றிருக்கிறது (2 இராஜா. 9:18-22).

எபிரேயர் ஒருவரையொருவர் வாழ்த்தும்போது சுகந்தானா என்று விசாரியாமல் சமாதானந்தானா என்றே விசாரித்தார்கள்.

விசுவாசிகள் ஒருவருடைய மனசமாதானத்தை ஒருவர் விசாரிப்பது எவ்வளவோ நன்மையான காரியம். மோசே, எத்திரோ என்பவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் பொழுது உலகப்பேச்சையாவது பணப்பேச்சையாவது பேசாமல் பயனுள்ள வார்த்தைகளைமாத்திரம் பேசினார்கள். இது நம்மெல்லாருக்கும் சிறந்த மாதிரிதானே.

**3. சாட்சி.** வச. 8: "மோசே கர்த்தர் ... செய்த எல்லாவற்றையும் ... கர்த்தர் தங்களை விடுவித்து இரட்சித்ததையும் விவரித்துச் சொன்னான்."

மோசே தன்னுடைய சொந்தக் கிரியைகளை எவ்வளவேனும் மேன்மைப் பாராட்டாமல் தேவனுடைய வல்ல செயல்களை மேன்மைப் பாராட்டிப் பேசினான். கர்த்தர் உண்டுபண்ணின மகத்தான இரட்சிப்பைச் சாட்சியாக அறிவித்தான்.

மெய்ப் பக்தர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் போதும் எங்கேயாவது கூட்டங்கூடும் போதும் இவ்விதமாய்ச் சாட்சி கூறுவது பக்திவிருத்திக்கும் ஏதுவாயிருக்கும் (மல். 3:16; சங். 66:16; அப். 14:27).

**4. மகிழ்ச்சி.** வச. 9: கர்த்தர் இஸ்ரவேலரை ... தப்புவித்து அவர்களுக்குச் செய்த சகல நன்மைகளையுங் குறித்து எத்திரோ சந்தோஷப்பட்டு."

இப்படிப்பட்ட சந்தோஷம் மெய்ச் சந்தோஷம்; இரட்சிப்பின் சந்தோஷம்; பரம சந்தோஷம்.

இஸ்ரவேலர் எகிப்திலிருந்து எடுத்துக்கொண்டு வந்த கொள்ளைப் பொருளினிமித்தமுமல்ல, தன் மருமகளுக்கு உண்டான புகழை மேன்மைப்படுத்தினதினால் மட்டுமல்ல இரட்சிப்பின் கர்த்தாவாகிய தேவன் செய்த இரட்சிப்பினிமித்தமே எத்திரோ சந்தோஷப்பட்டான்.

நாம் மகிழ்வது எதினிமித்தம்? *(பிலி. 3:1; 4:4; அப். 11:23).*

***5. ஸ்தோத்திரம்.*** வச. *10, 11:* "எகிப்தியருடைய கையின் கீழிருந்த ஜனத்தை விடுவித்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்."

விடுதலை எங்கேயோ அங்கே சந்தோஷமும் ஸ்தோத்திரமுமுண்டு *(சங். 40:1-3; லூக்கா 13:13; 17:15, 16).*

இரட்சிப்படைந்த எந்த விசுவாசியும் இவ்வார்த்தைகளை ஸ்தோத்திர கீதமாக வழங்குவது நீதியும் தகுதியுமாமே. 'என்னை விடுவித்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்' என்று அனுபவ சாட்சிகளாய்ப் பாடக்கடவோம் *(வெளி. 1:6).*

***6. சர்வாங்க தகனபலி.*** வச. *12:* "எத்திரோ சர்வாங்க தகனபலியையும் மற்றப் பலிகளையும் தேவனுக்குக் கொண்டு வந்து செலுத்தினான்."

வெறும் ஸ்தோத்திரம் உதவாது; நம்மை முற்றிலும் ஒப்புவிக்கவும் வேண்டும் *(சங். 118:27).*

விடுதலை, ஸ்தோத்திரம் நம்மை ஜீவபலியாக ஒப்புவித்தலாகிய இம்மூன்றின் சம்பந்தத்தையும் தொடர்ச்சியையும் காண்க. இந்தப் பிரகாரமே ரோமருக்கு எழுதின நிருபத்தில்:

6ஆம் அதிகாரத்தை விடுதலையின் அதிகாரம் என்றும்,

8ஆம் அதிகாரத்தை ஸ்தோத்திரத்தின் அதிகாரம் என்றும்,

12ஆம் அதிகாரத்தை சர்வாங்க தகனபலியின் அதிகாரமென்றும் சொல்லலாம்.

7. **சகோதர ஐக்கியம்.** வச. 12: "பின்பு ... அனைவரும் வந்து ... தேவ சமுகத்தில் போஜனம்பண்ணினார்கள்" (அப். 2:44, 46).

அன்று நடந்த விருந்து, அன்பின் விருந்தும் பரிசுத்த விருந்தும், தேவனை மகிமைப்படுத்தும் விருந்துமாயிருந்தது. நம்முடைய விருந்துகள் எவ்விதத்திலிருக்கிறது? 'தேவ சமுகத்தில்' உள்ள விருந்தாளிகளா?

விடுதலையும் சர்வாங்க தகனபலியும் நடந்த 'பின்பு' மாத்திரம் இப்படிப்பட்ட சகோதர ஐக்கியமும் பரிசுத்த நட்பும் உண்டாகும்.

**II. சகோதர சிநேகத்தினால் நன்மை உண்டாகுதல்** வச. 13-27.

எத்திரோ வந்து நல்ல ஆலோசனை சொன்னதினாலே மிகுந்த பயனுண்டாயிற்று. அவன் உதவிக்காரரை நியமிக்கும்படி ஏவினான்.

இவ்வதிகாரத்துக்கும் நடபடி புஸ்தகம் 6ஆம் அதிகாரத்துக்கும் சம்பந்தமுண்டெனக் கொள்க.

1. **பாரமான வேலை.** வச. 13-18.

மோசே 'ஒன்றியாய் வேலை செய்தான்' வச. 14.

மோசே 'காலமே துவக்கி சாயங்காலமட்டும்' வேலை செய்தான் (வச. 13, 14).

மோசே 'மிகவும் பாரமான' வேலை செய்தான். (வச. 18).

எத்திரோ இதையெல்லாம் கண்டு 'நல்லதல்ல' என்றான் (வச. 17).

நாம் நல்ல ஒழுங்குகளைச் செய்யாமலும் விவேக மில்லாமலும் ஊழியஞ் செய்வோமேயாகில் அவசிய மில்லாத வருத்தங்களும் சங்கடங்களும் நேரிடும் *(வச. 18).*

**2. நல்ல ஆலோசனை.** *வச. 19-23.*

'உமக்கு ஒரு ஆலோசனை சொல்லுகிறோம்' *(வச. 19).* "அவர்கள் உம்மோடே கூட இந்தப் பாரத்தைச் சுமந்தால் உமக்கு இலகுவாயிருக்கும்" *(வச. 22).*

இந்த விசேஷித்த தேவ ஊழியத்தில் பங்குபெறும் உதவிக்காரரில் விளங்கவேண்டிய சிறப்பியல்புகள் எவை? *(வச. 21).*

அ. தேவனுக்குப் பயந்தவர்கள் *(1 தீமோ. 3:9, 10, 15).*

ஆ. உண்மையுள்ளவர்கள் *(1 கொரி. 4:1, 2).*

இ. பொருளாசையை வெறுக்கிறவர்கள் *(1 தீமோ. 3:3-8; 1 பேதுரு 5:2).*

ஈ. திறமையுள்ளவர்கள் *(தீத்து 1:9; 1 கொரி. 3:10).*

தேவபயம், உண்மை, பொருளாசையில்லாமை, ஞானம் ஆகிய நான்கு ஒழுங்குகள் தேவ பணிவிடைக்காரர் எல்லாருக்கும் இன்றியமையாத அவசியமானவைகள்.

நடபடி புஸ்தகம் 6ஆம் அதிகாரத்தில் சொல்லிய உதவிக்காரருக்கிருந்த ஒழுங்குகளை கூடியவாறு இவற்றுக்கு ஒத்தவை.

அவர்கள் 'நற்சாட்சி பெற்றவர்கள்' இதிலே தேவ பயமும் உண்மையும் அடங்கியிருக்கிறது.

அவர்கள் 'பரிசுத்த ஆவி நிறைந்தவர்கள்' இதிலே பொருளாசையில்லாமை முதலியன அடங்கியிருக்கிறது.

அவர்கள் 'ஞானமும் நிறைந்தவர்கள்' இதிலே திறமை அடங்கியிருக்கிறது.

என்றாலும் புதிய ஏற்பாட்டு ஒழுங்குகள் சிறந்தவைகள்.

**கவனிப்பு** : *வச. 19, 20க்கும் அப். 6:2-4க்கும் சம்பந்த முண்டு. மோசே செய்யவேண்டிய வேலை இருவகை யானது.*

*1. 'நீர் தேவ சந்நிதியிலே ஜனங்களுக்காக இரும். விசேஷித்தவைகளைத் தேவனிடத்தில் கொண்டுபோம்' அதாவது ஜெபத்தின் மூலமாய்த் தேவ சித்தத்தையும் ஆலோசனையையும் கேட்டுக்கொள்வது (வச. 19).*

*2. 'கட்டளைகளையும் பிரமாணங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்தி அவர்கள் நடக்க வேண்டிய வழியையும் அவர்கள் செய்யவேண்டிய காரியத்தையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தும்.' அதாவது, தேவ வசனத்தை ஜனங்களுக்குப் போதிப்பது.*

*இது அப்போஸ்தலர் 'நாங்களோ ஜெபம் செய்வதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்' என்று சொன்னதற்குச் சமானம்.*

எத்தனையோ தேவ ஊழியக்காரர் பந்தி விசாரணைக் கொத்த கணக்கு வேலை, வழக்குகள் முதலியவற்றில் தங்கள் காலத்தைக் கழித்து மகா முக்கியமான இவ்விரண்டு பெரிய வேலைகளை ஏற்ற பிரகாரம் செய்யாமற் போகிறார்கள். தகுந்த உதவிக்காரரை நியமித்தால் இவ்வித பாரங்கள் அதிகமாய் நீங்கிவிடும்.

***3. பெரிய ஒத்தாசை.*** *வச. 24-27:*

மோசே பெருமைக்காரனல்ல; தனக்குச் சொல்லப்பட்ட ஆலோசனையை அங்கீகரித்து அதன்படி புதிய ஒழுங்குகளைச் செய்தான். அதினாலே அவனுக்கு உண்டான நன்மையும் பயனும் கொஞ்சமல்ல.

''வருத்தமான காரியங்களைமாத்திரம் மோசேயி னிடத்தில் கொண்டு வந்தார்கள் சிறிய காரியங்களை யெல்லாம் தாங்களே தீர்த்தார்கள்'' வச. *26.*

உத்தம பக்தர்களான கிறிஸ்தவ சிநேகிதர்களாலும் அவர்கள் சொல்லும் நல்ல ஆலோசனையாலும் நமக்கு மிகுந்த பயன் உண்டு *(அப். 15:12-22).*

**கேள்விகள் :**

*1.* எத்திரோ மோசேயின் மனைவி பிள்ளைகளை எங்கிருந்து கொண்டுவந்தான்? அவர்கள் மோசேயை விட்டுப்போய் எத்தனை காலமிருக்கும்?

2. மோசேயின் சந்ததியைப்பற்றிப் பின்வரும் வசனங்களில் படித்து எழுதுக.

*(1)* கெர்சோம். நியா. *18:30* (பு. தி.); *(1* நாளா. *23:16; 26:24).*

*(2)* எலியேசர். *1* நாளா. *23:17; 26:25, 26.*

அவன் இஸ்ரவேலரின் தலைவனாயிருந்தும், தன் பிள்ளைகளுக்குப் பிரதான இடங்களைத் தேடவில்லை என்பதைக் கவனிக்க.

*3.* "நீர் ஒருவராய் அதைச் செய்ய உம்மால் கூடாது" (வச. *18.)* என்று எத்திரோ சொன்னது உலக ஞானத்துக்கும் மெய் விசுவாசத்துக்குமுள்ள வேறுபாட்டைக் காட்டுகிறதாகச் சொல்வாருண்டு. ''நான் உன்னோடிருக்கிறேன்'' என்று யெகோவா மோசேக்குச் சொல்லுகையில் மோசே அதை ஒருவராய்ச் செய்ய அவசியமில்லை. எத்திரோ சொன்னது சரி என்பது அவன் சொன்னது சரியல்ல என்பதுமான இரு கருத்துக்களுக்கு நியாயங்களை யோசித்து எழுதுக.

# 19ஆம் அதிகாரம்

## கர்த்தரை அண்டிக்கொள்ளுதல்

***கவனிப்பு:*** இவ்வதிகாரத்தில் வருகிற முக்கியமான வார்த்தைகள் 'மலை', 'பரிசுத்தப்படுத்து' என்பவைகளே.

***குறிப்பு:*** விடுதலையடைந்த சபையானது இப்பொழுது கர்த்தருடைய திருவுளச் சித்தத்தை அறிந்து கொள்ளவும், அவரோடு உடன்படிக்கை செய்து அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் வேண்டியது அவசியம். நாம் சுயசித்தத்தின் படியல்ல, தேவ சித்தத்தின்படியே நடக்கும்படி இரட்சிக்கப்பட்டோம் *(எபே. 2:8-10; 2 கொரி. 5:14, 15)*. ஆதலால் நம்மை மீட்டு இரட்சித்தவருக்கு நம்மை முற்றிலும் ஒப்புக்கொடுப்பதும் *(ரோமர் 12:1; 14:7-19)*. அவருடைய ஜீவ வாக்கியங்களைக் கற்றறிந்து *(1 பேதுரு 2:1-3)*. அவரோடு நித்திய உடன்படிக்கை செய்து *(எரே. 50:5)*, பரிசுத்தமாய் நடப்பதும் *(1 பேதுரு 1:13-17)* நம்மேல் விழுந்த கடமை என்றறிக.

I. ***தெய்வீக அதிகாரம்.*** *வச. 1-9:*

ஜனங்களை மீட்டவர் அவர்கள்மேல் அதிகாரம் செலுத்தப்போகிறார். தம்முடைய இரட்சிப்பின் பெயரில் தமது இராஜரீகத்தை ஸ்தாபிக்கிறார். 20:2.

*1.* ***தெய்வீக அதிகாரத்தை நிலைநிறுத்துவது.*** *வச. 4:* தாம் செய்திருந்த இரட்சிப்பின் கிரியைகளை ஆதாரமாகக் காட்டி, அவற்றின்பேரில் உரிமை பாராட்டுகிறார். அந்த இரட்சிப்பின் கிரியைகள் மூவகையாம். அதாவது-

அ. 'தேவன் செய்தது' இது மீட்பின் கிரியை. எகிப்தில் இருந்து அவர்களை விடுதலை செய்து அவர்களை ஒடுக்கின எகிப்தியரை அழைத்தார் *(லூக்கா 1:71; கலா. 1:4; தீத்து 3:4, 5; 1 பேதுரு 1:18, 19)*.

ஆ. தேவன் 'சுமந்தது'. இது பாதுகாப்பின் கிரியை அவர்களை இரட்சித்ததுமன்றி, பின்பு அவர்களைச் சுமந்து கொண்டும் காத்தும் வந்தார். கழுகானது தன் குஞ்சுகளைப் பறக்கப் பழகும்போது அவைகளை கற்பாறையில் விழுந்து செத்துப்போகாதபடிக்கு வெகு கரிசனையோடு தன் செட்டைகளை விரித்துத் தன் குஞ்சுகளைச் சுமந்துகொண்டு போகுமாம். உபா. *32:11.* அவ்வாறு தேவன் தம்முடைய ஜனங்களை மிகுந்த அன்போடும் பொறுமையோடும் பாதுகாத்து வந்தார் (யோவான் *10:27-29; 17:11;* யூதா *24, 25;* ஏசாயா *63:9*).

இ. தேவன் 'சேர்த்துக்கொண்டது'. இது புத்திர சுவிகாரத்தின் கிரியை. அவர்களைத் தமக்குச் சொந்த மாக்கிச் சேர்த்துக்கொண்டு தம்முடைய ஜனங்களாகவும் பிள்ளைகளாகவும் நேசித்தும் நடத்தியும் வந்தார் (ஏசாயா *63:16;* உபா. *4:20, 34*). மெய்க் கிறிஸ்தவர்களுக்குக் கிடைத்த சிலாக்கியம். அதிலும் மிகவும் பெரிது (ரோமர் *8:15-17; 1* யோவான் *3:1, 2; 1* பேதுரு *2:9*).

இம்மூவகையான பெரிய நன்மைகளைப்பெற்ற ஜனங்கள் மகாதயாபரராகிய தங்கள் இரட்சிப்பின் கர்த்தருக்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்து நடப்பது நியாயமும் அவசியமுமாமே.

*2.* **தெய்வீக அதிகாரத்தை விளக்கிக் காட்டுவது.** வச. *5, 6:*

**அவர்களுடைய கடமை.**

அ. கேட்பது. "என் வாக்கை உள்ளபடி கேட்டு," மீட்கப்பட்டவர்கள் தங்கள் ஆண்டவரின் சத்தத்தைக் கேட்பதும் அவருடைய வசனத்தைக் கற்றறிந்துகொள்வதும் அவசியம். நீதி. *8:34;* யோவான் *6:63; 10:27; 2* தீமோ, *3:14-17*).

ஆ. கைக்கொள்வது ''என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால்.'' மீட்கப்பட்டவர்களுக்குக் கீழ்ப்படிதலே அழகு (லூக்கா 6:46; ரோமர் 6:16; 1 பேதுரு 1:2, 14-16).

**தேவனுடைய கிருபை:** கீழ்ப்படிகிறவர்களுக்கு நல்ல வாக்குத்தத்தங்களை அருளுகிறார்.

அ. 'எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்.' மல். 3:17. மூலபதத்துக்கு 'வைப்பு' என்றர்த்தம். கர்த்தர் தமக்கென்று சேர்த்துவைத்த பொக்கிஷம். 'பூமி எல்லாம் என்னுடையது. என் வைப்புப் பொக்கிஷமோ நீங்களே' என்கிறார்.

ஆ. 'எனக்கு ஆசாரிய இராஜ்யமுமாயிருப்பீர்கள்.' அதாவது ஆசாரியரும் இராஜாக்களுமாயிருப்பீர்கள் என்பது கருத்து. (1 பேதுரு 2:9; வெளி. 1:6; 5:10).

இ. 'எனக்குப் பரிசுத்தஜாதியுமாயிருப்பீர்கள்.' அதாவது தேவனுக்கென்று பிரித்துப் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஜனமாயிருப்பீர்கள் (1 பேதுரு 2:9; 2 கொரி. 6:17, 18).

இவற்றின் முதலாம் பெயர் அவர்களுடைய அருமையையும், இரண்டாம் பெயர் அவர்களுடைய வேலையையும், மூன்றாம் பெயர் அவர்களுடைய தன்மையையும் குறிக்கின்றது எனலாம்.

**3. தெய்வீக அதிகாரத்தை ஏற்றுக்கொள்வது.** வச. 7, 8:

'கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்யலாம்.' உண்மையோடே வாக்குக் கொடுத்தார்கள். ஆனாலும் பழைய உடன்படிக்கையை நிறைவேற்றத்தக்க பெலன் அவர்களுக்கு இல்லாமையினாலே அதி சிக்கிரத்தில் தவறிப்போனார்கள்.

நம்முடைய காரியமோ வேறு (எபி. 8:8-13; 2 கொரி. 5:14, 15; யோவான் 14:6, 7).

இரட்சகர் இயேசுவினுடைய மெதுவான நுகத்தை நாம் மனதார ஏற்றுக்கொள்வதே மெய்சுயாதீனம் (மத். *11:29, 30*).

II. **தகுந்த ஆயத்தம்.** *வச. 10-15.*

*'ஆயத்தப்பட்டிருக்கக்கடவர்கள்.' வச. 11. 'ஆயத்தப் பட்டிருங்கள்.' வச. 15.*

தகுந்த ஆயத்தத்தோடே கர்த்தரை அண்டிக்கொள்வதும், அவரோடு உடன்படிக்கை செய்வதும் அவசியம் *(எபி. 12:25).*

'சேனைகளின் கர்த்தர்' பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்.

இங்கே

*அ. இடத்தின் பரிசுத்தமும், வச. 12, 13, 23.*

*ஆ. ஜீவியத்தின் பரிசுத்தமும், வச. 10, 14, 22.*

*இ. வஸ்திரத்தின் பரிசுத்தமும் (வச. 10, 14) மிகவும் முக்கியமானது.*

'பரிசுத்தப்படுத்து' என்ற கட்டளையின் சத்தம் தொனித்துக் கொண்டிருந்தது *(வச. 10, 14, 22, 23).*

பரிசுத்தமுள்ள ஆசாரியர்கள் முதலாய் இன்னும் தங்களைப் பரிசுத்தப்படுத்திக்கொள்ள வேண்டியதிருந்தது *(வச. 22).*

புதிய உடன்படிக்கைக்குட்பட்ட நாம் இரட்சகருடைய உத்தரவாத புண்ணியங்களின் மூலமாய் உயிருள்ள விசுவாசத்தோடும் மிகுந்த தைரியத்தோடும் தேவ சந்நிதானத்தில் தாராளமாய்ச் சேரத்தக்க சிலாக்கியம் பெற்றவர்களானாலும் *(எபி. 10:19-22)* மேற்சொல்லிய மூவகையான பரிசுத்தத்தை உணர்ந்து சேருவது அவசியம். இடம், வெளி. *4:8-11;* ஜீவியம், *1* பேதுரு *1:15;* வஸ்திரம், வெளி. *7:14; 19:8.* சங். *5:3;* யோவான் *17:1.*

III. **தேவ சந்நிதானம்.** *வச. 16-25.*

***1. அது பயங்கரமானது.*** *வச. 16: 'ஜனங்கள் எல்லாரும் நடுங்கினார்கள்' மின்னல்களும் கார்மேகமும் பயங்கரமான காட்சிகள். இடி முழக்கங்களும் எக்காள சத்தமும் பயங்கரமான சத்தங்கள்.*

***2. அது மகிமையுள்ளது.*** *வச. 17-20: 'அக்கினி' 'புகை' 'அதிர்ச்சி'.*

***3. அது பரிசுத்தமுள்ளது.*** *வச. 21-25; அதை உணர்த்தும்படி எச்சரிப்பின்மேல் எச்சரிப்பு நடந்தது (சங். 99:3, 5, 9).*

*இந்த வாக்கியங்களோடு எபி. 12:18-24ஐ ஒத்துப் பார்க்கையில் நமக்கு அருளப்பட்ட சிலாக்கியங்கள் எவ்வளவு மேன்மையுள்ளவைகள் என்று அறியலாம்.*

| | பழைய உடன்படிக்கை | புதிய உடன்படிக்கை |
|---|---|---|
| 1. மலை | சீனாய்மலை | சியோன்மலை. எபி.12:22. |
| 2. இடம் | தொடக்கூடியது. எபி. 12:18. (பூமிக்குரியது) | பரம எருசலேம். எபி. 12:22. (ஆவிக்குரியது) |
| 3. சபை | பயந்து நடுங்கின சபை. எபி. 12:19, 20. | பாக்கியமுள்ள சபை. எபி. 12:23. |
| 4. மத்தியஸ்தர் | மோசே. எபி. 12:21. | இயேசுவானவர் எபி. 12:24. |
| 5. சத்தம் | பயங்கரசத்தம். எபி. 12:19. | தயாளசித்தம். எபி. 12:24. திருரத்தம் பேசுகிற சத்தம். |

*என்றாலும் சுவிசேஷ சிலாக்கியங்களைப் பெற்றவர்கள் துணிகர பாவம் செய்யாதபடி புதிய உடன்படிக்கையிலும் எச்சரிப்பு உண்டு (எபி. 12:25) அதிர்ச்சியும் உண்டு. எபி. 12:26, 27; பயபக்தியும் உண்டு, எபி. 12:29; அக்கினியும் உண்டு. எபி. 12:29.*

**கேள்விகள்:**

*1. ஜனங்கள் தங்களை அவ்வளவு அதிகமாய்ச் சத்தப்படுத்த வேண்டியதின் அவசியமென்ன? அதினால் அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியதென்ன? நாமும் அதே காரியத்தைக் கற்றுக்கொடுப்பது அவசியமா?*

*2. இவ்வதிகாரத்தில் மோசே மூன்று தடவை பரிசுத்தமலையில் ஏறி இறங்கினதாகக் கவனிக்க.*

*அ. ஏறுதல். வச. 3-6, இறங்கி ஜனங்களுக்குப் பாடம் கற்றுக்கொடுத்தல் (வச. 7, 8).*

*ஆ. ஏறுதல். வச. 8-13, இறங்கிப் பாடம் கற்றுக்கொடுத்தல். வச. 14-19.*

*இ. ஏறுதல். வச. 20-24. இறங்கிப் பாடம் கற்றுக்கொடுத்தல். வச. 25.*

*மோசே இறங்கிவந்து ஜனங்களுக்குக் கற்றுக்கொடுத்த மூன்று பாடங்கள் எவை?*

*3. வச. 22, 24. இவ்வாசாரியர் யார்? ஆரோனும் அவன் குமாரரும் இன்னும் ஆசாரியராக ஏற்படுத்தப்படவில்லை.*

# 20ஆம் அதிகாரம்

## நீதிப்பிரமாணத்தைக் கற்றுக்கொள்ளுதல்

**கவனிப்பு** *: மீட்கப்பட்ட ஜனங்கள் கர்த்தருடைய திருச்சித்தத்தை அறிந்துகொண்டு அதன்படி கீழ்ப்படிந்து நடப்பது அவசியம்.*

I. **பத்து கற்பனைகள்.** *வச 1-17:*

*தேவ ஆளுகைக்கு ஆதாரம் மீட்பின் செய்கை. வச. 2; 19:4. நம்மை இரட்சித்தவர் நம்மை ஆண்டு நடத்துவது நியாயம்.*

**1. தேவனைப்பற்றினது.** *வச. 2-11.*

அ. 'அவருடைய தேவத்துவம்'. *வச. 3.* அவர் ஒருவரே தேவன். தனிக் கடவுள், தனியாட்சி செய்பவர். வழிபாடும் வணக்கமும் அவருக்கே உரியன. *மத். 3:10.*

ஆ. 'அவருடைய வணக்கம்' *வச. 4-6.* ஆவிக்குரிய வணக்கம்; அன்போடு கூடிய வணக்கம். *வச. 6;* ஆசீர்வாதத்தை வருவிக்கும் வணக்கம் (*வச. 6:* யோவான் *4:24;* எசே. *14:3, 4;* யாக். *4:4*).

இ. 'அவருடைய நாமம்' *வச. 7,* மகத்துவநாமம். பரிசுத்தநாமம் பக்தி ஒழுக்கத்தோடே தொழவும் சொல்லவும் துதிக்கவும் தக்க தெய்வீக நாமம் (மத். *6:9;* வெளி. *4:8; 15:3, 4*).

ஈ. 'அவருடைய நாள்' *வச. 8-11;* கர்த்தருடைய ஓய்வு நாள். எபி. *4:4-9;* ஆசீர்வாதம் பெற்றதும் பரிசுத்த மாக்கப்பட்டதுமான நாள். *வச. 11;* தேவகிருபையை நிச்சயித்துக்காட்டும் நாள். எசே. *20:12;* மனமகிழ்ச்சியின் நாள் (ஏசாயா *58:13*).

இந்நான்கு கற்பனைகளின் சுருக்கம் என்னவெனில் ''உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுமனதோடும் அன்பு கூறுவாயாக'' என்பதே மத். *23:37.*

இதற்கு 'முதலாம் பிரதான கற்பனை' என்று பெயர்.

**2. பிறரைப்பற்றினது.** *வச. 12-17:*

அ. பெற்றோரை (பெரியோரை) அவமதிக்காமை. *வச. 12;* எபே. *6:1-3;* எபி. *13:17.*

ஆ. 'பிறர் ஜீவனைக் கொல்லாமை' *வச. 13;* மத். *5:21-26.*

இ. பிறர் இல்லறத்தைக் கெடுக்காமை . வச. *14;* மத். *5:27-32.*

ஈ. 'பிறர் சொத்தைக் களவு செய்யாமை . வச. *15;* மத். *5:38-42.*

உ. 'பிறர் நியாயத்தைப் புரட்டாமை . வச. *16;* மத். *5:33-37.*

ஊ. 'பிறர் பொருள்களை இச்சியாமை . வச. *17.*

*5*ஆம், *8*ஆம் கற்பனைகள் கிரியைகளுக்கடுத்ததென்றும், *9*ஆம் கற்பனை வார்த்தைகளுக்கடுத்ததென்றும் *10*ஆம் கற்பனை சிந்தனைக்கடுத்ததென்றும் சொல்வதுண்டு. ஆகிலும் கிறிஸ்து நாதர் சொன்ன வியாக்கியானத்தின்படி இக்கற்பனைகள் ஒவ்வொன்றும் மன சொல் காயங்களுக்கு அடுத்ததென்றறிக.

இவ்வாறு கற்பனைகளின் சுருக்கம் என்னவெனில்: "உன்னிடத்தில் நீ அன்பு கூறுவதுபோல பிறரிடத்திலும் அன்பு கூறுவாயாக" என்பதே (மத். *22:39*).

இந்த பத்துக் கற்பனைகள் ஒவ்வொன்றையும் தராசாகக் கொண்டு நமதாண்டவர் கற்பித்த பிரகாரம் நம்மை நாமே நிறுத்திப் பார்த்தால் (மத். *5:20*), நாம் குறையக் காணப்படுவது நிச்சயம் (ரோமர் *7:7-10*).

II. **பெரிய கலக்கம்.** வச *18-21:*

நியாயப்பிரமாணத்தினாலே மனக்கலக்கமும், நடுக்கமும் பாவ உணர்ச்சியும் உண்டாக வேண்டியது நியாயம். (ரோமர் *7:12, 13;* எபி. *12:18-21*).

*1.* 'தேவனுடைய பரிசுத்தத்தை உணர்ந்தார்கள்'. வச. *18, 19.*

*2.* தங்களுடைய பாவத்தை உணர்ந்தார்கள்' வச. *18, 21;* 'தூரத்தில் நின்றார்கள்', (லூக்கா *5:8; 18:13*).

*3.* 'மத்தியஸ்தர் வேண்டும் என்று உணர்ந்தார்கள்'. *(வச. 19; உபா. 18:16-18).*

அதைப்போல நாமும் கர்த்தருடைய பரிசுத்தத்தையும் நம்முடைய பாவத்தையும் நன்குணர்ந்து கிறிஸ்து இரட்சகரை நம்முடைய மத்தியஸ்தராகப் பற்றிக்கொள்ள வேண்டியது அவசியம் *(1 தீமோ. 2:5; எபே. 2:18).*

III. **பலிபீடம்.** *வச 22-24:*

நியாயப்பிரமாணத்தினாலே பயமும் உணர்வும் அடைந்த பாவிகளுக்குப் பலிபீட விசேஷங்கள் உடனே இங்குரைக்கப்படுவது தகுதியும் அவசியமுமாமே.

'இரத்தஞ் சிந்துதலில்லாமல் மன்னிப்புண்டாகாது' *(எபி. 9:22).*

ஆகவே, இவ்வதிகாரத்தின் போதனை எல்லாம் 'நியாயப்பிரமாணம்,' 'பாவபயம்,' 'பலிபீடம்' ஆகிய இம் மூன்று வார்த்தைகளில் அடங்கினதெனக்காண்க.

**கவனிப்பு:** *24:3-8*ஐக் கவனிக்கையில் கர்த்தர் அருளின பற்பல கட்டளைகளை மோசே ஒரு புஸ்தகத்தில் எழுதி அதற்கு 'உடன்படிக்கையின் புஸ்தகம்' என்று பெயரிட்டான் என்று பார்க்கிறோம். *20:22, 23, 33.* அந்த உடன்படிக்கையின் புஸ்தகத்தில் எழுதப்பட்டதென்று தோன்றுகிறது. அதின் போதனையை இங்கே சுருக்கமாக மாத்திரம் எடுத்துரைப்போம். அவைகளெல்லாம் நடக்கையைப் பற்றியது.

**கேள்விகள்:**

*1.* ஒவ்வொரு கற்பனையையும் எடுத்து அதற்குச் சம்பந்தமான புதிய ஏற்பாட்டு வசனங்களைக் கண்டுபிடித்து எழுதுக. பிறகு கற்பனையையும் வசனங்களையும் படித்துக் கற்பனை வசனங்களினால்

கருத்தில் குறைக்கப்படுகிறதோ, மாற்றப்படுகிறதோ, பலப்படுத்தப்படுகிறதோ என்று யோசித்து எழுதுக.

*2. 2ஆம் கற்பனையைத் தொட்டு நமது ஆராதனைக்கு உதவியாக எதுமட்டும் கிறிஸ்துவின் படங்களை உபயோகிப்பது சரியாயிருக்கும் என்று யோசிக்கிறீர்?*

*3. கிறிஸ்தவர்கள் ஏழாம் நாளையல்ல, முதல் நாளை ஓய்வு நாளாக அனுசரித்து வருகிறார்கள். இதனால் அவர்கள் 4ஆம் கற்பனையை மீறுகிறார்கள் என்று சொல்வதற்கு நியாயமுண்டா?*

*4. இந்தக் கற்பனைகள் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டன. அதினால் அவைகள் மற்ற ஜாதியாருக்குச் சம்பந்தமில்லை என்று சொல்லலாமா?*

*5. ரோமர் 6:14, 15. நாம் "நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல், கிருபைக்குக் கீழ்ப்பட்டிருந்தமையால்" 10 கட்டளைகளுக்கு நம்மேல் அதிகாரமில்லை என்று சொல்லலாமா?*

# 21ஆம் அதிகாரம்

## நீதியோடு நடத்தல்

**கவனிப்பு** : வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்ட தேவபக்தியும் நீதியும் நம்முடைய அனுதின ஜீவியத்திலும் சகல காரியங்களிலும் விளங்கவேண்டும். உதாரணம் : எபேசியர் நிருபத்தின் முதல் 3 அதிகாரங்களில் கிறிஸ்தவர்களுடைய பரம அழைப்பை வெளிப்படுத்தின பின்பு கடைசி 3 அதிகாரங்களிலும் அவ்வழைப்புக்கேற்ற நடக்கையை விவரித்துக் காட்டியிருக்கிறது.

I. **வீட்டிலும் நம்முடைய நீதி விளங்கவேண்டும்.** வச. *1-11.*

வேலைக்காரரை நடத்தும் விதங்கள் முதலியன (எபே. *6:9;* கொலோ. *4:1).*

இந்தப்பாகத்தில் விடுதலை என்பது முக்கியம். வச. *2, 5, 7, 11.* அதிலே,

*1.* விடுதலையின் பிரமாணத்தை அனுசரிப்பது வச. *2-4.* நீயும் அடிமையாயிருந்து விடுதலை அடைந்தவனே உபா. *15:15.*

*2.* 'அன்பு பாராட்டுவது வச. *5, 6:* மற்றபடி வேலைக்காரன் என் எஜமானை நேசிக்கிறேன்' என்று சொல்லமாட்டான். வச. *5.*

*3.* 'நீதி செய்வது,' வச. *7-11:* அநியாயம் எவ்விதத்திலும் ஆகாததே. கொலோ. *4:1.*

**கவனிப்பு :** வச. *5, 6*இல் அடங்கின காரியம் இரட்சகருடைய மெய்யடியார் பரம எஜமானுடைய திருச் சித்தத்துக்கு தங்களை முற்றிலும் ஒப்புக்கொடுப்பதை உதாரணப்படுத்துகிறதெனலாம் (மத். *11:29, 30;* ரோமர் *12:1, 2).*

அ. 'கதவு' என்பது தேவனுடைய சித்தத்தைக் குறிப்பிட்டுக் காட்டலாம். அடிமைக்கும் சுயசித்த ஜீவியத்துக்கும் நடுவில் அந்தக் கதவு நின்று அவனைத் தடுப்பது போலும்.

ஆ. 'காது' என்பது நம்முடைய சுயசித்தத்தைக் குறிப்பிட்டுக் காட்டலாம். காதினாலே எஜமானுடைய வார்த்தையைக் கேட்டு கீழ்ப்படிகிறோம்.

இ. 'கம்பி' என்பது இரட்சகருடைய அன்பை உணர்த்திக் காட்டலாம். அதினாலேதான் நம்மைக் கட்டுப்படுத்துகிறார் (2 கொரி. *5:14).*

ஈ. 'குத்து' என்பது தேவ சித்தத்தோடு நம்முடைய சித்தத்தை இணைத்துச் சேர்க்கும் செய்கையைக் காட்டலாம். *(கலா. 6:17).*

'என் எஜமானை நேசிக்கிறேன், நான் விடுதலை பெற்றுப்போக மனதில்லை.'

*ஆ! ஏஜமானே! கதவில்*
*என் காதைக் குத்துவீராகில்*
*சுயாதீனம் சற்றும் விரும்பேன்*
*உம்மிடம் தங்கிச் சேவிப்பேன்.*

II. **ஊரிலும் நம்முடைய நீதி விளங்கவேண்டும்.** *வச. 12-27.*

*பிறர், அயலகத்தார் முதலியவருக்கடுத்த காரியங்கள். 'கொலை,' வச. 13; 'அடி,' 15, 18, 19, 20, 22, 26, 27; 'திருட்டு' வச. 16; 'சண்டை' வச. 18, 22; 'சபித்தல்,' வச. 17 முதலியன ஆகாதவைகள். எபே. 4:26-30.*

III. ***காட்டிலும் நம்முடைய நீதி விளங்கவேண்டும்.*** *வச. 26-36.*

*1. 'மாட்டு விஷயங்களிலும்,' வச. 28-32, 35, 36.*

*2. 'நில விஷயங்களிலும்.' வச. 23, 34; தோட்டம், குழி. முதலியவற்றில் நீதி விளங்கவேண்டும் (சங். 11:7).*

**கேள்விகள் :**

*1. சாதாரண அடிமைத்தனத்திற்கு இவ்வதிகாரத்தில் சொல்லப்படுகிற அடிமைத்தனத்திற்குமுள்ள வேற்றுமைகள் என்னென்ன?*

*2. அடிமைத்தனத்தைப்பற்றிய இந்த விதிகள் வேத புஸ்தகத்திலிருக்கிறபடியால், கிறிஸ்தவர்கள் இக்காலத்தில் அடிமைகளை வைத்துக்கொள்ள நியாயமுண்டோ?*

*3.* கிறிஸ்து மனிதர் நிமித்தமாக *அடிமையானார்* என்று சொல்லப்படுகிறது எப்படி? ஏசாயா *50:5;* சங். *40:6-8;* எபி. *10:5-7;* பிலி. *2:7* இவ்வசனங்களைப் பார்க்க.

*4.* வச. *14.* பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக் கொண்ட ஒருவன் இந்த நியாய விதியின்படி கொலை செய்யப்பட்டான். அவன் யார்?

# 22ஆம் அதிகாரம்

## பரிசுத்தமாய் நடத்தல்

*மீட்கப்பட்ட ஜனங்களில்:*

I. **உத்தமம் விளங்கவேண்டும்.** வச. *1-15.*

**கவனிப்பு:** ஆடு, மாடு வச. *1:* கழுதை, வச. *4:* வயல், திராட்சத் தோட்டம், வச. *5;* தானியப்போர், பயிர் வச. *6;* திரவியம், வச. *7;* பொருள், வச. *8, 11;* வஸ்திரம், வச. *9;* இரவல், வச. *14;* வாடகை, வச. *15;* முதலான சகல காரியங்களிலும் நம்முடைய உத்தமம் விளங்குவது அவசியம்.

*1.* **பதில் கொடுப்பது.** வச. *1-5:*

திருடன் தான் செய்த அநியாயங்களுக்குப் பதில் செலுத்த வேண்டும். சிலவற்றிற்கு இரட்டிப்பாய்க் கொடுக்கவேண்டும். வச. *4, 7, 9.* சிலவற்றிற்கு நாலத்தனை யாய்க் கொடுக்கவேண்டும். வச. *1.* சிலவற்றிற்கு ஐந்தத் தனையாய்க் கொடுக்கவேண்டும். வச. *1.* உதாரணம். சகேயு. லூக்கா *19:8.*

நியாயப்பிரமாணத்தின் கீழ் அப்படிப் பதில் செலுத்துவது கட்டாயமென்றால் சுவிசேஷத்துக்குக் குட்பட்டவர்கள் தங்கள் மனந்திரும்புதலுக்கு அத்தாட்சி யாக மனதார அப்படிச் செய்வது அதிக அவசியமல்லவா? மத். *5:19, 20.*

*2. உத்தரவாதம் பண்ணுவது.* வச. *6-15:*

அ. தன் கவனக்குறைவினாலுண்டான நஷ்டத்துக்கும், வச. *6.*

ஆ. தன் வசத்திலிருந்து திருடப்பட்டுப்போனதற்கும், வச. *7-13.*

இ. தான் இரவலாக வாங்கிக் கொண்டதற்கும், வச. *14, 15.*

பிறருக்கடுத்த காரியங்களில் நாம் கவலையோடும், கவனக்குறைவோடுமிருக்கலாகாது (ரோமர் *13:9, 10;* பிலி. *2:4).*

II. **ஒழுக்கம் விளங்கவேண்டும்.** வச. *16-20.*

விக்கிரகாராதனைகளும் மாம்ச ஆசாபாசங்களும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவைகள். (ரோமர் *1:21-27;* எபே. *4:17-19).*

III. **இரக்கம் விளங்கவேண்டும்.** வச. *21-27.*

*1. யாருக்கு இரக்கங்காட்டுவது?*

அன்னியனுக்கும் வச. *21;* உதா. லூக்கா *10:29-37;* விதவைக்கும் வச. *22;* உதா. லூக்கா *7:11-16;* திக்கற்ற பிள்ளைக்கும் வச. *22.* உதா. மத். *18:1-14;* சிறுமைப் பட்டவனுக்கும் வச. *25;* உதா. லூக்கா *7:40-43.*

*2. ஏன் இரக்கங்காட்டுவது?*

தேவன் இரக்கமுள்ளவராயிருப்பதாலும், வச. *27.* மத். *5:7, 44-48;* நாமும் இரக்கம் பெற்றிருப்பதாலும், *21:* *1* தீமோ. *1:13-16;* முறையிடுவோரைக் கர்த்தர் கேட்பதாலும். வச. *23, 27;* யாக். *5:4;* லூக்கா *18:1-8;* இரக்கமற்றவர்கள் தேவதண்டனைக்குள்ளாவதினாலும், வச. *23, 24;* மத். *18:23-35.*

***கவனிப்பு*** : வேலை வாங்கும் காரியத்திலும் வச. 21-24, வட்டிவாங்கும் காரியத்திலும் வச. 25, ஈடு வாங்கும் காரியத்திலும் வச. 26, 27 இரக்கம் பாராட்டவேண்டும்.

IV. ***பரிசுத்தம் விளங்கவேண்டும்.*** வச. 28-31.

''நீங்கள் எனக்குப் பரிசுத்த மனுஷராயிருக்கக் கடவீர்கள்.'' தாழ்மை, வச. 28. உண்மை, வச. 29, 30 தூய்மை, வச. 31.

**வேறுவிதம் :**

கர்த்தருடைய ஊழியக்காரரை கனம்பண்ணுவது. வச. 28. கர்த்தருக்குரிய காணிக்கைகளைச் செலுத்துவது வச. 29, 30. கர்த்தருக்குரிய பலியின் இரத்தத்தை மதிப்பது. வச. 31.

**கேள்விகள்:**

1. இவ்வதிகாரத்தில் அடங்கியிருக்கிற விதிகளை ஒவ்வொன்றாய் எடுத்து நமது தேசத்தில் அவைகளுக்கடுத்த பழக்க வழக்கங்களை எழுதுக.

2. பதில் செலுத்துவதைப்பற்றி இவ்வதிகாரம் சொல்வதெல்லாவற்றையும் எழுதுக. ஒருவருக்கு விரோதமாய் ஒருவர் செய்யும் குற்றங்களில் அறிக்கையிடுவதும் மன்னிப்புக் கேட்பதும் போதாதென்று காட்டுக.

3. மத்தேயு 7:12இல் சொல்லப்படுகிற பிரமாணத்தை இவ்வதிகாரத்திலடங்கிய பிரமாணங்களைக் கொண்டு உதாரணப்படுத்துக.

# 23ஆம் அதிகாரம்

## கவனமாய் நடத்தல்

*(வச. 13.)*

I. ***பொய்யை வெறுப்பது.*** *வச. 1-8.*

***கவனிப்பு:*** *பொய்யும் உண்மைத்தப்பும் தேவபக்தியை முற்றிலும் கெடுத்துப்போடும். மத். 16:6.*

***1. பொய் வேண்டாம்.*** *வச. 1: பொய்ப்பேச்சை நம்புவதும், பொய்ச்சாட்சி சொல்வதும், பொய்யரோடு கலந்து கொள்வதும் மீட்கப்பட்ட ஜனங்களுக்கு ஆகாதவைகள் (மத். 5:37; வெளி. 21:8).*

***2. புரட்டு வேண்டாம்.*** *வச. 2, 6: திரள் கூட்டங்களிலும் வழக்குகளிலும் அதிகச் சோதனை உண்டு.*

***3. பகை வேண்டாம்.*** *வச. 4, 5: அது வஞ்சகத்துக்கும் சோதனைக்கும் காரணமாகும்.*

***4. பித்தலாட்டம் வேண்டாம்.*** *வச. 7: 'கள்ளக் காரியத்துக்குத் தூரமாயிருப்பாயாக'.*

***5. பட்சபாதம் வேண்டாம்.*** *வச. 6, 7:*

***6. பரிதானம் வேண்டாம். வச. 8.*** *இந்தக் கட்டளை நமக்கும் ஏற்றது.*

II. ***ஓய்ந்திருப்பது.*** *வச. 10-12, ஓய்வுவருடம், வச. 10, 11. ஓய்வு நாள், வச. 12.*

*இவ்வாறு இளைப்பாறுவது நிலத்துக்கும் (வச. 11), ஏளியவனுக்கும் (வச. 11). மாடு, கழுதைகளுக்கும் வச. 12), அடிமைகளுக்கும் (வச. 12), அந்நியருக்கும் (வச. 12), நமக்கும் (வச. 12) அவசியமானது.*

ஓய்வு நாளை மீறுவது நம்முடைய சபைகளில் மிகவும் பாவம். அது கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பலமாய்த் தடுக்கிறது (*எசாயா 56:2, 4, 6, 7*).

தேவ சமாதானம் பெற்று ஜீவிப்பது மெய் வாழ்வு என்றும், கவனித்துக் கொள்க (*எபி. 4:1-11*).

III. **கர்த்தரைச் சேவிப்பது.** வச. *13-19.*

*1.* **முழுவதுமாய் அவரைப் பற்றிக்கொள்ளுதல்.** வச. *13.*

2. **மூன்று பண்டிகைகளைக் கொண்டாடுதல்.** வச. *14-17.*

**அ. புளிப்பில்லா அப்பப் பண்டிகை.** வச. *15:* அதாவது பஸ்காப் பண்டிகை. இது மீட்பின் பண்டிகை எனலாம். இது கிறிஸ்து உயிர்த்தியாகம் செய்த நாளிலே நிறைவேறியது (*1 கொரி. 5:6-8*).

**ஆ. அறுப்புக் காலப் பண்டிகை.** வச. *16:* அதாவது வாரங்களின் (பெந்தேகொஸ்தே) பண்டிகை. இதுமுதல் பலன்களின் பண்டிகை எனலாம். இது பெந்தெகோஸ்தே திருநாளிலே நிறைவேறியது (*அப். 2:41*).

**இ. சேர்ப்புக் காலப் பண்டிகை.** வச. *16:* அதாவது கூடாரப் பண்டிகை. இது முழு அறுப்பின் பண்டிகை எனலாம். இது இன்னும் நிறைவேறவில்லை. கிறிஸ்து நாதர் மகிமையோடு வரும்பொழுது மாத்திரம் நிறைவேறும் (*வெளி. 14:14-16*).

**கவனிப்பு:** கீழ்ப்படிதலும் நன்றியறிதலும் அவசியம் (*வச. 18, 19*).

IV. **கர்த்தரை சேவிப்பது** வச. *13-19.*

**கவனிப்பு:** 'உனக்கு முன்' என்பதும், 'உன் முன்னின்று' என்பதும் திரும்பத் திரும்ப இந்த வசனங்களில் வருகின்றன.

*1. உடன்படிக்கையின் தூதனாவார்:*

*அ. முன்னே போகிறார். வச. 20, 23, 27-31; யோவான் 10:3, 4.*

*ஆ. வழியில் காத்து வருகிறார். வச. 20, யோவான் 10:28-30.*

*இ. நடத்திக்கொண்டுபோகிறார். வச. 23; மத். 28:20.*

*ஈ. ஆதரித்தும் ஆசிர்வதித்தும் வருகிறார். வச. 25, 26; அப்பம், தண்ணீர், வியாதியில்லாமை, யோவான் 6:35; 1:16.*

*உ. சத்துருக்களைத் துரத்திவிடுகிறார். வச. 26, 31; ரோமர் 16:14; 8:37.*

*ஊ. பூரண ஜெயத்தை அருளுகிறார். வச. 27, 31; ரோமர் 6:14; 8:37.*

*எ. நல்ல சுதந்தரத்தைக் கொடுக்கிறார். வச. 20, 30 31; யோவான் 14:27; 17:22, 24.*

*2. மீட்கப்பட்ட சபையார்.*

*அ. பயபக்தியோடே நடத்தல். வச. 21.*

*ஆ. பூரண கீழ்ப்படிதல். வச. 22.*

*இ. பாவத்தை வெறுத்தல். வச. 24.*

*ஈ. பரிசுத்தமாய்ச் சேவித்தல். வச. 25.*

*உ. உலகத்தாரை விட்டுப்பிரிதல். வச. 33; 2 கொரி. 6:17, 18.*

**கேள்விகள்:**

*1. வச. 1-9. இவ்வசனங்களில் அடங்கியிருக்கிற விதிகளை ஒவ்வொன்றாய் எடுத்து நமது தேசத்தின் பழக்க வழக்கங்களை உதாரணங்களை எழுதுக.*

*2. வச. 10-12,* நமது தேசத்து கிறிஸ்தவர்களுக்குள் ஓய்வு நாளை மீறுவதில் எதில் அதிகமாய்க் காணப்படுகிறது.

*3. வச. 13-19.* பண்டிகைகளைக் கொண்டாடுவது கிறிஸ்தவர்களுக்கு நல்லதா, கெட்டதா? ஆவிக்குரிய பலனுண்டாகும்படி கிறிஸ்தவர்கள் பண்டிகைகளை எப்படிக் கொண்டாடலாம் என்று யோசிக்கிறீர்?

*4. வச. 20.* 'ஒரு தூதன்' என்பது யாரைக் குறிக்கும்?

# 24ஆம் அதிகாரம்

## தேவனைச் சமீபித்துச் சேருதல்

**கவனிப்பு:** தேவ வெளிப்படுத்துதலை அடையும்படி உலகப்பற்றுகளை விட்டுப்பிரிந்து திரு இரத்தத்தின் மூலமாய்க் கர்த்தரோடு ஐக்கியப்படுவது தீராத அவசியம். இவ்வதிகாரத்தில் 'எது' என்ற வினைச்சொல் அடிக்கடி வருகிறது.

I. **ஜனங்களுடைய சம்மதம்.** *வச. 1-3.*

கர்த்தர் தமது தேவ சித்தத்தை மோசேக்கு வெளிப் படுத்தும்படி கற்பித்தார். சபையின் பிரதிநிதிகளையும் சாட்சிகளாக அழைக்கிறார். வச. 1, 2. ஆகிலும் அதற்குமுன் உடன்படிக்கையின் புஸ்தகத்தில் (வச. 7) எழுதப்பட்ட பிரமாணங்களையெல்லாம் ஜனங்கள் ஏக சம்மதமாய் ஒப்புக்கொண்டு அவற்றின்படி செய்வோமென்று உறுதிவாக்குக் கொடுக்க வேண்டியிருந்தது. வச. 3. கீழ்ப்படிதலே முக்கியம் எனக்கொள்க. வச. 7.

அறிந்த சத்தியத்தின்படி முழுமனதோடே செய்தால் மாத்திரம் தேவன் புது விசேஷங்களை வெளிப்படுத்துவார் (ஏசாயா 1:19, 20; ஆதி. 18:18, 19).

II. **உடன்படிக்கையின் இரத்தம்.** *வச. 4-8.*

***1. பலிபீடம் கட்டுதல்.*** *வச. 4.* **'பலிபீடம்'** கர்த்தருக்கு அடையாளம். **'பன்னிரண்டு தூண்கள்'** இஸ்ரவேலுக்கு அடையாளம். இவ்வாறு உடன்படிக்கை செய்கிற இருபட்சத்தார் அங்கே நிற்பதுபோலிருந்தது.

***2. பலிசெலுத்துதல்.*** *வச. 5:* **'சர்வாங்க தகன பலிகள்'** அந்தச் சபையார் தங்களை முற்றிலும் பிரதிஷ்டை செய்வதை உணர்த்துகிறவைகளாயிருந்தனர் *(ரோமர் 12:1, 2).* **'சமாதான பலிகள்'** தேவ ஐக்கியத்துக்கு அடையாள மாயும் நன்றியறிதலோடுகூடிய ஸ்தோத்திரத்தைக் காட்டுவதாயுமிருந்தன *(எபி. 13:15).*

***3. இரத்தம் தெளித்தல்.*** *வச. 6-8:* பாதி இரத்தம் பலி பீடத்தின்மேல் தெளிக்கப்பட்டது. *வச. 6.* அதாவது அந்தப் பலிபீடம் காட்டுகிற பரிசுத்த கர்த்தருக்கு அது செலுத்தப் பட்டதெனலாம். மீதி இரத்தத்தை ஜனங்கள்மேல் மோசே தெளித்தான்.

இவ்விதமாய் உடன்படிக்கை செய்கிற இருபட்சத்தார் நேரிலும் அந்த இரத்தம் தெளிக்கப்பட்டு, அவர்களை இணைத்து ஐக்கியப்படுத்தினது எனக் காண்க.

மேலும் ஜனங்கள் 'கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து, கீழ்ப்படிந்து நடப்போம்' என்று வாக்குக் கொடுத்த பின்பு மாத்திரம் உடன்படிக்கையின் இரத்தம் அவர்கள் மேல் தெளிக்கப்பட்டதென்றும் நாம் கவனிக்கத்தகும். ஆகவே அவர்கள் கீழ்ப்படிதலுக்கும் இரத்தம் தெளிக்கப்படுதலுக்கும்' தெரிந்து கொள்ளப்பட்டார்கள் என்று பார்க்கிறோம் *(1 பேதுரு. 1:2).*

'புது உடன்படிக்கைக்குரிய இரத்தம்' இன்னதென்று நமக்குத் தெரியுமே.

*கவனிப்பு:-* இஸ்ரவேலருடைய காரியத்தில் இரத்தமானது.

*அ. மீட்பின் இரத்தமாக அவர்களை எகிப்திலிருந்து மீட்டுக்கொண்டு விடுதலையாக்கினது. யாத். 12:13.*

*ஆ. உடன்படிக்கையின் இரத்தமாக அவர்களைத் தேவனோடு சேர்த்துக்கொண்டு ஐக்கியப்படுத்தினது. (யாத். 24:6-8).*

*இ. சுத்திகரிப்பின் இரத்தமாக அவர்களை அனு தினமும் சகல தீட்டுகளுமற, சுத்திகரித்துக்கொண்டே வந்தது (லேவி. அதி. 4-16).*

*அப்படியே மாசற்ற இரட்சகராகிய இயேசுகிறிஸ்து வினுடைய திரு உதிரமானது நம்மை மீட்டுக்கொண்ட இரத்தமாகவும் (1 பேதுரு 1:18, 19) தேவனோடு சேர்த்துக் கொள்ளும் இரத்தமாகவும் (எபே. 2:13), இடைவிடாமல் சுத்திகரித்துக்கொண்டே வருகிற இரத்தமாகவும் (1 யோவான் 1:7) இருக்கிறது.*

தேவ சித்தத்துக்குப் பூரணமாய் கீழ்ப்படிந்து நடக்கும் படி தங்களை ஒப்புக்கொடுக்கும் விசுவாசிகளுக்கு முன்னிராத பிரகாரமாய் அந்தத் திரு இரத்தத்தினாலே இருதய சுத்தாங்கமும் தேவ ஐக்கிய சம்பந்தமும் உண்டாகின்றன.

III. **தேவமகிமையின் தரிசனம்.** வச. *9-11.*

இந்தப்பாகம் 'பின்பு' என்று துவக்குகிறது. கீழ்ப்படிதலுக்கும் இரத்தம் தெளிக்கப்படுதலுக்கும் தங்களை ஒப்புக் கொடுத்தபின்புதான் மேலே ஏறித் தேவனைத் தரிசித்தார்கள். தேவ சித்தத்துக்கு முழுவதுமாய்க் கீழ்ப்படிந்து, இருதய சுத்தமுடையவர்களுக்கு மாத்திரம் தேவ தரிசனமுண்டு. மத். 5:8. கீழ்ப்படியாமையும் பாவமும் அவருடைய திருமுகப்பிரகாசத்தை நமக்கு மறைக்கிறது.

இஸ்ரவேல் மூப்பர்கள் கர்த்தருடைய பாதத்தின்கீழ் வீசின மகிமைப் பிரகாசத்தை மாத்திரம் கண்டு களிகூர்ந்தார்கள். நாமோ 'இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தேவ மகிமையைத் தாராளமாய்க் கண்டு தரிசித்து *(2 கொரி. 4:6).* கண்ணாடிகளைப்போல அதைப் பிரதிபலிக்கச் செய்து, அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம் *(2 கொரி 3:18).* என சொல்லத்தக்க பெரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

எவ்வளவுக்கு அதிகமாய்க் கீழ்ப்படிந்து ஆண்டவருடைய திரு இரத்தத்தால் சுத்திகரிப்படைகிறோமோ அவ்வளவுக்கு அதிகமாய் தேவனுடைய மகிமையைக் கண்டு மறுரூபப்படுவோமெனக் கொள்க.

'பின்பு புசித்துக் குடித்தார்கள்,' என்று சொல்லும் பொழுது *(வச. 11)* தேவனுடைய சந்நிதானத்தில் சமாதானபலியின் *(வச. 5).* பரிசுத்த போஜனத்தில் பங்கு பெற்றார்கள் என்று நினைக்கத்தக்கது. சமாதான பலியானது நாம் தேவனோடும் அவர் ஜனங்களோடும் பெற்றனுபவிக்கும் தேவ ஒருமைப்பாட்டின் ஐக்கியத்தை உணர்த்தும் பலியாயிருந்தது. *(1 யோவான் 1:7).*

**கவனிப்பு** : சத்திய உபதேச வரிசையை நாம் கவனிப்பது நலம்.

அ. தேவனுடைய அருள் வாக்கியங்களைக் கேட்பது. அதி. *20-23.*

ஆ. 'பின்பு' *24:1.* பூரண கீழ்ப்படிதலைக்காட்டி விசேஷித்த சுத்திகரிப்பு அடைவது. வச. *3-8.*

இ. 'பின்பு' வச. *9.* தேவ மகிமையைப் புதிது புதிதாய்க் கண்டு களிப்பது. வச. *9, 10.*

ஈ. 'பின்பு' வச. 11. பரிசுத்த ஐக்கியமும் திருப்திகரமும் பெற்று அனுபவிப்பது. வச. 11.

IV. **வெளிப்படுத்தலின் பர்வதம்.** வச. 12-18.

'என்னிடத்திற்கு ஏறிவந்து, 'இங்கே இரு' என்ற தேவ சத்தம் மோசேக்குண்டானது. கர்த்தருடைய மகிமைப் பிரகாசம் மற்றவர்களுக்கு பட்சிக்கிற அக்கினியாய்த் தோன்றினாலும் (வச. 17). அந்தப் பக்தன் அந்த மகிமையுள்ள மேகத்தின் நடுவிலே ஏறிப்போய் நின்று பரம இரகசியங்களைக் கேட்டறிந்து கொண்டான். 2 கொரி. 12:3, 4. அங்கேதான் பரிசுத்த கர்த்தர் தமது பரமசித்தத்தை வெளிப்படுத்தி வாசஸ்தலத்தின் சிறந்த மாதிரியை விரித்துக் காண்பித்தார்.

**கவனிப்பு :** மோசே என்பவன் அடிக்கடி மலையின் மேல் ஏறிப்போன தேவதாசன். மலையின் மேலிருக்கும் போதே.

அ. தேவனுடைய திருச்சித்தத்தை உணர்ந்து நீதிப் பிரமாணத்தைப் பெற்றுக்கொண்டான் அதி. 19.

ஆ. தேவனுடைய இரகசியங்களைக் கேட்டு வாசஸ்தலத்தின் மாதிரியைப் பெற்றுக்கொண்டான். 24:18.

இ. தேவனுடைய மகிமையைக்கண்டு மறுரூபமானான். அதி. 34.

ஈ. தேவன் காண்பித்த தேசத்தைக் கண்டு பரவசமானான். உபா. 34.

தேவ ஐக்கியம் என்னும் மலையின்மேல் நாமும் தேவனுடைய திருவுளச் சித்தத்தையும் பரம இரகசியங்களையும் ஞான சுதந்திர பாக்கியத்தையும் கண்டுணர்வதுமன்றி, மறுரூபமாகி, இன்னும் ஆனந்த ஆசீர்வாதங்களையும் பெற்றனுபவிக்கலாம்.

**கேள்விகள்:**

*1.* இவ்வதிகாரத்தில் ஏறு என்ற பதம் அடிக்கடி வருகிறபடியால் மோசே ஏழு தடவை சீனாய் மலையை ஏறினதாகக் கவனிக்க.

| | |
|---|---|
| *1. ஏறுதல்—19:3* | *இறங்குதல்— 19:7.* |
| *2. ஏறுதல்—19:8* | *இறங்குதல்— 19:14.* |
| *3. ஏறுதல்—19:20* | *இறங்குதல்— 19:25.* |
| *4. ஏறுதல்—20:21* | *இறங்குதல்— 24:3.* |
| *5. ஏறுதல்—24:9* | *இறங்குதல்— 32:15.* |
| *6. ஏறுதல்—32:31* | *இறங்குதல்—32:34.* |
| *7. ஏறுதல்—34:4* | *இறங்குதல்—34:29.* |

மோசே மலையிலிருந்து இறங்கின ஒவ்வொரு சமயத்திலும் கர்த்தரிடமிருந்து ஜனங்களுக்குப் போதித்த போதனையைக் குறிப்பிடுக.

*2.* பின் வருபவர்கள் பரிசுத்த மலையில் எது மட்டும் வந்தார்கள்? என்னென்ன செய்தார்கள்? எவைகளை கண்டார்கள்?

அ. ஜனங்கள்.

ஆ. ஆரோனும் மூப்பரும்.

இ. யோசுவா.

ஈ. மோசே.

*3.* "இஸ்ரவேலின் தேவனை தரிசித்தார்கள்" என்றால் என்ன? வச. *10*ஐயும் அதி. *33:20*ஐயும் ஒருமித்துக் காட்டவும்.

# 25ஆம் அதிகாரம்

## தேவநோக்கம் வெளிப்படுதல்

*கர்த்தர் தாம் மீட்டுக்கொண்ட ஜனங்களின் நடுவிலே வாசம் செய்யச் சித்தங்கொண்டார். சொல்ல வேண்டு மெனில்: அவர்களே தேவனுடைய வாசஸ்தலமானார்கள் (2 கொரி. 6:16; எபே. 2:21, 22; வெளி. 21:3).*

***கவனிப்பு:*** *ஆசரிப்புக் கூடாரமும் அதிலுள்ள பரிசுத்த பொருள்களும் முதலாவதாகக் கிறிஸ்து இரட்சகருக்கு முன்னடையாளங்களாய் இருந்தனவென்பதற்குச் சந்தேகமில்லை (கொலோ. 2:17; எபி. 2:11, 12). ஆகிலும் அவரும் அவர் ஜனங்களும் ஒன்றாயிருப்பதாலும் அநேக வசனங்களில் திருச்சபையானது கர்த்தருடைய ஆலயமாகச் சொல்லப்படுவதாலும் ஆசரிப்பு கூடாரத்தைச் சபையைக் காட்டும் அடையாளமாகப் பேசுவது ஏற்கும். இந்த வாசஸ்தலத்தின் மாதிரி தேவனாலேயே மலையில் அருளப்பட்டதென்பதை நாம் மறந்துவிடலாகாது. இவ்வதிகாரத்தில் பொன்' என்பதும், 'பசும் பொன்' என்பதும் அடிக்கடி வருகிறது. அந்த வார்த்தை மெய் விசுவாசிகளின் அருமையையும் அவர்களில் விளங்க வேண்டிய சுத்தாங்கத்தையும் உணர்த்திக்காட்டுகிறது.*

I. **தேவநோக்கம்.** *வச. 1-9.*

***1. காணிக்கை.*** *வச. 1-7: இங்கே 'காணிக்கை' என்று திருத்தப்பட்ட பதமானது. 'ஏறெடுத்துப் படைக்கும் படைப்பைக்' குறிக்கிறது. வச. 28, 29. கர்த்தருடைய சந்நிதியில் ஒன்றை ஏறெடுத்துக் காட்டி அதை முற்றிலும் பிரதிஷ்டை செய்வதே அதின் கருத்து. இங்கே விவரிக்கப்பட்ட 16 விதமான பொருள்கள் ஆசரிப்புக் கூடாரத்துக்கு உபயோகமானவைகள். ஒருவாறு*

சொன்னால் அவைகளே பிற்பாடு கர்த்தருடைய ஆலயமாயின. கர்த்தருடைய சந்நிதியில் தங்களை முற்றிலும் படைத்துப் பிரதிஷ்டை செய்பவர்களைத்தான் அவர் தம்முடைய அகமும் ஆலயமுமாக ஏற்றுக்கொண்டு அவர்களுடைய இருதயத்தில் வாசம் செய்து வருகிறாரென்றறிக (ரோமர் *12:1; 1* கொரி. *3:16*).

*2.* **கட்டளை.** வச. *8, 9.* 'எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவீர்களாக.' 'மாதிரியின்படி அதைச் செய்வீர்களாக.' கர்த்தருக்கென்று நம்மை நாமே ஒப்புக்கொடுப்பது கடமை. தேவ கட்டளையும் அப்படியே. இது அவனுடைய இஷ்டத்துக்கு விடப்பட்ட காரியமல்ல (ரோமர் *14:7, 8; 2* கொரி. *5:15*). மேலும் நம்முடைய ஜீவியமும் ஊழியமும் நம்முடைய சுய விருப்பத்தின்படியும் ஊக்கத்தின்படியும் செய்யாமல் கர்த்தர் தமது அருள் வேதத்தில் காட்டியிருக்கிற மாதிரியின்படியே செய்ய வேண்டும் (எபே. *2:10;* ரோமர் *8:29; 1* யோவான் *2:6*).

II. **பரிசுத்த வாசஸ்தலம்.** வச. *10-40.*

**கவனிப்பு:** அதின் உள்புறத்தையும் அதிலுள்ள பொருள்களையும் முதலில் காட்டி, பின்பு மாத்திரம் அதின் வெளிப்புறத்தைக் காட்டுகிறார். உள்பக்கந்தான் முக்கியமானதும் அங்கே துவக்குகிறது நியாயம். நம்முடைய உள்ளத்தையே கர்த்தர் அதிகமாய் கவனிக்கிறார் (*1* சாமு. *16:7;* சங். *45:13;* ஏசாயா *59:15;* மத். *23:26*). ஆசரிப்புக் கூடாரத்துக்குள் *4* பொருள்களில் மூன்றை மாத்திரம் இவ்வதிகாரத்தில் காண்பித்து, தூப பீடத்தைப் பின்வைத்து, *30*ஆம் அதிகாரத்தில் அதைக் காண்பிக்கிறார். ஏனென்றால் சுகந்த வாசனைக்கடுத்த காரியங்களையெல்லாம் *30*ஆம் அதிகாரத்தில் ஒருமித்துக் காட்டுகிறார். மற்ற காரியங்களை ஏற்படுத்தின பின்புதான் சுகந்த வாசனை எழும்பக்கூடும்.

***1. உடன்படிக்கைப் பெட்டியும் கிருபாசனமும்.*** *வச. 20-22: இது ஒன்று மாத்திரம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டது. ஆகையால் இது முதலாவது காட்டப்படுவது சிறந்தது. அந்தப் பரிசுத்தப் பெட்டி கர்த்தருடைய பிரசன்னத்துக்கும் வல்லமைக்கும் அடையாளம் என்று சொல்லலாம். 2 நாளா 6:41. அதோடுகூட, அவர் எழுந்தருளி வருகிற விசுவாசியின் இருதயத்தையும் அதற்கு ஒப்பிட்டுப் பேசலாம். அது உள்ளும் புறமும் பொன்மயமாயிருக்கிறது. வச. 11. அப்படியே தேவ கிருபையாகிய பசும் பொன் விசுவாசியின் இருதயத்தில் விளங்கும்.*

*அ. 'அதற்குள்ளே' 'சாட்சிப் பிரமாணம்' என்னப்பட்ட இரண்டு கற்பலகைகள் வைக்கப்பட்டன. கிறிஸ்து நாதருடைய உள்ளத்திற்குள் தேவனுடைய நியாயப் பிரமாணம் இருந்ததுபோல (சங். 40:7, 8; எபி. 10:7, 8) மெய் விசுவாசிகளுடைய இருதயத்திற்குள்ளும் அது இருக்கிறது (எபி. 8:10). நாம் சுயசித்தத்தின்படி நடக்க விரும்பாமல் நம்மை மீட்டு இரட்சித்தவருடைய திருவுளச் சித்தத்தின் படியே நடக்க விரும்புகிறோம். 1 யோவான் 5:3, அவருடைய இராஜரீகப் பிரமாணத்தின்படி நடப்பதே மெய்ச் சுயாதீனம்.*

*ஆ. 'அதின் மேலே' 'கிருபாசனம்' வைக்கப்பட்டது. (மூடியைப்போல). அது முழுவதுமாய்ப் பசும் பொன்னினாலே செய்யப்பட்டது. அது கிறிஸ்து இரட்சகருடைய திருப்புண்ணியத்தைக் காட்டுகிறது. (ரோமர் 3:26இல் கிருபாதாரப் பலி என்று திருப்பின மூல பாஷை வார்த்தை கிருபாசனம் என்றேயிருக்கிறது). அவருடைய புண்ணியம் நம்மை மூடினால்மாத்திரம் தேவன் நம்மில் எழுந்தருளக் கூடும்.*

*இ. 'கேருபீன்கள்' கிருபாசனத்தின் ஓரங்களில் நின்றன. வச. 9. அவைகள் எப்பொழுதும் கர்த்தருடைய*

சந்நிதானத்தில் நின்று அவருடைய பரிசுத்தத்தையும் வல்லமையையும் காத்தாற்போல அவைகளை உணர்த்தியும் பாராட்டியும் வருகிற தெய்வீக ஆவிகள் (ஆதி. 3:24; ஏசாயா 6:1-4; எசே. 1:5-28; வெளி. 4:6-8). 'தங்கள் செட்டைகளை உயர விரித்து நிற்கின்றமையால் (வச. 20). அவைகளுடைய பரம வாஞ்சையும் உற்சாகமும் பெரிதென்றறிக. 'தங்கள் செட்டைகளால் கிருபாசனத்தை மூடுகிறவைகள்' ஆதலால் கிறிஸ்துவின் புண்ணியம் மகா அருமையானது என்று காட்டுகின்றன. 'கேருபீன்களின் முகங்கள் கிருபாசனத்தை நோக்குகிறவைகளாயிருப்பதால்' இரட்சகருடைய புண்ணியத்தையும் திரு இரத்தத்தையும் அதிக அன்போடு பார்க்கின்றன என்று நாம் அறியலாம்.

ஈ. 'தேவனுடைய திருவாக்கு வெகு தெளிவாயிருக்கிறது. வச. 22. 'அங்கே நான் உன்னைச் சந்திப்பேன்...உனக்குக் கற்பிக்கப்போகிறவைகளையெல்லாம் உன்னோடே சொல்லுவேன்' என்கிறார். இவ்வாறு பார்த்தால், மகா பரிசுத்த ஸ்தலத்தில் நின்ற உடன்படிக்கைப் பெட்டியானது மெய் விசுவாசிகள் தேவனோடு அனுபவிக்கும் தெய்வீக ஐக்கியத்தை உணர்த்திக்காட்டுகிறது (யோவான் 14:23; 1 யோவான் 1:3). அங்கே தான் கர்த்தர் பிரசன்னமானார்; தம்மை வெளிப்படுத்தினார்; தம்முடைய திருச்சித்தத்தை அறிவித்தார். நாம் அவருடைய ஜனமும் வாசஸ்தலமுமாயிருப்பது மெய்யானால் அவர் தமது வேதத்தின் மூலமாயும் அனுதினமும் நம்மோடு பேசுவார். நாமும் அவரோடு பேசுவோம். கிறிஸ்தவ ஜீவியத்தில் இந்த தெய்வீக ஐக்கியம்' மகா முக்கியமானது.

2. *தேவ சமுகத்தப்ப மேசை.* வச. 23-30: இதுவும் இதைச் சேர்ந்த தட்டு முட்டுகளும் பொன்மயமாய் விளங்கின. தேவனுடைய கிருபை விசுவாசிகளை தாங்குகிறதென்றறிக.

அ. 'அப்பம்' பூமியின் விளைவிலிருந்து உண்டான ஒருவகையான போஜனம். கோதுமை மணி பூமியில் விழுந்து செத்த பின் மிகுந்த கனியாகிய தானியம் உண்டாகும். யோவான் *12:24*. அந்தத் தானியத்தை அரைத்து (லேவி. *24:5*). அப்பஞ் சுடுவார்கள். அப்பொழுது அது புசிப்புக்கு நல்லதாகும். அவ்வாறாக, மெய் விசுவாசிகள் சுய பெருமைக்கும் உலக மகிமைக்கும் மரித்துப் பல பக்குவங்களால் மனத்தாழ்மையுள்ளவர்களும் நற்கனி கொடுக்கிறவர்களுமாகும்பொழுதுதான் தேவனுக்கு முன்பாக அப்பத்தைப்போல காணப்படுவார்கள். பிறருடைய ஆத்தும பசியைத் தீர்க்கத்தக்கவர்களு மாவார்கள் (கலா. *2:20*; அப். *9:15, 16*).

ஆ. பன்னிரண்டு அப்பங்கள் என்றிருப்பதால் (லேவி. *24:6*) இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்கள் என்றறிக. அவைகள் இரண்டு அடுக்காக மேசையின்மேல் மிகவும் ஒழுங்காய் வைக்கப்படும். (லேவி. *24:6*.) விசுவாசிகள் எல்லாரும் தேவசமுகத்தப்பங்களாயிருக்க வேண்டு மென்பதே தேவ சித்தம். இது சிலருக்குமாத்திரம் உரிய சிலாக்கியமல்ல (தீத்து *2:11-14*).

இ. 'சமுகத்தப்பங்கள்' என்றழைக்கப்படுகிறது. வச. *30*: ஏனெனில் அவைகள் கர்த்தருடைய சமுகத்தில் வைக்கப்படும். அதைப்போல மெய் விசுவாசிகளும் தேவனுடைய சந்நிதானத்திலே நிலைத்திருந்து அவருடைய சித்தத்துக்கும் வேலைக்கும் காத்திருப்பார்கள். அவர்களுடைய அந்தரங்க ஜீவியம் முழுவதும் அவருடைய சமுகத்திலே இருக்கும் (ஆதி *5:22*; *1* இராஜா. *17:1*; *2* இராஜா. *3:14*; லூக்கா *2:71*). அங்கே எப்பொழுதும் நிலைத்திருப்பதால் அவைகளுக்கு நித்திய அப்பங்கள் என்றும் பேர் (எண். *4:7*). அவ்வாறு நாமும் 'நித்திய' விசுவாசிகளாயிருப்போமாக.

ஈ. 'சுத்தமான' தூபவர்க்கம் அவ்வப்பங்கள்மேல் போடப்படும். *(லேவி. 24:7)*. அதினாலே தேவ சமுகத்தில் இடைவிடாமல் சுகந்தவாசனை கமழும். அப்படியே மெய் விசுவாசிகளில் இரட்சகருடைய நற்கந்தமிருக்கும் *(2 கொரி. 2:15; கொலோ. 1:10; எபி. 13:21)*.

உ. ஓய்வுநாள்தோறும் அவ்வப்பத்தை புதிது புதிதாய் வைக்க வேண்டும் *(லேவி. 24:8)*. அவ்வாறு மெய் விசுவாசிகள் கிருபையிலும் பரிசுத்தத்திலும் வளர்ந்து புதிதாக்கப்பட்டு வருகிறார்கள் *(2 கொரி. 4:16; கொலோ. 3:10)*. மூலபாஷையின்படி புதிதாக்கப்பட்டு வருகிற புது மனுஷன் என்றிருக்கிறது. (நிகழ்கால பெயரெச்சம்) பரிசுத்த ஓய்வு நாளில் நமக்கு விசேஷித்த கிருபையின் எத்தனங்கள் கிடைப்பதால் நம்முடைய உள்ளான மனுஷனைப் புதிதாக்கும் தெய்வீக கிரியை அன்றையதினம் அதிகமாய் நடப்பதற்கு ஏது உண்டென்பதையும் கவனித்துக்கொள்க.

இவ்விதமாய்ப் பார்த்தால் தேவசமுகத்தப்பங்கள் உத்தம விசுவாசிகளுடைய 'பரிசுத்த ஜீவியத்தைக்' குறிக்கின்றன வென்று சொல்லத்தகும். கர்த்தருடைய சமுகத்தில் வாசம்பண்ணி அவருக்கு முன்பாகப் பரிசுத்த முள்ளவர்களாய் அவர்கள் விளங்கவேண்டியது அவசியம். அந்தரங்க ஜீவியந்தான் மிகவும் முக்கியமானது. அது பரிசுத்தமுள்ளதாயிருந்தால் வெளியரங்க ஜீவியமும் பரிசுத்தமாயிருக்கும் *(ஆதி. 17:1; 2 இராஜா. 3:14; 4:9)*. அந்த ஜீவியத்தில் கிறிஸ்துவின் நற்கந்தம் வீசிக்கொண்டே யிருக்கும்.

**குத்துவிளக்கு.** *வச. 31-40:* பரிசுத்த மேசை வாசஸ் தலத்தின் வடபுறத்திலும் இந்த விளக்குத் தென்புறத்திலும் வைக்கப்பட்டன. இது முழுவதும் பொன்னினால் செய்யப் பட்டமையால் மெய் விசுவாசிகள் தேவனுடைய

செய்கையாயிருக்கிறார்கள் என்பதையும் (எபே. 2:10). அவர்களில் பரம கிருபை பூரணமாய் விளங்குகிற தென்பதையும் உணர்த்துகிறது. அது 'அடிப்பு வேலையாய்ச் செய்யப்படவேண்டும்' என்றிருப்பதால் (வச. 31). நமதருமை நாதர் தாம் பட்ட பாடுகளினாலே பூரணமானதுபோல (எபி. 5:8, 9) அவருடைய ஜனங்களும் பாடுபடுவதினாலே அதிக வெளிச்சம் கொடுக்கத்தக்கவர்களாகிறார்கள் என்றறிக.

அ. 'அது பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரகாசித்து வந்தமையால்' கர்த்தருக்கு முன்பாக நாம் வெளிச்சங் கொடுப்பது அவசியம் என்று பார்க்கிறோம் (மத். 6:1-18). மோசேயைப் போல தேவ சமுகத்தில் பிரகாசமடைந்து, பின்பு மனுஷருக்கு முன்பாகவும் பிரகாசிக்கக் கடவோம் (யாத். 34:29-35).

ஆ. 'அதற்கு ஏழு அகல்கள் இருந்தமையால்' வச. 37. உத்தம விசுவாசிகள் அரைகுறையாயல்ல பூரணமாய்ப் பிரகாசிப்பது தேவசித்தமென்று நாம் அறியலாம் (மத். 5:14-16; 6:22, 23; எபே. 5:8-10; 1 யோவான் 1:5-7).

இ. 'வாதுமைக் கொட்டைக்கு ஒப்பான மொக்குகளும் பழங்களும் பூக்களும்' அது விசித்திர விநோத வேலையாய்ச் செய்யப்பட்டமையால் (வச. 33-35), மெய் விசுவாசி களுடைய ஜீவியத்திலும் சாட்சியத்திலும் ஒளி காணப்படுவதோடுகூட ஞான அழகும் கனியும் சுகந்தவாசனையும் விளங்கவேண்டுமென்றறிக (சங். 110:3; யோவான் 15:8; பிலி. 4:18).

ஈ. 'குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்து கொண் டிருக்கும்படி ஒலிவ எண்ணெயை' அதற்கு நாள்தோறும் ஊற்ற வேண்டியதிருந்தது (27:20, 21). அவ்வாறே விளக்குப் போன்ற உத்தம சபையார் (வெளி. 1:20) பிரகாசிக்கும்படி தேவாவியானவராகிய பரிசுத்த எண்ணெய் இடைவிடாமல் அவர்கள் இருதயங்களில் ஊற்றப்படவேண்டியது அவசியம் (சக. 4:1-6).

இப்படிப்பார்க்கும்பொழுது பொற்குத்துவிளக்கானது தேவனுடைய மெய்யடியாரின் 'ஞானவெளிச்சத்தையும் உத்தம இராஜ்யத்தையும்' குறிப்பிட்டுக் காட்டுகிறதெனலாம்.

கிறிஸ்தவர்களுடைய காரியத்தில் 'தேவ ஐக்கியம், பரிசுத்த ஜீவியம், ஞானப்பிரகாசம்' ஆகிய இம் மூன்றும் சிறந்தவைகள்.

**கேள்விகள்:**

*1. அதி. 24இல் இஸ்ரவேல் புத்திரர் மலையின் கொடுமுடியில் யெகோவாவின் மகிமையைக் கண்டார்கள். அதி. 25 முதல் அவர்கள் மத்தியிலிருப்பதற்கு அவருடைய வாசஸ்தலத்தை குறித்து வாசிக்கிறோம். மெய்தேவ வணக்கத்தை எழுப்புவதற்கு எது நல்லது? எப்படி நல்லதாகும்?*

*2. வாசஸ்தலத்தில் உபயோகிக்கவேண்டிய பொருள்கள் எல்லாம் ஆவிக்குரியவைகளுக்கு அடையாளங்களாயிருந்தன. இவ்வதிகாரங்களை வாசிக்கையில் அடையாளங்கள் இன்னின்னவையென்று அறிந்து கொள்வது நல்லது.*

*பொன்—தேவத்துவம்; சீத்திம்மரம் (பு.தி. வாகைமரம்)—மனுஷத்துவம்; வெள்ளி—மீட்பு; வெண்கலம் (புதி. செம்பு)—நியாயத்தீர்ப்பு; இளநீலம்—பரலோகத்துக்குறியது; இரத்தாம்பரம்—இராஜரீகம்; சிவப்பு—பலியிடுதல்; மெல்லிய பஞ்சுநூல்—பரிசுத்தம்; ஐந்து என்ற எண் கர்த்தரின் கிருபை; மூன்று என்ற எண்—திரியேகத்துவம்.*

*இந்தக் குறிப்புகளைக் கொண்டு உடன்படிக்கைப் பெட்டி, கிருபாசனம், சமுகத்தப்பங்களின் மேசை, குத்து விளக்கு இவைகளின் அடையாளங்களைக் காண்பிக்க.*

# 26ஆம் அதிகாரம்

## வாசஸ்தலத்தின் மாதிரியைக் காண்பித்தல்

*கவனிப்பு: இவ்வதிகாரத்தில் வாசஸ்தலம் என்பதும், 'இணை', 'இசை', 'ஒன்று', 'ஒரே', என்பவைகளுமே முக்கியமான பதங்கள். திருச்சபையானது கர்த்தருடைய வாசஸ்தலமாயிருக்கும்படி அதைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் ஒருவரோடொருவரும் ஐக்கியமுள்ளவர்களாய் இணைக்கப்பட வேண்டுமென்றறிக.*

*ஆசரிப்புக் கூடாரம் வனாந்தரமான இடங்களில் கர்த்தருடைய வாசஸ்தலமாக வைக்கப்பட்டதுபோல், காடு போன்ற இவ்வுலகத்தில் கிறிஸ்தவ சபை அவருடைய அகமும் ஆலயமுமாக விளங்கவேண்டுமென்றும் காண்க.*

***கவனிப்பு:*** *மேற்கூடாரமும். வச. 7-13: வெளி மூடிகளும் (வச. 14). நீங்கலாக, பலகைகள் (வச. 15-30). தாங்கப் பெற்ற அலங்காரமான மூடு திரைகளுக்குத்தான் 'வாசஸ்தலம்' என்று பெயர். (வச. 1-6).*

I. ***வாசஸ்தலத்தின் மூடுதிரைகள்.*** *வச. 1-6.*

*இவைகள் அருமை இரட்சகருடைய மேன்மைகளைக் காட்டுவதுமன்றி அவருக்குள்ளான மெய்விசுவாசிகளுடைய கிரியைகளையும் காட்டுகின்றன.*

***1. பஞ்சுநூல்.*** *வச. 1: இது தூய வெள்ளையாயிருப்பதால் நீதியையும் பரிசுத்தத்தையும் குறிக்கும். புண்ணியநாதருடைய நீதி எல்லாவற்றிற்கும் ஆதாரம் (பிலி. 3:9) அவராலும் அவருக்குள்ளும் விசுவாசிகள் கர்த்தருக்கு முன்பாக நீதியும் பரிசுத்தமுள்ளவர்களாய் விளங்குகிறார்கள் (வெளி. 7:13-15; 19:8).*

*பஞ்சு பூமியிலிருந்து உண்டாகிறதுபோல, நமதாண்டவர் மனுஷவதாரமெடுத்து இவ்வுலகத்திலே தானே இந்தத் தேவ*

நீதியைச் சம்பாதித்து நமக்கு அளித்திருக்கிறார் *(யோவான் 12:24).* நாம் கர்த்தருடைய வாசஸ்தலமாயிருக்கவேண்டு மானால் இயேசுநாதருடைய நீதியும் பரிசுத்தமும் நம்மில் விளங்கவேண்டியது இன்றியமையாத அவசியம்.

*2. **இளநீள நூல்.** வச. 1:* இது நீல ஆகாயமாகிய வானத்தின் நிறம். அது தேவனுடைய சுபாவத்தையும், பேரன்பையும் குறிக்கலாம். தம்மைப் பிதாவினுடைய ஆலயமாக ஒப்புக்கொடுத்த மனுஷகுமாரனாகிய கிறிஸ்துவுக்கு *(யோவான் 2:19-22).* தேவத்தன்மையும் இருந்தது. *(யோவான் 1:1);* அவரிடத்தில் பேரன்பும் சிறந்து விளங்கினது *(1 யோவான் 4:16; கலா. 2:20).* ஆகையால் இந்த இளநீல நிறம் அவரில் உதாரணமாயிற்று எனலாம்.

அதைப்போல 'மெய் விசுவாசிகளும் தேவ சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாயிருக்கிறார்கள்' *(2 பேதுரு 1:4).* தேவ அன்பும் அவர்களுடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது *(ரோமர் 5:5).* ஆகவே, அவர்களிலும் இவ்விள நீலம் காணப்படுகிறது எனச் சொல்லத்தகும். அது மென்மேலும் நம்மெல்லாரிடத்திலும் விளங்குவதாக *(2 கொரி. 3:18; 1 தெச 4:9, 10; 2 பேதுரு 1:7).*

*3. **சிவப்பு நூல்.** வச. 1:* இது இரத்தத்தின் நிறமானதால் மனுஷீக சுபாவத்தையாவது திரு இரத்தத்தின் புண்ணியத்தையாவது குறிக்கலாம். நமது இரட்சகர் மனுஷ குமாரனாக வந்தமையாலும் *(எபி. 2:13-15),* திரு உதிரத்தைச் சிந்தி நம்மை மீட்டபடியாலும் *(1 பேதுரு 1:18, 19),* இந்தச் சிவப்பு நிறம் அவருடைய பரிகாரமாய் விளங்குகின்றது.

அப்படியே, மெய்க் கிறிஸ்தவர்கள் வெறும் மனிதராயிருந்தாலும் சிலுவை நாயகருடைய திரு இரத்தம் அவர்களுடைய இருதயங்களில் தெளிக்கப்பட்டிருந்தாலும்

(எபி. 10:22; 1 பேதுரு 1:2), இவ்வடையாளம் அவர்களுடைய வாழ்க்கையிலும் தோன்றுகிறது என்று சொல்லலாம்.

4. **இரத்தாம்பர நூல்.** வச. 1: நீலமும் சிவப்பும் ஒன்றாய்க் கலந்ததே இரத்தாம்பரமாம். ஆகையால் இது முந்தின இரண்டு விசேஷங்கள் யாதொரு வேறுபாடின்றி இசைந்து நிற்பதையே காட்டுகிறது. நமதாண்டவரிடத்தில் தெய்வீக சுபாவமும் மனுஷீக சுபாவமும் ஒன்றாய்க் கலவாமலும் வேறுபாடில்லாமலும் இசைந்து விளங்கின (லூக்கா 23:39-43; மாற்கு 5:36-43; மத். 16:15-21).

மெய் விசுவாசிகளிடத்திலும் தெய்வீக சுபாவம் விளங்குவதுமன்றி மனுஷீக பெலவீனமும் காணப்படுகிறது.

**உதாரணம்.** பரி. பவுல் 2 கொரி. 12:8-10: நான் பெலவீனமாயிருக்கும்போதே (சிவப்பு), பலமுள்ளவனாயிருக்கிறேன். இளநீலம்: 'கிறிஸ்துவின் வல்லமை (இளநீளம்) என்மேல் தங்கும்படி என் பலவீனங்களைக்குறித்து (சிவப்பு) நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்.' 2 கொரி. 4:7ஐயும் காண்க.

5. **விசித்திர வேலையாய்ச் செய்யப்பட்ட கேருபீன்கள்.** வச. 1: மேற்சொல்லிய நாலுவிதமான நூலினாலும் மூடு திரைகள் நெய்யப்பட்டு, அவைகளில் கேருபீன்களின் ரூபங்கள் காட்டப்பட்டன. இவ்விதமாய், எங்கே பார்த்தாலும் அந்த வாசஸ்தலத்தில் கேருபீன்களின் வடிவங்களும் வேலைகளும் விளங்கும்.

'கேருபீன்கள்' தேவனுடைய பிரசன்னத்தையும் பரிசுத்தத்தையும் உணர்த்திக் காட்டும் பணிவிடை ஆவிகள் (ஆதி. 3:24; யாத். 25:18-22; 1 இரா. 6:23-29; ஏசாயா 6:1-7; எசே. 1:4-21; வெளி. 4:6-9). அவைகளைப் பார்க்கும் போதெல்லாம் உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக (லூக்கா 11:2) என்று நினைக்க வேண்டியது வரும்.

"கேருபீன்களின் மத்தியில் வாசம்பண்ணுகிறவர்" என்பது கர்த்தருடைய திருநாமங்களில் ஒன்று *(சங். 80:1; 99:1)*. அவற்றின் ரூபங்களையும் நாம் கவனிக்கத்தகும் *(வெளி. 4:7, எசே. 1:6-10)*.

'சிங்கம்' என்பது தைரியத்துக்கும் பெலனுக்கும் அடையாளம்.

'காளை' என்பது பொறுமைக்கும் முயற்சிக்கும் அடையாளம்.

'கழுகு' என்பது வேகத்துக்கும் கூர்ந்த பார்வைக்கும் அடையாளம்.

'மனுஷன்' என்பது அன்புக்கும், அனுதாபத்துக்கும் ஞானத்துக்கும் அடையாளம்.

இவ்விசேஷித்த அழகிய குணங்கள் எல்லாம் நம்முடைய ஊழியத்தில் தோன்ற வேண்டுமென்றறிக. மேலும் கேருபீன்களைப்போல நாமும்: "சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்பதை நம்முடைய குணகிரியை யாவற்றிலும் உணர்த்திக் காட்டுவோமாக" *(ஏசாயா 6:3; வெளி. 4:8)*.

இக்காரியங்களையெல்லாம் நமது அருள்நாதருடைய சரித்திரத்தால் எடுத்துக்காட்டுவது அரிதன்று. பரம பிதாவினுடைய திருச்சித்தத்தை நிறைவேற்றும்படி இவ்வுலகத்துக்கு வந்த அவரில் இந்த அழகிய குணங்கள் ஒவ்வொன்றும் சிறந்து விளங்கினது. *(எபி. 10:5-10)*.

கர்த்தருடைய வாசஸ்தலத்தில் உத்தம பணிவிடை நடந்தேறிவருவதே காரியம் என்பதை இந்தக் கேருபீன்களுடைய வடிவங்கள் உணர்த்துகின்றன.

*6.* **மூடுதிரைகளின் நீளம்.** வச. *2:* "ஒவ்வொரு மூடுதிரையும் இருபத்தெட்டுமுழ நீளமும் நாலுமுழ

அகலமுமாயிருப்பதாக. அவைகளைத் தாங்கி நிற்கும் பலகைகளுக்குப் பத்துமுழ நீளம் (வச. 16). வாசஸ்தலத்தின் அகலம் பத்து முழமாம். ஆகையால், வடக்கே நிற்கும் பலகைகளையும் (10 முழம்) வாசஸ்தலத்தின் அகலத்தையும் (10 முழம்) தெற்கே நிற்கும் மறுபக்கத்துப் பலகைகளையும் (10 முழம்) முழுவதுமாய் மூடுவதற்கு 30 முழ நீளமான மூடுதிரைகள் வேண்டும். இவைகளுக்கோ 28 முழ நீளமாத்திரமுண்டு. ஆகவே, 2 முழம் குறைந்தது. அதாவது, இந்த மூடுதிரைகளைப் பலகைகள்மேல் விரிக்கும்பொழுது அவைகள் தரைமட்டும் தொங்காமல் இருபக்கத்திலும் ஒரு முழம் குறையத் தொங்கினது. இவ்வலங்காரமான மூடுதிரைகளில் தரையின் தூசிபடலாகாது என்பது தான் நோக்கம். கர்த்தருடைய வாசஸ்தலத்துக்கும் இவ்வுலகத்தின் அசுத்தங்களுக்கும் யாதொரு ஐக்கியமும் சம்பந்தமுமிருக்கலாகாது என்பதே ஞானபோதனை (2 கொரி. 6:14-18; யாக். 1:27'

7. **மூடுதிரைகளின் இணைப்பு.** வச. 3-6: அவைகளை ஒன்றாய் இணைப்பதற்கு இளநீல காதுகளும் (வச. 4, 5). பொன் கொக்கிகளும் (வச. 6). உபயோகமாயின.

இளநீளம் தேவனுடைய பேரன்பையும், பொன் அவருடைய தெய்வீக கிரியையையும் குறிக்கலாம். மெய் விசுவாசிகளை ஒன்றாய் இணைத்து ஒருமைப்படுத்துவது அந்தத் தேவ அன்பும் கிரியையும் அல்லவா? (யோவான் 17:20-23) இவ்வாறு இணைக்கப்பெற்ற மூடுதிரைகள் ஒரே வாசஸ்தலமானது' (வச. 6).

கர்த்தருடைய வாசஸ்தலமாகிய மெய்க் கிறிஸ்தவர் களுக்குள் அந்நியோந்நிய ஐக்கியமும் சகோதர சிநேகமும் நிலைத்திருப்பது வெகு அவசியம் (சங். 133:1-3; யோவான் 13:34, 35; அப். 1:14; 2:1, 44; 1 கொரி. 12:12-20; எபே. 2:19-22; 4:1-7).

II. **கூடாரம்.** *வச. 7-13.*

'வாசஸ்தலத்தின்மேல் கூடாரமாகப்போடும்படி ஆட்டு மயிரால் பதினொரு மூடுதிரைகளை உண்டுபண்ணுவாயாக.

இந்த மூடுதிரைகளுக்குத்தான் 'கூடாரம்' என்று பெயர் *(26:11-14; 35:11; 36:14; 40:19; எண். 3:25).* அவைகள் வாசஸ்தலத்தின்மேல் கூடாரத்தைப்போல விரிக்கப்பட்டன.

***1. ஆட்டுமயிரால் செய்யப்பட்ட மூடுதிரைகள்.*** மூல பாஷையின்படி 'வெள்ளாட்டுமயிர்' என்றிருக்கிறது. மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி வெள்ளாடுகள் முக்கியமாய்ப் பாவநிவாரண பலிக்கு உபயோகமானவைகள் *(லேவி. 4:23-28; 9:3; எண். 7:16; 15:24; 28:15; எசே. 43:22).*

விசேஷமாய்ப் பாவநிவாரண மகாநாளிலே, பாவத்தை நீக்கும் பொருட்டு, இரண்டு வெள்ளாட்டுக் கடாக்களில் ஒன்று அடிக்கப்பட்டு மற்றது போக்காடாக வனாந் தரத்திலே விடப்பட்டது *(லேவி. 16:5-19).*

ஆகவே வெள்ளாட்டு மயிரால் செய்யப்பட்ட இந்த மூடுதிரைகள் பாவநிவாரணத்தையே குறிப்பிட்டுக் காட்டினவென்று சொல்லத்தகும்.

மகா அழகும் அலங்காரமுமான தேவனுடைய வாசஸ்தலத்தை மூடுவது என்னவெனில் பாவநிவாரண பலியின் புண்ணியமே.

நாம் தேவனுடைய வாசஸ்தலமாயிருக்க வேண்டு மானால் கிறிஸ்து இரட்சகருடைய மரணத்தின் புண்ணிய மானது நம்மை மூடி மறைப்பது அவசியமென்றறிக.

***2. அவைகளின் நீளம்.*** *'முப்பதுமுழ நீளம்' வச. 8:* வாசஸ்தலத்தின் மூடுதிரைகள் இருபத்தெட்டு முழநீளமாய் மாத்திரம் இருந்தன *(வச. 2).* அதினாலே அவைகள் இருபுறமும் தரைமட்டும் எட்டாமல் தொங்கினதென்று

பார்த்தோமே. இந்தக் கூடாரத்தின் மூடுதிரைகளோ முப்பதுமுழ நீளமாயிருந்தன; தரைமட்டும் தொங்கித் தேவ வாசஸ்தலத்தை முழுவதுமாய் மூடின. அதே நோக்கத்தோடு ஆறாம் மூடுதிரையை முகப்பிற்கு முன்னே மடித்துப்போடும்படி உத்தரவு அருளப்பட்டது. (வச. 9, 12, 13). வாசஸ்தலத்தின் ஒரு சிறு பாகமாவது மூடப்படாமலிருக்கவில்லை.

கர்த்தருடைய ஆவிக்குரிய வாசஸ்தலமாகிய நாம் இரட்சகர் இயேசுபெருமானுடைய புண்ணியத்தால் முழுவதுமாய் மூடப்பட வேண்டுமென்றறிக. நம்முடைய எந்த நல்ல கிரியைகளையும் மூடவும் பரிசுத்தமாக்கவும் அவருடைய திருப்புண்ணியம் அவசியம் வேண்டியது.

***3. அவைகளின் இணைப்பு***. *9-11:* வாசஸ்தலத்தின் மூடுதிரைகளை ஒன்றாய் இணைப்பதற்குக் காதுகளும் கொக்கிகளும் இருந்ததுபோல *(வச. 3-6)*. கூடாரத்தின் மூடுதிரைகளையும் ஒன்றாய் இணைப்பதற்குக் காதுகளும் கொக்கிகளுமிருந்தன. ஆதலால் வாசஸ்தல மூடுதிரைகளின் இணைப்பைப்பற்றிச் செய்த போதனை இதற்கும் பொருந்தும்.

ஆனாலும் இவற்றின் கொக்கிகள் பொன் கொக்கிகளாயிராமல் வெண்கலக் கொக்கிகளாயிருந்தன *(வச. 11)*. 'வெண்கலம்' என்பது பலிபீடத்தின் சம்பந்தமாய் உபயோகமான பொருளாயிருந்தமையால் *(27:1-8)*, இந்த வெண்கலக் கொக்கிகள் பலியின் புண்ணியத்தை ஞாபகப்படுத்தும்.

ஆகையால், மெய் விசுவாசிகளை மூடிக் காக்கிற கூடாரத்தின் மூடுதிரைகளிலும் அவற்றின் கொக்கிகளும் சிலுவை நாயகருடைய மரணபுண்ணியம் காட்சியாய் விளங்குகிறதென்று காண்க.

III. **இரண்டு மூடிகள்.** *வச. 14.*

இவைகளின் அளவு சொல்லப்படாவிட்டாலும் கூடாரத்தை முழுவதும் மூடுவதற்குப் போதுமானபடி இருக்கும் என்பது நிச்சயம்.

*1.* **கீழ் மூடி.** "சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோலினால் கூடாரத்திற்கு ஒரு மூடியை உண்டுபண்ணுவாயாக."

'ஆட்டுக்கடா' முக்கியமாய்ப் பிரதிஷ்டைக்கு உபயோகமானது *(29:22, 27, 31; லேவி. 8:22, 29).* ஆதலால் இந்த மூடியானது புண்ணியநாதருடைய பூரண பிரதிஷ்டையைக் குறிக்கலாம் *(மத். 3:15; எபி. 9:14; 10:5-10).* 'சிவப்புத்தீர்ந்த' தோல் என்பதில் அருள்நாதருடைய திரு இரத்தத்தின் புண்ணியம் விளங்குகிறது *(பிலி. 2:8).*

இவ்விதமாய் உத்தம விசுவாசிகள் இயேசு இரட்சகருடைய பிராயச்சித்தத்தின் புண்ணியத்தினால் மாத்திரமல்ல, அவருடைய பூரண பிரதிஷ்டையின் நீதியினாலும் மூடப்பெற்றுக் கர்த்தருடைய வாசஸ்தலமா யிருக்கிறார்கள் என்றறிக.

2. **மேல் மூடி.** 'அதின் மேல் தகசுத்தோலால் ஒரு மூடியையும் உண்டுபண்ணுவாயாக.' 'தகசு' என்பது தமிழ் வார்த்தையாயிராமல் எபிரெயப் பதமாயிருக்கிறது. அது கடற்பன்றியைக் குறிக்கிறதாகத் தெரிகிறது. அதன் தோல் அலங்காரமாயிராவிட்டாலும் திண்ணமாயும் வெகு காலத்துக்கு உதவத்தக்கதாயுமிருக்கிறது. ஆசரிப்புக் கூடாரம் மழையால் நனையாமலும் வெயிலால் கெட்டுப் போகாமலும் இருக்கும்படி இப்படிப்பட்ட பலத்த தோல்மூடி அதை மூடிக்காப்பாற்றுவதற்கு அவசியமா யிருந்தது.

அது வெளிப்பார்வைக்கு அலங்காரமாய்த் தோன்றாததுபோல நமது அருமைநாதரும் உலகத்தாருடைய

பார்வைக்கு விரும்பப்படத்தக்கவராய்த் தோன்றமாட்டார் (*ஏசாயா 53:2*). என்றாலும் ஆசரிப்புக் கூடாரத்தில் கர்த்தருடைய மகிமைப்பிரகாசம் வாசம்பண்ணினதுபோல, மனுஷகுமாரனாகிய இரட்சகர் இயேசு பெருமானுக்குள்ளே தேவனுடைய சகல பரிபூரணமும் வாசமாயிருக்கிறது (*கொலோ. 1:19*).

அவ்வாறே மெய்க் கிறிஸ்தவர்களும் உலக மக்களுக்கு அற்பமாய்த் தோன்றினாலும் (*1 கொரி. 1:26-29*), அவர்களுக்குள்ளே தேவமகிமை பிரசன்னமாயிருக்கிறது (*2 கொரி. 6:16-18*).

IV. **வாசஸ்தலத்தின் பலகைகள்.** *வச. 15-30.*

*1.* **'நிமிர்ந்து நிற்கும் பலகைகள்'** 'சீத்திம் மரம்' வனாந்தரத்தில் உண்டான மரம். அது பெலனாயும் அதிக காலத்துக்கு நிலைக்கத்தக்கதாயுமிருந்தது.

'ஒவ்வொரு பலகையும் *10* முழ நீளமும், *1½* முழ அகலமுமாய் இருக்கவேண்டும்' (*வச. 16*). மொத்தம் *48* பலகைகளிருந்தன. தென் பக்கத்துக்கு *20* பலகை (*வச. 18*); வட பக்கத்துக்கு *20* பலகை (*வச. 20*); மேற் பக்கத்துக்கு *6* பலகை (*வச. 22*); மூலைக்கு *2* பலகை (*வச. 23*).

ஆகவே வாசஸ்தலத்தின் நீளம் *30* முழம்; அகலம் *10* முழம்; உயரம் *10* முழம்.

**அவைகள்:**

**அ. நிமிர்ந்து நிற்பதால்,** கிறிஸ்துவுக்குள்ளே நாம் நேர்மையும் உண்மையுமுள்ளவர்களாய்க் காணப்படவேண்டுமென்றும் (*ஏசாயா...26:7; லூக்கா 13:13; எபே. 5:9*).

**ஆ. ஒன்றோடொன்று ஒத்து இசைந்திருப்பதால்,** *வச. 17:* கிறிஸ்துவுக்குள்ளே நாம் அன்பும் ஐக்கியமுமுள்ளவர்களாய்க் காணப்படவேண்டுமென்று (*எபே. 4:16;*

பிலி. 2:2); அவற்றின் 'கழுந்துகள்' (அ) முனைகள் விசுவாசத்தைக் குறிக்கலாம்.

இ. **பொற்தகட்டால் மூடப்பட்டதால்,** வச. 29. கிறிஸ்துவுக்குள்ளே நாம் தேவ கிரியையாயும், சௌந்தரியமுள்ளவர்களாயும் காணப்படவேண்டுமென்றும் (எபே. 2:10; சங். 45:13) அறிக.

*2.* **வெள்ளிப் பாதங்கள்.** வச. 19, 21, 25: ஒவ்வொரு பலகைக்கும் இரண்டு வெள்ளிப் பாதங்களுண்டு. அவைகளிலேதான் பலகை நிற்கும். அவற்றிற்கு உபயோகமான வெள்ளியானது பாவ நிவர்த்திப் பணத்திலிருந்து எடுக்கப்பட்டது (30:11-16; 38:25-28), ஆதலால் கர்த்தருடைய வாசஸ்தலம் பாவ நிவர்த்தியின் மேலேயே நிறுவப்பட்டதெனலாம். அவ்வாறு தேவனுடைய வாசஸ்தலமான நாம் வெள்ளியைப் பார்க்கிலும் மகா விலையேறப்பெற்ற இரட்சகருடைய திரு இரத்தப் புண்ணியத்தின்மேல் நிற்கிறோம் (1 பேதுரு 1:18, 19; ரோமர் 5:1, 2).

*3.* **மூலைப் பலகைகள்.** வச. 23, 24: பெலனுக்காக வைக்கப்பட்டன. அவைகள் கீழே இசைக்கப்பட்டிருக்க வேண்டும்; மேலேயும் ஒரு வளையத்தினால் இசைக்கப் பட்டிருக்கவேண்டும்.

நாம் தேவனுடைய வாசஸ்தலமாயிருக்கும்படி நம்மைப் பலப்படுத்தி ஒன்றாய் ஐக்கியப்படுத்துகிற மூலப்பலகை கிறிஸ்துவே (ஏசாயா 28:16; சங். 118:22; எபே. 2:20). அவர் நம்மைக் கீழேயும் இசைக்கிறார் (எபே. 2:21, 22); மேலேயும் இசைக்கிறார் (எபே. 4:15, 16).

*4.* **பக்கத்துத் தாழ்ப்பாள்கள்.** வச. 26-28: இவைகளும் பெலனுக்காக உண்டுபண்ணப்பட்டன. ஒவ்வொரு பக்கத்துக்கும் ஐந்து தாழ்ப்பாள்கள்.

நடுத் தாழ்ப்பாள் நெடுக ஒருமுனை தொடங்கி மறுமுனை மட்டும் பாய்ச்சப்பட்டது (வச. 28).

இது பரிசுத்த ஆவியானவரின் ஒருமையைக் குறிக்கலாம் (எபே. 4:3; 2:22; 2 கொரி. 13:14).

மற்ற நான்கு தாழ்ப்பாள்கள் அதற்கு மேலே இரண்டும் அதற்குக் கீழே இரண்டுமாகப் பாய்ச்சப்பட்டன. அவைகளின் நீளமும் குறைவு.

இவைகள் அன்பும் (கொலோ. 2:2, 3, 14), சத்தியமும் (யோவான் 17:8, 11, 20, 21). சமாதானமும் ( சமாதானக் கட்டு எபே. 4:3), நம்பிக்கையும் (எபே. 4:4. ஒரே நம்பிக்கை ) ஆகிய இந்நான்கையும் குறிக்கலாம்.

V. **திரைச்சீலை.** *வச. 31-35.*

*1.* **திரைச்சீலை.** *வச. 31:* இது கிறிஸ்து இரட்சகருடைய திருச்சரீரத்துக்கு முன்னடையாளம் (எபி. 10:20). அவர் மூலமாய்த்தான் கர்த்தருடைய தேவ சந்நிதானத்தில் கிட்டிச் சேருகிறோம். அவர் தேவனும் மனுஷனுமாயிருப்பதால் வச. 1இல் காண்கிற நிறங்கள் இங்கேயும் விளங்குகின்றன.

*2.* **தூண்கள்.** *வச. 32:* நான்கு தூண்களில் திரைச்சீலை தொங்கிற்று. அந்தத் தூண்கள் வெள்ளிப் பாதங்கள்மேல் நிற்கும் (IV 2. போதனையைக் காண்க). அந்தத் தூண்கள் நமதாண்டவருடைய வல்லமையைக் குறிப்பிட்டுக் காட்டலாம்; அவருடைய திடமான மனதையும் குறிக்கலாம். (எபி. 10:5-10).

அதோடுகூட அவருக்குள்ளே தேவ வாசஸ்தலமான விசுவாசிகளிடத்தில் நாலு தூண்களைப்போல் விளங்கும் அவருடைய ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமாகிய இவைகளையும் குறிக்கலாம் (1 கொரி. 1:31).

VI. ***வாசஸ்தலத்தின் வாசல்.*** *வச. 36, 37.*

***1. தொங்கு திரை.*** *வச. 36: இதிலே வாசஸ்தலத்தின் மூடுதிரைகளிலும் திரைச்சீலையிலும் காணப்பட்டதுபோல இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், திரித்த மெல்லிய பஞ்சுநூலும் வருகின்றன. ஆனாலும் அங்கே காணப்பட்ட கேருபீன்களின் வடிவம் இங்கே வரவில்லை. உள்ளே போனால்மாத்திரம் பணிவிடையின் இரகசியம் தெரியவரும். மேலும் மனிதருடைய பார்வைக்கென்றல்ல, தேவனுடைய பார்வைக்கென்றே கேருபீன்களைப் போல நாம் ஊழியம் செய்யத்தகுமென்றறிக (மத். 6:4, 6; 1தெச. 2:4).*

***2. தூண்கள்.*** *வச. 37: ஐந்து வெண்கலப் பாதங்கள் மேல் நிற்பது (II 3. போதனையைக் காண்க).*

*இந்தத் தூண்களும் பெலனை உணர்த்திக் காட்டும். நமக்குப் பிரவேச வாசலாயிருக்கிற அருமை நாதருடைய நாமங்களையும் விசேஷங்களையும் இத்தூண்கள் காட்டுகிறதாய் இருக்கலாம் (ஏசாயா 9:6இல் அவருடைய நாமம் 5 வகையாய்க் காட்டப்படுகிறது).*

*கிறிஸ்துநாதருடைய உண்மையும், நீதியும், அன்பும், ஞானமும், வல்லமையும் ஆகிய இவ்வைந்தும் நம்முடைய பிரவேச சிலாக்கியத்துக்கும் நாம் தேவனுடைய வாசஸ்தலம் ஆவதற்கும் ஆதாரமானவைகள்.*

**கேள்விகள்:**

*1. இவ்வதிகாரத்தின் குறிப்புகளை நன்றாய்ப் படித்தபின் இந்தப் பதங்களின் சரியான அர்த்தத்தை எழுதுக.*

*அ. வாசஸ்தலம்.*

*ஆ. மூடுதிரைகள்.*

*இ. கூடாரமாகப் போடும்படியான மூடுதிரைகள்.*

*2. வெள்ளிப் பாதங்களின் நிறையைக் காண்க; அதி. 38:17. ஒரு தாலந்து நிறைய 98 பவுண்ட். இத்தனை பாரமான பாதம் எதற்கு?*

*3. வாசஸ்தலத்தின் வாசல் எந்தத் திசையை நோக்கிற்று? வச. 22. இந்தத் திசையை நோக்குவதற்குக் கருத்து என்னமாயிருக்கும்? அநேக கிறிஸ்துவ சபைகளில் இந்தத் திசையை நோக்குவதுண்டு; எப்பொழுது? ஏன்?*

# 27ஆம் அதிகாரம்

## பிரகாரத்தின் விசேஷங்களைக் காட்டுதல்

*எசே. 43:12 காண்க.*

I. ***பலிபீடம்.*** *வச. 1-8.*

வெளிப்பிரகாரத்தில் விசேஷித்து விளங்குவது பலிபீடமே. ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள மற்றெல்லாத் தட்டுமுட்டுகளைப்பார்க்கிலும் இதுதான் பெரிது.

***1. அது சீத்திம் மரத்தால் செய்யப்பட்டமையால்.*** *வச. 1:* பெலனுள்ளதும் வெகுகாலம் நிலைக்கத்தக்கதுமாயிருந்தது (அதி. 26. IV. 1. போதனையைக் காண்க). கிறிஸ்துவினால் உண்டான மீட்பு நித்திய மீட்பு (எபி. 9:12).

**2. அதற்கு நாலு கொம்புகள் இருந்தமையால்.** *வச. 2:* அவைகளை அடைக்கலமெனப் பிடித்துக்கொள்ளுகிறவர்களை அது இரட்சித்துக் காப்பாற்ற வல்லமையுடையதென்றுக் கொள்க (உபா. 33:17); லூக்கா 1:75; 1 இரா. 1:50-53). அந்த வல்லமை சிலவேளை குறைவற்றதாய்க் காணப்பட்டாலும் (யாத். 21:14; 1 இரா. 2:28-34). அதனால் குறிப்பிட்ட மெய்ப்பொருளின் வல்லமை பூரணமானது என்றறிவோம் (எபி. 6:18-20). இந்தக் கொம்புகளின் சம்பந்தமாக சங். 118:27ஐயும் காண்க.

*3. அது சதுரமாயிருந்தமையால்.* வச. 1: கர்த்தருடைய பூரண நீதி அங்கே நடக்கும் சகல பலிகளிலும் விளங்கத்தக்கதென்றறிக (சங். 4:5; ரோமர். 3:25).

**4. அதைச் சுமக்கும்படி தண்டுகள் உண்டுபண்ணப் பட்டமையால்,** வச. 6, 7, பலிபீடம் மகா பரிசுத்தமான தென்று விளங்கும் (மத். 23:19; எபி. 10:10, 14).

'வெண்கலம்' என்பதைப்பற்றி அதி. 26, 11, 3. சொல்லிய போதனையைக் காண்க.

இந்தப் பலிபீடமானது சிலுவையின் உபதேசத்தை உணர்த்திக் காட்டுகிறது. கர்த்தருடைய ஆலயமாகிய மெய் விசுவாசிகளிடத்தில் இது காட்சியாய் விளங்கவேண்டும்.

அ. கிறிஸ்து இரட்சகர் நமக்காக அடைந்த மரணத்தையும் (2 கொரி. 4:10); 1 கொரி. 2:2).

ஆ. நாம் கிறிஸ்துவோடுகூட மரித்த விசேஷத்தையும் (2 கொரி. 4:11; கலா. 2:20).

இ. நாம் இரட்சகரினிமித்தம் பாடனுபவிக்க வேண்டுமென்பதையும் (பிலி. 2:17; 1 கொரி. 15:31; கொலோ. 1:24), பலிபீடம் காண்பிக்கிறது.

**அந்தப் பலிபீடத்தின்மேல் செலுத்தப்படும் பலிகள் ஐந்து வகையாம்.**

1. சர்வாங்க தகனபலி (லேவி. அதி. 1). இது விசுவாசிகளுடைய பூரண பிரதிஷ்டையை குறிக்கும்.

2. போஜன பலி (லேவி. அதி. 2) இது விசுவாசி களுடைய பரிசுத்த குணங்களையும் அவர்கள் கனிதரும் ஜீவியத்தையும் குறிக்கும்.

3. சமாதான பலி (லேவி. அதி. 3, 7). இது விசுவாசி களுடைய தேவ ஐக்கியத்தையும் ஸ்தோத்திரஞ்செலுத்தும் நன்றியறிதலையும் குறிக்கும்.

*4. பாவநிவாரண பலி (லேவி. அதி. 4).*

*5. குற்றநிவாரண பலி (லேவி. 5:1-7). இவைகள் விசுவாசிகளுக்கு அவசியமான பாவப் பலியைக் குறிக்கும்.*

*இவையெல்லாம் கிறிஸ்து இரட்சகருக்குள்ளே மாத்திரம் நமக்குக் கிடைக்கின்றன.*

II. **பிரகாரம்.** *வச. 9-19. (சங். 48:12; 101:2-7; ஏசாயா 60:18).*

***1. அதன் விஸ்தீராணம்.*** *வச. 9-14, 18. அதன் நீளம் 100 முழம் (வச. 18). நூறு என்பது பரிபூரணத்தைக் குறிக்கலாம். (லேவி 26:8; 2 இரா. 4:43; 1 நாளா. 21:3; பிர. 6:3, ஏசாயா 65:20). அதன் அகலம் 50 முழம் (வச. 18). ஐம்பது என்பது சுயாதீனத்தைக் குறிக்கலாம் (லேவி. 25:10, 11). அது பூரண ஆயுசையும் குறிக்கிறதுண்டு (எண். 4:3; 8:25; யோவான் 8:57).*

*ஆகவே பிரகாரத்தின் விஸ்தீராணம் அதிகமாயும் பூரணமாயுமிருந்தது. உத்தம விசுவாசிகளுடைய விஷயத்துக்கும் அவசியமான கிருபையும் நன்மையும் எல்லாம் சம்பூரணமாய் அருளப்பட்டிருக்கிறதென்றறிக (2 பேதுரு 1:3; பிலி. 4:8; கொலோ. 2:10).*

***2. அதன் தொங்கு திரைகள்.*** *வச. 9-16 மெல்லிய பஞ்சு நூலால் செய்யப்பட்ட 'தொங்கு திரைகள்' (வச. 9) இவைகள் சுத்த வெள்ளையாகவேயிருந்தன. அவற்றின் உயரம் ஐந்து முழம் (வச. 18). அதினாலே, உள்ளே இருந்த வாசஸ்தலம் முதலியவை பிரகாரத்துக்கு வெளியே நிற்பவர்களுக்கு முழுவதுமாய் மறைக்கப்பட்டிருக்கும். அப்படிப்பட்டவர்கள் சுற்றிலும் தொங்கின அந்த வெண்திரைகளைக் காணக்கூடுமேயன்றி வேறொன்றையும் காண வழியில்லை. அவைகள் கிறிஸ்து நாதருடைய நீதியை முன்னடையாளமாகக் காட்டுகிறவைகள் (ரோமர் 3:22; வெளி. 19:8).*

உலகமக்கள் வெளியே நின்று கர்த்தருடைய ஆலயமாகிய மெய்க் கிறிஸ்தவர்களுடைய காரியத்தையும் ஜீவியத்தையும் பார்க்கும்பொழுது, அந்தக் கிறிஸ்தவர் களிடத்தில் நீதியும் பரிசுத்தமுமே விளங்கவேண்டியது அவசியமெனக்கொள்க *(பிர. 9:8; தானி. 6:4; 1 தெச. 2:10; வெளி. 19:8).*

*3.* **அதன் தூண்கள்.** *வச. 10:17;* தென்பக்கத்துக்கு இருபதும் *(வச. 9, 10).* வடபக்கத்துக்கு இருபதும் *(வச. 11)* மேற்பக்கத்துக்குப் பத்தும் *(வச. 12),* கீழ்ப்பக்கத்துக்குப் பத்தும் *(வச. 13 16),* ஆக அறுபது தூண்களிருந்தன.

அ. அவைகள் வெண்கலத்தால் செய்யப்பட்டமையால் *(வச. 10).* பலியினால் உண்டாகும் பெலனும் புண்ணியமும் அவைகளில் விளங்கின. *(அதி. 26,* IV *2.* போதனையையும் காண்க).

ஆ. அவைகளின் பாதங்களும் வெண்கலத்தால் செய்யப்பட்டமையால் *(வச. 10),* அந்தத் தூண்கள் பலியின் புண்ணியத்தின்மேலே நின்றனவென்று சொல்லலாம்.

இ. தூண்களின் கொக்கிகளும் பூண்களும் வெள்ளியினால் செய்யப்பட்டமையால் *(வச. 10).* அவைகளில் மீட்கும் பொருள் விளங்கினது என்று பார்க்கிறோம் *(யாத். 30; 11-16; 38:25-28; 1 பேதுரு 1:18, 19;* அதி *26* IV. *2* போதனையையும் காண்க.

இவ்விதமாய்க் கிறிஸ்துவின் நீதியைக் குறிப்பிட்டுக் காட்டும் அந்த வெண்திரைகள் அவருடைய மீட்பையும் பாவப் பலியையும் உதாரணப்படுத்திக் காண்பிக்கும் வெண்கலத் தூண்களில் தொங்கப்பெற்றனவென்று காண்க.

*4.* **அதன் வாசல்.** *வச. 16. அதி. 26:36, 37*க்குச் சொல்லிய போதனையைப் பார்க்க. கூடாரத்தின் வாசல் எப்படியோ பிரகாரத்தின் வாசலும் அப்படியே. அதன் தொங்கு திரைகளுக்கும் இதன் தொங்கு திரைகளுக்கும் நிறத்திலும் சித்திரத்தையல் வேலையிலும் வித்தியாசமேயில்லை.

கூடாரத்தின் வாசலின் உயரம் 10 முழமும், அகலம் 10 முழமும் ஆனபடியினால் அதன் மொத்த அளவு 100 சதுர முழமாம். பிரகாரத்தின் வாசலின் உயரம் 5 முழமும் அகலம் 20 முழமும் ஆனபடியினாலே அதன் மொத்த அளவும் 100 சதுர முழமாம். ஆகவே, இதற்கும் அதற்கும் மொத்த அளவிலும் வித்தியாசமில்லை. பிரகாரத்துள் பிரவேசிக்கும் வாசலும் வாசஸ்தலத்துக்குள் பிரவேசிக்கும் வாசலும் ஒன்றே என்றறிக (யோவான் 10:9; 14:9; ரோமர் 5:1, 2; எபி. 12:1). பிரகாரத்தின் வாசலுக்கோ 4 தூண்கள் மாத்திர மிருந்தன (ஐந்தல்ல). அதி. 26:32 வியாக்கியானத்தைக் காண்க.

III. **பிரகாசம்**. வச. 20, 21.

**கவனிப்பு :** குத்துவிளக்கு வாசஸ்தலத்திற்குள் நின்றாலும் (அதி. 25:31-40). அதின் விசேஷங்கள் வெளிப்பிரகாரத்தின் சம்பந்தமாகவும் இங்கே வருகிற தென்று நாம் கவனிக்கத்தகும். உள்ளே பிரகாசிக்கிற வெளிச்சம் வெளியேயும் தோன்றும் (மத். 5:14). அந்தரங்க பக்தி வெளியரங்கமாகும்.

*1.* **எண்ணெயைக் கொண்டுவருவது.** வச. 20: அது பரிசுத்த ஆவிக்கு முன்னடையாளம். (சக. 4:6).

அ. 'ஒலிவ எண்ணெய்' (சக. 4:3, 12, 13, 14). நம்முடைய இராஜாவாகவும் (அப். 2:33), ஆசாரியராகவும் (யோவான் 14:16), உயர்த்தப்பட்டிருக்கிற கிறிஸ்துநாதரே நம்முடைய ஒலிவமரம் (இரண்டு கிளைகள்).

ஆ. 'தெளிவான எண்ணெய்' நல்ல பிரகாசம் கொடுக்கும் (அப். 2:4; 4:31; 7:55).

இ. 'இடித்துப் பிழிந்த எண்ணெய்' நமதாண்டவர் படாதபாடுகளைப்பட்டதால் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவி. (அப். 2:23, 24, 33; 5:30-32).

*2.* **எரிந்துகொண்டே வருவது.** *வச. 21 ( எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும்படி வச. 20).*

*அ. எங்கே? கர்த்தருடைய சந்நிதானத்தில் . அவருக்கு முன்பாக நம்முடைய வெளிச்சம் பிரகாசிப்பது முக்கியம் (மத். 6:3, 4, 6, 17, 18).*


*ஆ. எப்பொழுது? சாயங்காலம் தொடங்கி விடியற்காலமட்டும். அதாவது: கிறிஸ்துநாதர் திரும்பி வருமளவும் நம்முடைய ஜீவகாலமெல்லாம் நாம் பிரகாசிக்கவேண்டும் (ரோமர் 13:11, 12).*

**கேள்விகள் :**

*1, வச. 8, "அதை உள் வெளிவிட்டுப் பலகைகளினாலே பண்ணவேண்டும்." பு.தி. "பலிபீடத்தை உள்ளே கூடாகப் பலகைகளினாலே செய்யவேண்டும்." இதன் அர்த்தம் என்ன? சில வியாக்கியானிகள் அதி. 20:24ஐ இதோடு சம்பந்தப்படுத்துகிறார்கள். பலிபீடம் கூடுகை இருந்ததால் ஜனங்கள் தங்கின ஒவ்வொரு இடத்திலும் அதை மண்ணினால் நிரப்பிவிடுவார்கள். அதைத் தூக்கிக்கொண்டு போவதற்கு இவ்விதமான கூடு எப்படி அனுகூலமாகும்?*

*2. வச. 19. 'முளைகளும்' என்னும் பதம் இவ்வசனத்தில் இரண்டு முறை வருகிறபடியால் அந்த முளைகளை வெவ்வேறாகப் பிரித்து அவைகளின் வெவ்வேறான பயனைக் காட்டுக.*

*3. இந்தப் படத்தையும் இவ்வதிகாரத்தில் சொல்லப்படுகிற அளவுகளையும் நன்கு படித்து, பிரகாரத்துக்குப் புறம்பே நிற்கிறவன் காணக்கூடியதைக் காட்டுக. குணப்படாதவனுக்குக் கிறிஸ்தவ ஜீவியம் அப்படியே தோன்றுகிறதாகச் சிலர் சொல்லுவார்கள். உமது அபிப்பிராயம் என்ன?*




ஒரே வாசல். யோவான் 10:9.

# 28ஆம் அதிகாரம்

## ஆசாரிய ஊழியத்தை ஏற்படுத்துதல்

**கவனிப்பு :** இவ்வதிகாரத்தில் ஊழியம் என்பதும் வஸ்திரம் என்பதும் அதிகமாய் வருகிற பதங்கள். உண்மைதான்; கிறிஸ்து இரட்சகர் ஒருவரே நம்முடைய பிரதான ஆசாரியராயிருப்பதினாலே இங்கே சொல்லிய அநேக காரியங்கள் அவருக்கே முன்னடையாளமாய் வருகின்றன. ஆகிலும், மெய் விசுவாசிகளும் அவருக்குள் ஆசாரியர்களானதால் அவர்களுடைய காரியமும் அடங்கியிருக்கிறதென்று நாம் நினைக்கத்தகும்.

I. **ஆசாரிய ஊழியம்.** வச. *1, 3, 4, 41.*

*1.* **ஆசாரியருடைய நாமங்கள்.**

அ. 'ஆரோன்' என்பதற்கும் 'உன்னதம்' என்ற அர்த்தம் இருக்கலாம்.

ஆ. 'நாதாப்' என்பதற்கு 'மனமுள்ளவன்' என்றர்த்தமாம்.

இ. 'அபியு' என்பதற்கு அவரே (தேவனே) என் பிதா' என்றர்த்தமாம்.

ஈ. 'எலெயாசார்' என்பதற்குத் தேவதுணை' என்றர்த்தமாம்.

உ. 'இத்தாமார்' என்பதற்குப் 'பனைமரங்கள் இருக்கும் தீவு' என்றர்த்தமாம்.

நம்முடைய தேவ ஊழியத்தில் உன்னத பெலனும் நல்ல வாஞ்சையும், விசுவாசமும், தேவ சகாயமும் நற்பலனும் விளங்குவது மிகவும் அவசியம்.

*2. **ஆசாரியருக்குரிய பக்குவங்கள் :***

*அ. மற்றவர்களிலிருந்து பிரிக்கப்படுதல்.*

*ஆ. தேவனிடத்தில் சேர்க்கப்படுதல். (2கொரி. 6:17, 18).*

II. ***ஆசாரிய வஸ்திரம்.*** *வச. 2-43.*

*இது ஆறுவிதம் என்றும், வச. 4 ஒன்பதுவிதம் என்றும் யாத். 29:5. (லேவி. 8:7, 8). விவரிக்கப்படுகிறது. லேவி. 8:7, 8இல் அந்தந்த வஸ்திரத்தை உடுத்திக்கொண்ட வரிசையின்படி அவைகள் காட்டப்படுகின்றன. காரியம் தெளிவாகும்படி நாமும் அந்த அந்த வரிசையை அனுசரித்து அவ்வுடுப்புகளை 7 உடுப்பாகப் பிரித்து இங்கே ஞானபோதனையைக் குறிப்பிட்டுக்காட்டுவோம் (உடுப்புகளை உண்டுபண்ணின வரிசைதான் இவ்வதிகாரத்தில் வருகிறது).*

*1. **உள்சட்டை.** வச. 39: மெல்லிய பஞ்சு நூலால் விசித்திரமான உள்சட்டையை உண்டாக்குவாயாக.' இது சுத்த வெள்ளையாயிருந்து கிறிஸ்துநாதருடைய நீதியைக் குறிக்கின்றது (சங். 132:9; ரோமர் 3:22; வெளி. 19:8).*

*நாம் முதலாவது உடுத்திக்கொள்ள வேண்டிய உள் வஸ்திரம் அருள்நாதருடைய தேவ புண்ணியமாகிய நீதியே. அதில்லாவிட்டால் நாம் மேலே அணிந்துகொள்ளும் ஆடையெல்லாம் வேஷமாயிருக்குமே தவிர வேறல்ல. லேவி. 8:7இல் இதற்கு 'உள்ளங்கி' என்று பெயர். புண்ணியநாதருடைய நீதியை அடைந்துகொண்டவர்கள் மாத்திரம் தேவஊழியம் செய்யத்தக்கவர்கள் என்றறிக.*

*2. **இடைக்கச்சை.** வச. 4:39; 'இடைக்கச்சையைத் சித்திரத்தையல் வேலையாகப் பண்ணுவாயாக.' இதுவும் சுத்த வெள்ளையாயிருந்தது. இது உண்மையையும் சத்தியத்தையும் குறிக்கும் (ஏசாயா 11:5; எபே. 6:14).*

பெலனுக்காகவும் தாராளமாய் வேலைசெய்யவும் இடை கட்டிக்கொள்வது வழக்கம்.

தேவ ஊழியத்தில் உண்மை மிகவும் அவசியம். *1 கொரி. 4:2; 7:25.* உண்மையில்லாதவன் தேவ ஊழியனல்ல; உண்மையற்றவனுக்குப் பெலனுமில்லை.

**கவனிப்பு :** இந்தக் கச்சை வேறு; ஏபோத்தின் கச்சை வேறு *(வச. 8).*

***3. மேல் அங்கி.*** *வச. 31-35. லேவி. 8:7* ஒத்துப்பார்க்க. இது பூரண இரட்சிப்பைக் குறிக்கலாம் *(சங். 132:16; ஏசாயா 61:10).*

***அ. அதன் நிறம்.*** இளநீலம். அங்கியை முழுவதும் இளநீலநூலால் உண்டாக்கக்கடவாய் *(வச. 31).* இது வானத்தின் நிறம் அல்லவா? இந்தப் பூரண இரட்சிப்பு, முழுவதும் தெய்வீகக் கிரியை என்றறிக *(எபே. 2:8, 9; கொலோ. 2:9, 10).*

***ஆ. அதன் அவசியம்.*** *வச. 32:* அது கிழியமாட்டாது. அது கிழியாதபடி வெகு ஞானத்தோடே செய்யப்பட்டது *(யோவான் 19:23, 24* ஒத்துப்பார்க்க). இந்தப் பூரண இரட்சிப்பு அழியாத நித்திய இரட்சிப்பென்று காண்க.

***இ. அதன் ஓரம்.*** *வச. 34:* 'அங்கியின் ஓரங்களை சுற்றிலும் ஒரு பொன்மணியும் ஒரு மாதளம்பழமும் ஒரு பொன்மணியும் ஒரு மாதளம்பழமுமாய்த் தொங்குவதாக.' பொன்மணி இன்ப சத்தத்தையும் *(சங். 40:3; ரோமர் 10:18).* மாதளம்பழம் அதிகக் கனியையும் *(யோவான் 15:8, 16; தீத்து 2:11-13; கலா. 5:22, 23)* குறிக்கும்.

இந்தத் தேவ இரட்சிப்பைத் தரித்துக்கொண்ட தேவதாசன் எங்கே போனாலும் இரட்சிப்பின் நற்செய்தியின் சத்தம் அவன் மூலமாய்த் தொனிக்க

வேண்டும். அவன் மிகுந்த கனியைக் கொடுக்கிறவனாயும் விளங்கவேண்டும். அந்தச் சத்தமும் கனியும் கர்த்தருடைய சந்நிதியிலும் தோன்றவேண்டும் *(சங். 107:1-3; 2 கொரி. 2:15)* அங்கிருந்து வெளியே வரும்போதும் தோன்றவேண்டும் *(1 தெச. 1:8; ரோமர் 10:14, 15).*

*4. ஏபோத்து. வச. 6-8;* தேவ சந்நிதானத்தில் நின்று ஊழியம் செய்வதற்கு இந்தவிதமான வஸ்திரந்தான் இன்றியமையாத அவசியம் *(1 சாமு. 2:18; 2 சாமு. 6:14; 1 நாளா 15:27).* ஆகையால் இது தேவ ஊழியத்தைக் குறிக்கிறதென்று சொல்லத்தகும்.

**கவனிப்பு** : நீதி, சத்தியம், இரட்சிப்பாகிய இவைகளை அணிந்துகொண்டவர்கள்மாத்திரம் இவ்வூழிய வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு பணிவிடை செய்யத் தக்கவர்கள் என்று காண்க. மேலும், கள்ள ஊழியத்துக்கு அடையாளமான கள்ள ஏபோத்தைப் பிசாசு ஏற்படுத்துவதுண்டென்று நாம் அறிவோம். *(நியா. 8:27; 17:5; 18:14, 20; ஓசியா. 3:4).*

***அ. விசித்திரமான வேலை.*** *வச. 6, 7; 2 கொரி. 4:1-11* வரை காட்டிய போதனையின்படி, 'பொன்' என்பது தேவ ஊழியத்தின் மகத்துவத்தையும் *(2 கொரி. 4:7),* 'இளநீல நூல்' என்பது பரம பொக்கிஷத்தையும் *(2 கொரி. 4:7),* 'சிவப்பு நூல்' என்பது மண்பாண்டத்தையும் *(2 கொரி. 4:7),* 'இரத்தாம்பரநூல்' என்பது (நீலமும் சிவப்பும் கலந்தது) இயேசுவின் ஜீவன் மனிதனுடைய சரீரத்தில் விளங்குவதையும் *(2 கொரி. 4:8-11).* 'மெல்லிய பஞ்சு நூல்' என்பது அவருடைய நீதியினிமித்தம் நாம் இரக்கம் பெற்றதையும் குறிக்கிறதாக நாம் பாவிக்கலாம். எப்படியும், இந்தக் குறிப்புகள் எல்லாம் உத்தம ஊழியத்தில் உதாரணமாகிறது.

***ஆ. விசித்திரமான கச்சை.*** *வச. 8;* ஏபோத்தின் விசித்திரமான வேலைக்கு ஒப்பாகவே இதுவும் செய்யப்பட்டது. இது உறுதியையாவது *(2 கொரி 4:1, 16, 17, 18,* 'சோர்ந்து போகிறதில்லை') மனத்தாழ்மையையாவது *(யோவான் 13:6; 1 பேதுரு 5:5)* குறிக்கத்தகும். தேவ ஊழியருக்கு மனத்தாழ்மை மிக அவசியம்.

***5. கோமேதகக் கற்கள்.*** *வச. 9-14;* இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை அவைகளில் வெட்டுவாயாக. இவைகள் சபைக்காக 'மொத்தமாய் வேண்டுதல் செய்வதைக் குறிக்கின்றன. இந்தக் கோமேதகக் கற்கள் ஏபோத்தோடு இணைக்கப்பட்டதுபோல, வேண்டுதல் செய்வது தேவ ஊழியத்தைச் சேர்ந்த ஓர் முக்கியமான வேலையாயிருக்கிறது.

***அ. நாமங்களை மொத்தமாய்க் காட்டுவது.*** *வச. 9, 10; (யோவான் 17:9, 10; கொலோ. 1:3, 4, 9; 2:1, 2).*

**கவனிப்பு :** 'பிறந்த வரிசையின்படியே.' மறுபிறப்பு விசேஷம். மறுபடியும் பிறந்தவர்களுக்காக வேண்டுதல் செய்வது பெரிய காரியம் *(யோவான் 17:9; எபே. 6:18).*

***ஆ. கல்லில் அவைகளை வெட்டுவது.*** *வச. 9-11;* கல்லின்மேலெழுத்து அழிந்துபோவது அரிது *(1 சாமு. 12:13; ஏசாயா 49:15, 16; 1 தெச. 1:2-4).*

***இ. தோளின்மேல் அவைகளைச் சுமப்பது.*** *வச. 12.* பெலனுக்கும் உறுதிக்கும் உதவிக்கும் அடையாளம் *(லூக்கா 15:5; கலா. 6:2; பிலி. 1:19).*

***ஈ. கர்த்தருடைய சந்நிதானத்தில் கொண்டுவந்து காண்பிப்பது.*** *வச. 12. (ஆதி. 18:22, 23; எபே. 3:14-16).*

***உ. ஞாபகக்குறியாக அவைகளைக் காட்டுவது.*** *வச. 12. (சங். 74:2; ஏசாயா 62:7).*

இவ்விதமாய்த் தங்கள் சபைகளைக் கர்த்தருக்கு முன்பாக நிறுத்தி ஊக்கத்தோடு வேண்டுதல் செய்துவருகிற போதகர்களும், உபதேசிகளும் எத்தனை பேருண்டு? தங்கள் பள்ளிக்கூடங்களுக்காக தினந்தோரும் ஜெபம் பண்ணுகிற ஆசிரியர்கள் எத்தனை பேர்?

*6. **நியாயவிதி மார்ப்பதக்கம்.*** வச. *15-20*, இதுவும் பொன் பின்னல் வேலையான சங்கிலிகளால் ஏபோத்தோடு இணைக்கப்பட்டது (வச. *25*). இது சபையைச் சேர்ந்த 'அந்தந்த ஆளுக்காக வேண்டுதல் செய்வதைக் குறிக்கும்'

இதிலே கவனிக்கத்தக்க விசேஷங்கள்.

*1. **அதற்கிட்ட பெயர்.*** 'நியாயவிதி மார்ப்பதக்கம்'. வச. *15, 29, 30*. காரியங்களை நியாயமாய்த்தீர்க்கும்படி அதைக்கொண்டு கர்த்தருடைய ஆலோசனையையும் சித்தத்தையும் கேட்டு அறிந்துகொள்வார்கள் (*1* சாமு. *23:9-12; 2* சாமு. *2:1; 5:19, 23;* சங். *17:2*). உண்மையோடு ஜெபமும் வேண்டுதலும் செய்கிறவர்களுக்குத் தேவன் தமது திருச்சித்தத்தை வெளிப்படுத்துகிறார் (அப். *13:2*).

*2. **அதிலுள்ள நாலுபத்தி ரத்தினங்கள்.*** வச. *17-20:* வெவ்வேறான ரத்தினங்கள் (வெளி. *21:19, 20*, ஒத்துப்பார்க்க). அந்தந்த ரத்தினக் கற்களுக்குரிய நிறமும் அழகும் ஒளியும் வெவ்வேறாயிருக்கும். வைரத்தின் நிறமும் பிரகாசமும் வேறு; மரகதத்தின் நிறமும் பிரகாசமும் வேறு. ஆகிலும் அவைகள் எல்லாம் அந்த மார்ப்பதக்கத்தில் வைக்கப் பட்டன. அதைப்போல, அந்தந்த விசுவாசிகளுக்கு அளிக்கப்பட்ட வரங்களும் தாலந்துகளும் வெவ்வேறா யிருந்தாலும் அவைகள் எல்லாம் இரட்சகருடைய காரியத்துக்கு அவசியமானவைகள். (*1* கொரி. *15:41; 1* கொரி. *12:14-27;* ரோமர் *16:1-16*).. கொலோ *4:7-12*இல் பெயர் சொல்லப்படுகிற தீகிக்கு என்பவன் பேர்போன தேவ

ஊழியன்; ஒநேசிமு என்பவனோ ஏழை அடிமை; அரிஸ் தர்க்கும் மாற்கும் சுவிசேஷகர்கள்.

*3. அதில் நாமங்கள் வந்தவரிசை. வச. 21;* பிறந்த வரிசையின்படிவராமல் *(வச. 10).* கோத்திர வரிசையின்படி வந்தன. *(எண். 2:1-31).*

| | | | |
|---|---|---|---|
| *1ஆம் பத்தி.* | பத்மராகம்,<br>யூதா. | புஷ்புராகம்,<br>இசக்கார். | மாணிக்கம்,<br>செபுலோன். |
| *2ஆம் பத்தி* | மரகதம்,<br>ரூபன். | இந்திரநீலம்,<br>சிமியோன். | வச்சிரம்.,<br>காத். |
| *3ஆம் பத்தி* | செம்பு,<br>எப்பிராயீம். | வைடூரியம்,<br>மனாசே. | சுகந்தி,<br>பென்யமீன். |
| *4ஆம் பத்தி* | படிகப்பச்சை,<br>தாண். | கோமேதகம்,<br>ஆசேர். | யஸ்பி,<br>நப்தலி. |

*மத். 19:30; அப். 13:7, 43* பிந்தினோர் முந்தினோர் ஆவார்கள். 'ஒவ்வொன்றினுடைய நாமம் ஒவ்வொன்றிலே வெட்டியிருக்கவேண்டும்.' சபை முழுமைக்காக மாத்திரமல்ல ஒவ்வொரு கிறிஸ்தவனுக்காகவும் ஜெபம் செய்வது கடமை *(மத். 18:14; லூக்கா 22:31;* யோவான் *10:3;* கொலோ. *1:28, 29; 2* தீமோ. *1:3-5;* பிலே. *4:5).*

*4. அதை ஏபோத்தோடு கட்டின நீலநாடா. வச. 28;* நீல நிறமானது தெய்வீக காரியங்களைக் காட்டும். இந்த நீலநாடா திவ்விய கட்டாகிய தேவ அன்பைக் குறிக்கலாம் *(ரோமர் 5:5; 1 யோவான் 5:1, 2).* அந்தத் தேவ அன்பினால் நெருக்கி ஏவப்பட்டதால் மாத்திரம் மற்றவர்களுக்காகப் பேர் சொல்லி வேண்டுதல் செய்வோம்.

*5. அதை இருதயத்தின்மேல் சுமப்பது. வச. 29, 30:* தோள் என்பது *(வச. 12).* பெலனாய்த் தாங்குவதை உணர்த்திக் காட்டுகிறது. இருதயம் என்பது அன்பாய்

வாஞ்சித்துத் தாங்குவதை உணர்த்திக் காட்டுகிறது. (பிலி. 1:7; 4:1; 1 தெச. 3:8-10; பிலே. வச. 12). நமது பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து இரட்சகர் தேவ சந்நிதியில் தம்முடைய இருதயத்தின்மேல் நம்மைச் சுமந்துகொண்டு வேண்டுதல் செய்வதுபோல, நாமும் ஒருவரோடோருவர் சுமந்துகொண்டு வேண்டுதல் செய்யவேண்டும்.

*6. **ஊரீம், தும்மீம் என்பவைகள்.*** வச. *30:* ஊரீம் என்பதற்கு வெளிச்சங்கள் என்றும், தும்மீம் என்பதற்கு உத்தமங்கள் அல்லது சம்பூரணங்கள் என்றும் அர்த்தமாம்.

**கவனிப்பு** : தேவசித்தம் மெய் விசுவாசிகளுக்கு வெளிச்சமாயும் பூரணமாயும் தோன்றுகிறது *(யாக். 1:17; 1 யோவான் 1:5; ரோமர் 12:2).* இவைகளைப்பற்றி உபா. *33:8;* எஸ்றா *2:63;* நெகே. *7:65*லிலும் வாசிக்கிறோம். எண். *27:21; 1 சாமு. 28:6* ஒப்பிட்டுப்பார்க்க. நாலுபத்தி ரத்தினங்களே ஊரீம் தும்மீமாம் என்பது யூதருடைய பாரம்பரியம். தேவ உத்தரவு அனுகூலமானால் அந்த ரத்தினங்கள் அதிகமாக ஜொலிக்கும். ஆனாலும் அவைகள் இன்னதென்று திட்டமாய்ச் சொல்ல ஒருவராலும் முடியாது.

**கவனிப்பு** : ஏபோத்தில் விளங்கின பொன் நீலம் முதலிய நிறங்கள் எல்லாம் மார்ப்பதக்கத்திலும் காணப்பட்டன *(வச. 15).* ஆகையால் அதைப்பற்றிச் சொல்லிய போதனை இதற்கும் பொருந்தும்.

*7. **தலைப்பாகையும் நெற்றிப்பட்டமும்.*** வச. *36-39:* இது பரிசுத்தத்தைக் குறிக்கிறது.

***(அ) தலைப்பாகை.*** வச. *39:* 'மெல்லிய பஞ்சு நூலால்' செய்யப்பட்டது. இதிலே கிறிஸ்துநாதருடைய புண்ணியமாகிய நீதி விளங்குகிறது (உள்சட்டைக்குச் சொன்ன வியாக்கியானத்தைக் காண்க). அந்த விசேஷம் இங்கேயும் இருக்கின்றமையால், ஆதிமுதல் கடைசிமட்டும் அந்தத் தேவ நீதி நமக்கு அவசியம் வேண்டும் என்றறிக.

*(ஆ)* **நெற்றிப்பட்டம்.** *வச. 36-39; (வெளி. 22:4 ஒப்பிட்டுப் பார்க்க).* 'கர்த்தருக்குப் பரிசுத்தம்' என்ற வாசகமே பிரத்தியட்சமாய் விளங்கவேண்டும். ஆனாலும் அநேகருடைய நெற்றியிலும் ஜீவியத்திலும் பரிசுத்தம் விளங்காமல் பாவமே விளங்குகிறது *(எசே. 3:7; ஏசாயா 48:4; 2 நாளா. 26:19; வெளி. 13:16; 20:4).*

இவ்வாறு, பிரதான ஆசாரியன் தேவ சந்நிதானத்தில் ஊழியம் செய்யும்போதெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்த முள்ளவனாய்க் காணப்படுவான். நம்முடைய சகல குணகிரியைகளிலும், கர்த்தருக்குப் பரிசுத்தம் என்பதே சிறந்து விளங்கவேண்டும்.

**கவனிப்பு** : *வச. 40-43.* பிரதான ஆசாரியனுடைய அலங்காரமான வஸ்திரங்கள் நீங்கலாக மற்ற ஆசாரியர்களுடைய உத்தியோக வஸ்திரங்களைக் கவனிக்கும்பொழுது, அவைகள் மெல்லிய பஞ்சுநூலால் செய்யப்பட்டனவென்று காண்கிறோம். தங்களுடைய தலையிலும் (குல்லா) இடையிலும் (கச்சை) மற்ற அங்கங்களிலும் (சல்லடம்) தேக முழுவதிலும் (அங்கி) வெண்வஸ்திரம் தரித்துக்கொண்டு பணிவிடை செய்வார்கள். நம்முடைய மனோவாக்குக் காயங்களில் எல்லாம் புண்ணியநாதருடைய பரம நீதி காணப்படுவதாக.

**கேள்விகள்:**

*1.* வஸ்திரங்களின் முழு குறிப்பையும் பின்வருமாறு படிக்க:-

அ. ஏபோத்தும் அதன் கச்சையும், *வச. 6-12.*

ஆ. நியாயவிதி மார்ப்பதக்கம், *வச. 15-30.*

இ. ஏபோத்தின் அங்கி, *வச. 31-35.* மேற்படி குறிப்புகளில் மேல் அங்கி என்றும், பழைய

திருத்தத்தில் கீழ் அங்கி என்றும் சொல்லப் பட்டிருக்கிறதைக் கவனிக்க.

ஈ. தலைப்பாகையும் பட்டமும், வச. 36-38.

உ. உள் சட்டை, வச. 39.

ஊ. இடைக்கச்சை, வச. 39.

எ. சல்லடங்கள் அல்லது கால்சட்டை, வச. 42.

*2. ஏபோத்து எவ்விதமான வஸ்திரம்? அது எப்படிச் செய்யப்பட்டிருக்கும்?*

*3. ஏபோத்தின் விசேஷம் என்ன? 1 சாமு. 2:18, 28; 14:3; 22:18; 2 சாமு. 6:14. இவ்வசனங்களைக் காண்க.*

*4. ஏபோத்து எல்லாவற்றிலும் விசேஷித்த வஸ்திரம் என்று இஸ்ரவேலர் எண்ணினபடியால் அதைத் தப்பிதமாய்க் கையாடினார்கள் என்று பின்வரும் வசனங்களைக் கொண்டு காண்பிக்க. நியா. 8:27; 17:5; 18:14-20).*

*5. நியாயவிதி மார்ப்பதக்கம் எவ்விதமாய்ச் செய்யப்பட்டது? அதின் அளவு என்ன? அதற்குள் எதை வைத்தார்கள்?*

# 29ஆம் அதிகாரம்

## பிரதிஷ்டையாக்கப்படுதல்

***கவனிப்பு:*** *இவ்வதிகாரத்தில் 'பிரதிஷ்டை' என்பதும் 'பரிசுத்தம்' என்பதும் அடிக்கடி வருகிறது. ஆசாரியர்களைத் தேவ ஊழியத்துக்குப் பிரதிஷ்டை செய்தது நம்முடைய பூரண பிரதிஷ்டைக்கு அடையாளமாக நடந்தனவென்று நாம் நினைக்கத்தகும் (லேவி. 8 ஒத்துப்பார்க்க).*

I. ***அபிஷேகம்.*** *வச. 1-9:*

***1. சேரப்பண்ணுவது.*** *வச. 4-8:* 'ஆரோனையும் அவன் குமாரரையும் ஆசாரிப்புக் கூடாரத்தின் வாசல் முன்பாகச் சேரப்பண்ணி. பரிசுத்தர் ஆகவும் பரிசுத்த ஊழியம் செய்யவும் நாம் பரிசுத்தராகிய தேவனிடத்தில் சேரவேண்டியது அவசியம்; பரிசுத்தத்துக்குக்காரணர் அவரே *(நீதி. 8:34; யாத். 21:5, 6; எபே. 2:13).*

***2. கழுவுவது.*** *வச. 4:* அவர்களைத் தண்ணீரினால் கழுவி, அவ்வாறு, நாமும் சகல பாவக்கறைகளும் நீங்க கழுவப்படவேண்டும் *(2 கொரி. 6:11; வெளி. 7:14).*

***3. உடுத்துவது.*** *வச. 5, 6, 8:* 28ஆம் அதிகாரத்தில் விவரித்துக் காட்டின வஸ்திரங்களை அவர்களுக்கு உடுத்துவது, அவ்வாறு, தேவனுடைய பரிசுத்த ஊழியம் செய்யும்படி நாமும் திவ்விய வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளவேண்டும் *(சங். 2:16; சக. 3:4, 5; கொலோ. 3:12, 14).*

***4. அபிஷேகம் செய்வது.*** *வச. 7: (28:41 ஒத்துப்பார்க்க).* 'அபிஷேக தைலத்தையும் எடுத்து, அவன் தலையின்மேல் வார்த்து, அவனை அபிஷேகம் செய்வாயாக.' அவ்வாறு நாமும் பரிசுத்த ஆவியினாலே அபிஷேகம் பெறவேண்டும். *(அப். 1:5, 8; தீத்து 3:7; 1 யோவான் 2:20).*

II. ***பாவ நிவாரணம்.*** *வச. 10-14:*

பிரதான ஊழியத்துக்கு பிரதான சுத்திகரிப்பு வேண்டும். உலகத்தீட்டு முதலாவது முழுவதுமாய் நீங்கவேண்டியது அவசியம். அதற்காக ஒரு காளையைப் பாவநிவாரணப் பலியாகச் செலுத்தவேண்டும்.

***1. அதின் தலையின்மேல் கைகளை வைப்பது.*** *வச. 10:* அந்தச் செய்கையினாலே அந்தக் காளை தங்களுக்குப் பதிலாகச் செலுத்தப்படுகிறதென்று காட்டுவதுமன்றி,

நாங்கள் எங்கள் பாவங்களை அதின் தலையின் மேல் சுமத்துகிறோம் என்பதையும் காண்பித்தார்கள்.

அப்படியே, நாமும் நம்முடைய சகல பாவங்களும் நீங்கும்படி, நம்முடைய விசுவாசமாகிய கையைப் பாவ நாசகராகிய இரட்சகர்பேரில் வைத்து அவருடைய இரட்சிப்பின் கிரியைகளை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுகிறோம். *(யோவான் 1:29; ரோமர் 5:1).*

*2.* **அதின் இரத்தத்தில் எடுத்து விரலால் பலிபீடத்தின் கொம்புகள் மேல் இடுவது.** *வச. 12:* அந்தச் செய்கையினாலே, தங்கள் ஊழியம் மிகவும் குறைவுள்ளதென்றும், தாங்கள் தொடப்போகிற பலிபீடம் முதலிய யாவற்றிற்கும் சுத்திகரிப்பு அவசியம் வேண்டுமென்றும் குறிப்பிட்டுக் காட்டினார்கள். *(எபி. 9:13, 22).*

அப்படியே, நம்முடைய ஊழியகாரியங்களிலும் ஜெபம் ஆராதனை முதலியவற்றிலும் காணப்படும் பாவங்களற, அவைகள் யாவும் இரட்சகருடைய திரு இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படவேண்டும் *(1 யோவான் 1:7).*

*3.* **அதின் மற்ற இரத்த முழுவதையும் பலிபீடத்தின் அடியிலே ஊற்றுவது.** *வச. 12:* அந்தச் செய்கையினாலே, அந்தக் காளையினுடைய இரத்தம் தங்கள் பாவங்களை நீக்கும் பலியாக ஊற்றப்படுகிறதென்றும், அதின் மரணத்தாலே தங்களுக்கு ஜீவனும் மன்னிப்புமுண்டென்றும் காண்பித்தார்கள்.

அப்படியே, கிறிஸ்து இரட்சகர் தமது திரு இரத்தம் முழுவதையும் சிந்தினதினாலே நமக்கு ஜீவனும் மன்னிப்பும் பரிசுத்தமும் உண்டு *(மத். 26:27, 28; யோவான் 19:34; ஏசாயா 53:12.)*

*4.* **அதின் கொழுப்பைப் பலிபீடத்தின் மேல் தகனித்து போடுவது.** *வச. 13:* அந்தச் செய்கையினாலே

உள்ளான பாகந்தான் முக்கியமானதென்றும், அதிலிருந்து சுகந்த வாசனை எழுப்பினால்மாத்திரம் அந்தப் பலி தேவனுக்குப் பிரியமாயிருக்குமென்றும், அந்தக் காளை முன்னடையாளமாகக் காட்டுகிற இயேசுநாதர் தம்மைத் தாமே பாவபலியாகச் செலுத்தினாலும் அவருடைய திருவுள்ளத்தில் பாவம் சிறிதேனுமில்லை என்றும் காண்பித்தார்கள்.

அப்படியே நாமும் புண்ணியநாதர் செலுத்தின சுகந்த வாசனையான பலியினிமித்தம் கர்த்தருக்குப் பிரியமான ஊழியம் செய்யக்கூடும் (எபே. *5:1*; எபி. *10:7, 9, 10*).

*5.* **அதின் மாம்சம் தோல் முதலியதைப் பாளயத்துக்குப் புறம்பே அக்கினியால் சுட்டெரித்துப் போடுவது.** வச. *14:* அந்தச் செய்கையினாலே, பாவம் தேவனுக்கு மகா அருவருப்பானதென்றும், அது அவருடைய திருச்சந்நிதானத்தில் நிற்கக்கூடியதல்லவென்றும் காட்டினார்கள்.

அப்படியே, நம்முடைய பாவத்தைச் சுமந்து தீர்த்த இரட்சகரும் நம்முடைய பாவத்தினிமித்தம் பரம பிதாவினுடைய சந்நிதிக்குப் புறம்பாக்கப்பட்டு நகரத்துக்கு வெளியே பாடுபட்டார் (ஏசாயா *53:3*; மத். *27:46*; எபி. *13:11, 12*).

III. ***சர்வாங்க தகனம்.*** வச. *15-18:*

இந்த மேன்மையான ஊழியத்துக்கு தகுதி உண்டாகும்படி அவர்களுடைய தீட்டுகள் நீங்குவதுமல்லாமல், அவர்கள் கர்த்தருக்குத் தங்களை முற்றிலும் (சர்வாங்க தகனபலியைப்போல) ஒப்புக்கொடுக்கவேண்டும், இதற்கென்று ஒரு ஆட்டுக்கடாவைச் சர்வாங்க தகன பலியாகச் செலுத்த வேண்டும்.

***1. அதின் தலையின்மேல் கைகளை வைப்பது.*** வச. *15: (1, 2 காண்க).* இதுவும் விசுவாசமாகிய கையை வைப்பதைக் குறிக்கும் *(ரோமர் 5:1).*

***2. அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிப்பது.*** *வச. 16: (2, 2. காண்க).*

இது சுத்திகரிப்பையும் பிராயச்சித்தத்தையும் குறிக்கும் *(எபி. 9:21, 22; 12:24; 1 பேதுரு 1:2).*

***3. அதைச் சந்து சந்தாகத் துண்டிப்பது.*** *வச. 17:* நம்முடைய ஆவி, ஆத்துமா, தேகம் ஒவ்வொன்றாகத் தேவனுக்கென்று ஒப்புவிப்பதுமன்றி, நம்முடைய ஒவ்வொரு அவயவத்தையும் ஒப்புக்கொடுக்க வேண்டும் *(1 தெச. 5:23; எபி. 4:12, 13; ரோமர் 6:13).*

***4. அதின் குடல்களையும் தொடைகளையும் கழுவுவது.*** *வச. 17:* நம்முடைய உள்ளிந்திரியங்கள் சுத்தமாயிருக்க வேண்டும். *(சங். 51:6, 10; மத். 5:8)* நம்முடைய நடக்கையும் துப்புரவாயிருக்கவேண்டும் *(எபே. 4:1; கொலோ. 1:10).*

**கவனிப்பு :** தம்மைத்தாமே சர்வாங்க தகனபலியாகச் செலுத்தின கிறிஸ்து இரட்சகருடைய பரிசுத்த உள்ளத்தையும் *(1 யோவான் 3:5)*, நடக்கையையும் *(1 பேதுரு 2:22)* நினைத்துக்கொள்ளுங்கள்.

***5. அதை முழுவதுமாய்த் தகித்துப்போடுவது.*** வச. *18:* அவ்விதமாய் ஒன்றும் மீதி வைக்காமல் நம்மை நாமே கர்த்தருக்கென்றும் அவருடைய ஊழியத்துக்கென்றும் சமூலமாக ஒப்புக்கொடுப்போமாக *(ரோமர் 12:1).*

IV. ***அசைவாட்டம்*** *வச. 19-28:*

இந்தச் சடங்குகள்தான் ஆசாரியர்களுடைய பிரதிஷ்டையில் முக்கியமானவை. அதற்கென்று

செலுத்தின ஆட்டுக்கடாவுக்குப் பிரதிஷ்டையின் ஆட்டுக்கடா என்று பெயர்.

*1. **அதின்மேல் கைகளை வைப்பது.** வச. (2-2 காண்க) தாங்கள் அந்தப் பலியோடு ஐக்கியமாயிருப்பதை இவ்விதமாய் காட்டுவார்கள் (பிலி. 3:10; யோவான் 17:19).*

*2. **அதின் இரத்தத்தை வலதுகாது மடலிலும், கைகால்களின் பெரு விரலிலும் இடுவது.** வச. 20: வலதுகாது மடல் அவர்களுடைய 'கேள்வியைக்' குறிக்கின்றது. வலதுகையின் பெருவிரல் அவர்களுடைய 'செய்கையைக்' குறிக்கின்றது. வலது காலின் பெருவிரல் அவர்களுடைய நடக்கையைக் குறிக்கிறது.*

*இம்மூன்றுக்கும் சுத்திகரிப்பு அவசியம் வேண்டும். அவர்கள் கேள்வி, செய்கை, நடக்கை யாவும் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்க வேண்டும். 'கேட்பது' (யோவான் 10:3, 4; சங். 40:6) 'செய்வது' (1 தீமோ. 2:8; தீத்து 2:7; எபி. 13:21); 'நடப்பது' (ரோமர். 10:15; எபே. 4:1).*

*3. **இரத்தத்தையும் தைலத்தையும் அவர்கள்மேலும் அவர்கள் வஸ்திரங்கள்மேலும் தெளிப்பது.** வச. 21: கிறிஸ்துவின் மரண புண்ணியமும் தேவாவியின் கிருபையும் நமது பேரில் காணப்படவேண்டும். அவ்விரண்டும் நம்முடைய சுத்திகரிப்புக்கும் (1 கொரி. 6:11), நம்முடைய ஊழியத்துக்கும் (அப். 4:11). அவசியமானவை.*

*4. **அவர்களுடைய கைகளை நிரப்புவது.** வச. 22, 23:*

*கவனிப்பு: பிரதிஷ்டை என்று திருத்தின எபிரேய பதத்துக்குக் 'கைகளை நிரப்புதல்' என்றர்த்தமாம். பிரதிஷ்டையாக்கப்படும் விசுவாசியின் கைகளைத் தேவன் கிறிஸ்துவினாலும் அவருடைய அருள் செல்வங்களினாலும் நிறப்புகிறாரென்றும் சொல்லலாம்.*

அல்லவென்றால், தன்னைப் பிரதிஷ்டை செய்கிறவன் கை நிறைய அருமை இரட்சகருடைய புண்ணியத்தை எடுத்துக்கொண்டு அதின் மூலமாய்த் தன்னைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கிறானென்று சொல்லலாம்.

*அ.* **கொழுப்பு, சவ்வு, குண்டிக்காய்** : உள்ளான உத்தமத்தையும் பூரணத்தையும் குறிக்கலாம். புண்ணிய நாதராகிய கிறிஸ்துவின் பரிபூரணமும் சுத்தாங்கமும் நம்மில் காணப்பட்டால்தான் நம்முடைய பிரதிஷ்டை தேவனுக்குப் பிரீதியாயிருக்கும் *(மத். 3:17; கொலோ. 1:19; யோவான் 1:16; சங். 40:8; 139:23, 24; 1 யோவான் 3:5).*

*ஆ. முன்னந்தொடை:* பெலனையும் நடக்கையையும் குறிக்கும். இரட்சகருடைய பெலனையும் பரிசுத்த நடக்கையையும் ஆதாரமாகப் பிடித்துக்கொண்டு நாம் தேவனுக்குமுன் நிற்கவேண்டும் *(சங். 89:19; 2 கொரி. 12:9; 1 பேதுரு 2:23; 1 யோவான் 2:6).*

*இ.* **புளிப்பில்லா அப்பம்** : இரட்சகருடைய மாசற்ற தன்மையைக் குறிக்கலாம் *(யோவான் 6:35; 1 யோவான் 3:5; 2 கொரி. 5:21).* அவருக்குள்ளே, நாமும் பாவமாகிய புளித்தமா நீங்கினவர்களாய்க் கர்த்தருக்கென்று நம்மைப் பிரதிஷ்டை செய்யவேண்டும் *(1 கொரி. 5:7, 8)*

*ஈ.* **எண்ணெயிலே பிசைந்த அதிரசம்**: வச. 2 காண்க. பரிசுத்த ஆவியினாலே பிறந்து வளர்ந்தேறின விசேஷத்தைக் குறிக்கலாம் *(லூக்கா 1:35; 2:40; யோவான் 3:5, 6; 2 கொரி. 3:17, 18).*

*உ.* **எண்ணெய் பூசப்பட்ட அடை**. வச. 2 காண்க. பரிசுத்த ஆவி நம்மேல் ஊற்றப்பட்ட விசேஷத்தைக் குறிக்கும் *(மத். 3:16; அப். 10:38; அப். 1:4; 2:33).* இவ்விதமாய் நாம் பாவம் நீங்கினவர்களாயும் பரிசுத்த ஆவியால்

மறுபடியும் பிறந்தவர்களாயும் அவருடைய திவ்விய அபிஷேகத்தைப் பெற்றவர்களாயும் கிறிஸ்து இரட்சகருடைய சம்பூரண புண்ணியத்தை நிறைவாக அடைந்து கொண்டவர்களாயும் கர்த்தருக்கு முன்பாக விளங்கவேண்டும்.

*5.* **திவ்விய சந்நிதானத்தில் அவைகளை அசைவாட்டுவது.** *வச. 24:* கையிலேவைத்த அந்தப் பரிசுத்த பொருள்களைக் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டுவது போல, பிரதிஷ்டையாக்கப்படும் ஆசாரியர்கள் அதுமுதல் தேவனுக்கு உபயோகமான பாத்திரங்களாய் அவருக்கென்று இருப்பார்கள், அசைவார்கள், வேலைசெய்வார்கள் என்பதைக் காட்டும்படி இது நடந்தது *(ரோமர் 6:19-22; 2 தீமோ. 2:21; சங். 40:7, 8).*

*6.* **அவைகளைச் சுகந்த வாசனையாகத்தகித்துப் போடுவது.** *வச. 25 (3:5 காண்க):* எதை அசைவாட்டினார்களோ அதை முழுவதுமாய் சர்வாங்க தகனபலியாய்ச் செலுத்தினார்கள் *(ரோமர் 14:8).*

*7.* **மற்றப்பாகங்களை ஆசாரியர்கள் பெற்றுக் கொள்வது.** *வச. 26-28:* பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவின் மார்க்கண்டத்தையும் அசைவாட்டி, பின்பு அவர்களே அதைப் பரிசுத்த போஜனமாகப் பெற்றுக்கொள்வார்கள் *(வச. 27).*

அப்படியே, மற்ற முன்னந்தொடையையும் ஏறெடுத்துப் படைத்த பின்பு பெற்றுக்கொள்வார்கள். *(வச. 27, 28).* அதுவுமன்றி, கூடையில் உள்ள மீதியான அப்பம், அதிரசம், அடைகளையும் பெற்றுக்கொள்வார்கள் *(வச. 2, 32).* 'ஏறெடுத்துப் படைக்கிற' சடங்கானது அந்த பொருள்களைத் தேவ சந்நிதானத்தில் தூக்கிக்காட்டி முழுவதுமாய் அவருக்கென்று படைப்பதைக் குறிக்கும்.

இவ்வாறு இந்தப் பிரதிஷ்டை பலிகளில் அவைகளைச் செலுத்தும் மனிதருக்கு ஒருபாகம் போஜனமாகக் கிடைக்கும் கிறிஸ்துநாதருடைய மரண புண்ணியம் நமக்கு ஆத்தும ஆகாரமாக அருளப்படுகிறது *(யோவான் 6:48, 50, 51, 54, 56).* அதோடுகூட, நம்மை நாமே ஆட்கொண்ட நாதருக்குப் பிரதிஷ்டை செய்யும் பொழுது, அவர் நம்மைப் பெலப்படுத்தித் தமது சம்பூரணத்தாலே நிரப்புகிறார் என்று அறிக. *(பிலி. 4:13, 18).*

**கவனிப்பு: இந்தப் பரிசுத்த போஜனத்தைப்பற்றி.** வச. *29-34*இல் விபரமாய் வாசிக்கிறோம். அந்தப் பரிசுத்த போஜனத்தைப் *(வச. 31, 34).* பரிசுத்தவான்கள் மாத்திரம் *(வச. 33).* பரிசுத்த இடத்திலேயே *(வச. 31, 32),* பரிசுத்த வண்ணமாகப் *(வச. 34)* புசிக்க வேண்டும்.

**கவனிப்பு:** பிரதிஷ்டையின் சடங்குகள் ஏழுநாளளவும் நடக்கும் *(வச. 35: லேவி. 8:31-34).* அதினாலே அது குறைவற பூரணமாய் நடக்கவேண்டுமென்று அறிக.

V. **பலிபீடத்தின் விசேஷம்.** *வச. 35-46.*

*1.* **பலிபீடத்தின் பிரதிஷ்டை.** *வச. 35-37:* பிராயச்சித்தம். *வச. 36.* அபிஷேகம் *வச. 36.* பரிசுத்தம். *வச. 37* அதற்குரிய பிராயச்சித்தமும் அபிஷேகமும் நடந்தபின்பு, அது பரிசுத்தமாகிறதும் அன்றி அதைத் தொடுவதெல்லாம் பரிசுத்தமாகும். *(2:2க்குச் சொல்லியவைகளைக் காண்க.)*

*2.* **பலிபீடத்தின் பிரமாணம்.** *வச. 38-42.*

***அ. சர்வாங்க தகனபலி.*** *வச. 38, 39:* நாள்தோறும் ஒரு வயதான இரண்டு ஆட்டுக்குட்டிகளைச் செலுத்துவது. நம்மை நாமே புதிது புதிதாய் ஒப்புக்கொடுப்பது *(ரோமர் 12:1).* காலைதோறும் *(சங். 5:3, புல. 3:22, 23; ஏசாயா 33:2). (மாலைதோறும் சங். 4, 7, 8; 141:2).*

ஆ. **போஜனபலி.** வச. *40:* இடித்துப்பிழிந்த எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவு. இது பரிசுத்த ஆவியைப் பெற்ற விசுவாசிகளுடைய பிரயோஜனமான ஜீவியத்துக்கும் ஊழியத்துக்கும் அடையாளம் *(ரோமர் 15:15; கலா. 5:16, 22, 23, 25).*

இ. **பானபலி.** வச. *40:* கர்த்தருக்கென்று நம்முடைய ஜீவன், சுகம், பெலன் யாவையும் முழுவதுமாய்ச் செலுத்துவது *(பிலி. 2:17; 2 தீமோ. 4:6; 1 கொரி. 15:31).*

*3.* **பலிபீடத்துக்கடுத்த வாக்குத்தத்தம்.** வச. *43-46:*

*அ. 'சந்திப்பேன்.' வச. 43.*

*ஆ. 'பரிசுத்தமாக்குவேன்.' வச. 44.*

*இ. 'வாசம்பண்ணுவேன்.' வச. 45, 46.*

**கேள்விகள் :**

*1.* இந்தச் சடங்காச்சாரங்கள் எல்லாம் ஆரம்ப பாடங்கள் என்றும் கிறிஸ்தவ ஜீவியம் தேர்ந்த வகுப்பு என்றும் எப்படிக் காண்பிக்கலாம்?

*2.* ஒவ்வொரு சிறு காரியத்திலும், மனமார்ந்த கீழ்ப்படிதல் வேண்டும். இவ்வதிகாரம் இதை உதாரணப்படுத்துவதெப்படி?

*3. 1* பேதுரு *2:5*ஐப் பார்க்க. நாம் பரிசுத்த ஆசாரியக் கூட்டமானால் நமது தேக சுத்தம், உடை, நடை முதலியவற்றில் நமது பிரதிஷ்டை எவ்வாறாயிருக்க வேண்டும்? உதாரணங்களைக்கொண்டு காண்பிக்க.

*4.* ஆசாரக்கிரியைகள் நமக்கு எவ்விதம் சோதனைக்கு இடமாகக் கூடும்?

# 30ஆம் அதிகாரம்

## சுகந்த வாசனை உண்டாகுதல்

*கவனிப்பு* : இவ்வதிகாரத்தில், சுகந்த வாசனையுள்ள தூபவர்க்கமும் அபிஷேக தைலமும் விசேஷித்துக் காட்டப்பட்டன. கர்த்தருடைய வாசஸ்தலமாகிய விசுவாசியினுடைய காரியங்களில் சுகந்தம் வீசுவது முக்கிய மென்றறிக. 'பரிசுத்தம்' என்பது இங்கே அடிக்கடி வருகிறது என்றும் காண்க.

I. **தூபபீடம்.** வச. *1-10:*

அதிலிருந்து சுகந்த வாசனை அனுதினமும் எழும்பிக் கொண்டேயிருக்கும்.

*1.* **அது வைக்கப்பட்ட ஸ்தானம்.** வச. *6:* திரைச் சீலைக்கு வெளியே நின்றாலும் அது சாட்சிப்பெட்டிக்கும் கிருபாசனத்துக்கும் முன்பாக வைக்கப்பட்டது. கர்த்தருடைய சித்தத்தையும் கிருபையையும் நமக்கு முன்பாக வைத்துக்கொண்டு ஜெபமும் ஸ்தோத்திரமும் செலுத்துவோமாக. (யோவான் *14:13, 14; 1* யோவான் *5:14, 15;* கொலோ. *3:17).* கிட்டச்சேர்ந்து ஜெப ஸ்தோத்திர தூபங்காட்டக்கடவோம் (வெளி. *8:3;* எபி. *10:19-22).*

*2.* **அதில் எழும்பும் சுகந்தம்.** வச. *7:* "அதின் மேல் சுகந்த தூபங் காட்டவேண்டும்." அவ்வாறு நம்முடைய உள்ளத்திலிருந்து ஜெபமும் ஸ்தோத்திரமும் சுகந்த வாசனையாக எழும்பக்கடவது (வெளி. *5:8; 8:3, 4;* பிலி. *4:6, 7; 1* தெச. *5:17, 18).*

*3.* **அதற்கடுத்த பிரமாணம்.** வச. *7, 8:* "நித்திய தூபம்."

*அ.* அது 'காலைதோறும்' செலுத்தப்படவேண்டும் (சங். *5:3;* மாற்கு *1:35).*

ஆ. அது 'மாலைதோறும்' செலுத்தப்படவேண்டும் *(சங். 4:1, 8; 141:2; மத். 14:23).*

**கவனிப்பு :** 'விளக்குகளை சுத்தம் செயும்போதும் ஏற்றும்போதும்' தூபம் காட்ட வேண்டியதிருந்ததே. ஜெபத்துக்கும் பிரகாசத்துக்கும் சம்பந்தமுண்டு என்றறிக *(அப். 4:31-35).*

**4. அதனுடைய பரிசுத்தம்.** *வச. 9, 10:*

அ. அதின்மேல் அந்நிய தூபத்தையும் மற்றப் பலிகளையும் செலுத்தலாகாது *(வச. 9)* கள்ள ஜெபமும் ஸ்தோத்திரமும் வேண்டாம் *(மத். 15:8; யோவான் 14:6).* ஆவிக்குரிய பலியே பலி *(1 பேதுரு 2:5; எபி. 13:15).*

ஆ. அதற்கு விசேஷித்த சுத்திகரிப்புமுண்டு *(வச. 10; 1 யோவான் 1:7; எபி. 10:22).*

**II. பாவ நிவர்த்தி பணம்.** *வச. 11-16:*

*1.* **அதற்கிட்ட பெயர்.** அது 'மீட்கும்பொருள்' என்றும் 'பாவ நிவர்த்தி பணம்' என்றும் சொல்லப்படும் *(வச. 12, 16).*

இஸ்ரவேல் வம்சத்தில் பிறந்ததுமாத்திரம் போதாது; மீட்கும் பொருளும் அவசியம் வேண்டும் *(1 பேதுரு 1:18, 19; வெளி. 5:9, 10).*

**2. அது கொடுக்கப்படும் சமயம்.** *வச. 12-14:* "அவர்களில் ஒவ்வொருவனும் எண்ணப்படும் சமயத்தில், கொடுக்கக்கடவன்" *(எசே. 20:37 ஒத்துப்பார்க்க).*

தேவனுடைய ஊழியக்காரராகவும் போர்வீரராகவும் எண்ணப்படுமுன் ஒவ்வொருவனும் இந்த மீட்கும் பொருளைக் கொடுக்கவேண்டும். அவ்வாறு மீட்கப் பட்டவர்கள் மாத்திரம் தேவனுக்கு ஊழியம் செய்யவும்

அவர் கொடியின்கீழ் நிற்கவும்தக்கவர்கள். மீட்பில் பங்குபெறாதவர்கள் அவருடைய மெய்ச்சபையில் சேர்ந்தவர்களல்ல. *(வெளி. 1:6; எபே. 2:13).*

***3. அதற்கடுத்த பிரமாணம்.*** *வச. 13, 15:* "பரிசுத்த ஸ்தலத்துச்சேக்கல் கணக்கின்படி அரைச்சேக்கல் கொடுக்க வேண்டும்."

சாதாரண சேக்கல் வேறு; பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் வேறு. தேவனுடைய வைதீக கணக்கின்படி இந்த மீட்கும் பொருள் கொடுக்கப்படும் *(எபி. 10:6, 7; கலா. 3:10-13).* இந்த காரியத்தில் ஐசுவரியவானுக்கும் தரித்திரனுக்கும் வித்தியாசமேயில்லை *(வச. 15; ரோமர் 3:22-24).*

***4. அது உபயோகமான விதம்.*** *வச. 16:* ஆசரிப்புக் கூடாரத்தின் திருப்பணிக்கு உபயோகமானது.

இந்த பாவநிவிர்த்தி பணத்தினாலே வெள்ளிப் பாதங்களும் தூண்களின் பூண்களும் செய்யப்பட்டன *(38:25-28).* ஆகவே, வாசஸ்தலமானது மீட்கும் பொருள் பேரில் ஸ்தாபிக்கப்பட்டதெனலாம் *(எபே. 2:13-22).*

**கவனிப்பு:** கிறிஸ்து இரட்சகர் நம்மை மீட்கும் பொருளாகச் செய்த பலியும் 'சுகந்த வாசனையாக' இருக்கிறது *(எபே. 5:2).*

III. **ஸ்நானத்தொட்டி.** *வச. 17-21:*

'கழுவு' என்பது திரும்பத்திரும்ப வந்ததைக் காண்க.

***1. எதிலே கழுவவேண்டும்?*** வெண்கலத்தால் செய்த தொட்டியில் *வச. 18* வெண்கலம் முக்கியமாய்ப் பலிபீடத்தின் சம்பந்தமாக வரும் என்று முந்திப் பார்த்தோம் *(27:1-4).*

***2. எதினாலே கழுவவேண்டும்?*** தண்ணீரினாலே : அதிலே தண்ணீர் வார்ப்பாயாக.' *வச. 18:* இந்த

வெண்கலமும் தண்ணீரும் கிறிஸ்து இரட்சகருடைய பிராயச்சித்த புண்ணியத்தை உணர்த்திக் காட்டுகிறது *(சங். 26:7; எபே. 5:26; எபி. 10:22; 1 யோவான். 5:6).*

***3. எவைகளைக் கழுவவேண்டும்?*** *வச. 19, 21:* 'கைகள்' என்பது கிரியையைக் குறிக்கிறது *(சங். 26:7; எபி. 13:21).*

'கால்கள்' என்பது நடக்கையைக் குறிக்கிறது *(யோவான் 13:10; எபே. 4:1).*

***4. எப்பொழுது கழுவவேண்டும்?*** *வச. 20:*

*அ.* 'ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்போதும்' *(சங். 24:3, 4; எபி. 10:19-22).*

*ஆ.* 'பலிபீடத்தினிடத்தில் ஆராதனைச்செய்யச் சேரும் போதும்' *(சங். 26:7; ஏசாயா 52:11; 2 தீமோ. 2:21).* அதாவது, தேவ ஐக்கியத்துக்கும் தேவ ஊழியத்துக்கும் பரிசுத்தம் அவசியம் வேண்டும். இதனாலே தொட்டியானது வாசஸ்தலத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவில் வைக்கப்பட்டது *(வச. 18).*

***5. ஏன் கழுவவேண்டும்?*** *வச. 20, 21;* 'சாகாதபடிக்கு' *(எபி. 12:14, 29; வெளி. 21:27).*

IV. ***அபிஷேக தைலம்.*** *வச. 22, 23:*

***1. அதில் கலந்த சுகந்த வர்க்கங்கள்.*** *வச. 23-25:* வெள்ளைப் போளமும் கருவாப்பட்டையும் வசம்பும் இலவங்கப்பட்டையும் ஒலிவ எண்ணெயுமாகிய இவ்வைந்து வாசனைத் திரவியங்களுமே *(உன். 4:14; 45:8).* அதனதன் இடை திட்டமாய்க் குறிக்கப்பட்டுப் பரிசுத்த ஸ்தலத்துக்குச் சேக்கலின்படி நிறுத்தப்படும்.

இந்த அபிஷேகதைலம் பரிசுத்த ஆவியானவருக்கு அடையாளம் *(2 கொரி. 1:21, 22; 1 யோவான் 2:27).* அதில்

கலந்த சுகந்தவர்க்கங்கள். அவருடைய கிருபா வரங்களைக் குறிக்கலாம் (ஏசாயா 11:2). அவருக்குள் ஞானம், உணர்வு, என்னும் வரமும் (அப். 6:3; கொலோ. 1:9). 'ஆலோசனை,' என்னும் வரமும், (சங். 16:7; அப். 8:29), 'பெலன்' என்னும் வரமும் (லூக்கா 4:14;அப். 1:8; 4:31 33, 'அறிவு' என்னும் வரமும் (1 கொரி. 1:5; 1 யோவான் 2:20), 'கர்த்தருக்குப் பயப்படுகிற பயம்' என்னும் வரமும் (அப். 9:31) நமக்கு அளிக்கப்பட்டன.

**2. அது உபயோகமான விதங்கள்.** வச. 26-30 அதினாலே:

அ. ஆசரிப்புக் கூடாரத்துக்கடுத்த சகல சாமான் பணிமுட்டுகளும் அபிஷேகம்பெற்ற மகா பரிசுத்தமாகும். (வச. 26-29).

ஆ. ஆசாரியராகிய ஊழியர்களும் அபிஷேகம்பெற்றுப் பரிசுத்தராவார்கள் (வச. 30). அவ்வாறே, நாமும் தேவ ஆவியினால் அபிஷேகம் பெற்றுப் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டியது அவசியம் (லூக்கா 4:18; அப். 1:4, 5; 1 தெச. 4:3).

நமது ஜீவியம், ஊழியம், ஜெபதவம், துதிதோத்திரம் முதலான யாவற்றிலும் அவருடைய கிருபையும் சுகந்த வாசனையும் விளங்கவேண்டியது .அவசியம் (அப். 6:8, 10; கலா. 5:16, 22-25; எபே. 5:18-20; யூதா. 20).

**3. அதற்கடுத்த பிரமாணங்கள்.** வச. 31-33:

**அ. அந்நியன்மேல் அதை வார்க்கலாகாது.** வச. 33, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் உத்தம விசுவாசிகளுக்கு மாத்திரமுரியது (ரோமர் 8:9; எபே. 1:13, 14).

**ஆ. ஆசாரியரல்லாத மனிதருடைய சரீரத்தின்மேல் அதை வார்க்கலாகாது.** வச. 32 அது பிரதான

ஆசாரியனுடைய சரீரத்தின்மேல் ஊற்றப்படும் *(சங். 133:2)*. நமது பிரதான ஆசாரியராகிய கிறிஸ்துவினிடத்திலிருந்து மாத்திரம் இந்தத் தேவ அபிஷேகம் இறங்கி வருகிறது *(அப். 2:33)*. மாம்சத்திற்கேதுவாக நாம் அதை விரும்பவும் வேண்டாம்; உபயோகிக்கவும் வேண்டாம் *(கலா. 5:13, 16, 17)*. இந்தப் பரம அபிஷேகம் மாம்சத்துக்கு அலங்காரமாகவாவது வாசனையாகவாவது அருளப்படவில்லை.

இ. 'அதற்கொப்பான வேறு தைலத்தைச் செய்யலாகாது.' வச. *32, 33:* போலி அபிஷேகம் ஆகாது; கள்ளத்தனமான தைலம் காய்ச்சுதலும் வேண்டாம் *(1 யோவான் 4:1; அப். 8:18-21)*.

V. **தூபவர்க்கம்.** வச. *34-38:*

வேதவாக்கியங்களில் ஜெபமானது தூபவர்க்கத்துக்கு ஒப்பிட்டுப் பேசப்படுகிறது *(வெளி. 5:8; 8:3, 4)*.

***1. தேவ கட்டளையின் பிரகாரமே அது செய்யப்பட வேண்டும்.*** வச. *34, 35:* அதிலே, சமநிறையாக வெள்ளைப் போளமும் குங்கிலியமும் அல்பான் பிசினும் சாம்பிராணியுமாகிய நாலு பொருள்கள் ஒன்றாய்க் கலந்தன. அவ்வாறு, நாம் தேவனை நோக்கிப்பார்க்கும்போது 'விண்ணப்பம்,' 'ஜெபம்,' 'வேண்டுதல்,' 'ஸ்தோத்திரம்.' ஆகிய இந்நான்கும் வரவேண்டும் *(பிலி. 4:6; 1 தீமோ 2:1 பிலிப்பியர் நிருபத்தின் வியாக்கியானம் காண்க)*.

மேலும், 'அதற்கு பரிமளமேற்றவேண்டும்' என்றிருப்பதால் *(வச. 35)*. நம்முடைய ஜெபத்திலெல்லாம் இரட்சகர் இயேசுவினுடைய திருப்புண்ணியம் நற்கந்தமாக வீசுவது அவசியமென்றறிக *(யோவான் 16:24, 26, 27)*.

***2. அதில் கொஞ்சம் மாதிரியாக தேவ சந்நிதியில் வைக்கப்படவேண்டும்.*** வச. *36* அது மகா பரிசுத்தமாக எண்ணப்படும்.

நமக்கு மாதிரியாக இயேசுநாதர் ஓர் விசேஷித்த ஜெபத்தையும் கற்றுக் கொடுத்திருக்கிறாரே (லூக்கா *11:1-4*; *மத். 6:7-13*). அதிலும் விண்ணப்பமும் ஜெபமும் வேண்டுதலும் ஸ்தோத்திரமும் அடங்கியிருக்கின்றது.

*3.* ***அது கர்த்தருக்கென்றே முழுவதுமாய்ச் செலுத்தப்படவேண்டும்.*** *வச. 37, 38:* இந்தத் தூபவர்க்கத்தை உங்களுக்காகச் செய்து கொள்ளலாகாது *(மத். 6:5, 6)*. அதற்கு ஒப்பானதை முகருகிறதற்காகச் செய்யலாகாது *(லூக்கா 18:11, 12)*.

தேவனுக்கு மகிமையாகமாத்திரம் ஜெபிப்பது உத்தமம். மற்ற ஜெபமெல்லாம் வியர்த்தமும் பாவமுமாமே (மத். *15:7-9; 23:14)*.

**கேள்விகள்:**

*1.* தூபப்பீடம் இல்லாத சபை தேவதூஷணமாகும் என்று ஒருவர் சொல்லியிருக்கிறார். இதன் அர்த்தம் என்ன?

*2.* வச. *12.* "அவர்களில் ஒவ்வொருவரும் தன் தன் ஆத்துமாவுக்காக மீட்கும் பொருளைக் கொடுக்கக்கடவன்" என்பதையும் வச. *15*, ஐசுவரியனும் தரித்திரனும் சமமான தொகையைக் கொடுக்கவேண்டும் என்பதையும் படித்த பின் தனியாளுக்குரிய இரட்சிப்பை உதாரணப்படுத்துக.

*3.* ஆரோனும் தன் குமாரரும் கழுவப்பட்டவர்களாயினும் கூடாரத்திற்குள் போகும்போதெல்லாம் கைகளையும் கால்களையும் கழுவவேண்டும். வச. *19, 20.* இதனால் கிறிஸ்தவனுக்கு ஏற்கும் போதனை என்ன?

# 31ஆம் அதிகாரம்

## ஆவியின் ஞானம் அருளப்படுதல்

*1. தேவாவி அருளும் ஞானம். வச. 1-11.*

*மாதிரியைக் காண்பித்தவர் அதின்படி செய்வதற்கான ஞானத்தையும் பெலனையும் அருளுகிறார்.*

***1. ஏற்ற வேலையாள்களை எழுப்புகிறார்.*** *வச. 2, 6. 'பெசலேயேல்' என்பதற்கு 'தேவனுடைய நிழலிலிருக்கிறவன்' என்றர்த்தமாம். 'அகோலியாப்' என்பதற்கு 'என் பிதாவின் கூடாரம்' என்றர்த்தம்.*

*இந்த நாமங்கள் காரியத்துக்கும் ஊழியத்துக்கும் தகுந்தவைகள். தேவனுடைய நிழலில் தங்கி (சங். 91:1) அவர் அருளும் கிருபையையும் ஞானத்தையும் பெறுகிறவர்கள்தான் தங்கள் பரம பிதாவின் ஆசரிப்புக் கூடாரத்தைச் செய்யத்தக்கவர்கள். நமதருமைநாதர் இவ்வாறு உன்னதமானவருடைய நிழலில் தங்கித் தமது திருச்சபையை ஸ்தாபித்தார் (யோவான் 8:29; அப். 2:25). அச்சபையின் விருத்திக்கு ஏதுவாக ஊழியம் செய்கிறவர்களும் அப்படியே கர்த்தருடைய சந்நிதானத்திலே தரித்திருந்து ஞானத்தையும் பெலனையும் பெறவேண்டியது இன்றியமையாத அவசியம் (எபே. 4:11-13; அப். 4:31-35).*

*கர்த்தர் 'யூதா' கோத்திரத்தில் ஒருவனும் தாண்' கோத்திரத்தில் ஒருவனுமாக இந்த இரண்டு விசேஷித்த ஆள்களைத் தெரிந்துகொண்டார். யூதாவில் துதியும்' (ஆதி. 29:35). தாணில் 'நீதி நியாயமும்' (ஆதி. 30:6) சிறந்து விளங்குகிறது. அப்படியே, தேவனுடைய வாசஸ்தலமாகிய ஆசரிப்புக்கூடாரத்தில் துதி செலுத்தப்படும். நீதி நியாயமும் போதிக்கப்படும். நம்முடைய ஊழியத்திலெல்லாம் துதியும் நீதி நியாயமும் விளங்கவேண்டும். (அப். 16:25; 24:16).*

**கவனிப்பு** : கர்த்தர் தமது வேலையாள்களைப் 'பேர் சொல்லி அழைக்கிறார்' *(வச. 2)*. பழைய ஏற்பாட்டில் எப்படியோ புதிய ஏற்பாட்டிலும் அப்படியே *(மாற்கு 3:13-19; அப். 13:1, 2)*. அவரால் அழைக்கப்பட்டவர்கள் மாத்திரம் பரிசுத்த பணிவிடையைச் செய்யத்தக்கவர்கள்.

**2. அவர்களைத் தேவ ஆவியினால் நிரப்புகிறார்.** *வச. 5* தேவ ஆவியை நிறைவாய்ப் பெற்றவர்கள்மாத்திரம் அவருடைய சித்தத்தை நிறைவேற்றவும் அவர் கட்டளையிட்ட மாதிரியின்படியே வேலை செய்யவும் கூடியவர்கள் *(சக. 4:6, 7)*. அவ்விதமே, ஆவிக்குரிய வேலைகளுக்கும் திருச்சபையாகிய வாசஸ்தலம் கட்டப்படுவதற்கும் *(எபே. 2:20-22)*. பரிசுத்த ஆவியின் நிறைவான கிருபை அவசியம் வேண்டும் *(லூக்கா. 3:21-23; 4:1, அப். 1:8)*.

**3. வேண்டிய ஞானத்தை அநுக்கிரகிக்கிறார்.** *வச. 5, 6:* 'யோசித்துச் செய்கிறதற்கும்' *(வச. 3)*. 'வேலைசெய்கிறதற்கும்' *(வச. 3, 4)*. 'யூகித்துச் செய்கிறதற்கும்' *(வச. 5)* விசேஷித்த ஞானம் அவசியமானது.

அந்தத் தொழிலாளிகள் மகா திறமையுடையவர்கள் என்றாலும் இந்தத் திவ்யமான வேலைகளைத் தங்கள் சொந்த யுத்தி புத்தியினாலே செய்யக்கூடாதவர்களா யிருந்தார்கள். ஆகையால் கர்த்தர் அதற்கென்றே தம்முடைய ஆவியினாலே விசேஷித்த வரங்கள் அருளிச் செய்தார். 'வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும்' கொடுக்கப்பட்டன. கர்த்தருடைய வேலைக்குப் பரம ஞானம் தீராத அவசியமானது *(அப். 4:13, 14; 6:3, 10)*. அது எந்த மெய் விசுவாசிக்கும் கிடைக்கத்தக்கது *(யாக். 1:5, 6; 3:17)* அது அந்தந்த வேலைக்கும் காரியத்துக்கும் தக்கதாக அருளப்படுகிறது. *(1 கொரி. 12:7-11)*.

II. **ஓய்வுநாள் விசேஷம்.** *வச. 12-17:*

*35ஆம் அதிகாரத்திலும் ஓய்வுநாள் ஆசரிப்புக் கூடாரமும் சம்பந்தப்பட்டு வருகிறதென்று காண்க. கர்த்தர் வாசஸ்தலத்தின் மாதிரியை விவரமாய்க் காட்டினபின்பு ஓய்வுநாள் விசேஷத்தை எடுத்துக் காண்பிக்கிறார். ஆண்டவருடைய வாசஸ்தலமாகத் தங்களை முற்றிலும் ஒப்புக்கொடுத்தவர்களுக்கே பூரண இளைப்பாறுதல் உரியது. (மத். 11:29).*

**பரிசுத்த ஓய்வுநாள் :**

*1. அடையாளமாயிருக்கிறது. வச. 13, 17.*

*அ. வேலை முடிந்ததற்கும் வச. 15, 17 (எபி. 4:3, 4, 10)*

*ஆ. கர்த்தர் பரிசுத்தப்படுத்துகிறவர் என்பதற்கும் வச. 13.*

*ஆகவே, உத்தம விசுவாசியானவன். ஓய்வுநாள் தோறும் இரட்சிப்பின் கிரியைகள் யாவும் முடிந்ததால் என் ஆத்துமாவுக்குப் பூரண இளைப்பாறுதலுண்டென்பதையும் என்னில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள்பரியந்தமும் முடிய நடத்தி (பிலி. 1:5) என்னைக் குறைவறப் பரிசுத்தமாக்குவாரென்பதையும் இவ்வடையாளத்தினாலே அறிந்து உணர்ந்து தைரியங் கொள்ளத்தகும்.*

**கேள்விகள்:**

*'உடன்படிக்கையாயிருக்கிறது' வச. 16, 'நித்திய உடன்படிக்கை' அவர் நம்முடைய தேவனென்றும் நாம் அவருடைய ஜனமென்றும் அதினாலே நாம் அறிந்து கொள்ளலாம். ஆகவே, மெய்கிறிஸ்தவன் ஓய்வுநாள் தோறும் பரவசமாகி, என்னோடு உடன்படிக்கை செய்த "இந்தத் தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும்*

என்னுடைய தேவன்; மரணபரியந்தம் என்னை நடத்துவார்" *(சங். 48:14)* என்று மனம் தேறிக் களிகூறுவான்.

**கேள்விகள்:**

*1.* பெசலெயேல், அகோலியாப் இவர்கள் செய்த வேலைகளுக்கொப்பான வேலைகளைச் செய்வதற்குத் தற்காலம் கர்த்தருடைய ஆவிவேண்டுமென்று சொல்லத் தகுந்ததைக் காண்பிக்க.

*2.* ஓய்வுநாளில் வேலை செய்தவனை நாம் மரணத்திற்குள்ளாக்கமாட்டோம். ஓய்வு நாள்களை ஆசரிப்பதற்குரிய கற்பனைகளை தற்காலத்தில் நாம் எதுமட்டும் கைக்கொள்ள வேண்டும்?

*3.* ஓய்வுநாள் காலமே ஆலய ஆராதனைக்குப்போய் அன்று சாயங்காலம் வேலைக்குப்போனவன் ஓய்வுநாளை ஆசரித்து வந்ததாகச் சொல்லக்கூடுமா?

*4.* வச. *18.* தேவனுடைய விரலினால் எழுதப்பட்டது என்றால் என்ன?

# 32ஆம் அதிகாரம்

## சபை தீட்டுப்பட்டுப்போகுதல்

**கவனிப்பு:** மலையின்மேலே கர்த்தர் காண்பித்த பரிசுத்த வாசஸ்தலத்தின் மாதிரிக்கும் கீழே ஜனங்களுக்குள் நடந்த அசுத்தங்களுக்கும் எவ்வளவோ பெரிய பேதமுண்டு *(மத். 17:1-8; 14-18* ஒத்துப் பார்க்க, பாவத்தினால் கறைப்பட்ட சபைதானோ ஆண்டவருக்கேற்ற வாசஸ்தலம்?

I. **கள்ள ஆராதனை நடப்பது.** வச. *1-16:*

*1.* **கள்ளத் தெய்வங்கள்.** வச. *1-4.*

மேலே மெய்த்தேவன் தமது விசேஷங்களை வெளிப்படுத்துகிறார் *(29:45)*.

**கீழே**: ஒரு பொற்கன்றுக்குட்டியை வார்ப்பித்து வணங்கி, "இஸ்ரவேலரே, உங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே" என்று ஆர்ப்பரிக்கிறார்கள்.

***2. கள்ளக் காணிக்கைகள்.*** *வச. 2:*

**மேலே**: *பரிசுத்த கர்த்தர் தமது வாசஸ்தலத்தை உண்டு பண்ணுவதற்குப் பொன் முதலிய பரிசுத்த காணிக்கை களைக் கொண்டுவர உத்தரவு அருளுகிறார் (25:1-9).*

**கீழே**: *தங்கள் பொன்னணிகளைக் கழற்றிக் கள்ளத் தெய்வங்களுக்குக் கள்ளக் காணிக்கையாக கொடுக்கிறார் கள்.*

***3. கள்ளப் பலிபீடம்.*** *வச. 5.*

**மேலே**: *கர்த்தர் பரிசுத்த பலிபீடத்தின் மாதிரியைக் காண்பித்து அதற்கடுத்த பிரமாணத்தையும் அருளிச் செய்கிறார் (27:1-8; 29:38-41).*

**கீழே**: *தங்கள் விக்கிரகத்துக்கு முன்பாக ஒரு பலி பீடத்தைக் கட்டி அதை நமஸ்கரிக்கிறார்கள்.*

***4. கள்ளப் பண்டிகை.*** *வச. 5:*

**மேலே**: *மகா தயாபரராகிய தேவன் பக்தி விருத்திக்கு ஏதுவாகப் பரிசுத்த பண்டிகைகளை ஏற்படுத்துகிறார் (23:14-19).*

**கீழே**: *தங்கள் விக்கிரகத்துக்கு மகிமையாக ஓர் பண்டிகையை நியமித்து அவலட்சணமான காரியங்களைச் செய்து அதை ஆசரிக்கிறார்கள் (வச. 25: 1 கொரி. 10:6,7).*

*5. **கள்ளப் பலிகள்.** வச. 6:*

**மேலே:** *கர்த்தர் சர்வாங்க தகனபலி முதலிய பரிசுத்த பலிகளுக்கு ஏற்பாடு செய்கிறார் (29:1-44).*

**கீழே:** *ஜனங்கள் தங்கள் கன்றுக்குட்டிச் சுவாமிக்கு சர்வாங்க தகன பலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்துகிறார்கள்.*

*இவ்விதமாய், கர்த்தர் ஏற்படுத்தும் மெய்யான ஆராதனைகளைப் பிசாசானவன் கண்டு அவைகளுக்குப் பதிலாகப் பொய்யான ஆராதனைகளை அனுசரிக்க ஜனங்களை ஏவிவருகிறான் (மத். 6:1, 2, 5; 15:8, 9. ஏசாயா 1:12, 13; லூக்கா 18:11, 12; அப். 5:1-5).*

*கள்ளத்தனமான ஆராதனை, காணிக்கை, ஜெபம் முதலியவற்றைக் குறித்து எச்சரிக்கையாயிருப்போமாக.*

II. ***கர்த்தருடைய கோபம் பற்றியெரிவது.*** *வச. 7-14:*

*1. **தேவனுடைய கோபம்.** வச. 7-10:*

***அ. பார்த்தார்.*** *வச. 9, அவர்களை எப்படிப்பட்டவர்களென்று கண்டார்? தங்களைக் கெடுத்துக்கொண்டவர்கள் (வச. 7). சீக்கிரமாய் வழியைவிட்டு விலகினவர்கள் (வச. 8). வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள் (வச. 9). ஐயோ! மீட்கப்பட்ட சபை பாவம்நிறைந்த சபையாகக் காணப்பட்டது.*

***ஆ. விசனப்பட்டார்.*** *வச. 10: அவருடைய பரிசுத்த கோபம் மூண்டெரிந்தது. (ஆப. 1:13; சங். 7:11; வெளி. 6:16, 17).*

***இ. அழிக்க இருந்தார்.*** *வச. 10 **நான் இவர்களை அழித்துப்போட நீ என்னை விட்டுவிடு** (சங். 7:12, 13; எபி. 12:29).*

***கவனிப்பு:*** *உத்தம தாசருடைய விசுவாசமும் வேண்டுதலும் தேவனுக்கு அருமையானது. அவர்கள்*

நிமித்தம் பாவிகளுக்குப் பொறுத்துக்கொண்டே வருகிறார் (ஆதி. 19:29; 1 சாமு. 7:8-10; 1 இரா. 18:42-45 யோபு 42:7-9).

2. **மத்தியஸ்தனுடைய விண்ணப்பம்.** வச. 11-13: மூன்று முகாந்தரங்களை எடுத்துக்காட்டி இரக்கம் செய்யக் கெஞ்சுகிறான்.

அ. **இரட்சிப்பின் கிரியைகளினிமித்தம்.** வச. 11:

ஆ. **திவ்விய மகிமையினிமித்தமும்.** வச. 12:

இ. **வாக்குத்தத்தங்களினிமித்தமும்.** வச. 13:

இரங்கவேண்டுமென்று மன்றாடுகிறான்.

நாமும் கிறிஸ்துவினாலுண்டான இரட்சிப்பையும் (1 தீமோ. 1:15; 1 யோவான் 2:2) தேவனுடைய மகிமையையும் (லூக்கா 15; 7, 10; வெளி. 5:9-14) அவர் அருளின வாக்குத்தத்தங்களையும் (யோவான் 3:16; 1 தீமோ. 2:4, 5), முகாந்தரமாகக் காட்டி பாவிகளுக்காக வேண்டுதல் செய்யத்தகும் (1 யோவான் 2:1).

3. **கர்த்தருடைய பரிதாபம்.** வச. 14: பாவிகளைத் தண்டியாமல் விடுவார் என்றல்ல. அந்தப் பாவிகள்மேல் தண்டனை வந்துவிட்டது (வச. 25-29).

ஆகிலும் அந்த ஜாதியை முற்றிலும் அழிக்காதபடிக்கு, மோசே எடுத்துரைத்த முகாந்தரங்களை அங்கீகரித்து இரக்கம் பாராட்டினார். அவருடைய திருஉள்ளத்தில் எப்பொழுதும் பொங்கிக்கொண்டேயிருக்கிற பரிதாபங்கள் (ஓசியா 11:8) மேலிட்டன.

III. **கற்பலகைகள் உண்டாக்கப்படுவது.** வச. 15-24:

1. **தேவன் அருளின பலகைகள்.** வச. 15, 16: அவைகள் அவரால் செய்யப்பட்டது; அவைகளில் எழுதிய கற்பனைகள் அவராலே எழுதப்பட்டது. இந்தப் பரிசுத்த பலகைகள் எவ்வளவாய் நன்குமதிக்க வேண்டியதோ

அவற்றில் எழுதிய கட்டளைகளை அவ்வளவாய்க் கைக்கொள்ளவும் வேண்டியது. ஆனாலும், ஐயோ, அவைகளைச் சபையின் மத்தியில் கொண்டுவரும் முன்னமே பெரிய மாறுதல் நடந்திருந்ததே.

*2.* **ஜனங்கள் பண்ணின ஆரவாரம்.** *வச. 17, 18 :* யோசுவா நினைத்தபடி அது யுத்த ஆரவாராமல்ல. ஜெய ஆரவாரமுமல்ல. கர்த்தருடைய வாசஸ்தலமாயிருக்க வேண்டிய அந்தப் பாளையத்தில் எழும்பின சத்தம் பரிசுத்த ஆராதனையின் சத்தமுமல்ல; இரட்சிப்பின் சந்தோஷ சத்தமுமல்ல; ஊக்கமான ஜெபத்தின் சத்தமுமல்ல; அது பாவப் பாடலின் சத்தமே.

தீட்டுப்பட்ட சபையிலும் கறைப்பட்ட இருதயத்திலுமிருந்த தேவ சந்நிதியிலே எழுப்புகிற சத்தம் தீமையான சத்தமேயன்றி வேறல்ல (ஆதி. 18:21; எசே. 14:4, 5; மத். 15:7, 8, 19).

*3.* **மோசே காட்டின வைராக்கியம்.** *வச. 19, 20:*

*அ.* **பலகைகளை உடைத்துப் போட்டான்.** *வச. 19.* அவன் கோபங்கொண்டு அவைகளை உடைத்துப் போட்டது தப்பிதம்; என்றாலும் உடைந்த பலகைகள் ஜனங்கள் கர்த்தருடைய கற்பனைகளை மீறிப் பாவிகளான நிலைமைக்கு ஏற்ற அடையாளம் (ரோமர் 3:23; எபி. 8:9-12).

*ஆ.* **கன்றுக்குட்டியை அழித்துப்போட்டான்.** *வச. 20:* **''அதைச் சுட்டெரித்துப் பொடியாக அரைத்துத் தண்ணீரின்மேல் தூவி அதை இஸ்ரவேல் புத்திரர் குடிக்கும்படி செய்தான்.''** இவ்வாறு, அந்தப் பாவிகள் தங்கள் வழியின் பலனைப் புசித்தார்கள்.' நீதி. 1:31. பாவம் செய்கிற மனுஷன் தன் பாவத்தாலுண்டாகும் பலனை அனுபவிக்கவேண்டியது வரும் (ஏசாயா 1:2-6; கலா. 6:7).

*4.* **ஆரோன் சொன்ன சாக்குப்போக்கு.** *வச. 21-24.* தன் பேரிலல்ல மற்றவர்கள்பேரில் குற்றம் இருப்பதாகவும்

*(வச. 21, 22).* இந்தத் துர்க்காரியம் தானாய் நடந்ததுபோலவும் *(வச. 24)* பேசுகிறான்.

குற்றம் செய்தும் தங்கள் குற்றத்தை நன்குணர்ந்து வெறுக்காதவர்களுடைய வாயில் இவ்விருவிதமான சாக்குப் போக்கு காணப்படுவது வழக்கம் *(ஆதி. 3:12, 13; 1 சாமு. 15:15, 20, 21; 1 இரா. 18:17, 18).* இதனால், மனந்திரும்பினவன் இன்னான் என்றும், மனந்திரும்பாதவன் இன்னான் என்றும் வகையறுத்து அறிந்துகொள்ளலாம். மெய்யாய் மனந்திரும்பின மனிதன் போக்குச் சொல்ல மாட்டான் *(சங். 51:1-7).*

IV. ***கர்த்தருடைய பட்சத்தில் நிற்பது.*** *வச. 25-35:*

*1.* ***ஜனங்கள் அடைந்த அவமானம்.*** *வச. 25.* ***"ஜனங்கள் தங்கள் பகைவருக்குள் அவமானப்படத் தக்கதாக ஆரோன் அவர்களை நிர்வாணமாக்கியிருந்தான்."*** அப்படியானால் அவன் சாக்குப்போக்குச் சொல்வதினால் பிரயோஜனம் என்ன? வச. 21-24.

சபையார் பாவம் செய்யும்போது சத்துருக்கள் கெம்பீரிக்கிறார்கள். ஆண்டவருடைய திருநாமம் அதினாலே தூஷிக்கப்படுகிறது *(ஆதி. 13:7; 34:30; 2 சாமு. 12:14; ரோமர் 2:24).*

***2. லேவியர் காட்டின பக்தி வைராக்கியம்.*** அவர்கள் அந்த விக்கிரகாராதனைக்குட்படாதவர்கள் என்று தோன்றுகிறது.

*அ.* ***தேவனுடைய பட்சத்தில் தைரியமாய் நின்றார்கள்.*** *வச. 26.* மற்றவர்களை விட்டுப்பிரிந்து கர்த்தரண்டையில் சேர்ந்து நின்றார்கள்.

சபை சுத்தமாக வேண்டுமென்றால் மெய்பக்தர் எல்லாரும் இவ்வாறு செய்து இரட்சிப்பின் கொடியை

அஞ்சாமல் தஞ்சமாய்க்கொள்ள வேண்டும் *(2 கொரி. 6:17, 18; எபி. 13:13).*

***ஆ. கர்த்தருக்குத் தங்களை முற்றிலும் பிரதிஷ்டை செய்தார்கள்.*** *வச. 28:* அவருடைய மகிமை ஒன்றையே நாடி அவருடைய சித்தத்தை நிறைவேற்றும்படிக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். இவ்விதமான பிரதிஷ்டை நமக்குள்ளும் அவசியம் வேண்டும் *(ரோமர் 6:11, 13, 22; 12:1, 2; பிலி. 3:7-11; 2 கொரி. 7:11).*

***இ. பாவத்தை அகற்றிவிட முயற்சி பண்ணினார்கள்.*** *வச. 27.* நாமும் தேவனுடைய வசனமாகிய பட்டயத்தை எடுத்துக் கொண்டு *(எபே. 6:17; யோவான் 17:17)* சபையைச் சுத்திகரிக்கும்படி பிரயாசப்படுவோமாக.

இவ்விதம் செய்பவர்களுக்கு சிறப்பான ஆசீர்வாதம் கிடைக்கும் *(வச. 22; உபா. 33:8-11; மல். 2:4-7; மாற்கு 3:34, 35).*

***3. மோசே செய்த ஜெபம்.*** *வச. 30-35:* பாவத்தால் கறைப்பட்ட தன் ஜனங்களுக்காக எவ்வளவோ வாஞ்சையோடு வேண்டுதல் செய்கிறான்; அவர்களுக்காகப் பாவ மன்னிப்பைக் கருத்தோடே தேடுகிறான். இவ்வசனங்களில் உணர்த்திய விசேஷங்கள் எவையென்றால்:

***அ. பாவத்தை நன்குணரவேண்டும்.*** *வச. 30:* ***நீங்கள் மகா பெரிய பாவம் செய்தீர்கள்.*** நாம் பாவத்தை அற்பமாய் எண்ணாமல் அதின் அகோரத்தை உணருவது மிகவும் அவசியம் *(சங். 51:3, 4; எஸ்றா 9:6; தானி. 9:5-9; லூக்கா 18:13; 2 கொரி. 7:9, 10).*

***ஆ. பாவ நிவர்த்தியைத் தேடவேண்டும்.*** *வச. 30:* ***"உங்களுக்காகப் பாவநிவர்த்தி செய்யக்கூடுமோ என்று அறிய ...... கர்த்தரிடத்துக்கு ஏறிப்போகிறேன்."*** பாவம் நீங்கும் வழியைத் தேடுவதும் அனுசரிப்பதும் அவசியம்.

தன் பாவத்தை உணர்ந்தவன் இரட்சகருடைய திரு இரத்தத்தின் புண்ணியத்தைச் சார்ந்துகொள்ளுவான் (எபே. *1:7; 1 யோவான் 2:1, 2).*

**இ. பாவத்தை அறிக்கையிடவேண்டும்.** வச. *31.* **"ஐயோ, அந்த ஜனங்கள் மகா பெரிய பாவத்தைச் செய்திருக்கிறார்கள்."** பாவத்தை மறைக்காமல் அறிக்கையிடுவதும் அவசியம் (நீதி. *28:13; 1 யோவான் 1:9).*

**ஈ. பாவ மன்னிப்பைக் கேட்கவேண்டும்.** வச. *32:* **'மன்னித்தருளும்.'** தீராத வாஞ்சையோடே மோசே தன் ஜனங்களுக்காக வேண்டுதல்செய்து அவர்களுக்கு மன்னிப்பை அருளும்படி தேவனை நோக்கிக் கெஞ்சிக் கேட்கிறான். **"இல்லாவிட்டால் உம்முடைய புஸ்தகத்திலிருந்து என்பேரைக் கிறுக்கிப் போடும்."** என்கிறான் (சங். *32:5; 51:7).*

**உ. பாவத்தினாலுண்டாகும் கஷ்டத்தைச் சகிக்க வேண்டும்.** வச. *34, 35:* **"அவர்களுடைய பாவத்தை விசாரிப்பேன்." "கர்த்தர் அவர்களை உபாதித்தார்."** அடிக்கடி, பாவத்தின் பலனை இம்மையில் அனுபவிக்க வேண்டியது வரும் *(2 சாமு. 12:13, 14; 1 இரா. 17:17, 18; 2 நாளா. 26:16-21).*

**கேள்விகள்:**

*1.* மோசேக்கும் ஆரோனுக்குமுள்ள குணங்களில் வித்தியாசம் அதிகம். இவ்வதிகாரத்தில் விவரிக்கப்படுகின்ற சம்பவங்களினால் அக்குண வித்தியாசங்கள் யாதெனக் காண்பிக்க.

*2.* இஸ்ரவேலர் கன்றுக்குட்டியை உண்டுபண்ணியதால் கர்த்தரின் தன்மையைக் குறித்துத் தப்பிதமாய் எண்ணினார்கள் என்று தெரிகிறது. இந்துக்கள் பெரும்பாலும் தேவதைகளை வணங்குகிறார்கள்.

ஆகையால் இஸ்ரவேலரின் எண்ணங்களுக்கும் இந்துக்களின் எண்ணங்களுக்குமுள்ள ஒற்றுமை யாது?

*3. மோசே முதலாவது ஜெபித்தான். வச. 11-13; பிறகு ஜனங்கள் மேல் கோபங்கொண்டான். அவனது ஜெபத்துக்கும் கோபத்துக்கும் உண்டானது விபரீதமா, சம்பந்தமா?*

*4. வச. 32. பழைய திருத்தத்துக்கும் புதிய திருத்தத்துக்குமுள்ள வித்தியாசத்தைக் கவனிக்க.*

# 33ஆம் அதிகாரம்

## தேவசமுகம் தூரமாய் நீங்கிப்போகுதல்

*பரிசுத்தமுள்ள தேவன் பாவத்துக்கு இடங்கொடுக்கிற ஜனங்களுடைய மத்தியில் வாசம்பண்ணுவது கூடாத காரியம் என்பதே இவ்வதிகாரத்தின் முக்கிய போதனை.*

I. **துக்கமான வசனம்.** *வச. 1-6 (வச. 4 காண்க):*

*1.* **கர்த்தருடைய தீர்மானம்.** *வச. 1-3:*

*அ.* **தேசம் கொடுப்பேன்.** *வச. 1.*

*ஆ.* **ஓர் தூதனை அனுப்புவேன்.** *வச. 2.*

*இ.* **சத்துருக்களைத் துரத்திவிடுவேன்.** *வச. 2.*

ஆகிலும், *ஈ.* **நான் உங்கள் நடுவே செல்லமாட்டேன் என்பதே.** *வச. 3.*

*ஐயோ! இரட்சகராகிய தேவன் கூடவே இராவிட்டால், தேசம் இருந்தாலும் என்ன? தூதன் இருந்தாலும் என்ன? ஜெயம் கிடைத்தாலும் என்ன? மழை முகம் காணாத பயிர்போலவும் அன்னையில்லாத சேய்போலவும் வருத்தம் அடைவார்களே!*

மேலும், முந்தின அதிகாரங்களில் கர்த்தர் காண்பித்த தேவ வாசஸ்தலத்தின் மாதிரி பயன்படாமற் போகுமே! ஏனெனில், அரசன் வசிக்கும் மாளிகையை அல்லவா அரண்மனை என்று சொல்லத்தகும்? தேவன் வராத ஆசரிப்புக்கூடாரம் வாசஸ்தலமாகுமோ?

தேவனாலேமாத்திரம் நம்முடைய ஆத்துமதாகம் தீரும்; நமக்கு மெய்ப்பாக்கியமும் உண்டாகும். ஆதலால் அவர் அருளும் நன்மைகளையாவது அவர் அனுப்பும் பணிவிடைக்காரரையாவது அவர் அனுக்கிரகிக்கும் அனுகூலங்களையாவது முக்கியமாய் நாடாமல், **அவரையே** பிரதானமாய் நாடி அவரோடே ஐக்கியப்பட்டு ஜீவிப்போமாக.

*2. **ஜனங்களுடைய துக்கம்.** வச. 4-6:*

***அ. அவர்களுக்கு சந்தோஷமுமில்லை.*** *"துக்கித்துக் கொண்டிருந்தார்கள்" (வச. 4):*

***ஆ. அவர்களுக்கு அலங்காரமுமில்லை.*** *"ஒருவரும் தங்கள் ஆபரணங்களைப் போட்டுக்கொள்ளாமல்" (வச. 4-6):*

***இ. அவர்களுக்குத் தைரியமுமில்லை.*** *"கர்த்தர் தங்களை நிர்மூலம் பண்ணுவார் என்று பயந்து நடுங்கி நின்றார்கள்" (வச. 5):*

*அதினிமித்தம் தங்கள் ஆபரணங்களைக் கழற்றிப் போட்டார்கள் (வச. 6).*

***கவனிப்பு*** *: வச. 6. "ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் ஒரேப் மலை முதற்கொண்டே தங்கள் ஆபரணங்களைக் கழற்றிப்போட்டார்கள்" என்றே திருத்தவேண்டும். அதாவது ஒரேப் மலையண்டை அவைகளைக் கழற்றிப் போட்டது மன்றி, அதுமுதல் அவைகளை அணிந்து*

கொள்ளாமலே பிரயாணம்பண்ணினார்கள் என்றறிக. அவ்வித ஆபரணங்கள்தான் சபையின் சீர்கேட்டுக்கும் விக்கிரகாராதனைக்கும் ஏதுவாயிருந்ததினிமித்தம் *(32:2)*, தேவன் இவ்வாறு கட்டளையிட்டிருக்கலாம்.

நமக்குத் தேவசமுகமும் தேவ ஐக்கியமுமில்லாத சமயத்தில் சந்தோஷம் ஏது? அலங்காரம் ஏது? மனோ தைரியம் ஏது? திக்கற்றவர்களாய் நிற்கிறோமே. பாவத்தினால் பயக்கும் பலன் வெட்கமும் வருத்தமுமாமே.

அதுவுமல்லாமல், நகையாசையும் அலங்காரப் பிரியமும் அநேக தீமைகளுக்குத் காரணமென்பதற்குச் சந்தேக முண்டா? *(1 தீமோ. 2:9, 10; ரோமர் 12:2)*.

II. **தூரத்திலே போன தேவசமுகம்.** வச. *7-11.*

பாவம் உள்ளே வந்தால் தேவன் வெளியே போவார்.

*1.* **கறைப்பட்ட சபையாருடைய நிர்ப்பந்தம்.** வச. *7, 8:*

அ. **தேவசமுகம் தூரத்திலே நீங்கிப்போனது.** வச. *7:* பாளயத்துக்குப் புறம்பே' மோசே கூடாரத்தைப் பெயர்த்து அதைப் பாளையத்துக்குப் புறம்பே தூரத்திலே போட்ட விதம் கர்த்தருடைய சமுகம் அந்த ஜனங்களைவிட்டு நீங்கிப்போனதற்கு அடையாளம் என்றறிவோமே. அசுத்தமான பாளயத்தில் தேவன் தங்கமாட்டார் (மத். *23:37-39; 24:1, 2)*.

**கவனிப்பு :** இங்கே சொல்லிய 'ஆசரிப்புக்கூடாரம்' தற்காலத்துக்கு மாத்திரம் தேவ ஆராதனைக்கென்று உபயோகமான கூடாரமாயிருந்திருக்கவேண்டும். சீனாய் மலையில் தேவன் காட்டின மாதிரியின்படி பெரிய ஆசரிப்புக்கூடாரம் இன்னும் கட்டப்படவில்லை. ஆகிலும் தேவ ஆராதனை முதலியவைகள் நடப்பதற்கு ஓர் கூடாரம் துவக்கமுதல் அவசியமாயிருக்கும்.

**ஆ. ஜனங்கள் தூரத்திலே நின்று பார்ப்பது.** வச. 8: வெட்கத்தோடும் பயத்தோடும் நின்று பார்த்தார்கள். அதிகமான பேர் பாளயத்துக்குப் புறம்பான ஆசரிப்புக் கூடாரத்துக்குப்போகத் துணியவில்லை. கர்த்தருடைய தாசனாகிய மோசே அங்கே போகையிலுங்கூட, அவர்கள் பயமும் திகிலும் கொண்டவர்களாய் நடுங்கி நின்றார்கள். துர் மனச்சாட்சிக்காரருக்கு சமாதானமுமில்லை தைரியமுமில்லை. பாவமானது அவர்களுக்கும் பரிசுத்த தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்கிற்று *(எசாயா 59:2).* அவரண்டையில் சமீபமாயிருக்கவேண்டிய அவர்கள் பாவத்தினால் தூரமானார்கள்.

**2. மெய்பக்தனுடைய பரிசுத்த சகவாசம்.** வச. *9-11:*

**அ. பாளையத்திற்குப் புறம்பே கர்த்தரிடத்தில் போவது.** அவரைத் தேடுகிறவன் ஜனங்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோக வேண்டியதிருந்தது *(வச. 7).*

அதைப்போல, உத்தம கிறிஸ்தவர்களும் தீயோருடைய ஐக்கியத்தை விட்டுப்பிரிந்து தங்கள் இரட்சகரண்டையில் சேருவது அவசியம் *(2 கொரி. 6:17; எபி. 13:13).*

**ஆ. கர்த்தரோடு இன்பமாய் சகவாசம் செய்வது.** மேகஸ்தம்பம் இறங்கி நின்று தேவன் எழுந்தருளிப் பிரசன்னமாவதற்கு அடையாளம், நம்மை உண்மையோடு தேடுகிறவர்களுக்குக் கிருபையளிக்கப் பிரசன்னமாகிறார் *(மத். 7:7, 8; யோவான் 20:11-16).*

**இ. ஒருவன் தன் சிநேகிதனோடு பேசுவது போல, கர்த்தர் மோசேயோடு முகம் முகமாய் பேசினார்.** உலகத் தீட்டுகளுக்கு விலகி நிற்கிற விசுவாசிகளுக்கு மாத்திரம் இந்தத் தேவ ஐக்கியமும் இன்பமான சகவாசமும் தெரியும் *(யோவான் 15:15; 1 யோவான் 1:3-7; 2 கொரி. 3:18).*

***ஈ. பின்பு அவன் பாளயத்துக்குத் திரும்பினான்.*** புதுப்பெலனும் கிருபையும் பெற்று, பின்பு தன் வேலைக்குரிய கடமைகளை நிறைவேற்றத் திரும்பினான். அவ்வாறு, நாமும் தனித்த இடத்தில் நமதாண்டவரைச் சந்தித்து அவருடைய சித்தத்தை அறிந்த மாத்திரம் ஊழியம் செய்யக்கடவோம் (லூக்கா *5:16, 17; 9:28-42;* அப். *4:31-33).*

III. ***திட்டமான ஜெபம்.*** *வச. 12-23.*

இந்தப் பாகத்தில், மோசே வேண்டுதல் செய்து **இரண்டு விசேஷித்த விண்ணப்பங்கள்** பண்ணுகிறான்.

***1. முதலாம் விண்ணப்பம். "உம்முடைய சமுகம் என்னோடேக்கூடச் செல்லாமற்போனால் எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டு போகாதிரும்."*** *வச. 15.*

அந்தத் தேவ சமுகமில்லாமல் காரியம் தீராதென்று இவ்வுத்தம பக்தன் நன்குணர்ந்து ஊக்கத்தோடே விண்ணப்பம் செய்தான். தேவ சமுகம் கூடவே இருப்பது தீராத அவசியம் என்பதற்குச் சில நியாயங்களையும் காட்டுகிறான்.

***அ. அருள்வாக்கு நிறைவேறுவதற்குத் தேவசமுகம் அவசியம் வேண்டும்.*** *வச. 12:* "உன்னைப் பேர் சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேனென்றும் என் கண்களில் உனக்கு கிருபை கிடைத்ததென்றும் தேவரீர் சொன்னதுண்டே."

கர்த்தர் கூடவராவிட்டால் திருமொழி நிறைவேறுவது எப்படி? மெய்விசுவாசி அருள்வாக்கியங்களை முகாந்தரமாகக் காட்டுவது நலம் (எண். *23:19;* மத். *24:35).*

***ஆ. திருச்சித்தம் தெரிவதற்குத் தேவசமுகம் அவசியம் வேண்டும்.*** *வச. 13.* "உம்முடைய வழியை எனக்கு

அறிவியும்." கர்த்தர் கூடவராவிட்டால் போகவேண்டிய பாதை இன்னதென்றும் செய்யவேண்டிய காரியம் இன்னதென்றும் நமக்குத் தெரியாது.

**இ. தேவனுடைய ஜனமென்று விளங்குவதற்குத் தேவசமுகம் அவசியம் வேண்டும்.** வச. *13:* அவர் கூடவந்தால் மாத்திரம் நாம் அவருடைய ஜனங்கள் என்று உலகத்தார் அறிந்து கொள்வார்கள் *(மத். 28:19, 20; மாற்கு 16:20; அப். 4:29, 30; 14:27).*

**ஈ. கர்த்தருடைய தயவுண்டென்று காணப்படுவதற்குத் தேவசமுகம் அவசியம் வேண்டும்.** வச. *16.* உம்முடைய கண்களில் கிருபை கிடைத்ததென்று எதினால் அறியப் படும்? நீர் எங்களோடே வருவதினால் அல்லவா? *(அப். 11:22, 23; 19:17-19).*

**உ. இளைப்பாறுதல் கிடைப்பதற்குத் தேவசமுகம் அவசியம் வேண்டும்.** வச. *14.* "உனக்கு இளைப்பாறுதல் தருவேன் ஏன்றார்." கர்த்தர் கூடவே வந்தால் மனக்கவலை நீங்கும்; பூரண சமாதானமுண்டாகும்; கானான் சுதந்தர இளைப்பாறுதல் கிடைக்கும் *(அப். 7:55, 56; 12:6; 16:25; 18:9, 10; 23:11; எபி. 4:3).*

**கவனிப்பு:** இந்த விண்ணப்பத்துக்குக் கர்த்தர் உத்தரவருளினார் *(வச. 14).*

**2. இரண்டாம் விண்ப்பம். "உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்''** வச. *18:* தேவசமுகம் கிடைக்கப்பெற்ற தாசன் அவருடைய மகிமையையும் காண விரும்புகிறான்.

இந்த விண்ணப்பத்துக்கு கர்த்தர் உத்தரவருளினார். எப்படியெனில் :

*அ.* **"என்னுடைய தன்மையை எல்லாம் நான் உனக்கு முன்பாகக் கடந்துபோகப் பண்ணுவேன்."** என்றார். வச. *19:* தேவ மகிமையானது கிருபையினாலேதான் மனிதருக்கு வெளிப்படுத்தப்பட்டது. *(யோவான் 1:14-17).*

**ஆ. "கர்த்தருடைய நாமத்தை உனக்கு முன்பாகக் கூறுவேன்."** என்றார். வச. 19. நாமம் என்பது அந்த நாமத்தையுடையவரின் குணாதிசயங்களைக் குறிக்கிறது *(34:6, 7 பார்க்க).*

மோசேக்குத் தம்மை வெளிப்படுத்தின கர்த்தர் நமக்கு இயேசு கிறிஸ்துவின் மூலமாய் அதிகத் தெளிவாய் நம்மை வெளிப்படுத்தியிருக்கிறார் *(எபி. 1:1-4; யோவான் 14:9).*

**'எவன்மேல் கிருபையாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் கிருபையாய் இருப்பேன்'** என்பதில் அவருடைய மகா **நீதியும் இரக்கமும்** குறிப்பிடத்தக்கவை.

**கவனிப்பு:** தேவமகிமையில் காணக்கூடியதைத் தரிசிக்கத்தக்கதாக மோசே **'கன்மலையின் வெடிப்பிலே'** வைக்கப்பட்டதுபோல, நாமும் பிளவுண்ட மலையாகிய கிறிஸ்துவுக்குள் படவேண்டும். அவருக்குள்பட்டவர்களுக்கு மாத்திரம் தேவனுடைய கிருபையும் மகிமையும் வெளிப்படும் *(யோவான் 14:6, 20, 21).*

மேலும், **"என் கரத்தினால் உன்னை மூடுவேன்"** என்பதினாலே நமக்குப் பயபக்தி அவசியம் வேண்டும் என்று காண்கிறோம்.

*1.* வச. *2:* "நான் ஒரு தூதனை உங்களுக்கு முன்பாக அனுப்புகிறேன்" என்று கர்த்தர் அதி. 23:20இல் சொன்னார். அந்த வாக்குத்தத்தத்துக்கும் வித்தியாசமுண்டா?

*2.* வச. *11:* யோசுவா மலையில் 40 நாள் தங்கினதற்கும் *(அதி. 24:13ஐயும் 32:17ஐயும் பார்க்க)* அவன் கூடாரத்தை

விட்டுப் பிரியாதிருந்ததற்கும் சம்பந்தம் ஏதாயினு மிருக்குமா?

*3. வச. 13:* மோசே ஆறுதடவை மலையேறிக் கர்த்தரோடு பேசியிருந்தும் "உமது வழியை எனக்கு அறிவித்தருளும்" என்றும், "நான் உம்மை அறிந்துகொள்ளச் செய்யும்" என்றும் கேட்டான். கிறிஸ்தவ ஜீவியத்திற்குச் சம்பந்தமான இது என்ன போதனையைப் போதிக்கும்?

*4. வச. 14:* "நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்பதை மத். 11:28லும் காண்கிறோம். இவ்விரண்டு வசனங்களுக்கும் சம்பந்தமுண்டா?

*5. வச. 18, 19:* மோசே தான் எதைக் காணவேண்டும் என்று கேட்டான்? கர்த்தர் தாம் ஏதைக் கடந்து போகப் பண்ணுவதாகச் சொன்னார்? பழைய திருத்தத்தையும் புது திருத்தத்தையும் காண்க.

# 34ஆம் அதிகாரம்

## தேவகிருபையை மறுபடியும் பெற்றுக்கொள்ளுதல்

**கவனிப்பு:** இவ்வதிகாரத்தில், மோசே மத்தியஸ்தனாக நின்று தேவனுக்கும் இஸ்ரவேலருக்கும் நடுவராக வந்த பிரிவினையைத் தன் ஊக்கமான வேண்டுதலினாலே நீக்கிவிடுகிறான்.

I. **புதுப்பலகைகள்.** வச. 1-4.

**1. புதுப்பிக்கப்பட்டது.** வச. 1:4: முந்தின பலகைகள் உடைந்து கிடந்தன. அவைகள் இஸ்ரவேலர் மீறிப் போட்ட நியாயப்பிரமாணத்துக்கு அடையாளம் எனலாம். தேவன் அவர்கள் நடுவில் மறுபடியும் எழுந்தருளி வாசம் பண்ணவேண்டுமானால் அம்மீறுதல் மன்னிக்கப்படுவதும் நீதிபிரமாணம் மறுபடியும் ஸ்தாபிக்கப்படுவதும் அவசியம்.

இதற்குக் குறிப்பாகப் புதுப்பலகைகள் அவசியம் வேண்டும் என்கிறார். தவறிப்போன பாவிக்குப் புது இருதயம் வேண்டுமென்றறிக *(எபி. 8:10; சங். 51:10-12).*

*2. **தேவசமுகத்தில் கீழ்ப்படிந்து நிற்பது.** வச. 2-4* **'என் சமுகத்தில் வந்துநில்'** என்று கர்த்தர் கற்பித்தபடியே, மோசே **'சீனாய் மலையில் ஏறினான்.'**

மோசே இஸ்ரவேலருடைய தலைவனாய், அவர்களுக்குப் பதிலாக, அப்படி ஏறித் தேவசமுகத்தில் நின்றான் என்று சொல்லத்தகும்.

அவன் முன்போலவே, பழைய இடத்திலேதானே, போய் நிற்க வேண்டியதாயிருந்தது. திரும்பவும், தேவசித்தத்துக்கு இணங்க வேண்டும், தேவ கட்டளை களைப்பெற்று அவைகளைக் கைக்கொள்ளவும் வேண்டும்.

தவறிப்போன பாவிகளுக்குத் தேவன் கட்டளையிடுகிற முக்கிய உத்தரவு என்னவென்றால் **'திரும்புங்கள்'** என்பதே *(எரே. 3:22; ஓசியா 14:1; 1 பேதுரு 2:25).*

எந்தப் பரிசுத்த சந்நிதானத்திலிருந்து விலகிப் போனோமோ அந்தப் பரிசுத்த சந்நிதானத்திலே, திருச் சித்தத்துக்கு முற்றிலும் இணங்குவோராய், நாம் திரும்பி வந்து நிற்கவேண்டும் *(யோவான் 21:15-19).*

II. **பரிசுத்த நாமம்.** *வச. 5-9:*

**'கர்த்தருடைய நாமத்தைக் கூறினார்.'** தேவன் தம்மை இப்படிப்பட்டவரென்றும் தமது தேவ நாமம் இன்னவை யென்றும் வெளிப்படுத்தினார்.

***1. கர்த்தருடைய நாமம்.** வச. 5-7:*

***அ. இரக்கமுள்ளவர்.** வச. 6, 7:* 'இரக்கம், கிருபை, நீடிய சாந்தம்.'

***ஆ. சத்தியமுள்ளவர்.** வச. 6:* 'சத்தியமுள்ள தேவன்.'

**இ. மீறுதலை மன்னிக்கிறவர்.** வச. 7: 'அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்.'

**ஈ. பாவத்தை விசாரிக்கிறவர்.** வச. 7: 'குற்றவாளியைக் குற்றமற்றவனாகவிடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தை ... மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர்.'

மொத்தமாகச் சொன்னால், தமது இரக்கத்தையும் கூறினார்; தமது நீதியையும் கூறினார். எதற்கும் யாதொரு குறையும் பங்கமும் வரலாகாது. ஆதலால், மனிதருடைய இரட்சிப்புக்கு அவ்விரண்டையும் சமரசப்படுத்துவது அவசியம். கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் அவ்வாறான நீதி இரக்க சமரசம் நடந்திருக்கிறது (ரோமர் 3:25; 1 யோவான் 1:9).

**2. மோசேயினுடைய ஜெபம்.** வச. 8, 9.

**அ. "தேவ பிரசன்னத்துக்காக மன்றாடுகிறான். எங்கள் நடுவில் ஆண்டவர் எழுந்தருளவேண்டும்."** அவருடைய சமுகம் கூடவே இருப்பது இன்றியமையாத அவசியம். 33ஆம் 34ஆம் அதிகாரங்களில் நடக்கும் ஜெபபோராட்டம் அதற்காகவே! 25 31 அதிகாரங்களில் விவரித்த வாசஸ்தல விசேஷங்களும் அதற்கென்றே!

ஆகையால், மோசே இந்தக் காரியத்தைவிடாமல், கர்த்தருடைய சமுகம் மீட்கப்பட்ட ஜனங்களுக்கு மறுபடியும் பிரத்தியட்சமாய்க் கிடைக்குமட்டும் ஊக்கத்தோடே விண்ணப்பம் செய்கிறான்.

என்றாலும், பாவம் நீங்குமளவும் அந்தத் தேவ சந்நிதானத்துக்குப் போவதற்கு ஏதுவில்லை. ஆதலால்;

**ஆ. பாவ மன்னிப்புக்காக மன்றாடுகிறான்: 'எங்கள் அக்கிரமத்தையும் எங்கள் பாவத்தையும் மன்னித்து, எங்களை உமக்குச் சுதந்தரமாக ஏற்றுக்கொள்ளும்."**

இதிலே, நாம் கவனிக்கத்தக்க இரண்டு குறிப்புகளுண்டு.

*1. பாவ அறிக்கை:* இந்த ஜனங்கள் வணங்காக் கழுத்துள்ளவர்கள் என்பதில் இஸ்ரவேலருடைய பாவத்தை அறிக்கையிட்டபின்பு, 'எங்கள் அக்கிரமம், எங்கள் பாவம்' என்பதில் ஜனங்களோடு தன்னையும் சேர்த்து மன்னிப்புக்காகக் கெஞ்சுகிறான். பாவ மன்னிப்பை நாடுகிறவர்கள் தங்கள் பாவத்தை உண்மையோடு அறிக்கையிடுவதும் வெறுத்துவிடுவதும் தீராத அவசியம் *(நீதி. 28:13; 1 யோவான் 1:9).*

*2. மெய் விசுவாசம்.* கர்த்தர் 'அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்' என்று தம்மை வெளிப்படுத்தியிருந்தார் *(வச. 7).* மோசே உடனே அந்த திருவார்த்தைகளைப் பிடித்துக்கொண்டு அவைகளைத் தனக்கு ஆதாரமாக வைத்து, *சத்தியவாசகரே! நீர்* சொன்னபடி செய்யும். **எங்கள் அக்கிரமத்தையும் எங்கள் பாவத்தையும் மன்னியும்.** "இப்படிச் செய்வது உமது விசேஷித்த *நாமமல்லவா?"* என்று விண்ணப்பம் பண்ணுகிறான். அதாவது, கர்த்தருடைய உறுதிவாக்கை நம்பிச் சார்ந்து மெய் விசுவாசத்தோடே மன்றாடுகிறான்.

அவ்வாறு, நாமும் பாவத்தை உண்மையோடு அறிக்கையிட்ட பின்பு, தேவனுடைய அருள்வாக்கை நம்பி விசுவாசித்துப் பூரண மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்குத் தடையில்லை *(லூக்கா 7:48; சங். 32:5; 1 யோவான் 1:9).*

**கவனிப்பு:** மோசேயின் ஊக்கமும் ஜெபபோராட்டமும் *உபா. 9:18, 19இல்* நன்றாய் விளங்குகிறது.

III. ***பலவித கட்டளைகள்.*** *வச. 10-28:*

தேவன் நம்முடைய மீறுதலை மன்னித்தாலும், இனி மேலாவது தமது சித்தத்தின்படி நடக்க நமக்கு கட்டளை கொடுக்கிறார்.

**கவனிப்பு:** இஸ்ரவேலர் வார்ப்பிக்கப்பட்ட ஒரு சுரூபத்தை உண்டுபண்ணி விக்கிரகாரதனையில் அகப்பட்டுத் தவறிப்போயிருந்தபடியினாலும் கள்ள ஆராதனை, கள்ளப் பண்டிகை, கள்ளக் காணிக்கைகளை ஏற்படுத்தி அக்கிரமம் செய்திருந்தபடியினாலும், கர்த்தர் இங்கே அந்தத் தீட்டுகளையெல்லாம் கண்டித்து விலக்கி, தமது பரிசுத்த ஆராதனை, பண்டிகை காணிக்கைகளை மறுபடியும் ஸ்தாபிக்கிறார் என்று நாம் காணலாம். இந்தப் பாகத்தில் வருகிற கட்டளைகள் கொஞ்சங்குறைய எல்லாம் அதி. *23:13-33*இல் முன்பு வந்தவைகள் என்றாலும் இடையில் நேரிட்ட தவறுதலினாலே அவைகளை இரண்டாந்தரமும் வற்புறுத்திக் காட்டவேண்டியிருந்தது.

*1.* **உடன்படிக்கை.** வச. *10, 27, 28:* **"இதோ நான் ஒரு உடன்படிக்கை பண்ணுகிறேன்."** இவ்விதமாய், ஜனங்கள் மீறியிருந்த உடன்படிக்கையை அவர் தயவாகப் புதுப்பிக்கிறார். அதனுடைய நிச்சயத்தை உணர்த்தும்படி எழுதி வைக்கவும் சொல்லுகிறார் (வச. *27*).

அ. **"உன்னோடே கூட இருப்பேன்"** என்பதில் தமது **சமுகத்தையும்.**

ஆ. **"அதிசயங்களைச் செய்வேன்"** என்பதில் தமது **சகாயத்தையும்.**

இ. சத்துருக்களைத் **'துரத்திவிடுகிறேன்'** என்பதில் பூரண **ஜெயத்தையும்** அளிப்பேன் என்று வாக்கருளுகிறார்.

இவ்விதமாய், மீறுதலை மன்னிக்கிற கருணாகரராகிய தேவன் அதோடுகூட வேண்டிய ஒத்தாசை, வல்லமை முதலான நன்மைகளை எல்லாம் அருளிச் செய்கிறார். (ஏசாயா *44:22-26*; எசே. *36:25-38*; எபி. *8:8-12*).

*2.* **நிபந்தனை.** வச. *12-26:*

அ. **உலகத்தாரோடு கலவாதவர்களாயிருக்க வேண்டும்.** வச. *12, 15, 16* தீயோருடைய சகவாசத்தினால்

கன்றுக்குட்டி வணக்கம் பாளயத்தில் நுழைந்திருந்ததே *(யாத். 12:38)* இனிமேல் எச்சரிக்கையாயிருப்பது அவசியம் *(எண். 11:4-6).*

அவ்வாறு, நாமும் உலக மக்களோடு ஐக்கியப்படாமல் பிரிந்துபோய்ப் பரிசுத்தமாய் நடப்போமாக *(2 கொரி. 6:17, 18; எபே. 4:17; வெளி. 18:4)*

**ஆ. கர்த்தரையே சேவிக்கிறவர்களாயிருக்கவேண்டும்.** வச. *13, 14, 17.* இதின் சம்பந்தமாக, அவர்கள் தவறிப் போனதை *17*ஆம் வசனத்தில் உணர்த்தப்பட்டதைக் காண்க.

அவ்வாறு, நாமும் விக்கிரகாராதனை என்னப்பட்ட பொருளாசை முதலான கண்ணிகளுக்கு விலகி நம்முடைய இரட்சகராகிய தேவனை முழு மனதோடே பற்றிக் கொள்ளக்கடவோம் *(கொலோ. 3:5; 1 யோவான் 5:20, 21).*

**இ. பாவத்தை முற்றிலும் அகற்றிவிட்டவர்களாய் நடக்கவேண்டும்.** வச. *18, 25.* புளித்தமா ஆகாது.

அவ்வாறு, நாமும் பாவத்தின்மேல் வெறுப்பும் பரிசுத்தத்தின்மேல் விருப்பும் கொண்டவர்களாய் உண்மையோடு நடப்போமாக. *(1 கொரி. 5:7, 8).*

**ஈ. மீட்டுக்கொள்ளப்பட்டவர்களாய் நடக்க வேண்டும்.** வச., *19, 20.* மீட்கப்பட்ட யாவும் கர்த்தருக்குச் சொந்தம்.

அவ்வாறு, திரு இரத்தத்தினாலே மீட்கப்பட்ட நாமும் இரட்கருக்குச் சொந்தமான ஜனங்களாய் விளங்கக் கடவோம் *(1 கொரி. 6:19, 20; 1 பேதுரு 1:17-19).*

**உ. இளைப்பாறுதலைக் கைக்கொள்ளுகிறவர்களாய் நடக்கவேண்டும்.** வச. *21:*

அவ்வாறு நாமும் ஆத்தும சமாதானமும் இளைப்பாறுதலும் அடைந்து வீண்கவலையற்றவர்களாய் ஜீவிப்போமாக *(மத். 11:29, 30; எபி. 4:3).*

**ஊ. ஸ்தோத்திரம் செலுத்துகிறவர்களாய் நடக்க வேண்டும்.** வச. *22, 26:* முதற்பலனைத் தவறாமல் செலுத்த வேண்டும்.

அவ்வாறு, நாமும் நன்றியறிந்த இருதயத்தோடு ஸ்தோத்திரம் செலுத்த ஜாக்கிரதையாய் இருப்போமாக *(கொலோ. 3:15-17).*

**எ. தேவ சந்நிதானத்தை நாடுகிறவர்களாய் நடக்கவேண்டும்.** வச. *23, 24:* எல்லாரும் கர்த்தருக்கு முன்பாக வந்து ஆராதனை செய்ய வேண்டும்.

அவ்வாறு, நாமும் அவருடைய முகத்தை நாடி, அடிக்கடி அங்கே வந்து ஜெபத்திலும் ஸ்தோத்திரத்திலும் தரித்திருக்கக்கடவோம் *(கொலோ. 4:2; சங். 73:28).*

IV. **பிரகாசமுள்ள முகம்.** வச. *29-35:*

*1.* 'மோசே' வச. *29-31, 33-35:* இவன் பேர் இவ்வசனங்களில் ஏழுதரம் வருகிறது. பழைய மோசேதான்; ஆகிலும் நாற்பது நாள் கர்த்தரோடு சஞ்சரித்து அவருடைய மகிமையை ஒருவராய்த் தரிசித்தபின்பு புதுக்கிருபையோடும் முகப்பிரகாசத்தோடும் புறப்பட்டு வந்தான்.

**அவன் கையில் சாட்சிப் பலகைகளும்.** வச. *29,* உடன்படிக்கைக்கு அடையாளம். மல். *2:5, 6.*

**அவன் முகத்தில் தேவ பிரகாசமும்.** வச. *30.* மல். *2:67,* அப். *6:15.*

**அவன் வாயில் சத்திய வேதமும்.** வச. *31, 32;* மல். *2:67,* இருந்தது.

கர்த்தரோடு ஐக்கியப்பட்டு அவருடைய சந்நிதானத்தில் அதிகமாய் நிற்கிறவர்கள் அவருடைய சித்தத்தையும் சத்தியத்தையும் அறிந்தவர்களாயும் அவருடைய ஞானப்பிரகாசம் அடைந்தவர்களாயும் இவ்வுலகத்தில் விளங்குவார்கள் என்பது நிச்சயம் *(1 இரா. 17:1; 2 இரா. 3:14-20; யோவான் 5:35).*

*2.* **'முகம்'** வச. *29, 30, 33, 35;* பிரகாசிக்கிற முகம் *(மத். 17:2; அப். 6:15).*

அந்தப் பிரகாசமானது:

**அ. மோசேக்குத் தெரியாமலிருந்தது.** வச. *29:* மற்றவர்களுக்கு மாத்திரம் தெரியும். மெய்பக்தனுடைய பரிசுத்தமும் அருள்பிரசாதங்களும் அவனுக்கு அல்ல பிறருக்குத்தான் சிறந்து விளங்கும்: *(ரோமர் 12:3; 1 கொரி. 15:8, 9; யோவான் 1:19-23).*

**ஆ. ஜனங்களுக்குத் திவ்யமாய்த் தோன்றினது.** வச. *30-32:* முதலில், அந்த அதிசயத்தைக் கண்டு அவன் சமீபத்தில் சேரப் பயந்தார்கள். பின்போ, மோசே அவர்களை அருகில் வரும்படி அழைத்ததின்பேரில் எல்லாரும் அவனிடத்தில் சேர்ந்து பயமின்றி நின்று அவன் போதித்த தேவ வசனத்தைப் பிரியத்தோடு கேட்டார்கள். முதலில் பயங்கரமாய்த் தோன்றின அந்தத் தேவ பிரகாசம் பின்பு இன்பமாயும் சுதந்தரமாயும் தோன்றிற்று *(அப். 4:13; 5:13-16; 19:17-20).*

**கேள்விகள்:**

*1.* வச. *1.* முதல் இரண்டு கற்பனைகளுக்கும் புதிய இவ்விரண்டு பலகைகளுக்கும் வித்தியாசம் என்ன? அதி. *32:16*ஐக் காண்க.

*2. வச. 14:* எரிச்சலுள்ளவர் என்ற நாமத்திற்கும், வச. 14இல் சொல்லப்பட்டிருக்கிற கர்த்தருடைய நாமத்திற்கும் வித்தியாசமில்லை என்று காண்பிக்க.

*3. அதி. 33இல்* உள்ள சங்கதிகளுக்கும் மோசேயின் முகப்பிரகாசத்திற்கும் ஏதாவது சம்பந்தமுண்டா?

# 35ஆம் அதிகாரம்

## காணிக்கையைக் கொண்டுவருதல்

**கவனிப்பு:** ஓய்வுநாள் ஆசரிப்புக்கும் கர்த்தருடைய வாசஸ்தலமாகிய ஆசரிப்புக் கூடாரத்துக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டென்று காண்கிறோம். *(31:1-17; 35:1-19).* அவருடைய திருநாளை மதிக்காதவர்கள் அவருடைய திருச்சந்நிதானத்தையும் நாடமாட்டார்கள். மேலும், ஆவிக்குரிய இளைப்பாறுதலைப் பெற்றனுபவிக்கிறவர்கள் மாத்திரம் அவருடைய வாசஸ்தலமாயிருக்கத்தக்கவர்கள் *(பிலி. 4:5-9; யோவான் 14:23-27).*

**I. காணிக்கையைப்பற்றின பிரமாணம்.** *வச. 4-9:*

***1. கர்த்தருக்கென்றே செலுத்தும் காணிக்கை.*** *வச. 5:*

'கர்த்தருக்கு' என்பது இவ்வசனத்தில் இரண்டுவிசை வருகிறது. இது மோசேக்கென்றல்ல, கர்த்தருக்கென்றே செலுத்தப்படவேண்டிய காணிக்கை *(வச. 21, 22, 24, 29 காண்க).*

சிலர் தங்கள் மனுஷனுக்கென்றும் தேவாலயத்துக்கென்றும் சுய மகிமைக்கென்றும் காணிக்கை செலுத்துவதுண்டு, என்றாலும் கர்த்தருக்குச் செலுத்தப்படுவதே காணிக்கை *(யோவான் 12:3-8; 2 கொரி. 8:5).*

*2.* **மனப்பூர்வமாய்ச் செலுத்தும் காணிக்கை.** வச. *5:*

மனமுள்ளவன் எவனோ அவன் அதைக் கொண்டு வரட்டும் *(2* கொரி. *9:7; 8:2, 3).*

*3.* **பற்பல வகையான காணிக்கை.** வச. *5-9:* பொன்னும் வெள்ளியும் அவசியமானதுபோல, நூலும் தோலும் மரமும் அவசியம். புதிய ஏற்பாட்டில் காட்டப்பட்ட காணிக்கைகளும் பலவிதமென்று அறிவோம் (மத். *2:11; 26:7;* லூக்கா *21:2-4;* யோவான் *6:9;* அப். *4:34-37).*

II. **வேலையைப்பற்றின பிரமாணம்.** வச. *10-19* (வச. *25, 26; 30-35):*

*1.* **ஞானத்தோடு செய்யவேண்டிய வேலை.** "உங்களில் ஞான இருதயமுள்ள அனைவரும் வந்து, கர்த்தர் கட்டளையிட்டவைகளையெல்லாம் செய்வார்களாக வச. *10.* "ஞான இருதயமுள்ள ஸ்திரீகள் எல்லாரும் நூற்றார்கள்" வச. *25, 26.* "அவர்களுடைய இருதயத்தை ஞானத்தினால் நிரப்பினார்" வச. *33, 35.*

கர்த்தருடைய ஆவிக்குரிய வாசஸ்தலத்தைக் (எபே. *2:22)* கட்டுகிற வேலையில் பரம ஞானமும் பரிசுத்த விவேகமும் அவசியம் வேண்டும் (மத். *10:16;* அப். *6:3, 10; 11:22-24; 1* கொரி. *3:10;* யாக். *1:5).*

*2.* **பற்பல வகையான வேலை.** வச. *10-19:* நூற்கிற வேலையுமுண்டு (வச. *25);* மயிரைத் திரிக்கிற வேலையுமுண்டு (வச. *26);* பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் செய்யவேண்டிய வேலையுமுண்டு (வச. *11, 31);* மரவேலையும் உண்டு (வச. *12, 13, 32);* இரத்தினங்களை முத்திரைவெட்டாக வெட்டிப் பதிக்கிற வேலையுமுண்டு (வச. *32);* இன்னும் பற்பல வேலைகளுமுண்டு.

அவ்வாறு, ஆவிக்குரிய கட்டட வேலையும் பலவிதமானது.

அதற்கு வெவ்வேறான வரங்களைப்பெற்ற வேலையாள்கள் அவசியம்.

பந்தி விசாரணை வேலையுமுண்டு, *(ரோமர் 12:6-8, 13; எபே. 4:11-15).*

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் வேலையுமுண்டு. *(அப். 6:2-4).*

சபைகளைத் திடப்படுத்தும் வேலையுமுண்டு *(அப். 6:10; 8:5-8).*

தர்மப்பணங்களை மேல்விசாரிக்கும் வேலையுமுண்டு *(அப். 14:21-23).*

இன்னும் பற்பல வேலைகளும் உண்டு *(2 கொரி. 8:16-24).*

**3. ஸ்திரீகளும் செய்யத்தக்க வேலை.** *வச. 25, 26:* வாசஸ்தலத்துக்கு வேண்டிய இளநீலநூலும் இரத்தாம்பர நூலும் சிவப்புநூலும் மெல்லிய பஞ்சுநூலும் அவர்களுடைய கைவேலை. மேற் கூடாரத்துக்கு வேண்டிய வெள்ளாட்டுமயிர் மூடுதிரைகளும் அவர்களுடைய கைவேலை. ஆகையால் இந்த விசேஷித்த வேலையில் அவர்களுக்கு ஒரு முக்கியமான பங்கு கிடைத்ததென்று பார்க்கிறோம். திருச்சபைக்கடுத்த சுவிசேஷ ஊழியத்திலும் ஸ்திரீகளுக்குப் பங்குண்டு *(லூக்கா 8:2, 3; அப். 16:15, 40; 18:26; 21:9; ரோமர் 16:1; பிலி. 4:2, 3; 1 தீமோ. 5:9, 10).*

**4. பரம வரங்கள் அவசியம் வேண்டிய வேலை.** *வச. 30-35:* 'தேவாவியினாலே' *(வச. 33)* யோசிக்கவும் *(வச. 31),* போதிக்கவும் *(வச. 34).* வேலை செய்யவும் *(வச. 31, 33, 35)* தக்க வரங்களைப் பெற்றார்கள்.

அவ்வாறு, சுவிசேஷ பிரபல்லிய வேலைக்கும் சபையின் பக்தி விருத்திக்கடுத்த வேலைக்கும் ஞானவரங்கள் அவசியம் வேண்டும் (அப். 1:8; 6:5, 8, 10; 1 கொரி. 12:7-11).

III. **காணிக்கைகளை கொண்டுவந்த விசேஷம்.** *35:20-29; 36:1-7):*

***1. மன உற்சாகமாய்க் காணிக்கை கொடுத்தார்கள்.*** *வச. 21-24.*

*"எவர்களை அவர்கள் இருதயம் எழுப்பி எவர்களை அவர்கள் ஆவி உற்சாகப்படுத்தினதோ அவர்கள் எல்லாரும் .... கொண்டுவந்தார்கள்."*

"மனப்பூர்வமுள்ள ஸ்திரீ புருஷர் யாவரும் ... கொண்டு வந்தார்கள்."

*கட்டாயமல்ல உற்சாகமாய்க் காணிக்கை கொடுத்தார்கள். தங்களுடைய சகலவித பொன்னாபரணங்களையும் மனதாரக் கொடுத்துவிட்டார்கள். அவைகளை முந்திக் கழற்றிப்போட்டிருந்தார்களென்று அறிவோமே (33:4-6). கழற்றிப்போட்டதுமன்றி இப்போது அவைகளைக் கர்த்தருடைய வேலைக்கு உபயோகமாகக் கொடுத்து விடுகிறார்கள். இவ்விதமான உற்சாகம் நமக்குள்ளும் காணப்பட்டால் நல்லதல்லவா?*

***2. ஸ்திரீகளும் காணிக்கை கொடுத்தார்கள்.*** *வச. 22, 25, 26.*

*தங்கள் நகைகளை மனப்பூர்வமாய்க் கொடுத்து விட்டார்கள்; தாங்கள் நூற்றதும் திரித்ததுமான மூடு திரைகளையும் கொண்டுவந்தார்கள்; வேத சரித்திரங்களில் ஸ்திரீகளுடைய காணிக்கைகள் வெகு விசேஷம் (1 சாமு. 1:24-28; மாற்கு 12:41-44; 16:1; லூக்கா 7:37, 38; 8:3; யோவான் 12:3; அப். 9:36; 39).*

***3.* பெரியோரும் காணிக்கை கொடுத்தார்கள்.** வச. *27, 28:*

*"பிரபுக்கள் .... இரத்தினங்களையும் பரிமளவர்க்கங்களையும் .... கொண்டு வந்தார்கள்."*

தனவான்களும் கனவான்களும் தங்கள் திராணிக்குத் தக்கதாகத் தேவனுக்குக் காணிக்கையைக் கொடுப்பது அபூர்வம் *(மாற்கு 12:43, 44; 1 தீமோ. 6:17-19).* ஆகிலும் அவர்கள் அப்படிக் கொடுக்கும்போது தேவன் அவர்களுடைய காணிக்கைகளை மறவார் *(லூக்கா 7:4, 5; அப். 10:4).*

***4.* அதிக ஏராளமாய்க் காணிக்கை கொடுத்தார்கள்.** *36:5-7.*

*'வேலைக்கு வேண்டியதற்கு அதிகமான பொருள்களை ஜனங்கள் கொண்டுவருகிறார்கள்.'*

*'எல்லா வேலைகளுக்கும் போதுமான பொருள்கள் இருந்ததும் அல்லாமல் அதிகமாயும் இருந்தது.'*

அதினிமித்தம் இனி காணிக்கைகளைக் கொண்டு வராதபடிக்கு ஜனங்களை நிறுத்தவேண்டியதாய் நேரிட்டது.

கிறிஸ்தவர்களாகிய நமக்குள்ளே இவ்விதமான உதாரத்துவமும் உற்சாகமான ஊழியமும் அதிகமதிகமாய்த் தோன்றவேண்டியது அவசியம் *(அப். 4:34, 35; 2 கொரி. 8:1-5; பிலி. 4:15-18).*

**கவனிப்பு:** காணிக்கை செலுத்துவதிலும் வேலை செய்வதிலும் 'இருதயம்' தான் விசேஷம் *(35:5, 10, 21, 22, 25, 26, 29, 34, 35; 36:1, 2; எபே. 6:6; கொலோ. 3:16, 17).*

**கேள்விகள்:**

*1.* இவ்வதிகாரத்தைப் படித்தபின் இஸ்ரவேலர் யாவரும் காணிக்கைகளைக் கொண்டு வந்ததைக்

*காண்பிக்க ஆண்கள், பெண்கள், பெரியோர், சிறியோர், ஆஸ்தியுள்ளோர், ஆஸ்தியில்லாதவர், தொழிலாளிகள் முதலிய எல்லா வகுப்பாரும் கொண்டுவந்த காணிக்கை களையும் செய்த ஊழியத்தையும் எழுதுக.*

*2. உமது சபையிலுள்ளவர்களை நினைத்து அவர்கள் எவ்வகுப்பார் என்று காண்பித்து அவர்கள் எல்லாரும் கொண்டுவரக்கூடிய காணிக்கைகளையும் செய்யக்கூடிய ஊழியங்களையும் எழுதுக (பணக்காரர், தரித்திரர், தொழிலாளிகள், கூலியாள்கள், ஆண்கள், பெண்கள், பிள்ளைகள், விதவைகள் முதலிய எந்த வகுப்பாராயினும் குறிப்பிடுக).*

*3. நான் எவ்விதக் காணிக்கையையும் கொண்டுவரச் சக்தியற்றவன் என்று ஒருவன் எண்ணுவதில் குறைவு என்ன? அப்படி எண்ணுவதினால் அவனுக்குண்டாகும் கெடுதியென்ன?*

# 36-39ஆம் அதிகாரம்

## கர்த்தருடைய வாசஸ்தலத்தை ஆயத்தப்படுத்தல்

***கவனிப்பு:*** *ஆசரிப்புக் கூடாரத்தின் சிறப்புகள் ஏறக்குறைய எல்லாம் 25-31 அதிகாரங்களில் முன்பு வந்த படியால் அவ்வதிகாரங்களுக்குச் சொன்ன வியாக்கியான குறிப்புகளைக் காண்க. நூதனமாய் வருகிற சில காரியங்களை மாத்திரம் இங்கே எடுத்துக் காட்டினால் போதும்.*

***1. மாதிரியின்படியே வெகு திட்பநுட்பமாய் வேலை செய்வது.*** *25-31: அதிகாரங்களோடு 36-39 அதிகாரங்களைக் கவனமாய் ஒத்துப்பார்த்தால் முன்பு வந்த வருணணை, வாசகம், வார்த்தைகள் எல்லாம் பிந்தின இவ்வதி காரங்களில் மறுபடியும் வருகிறதென்று தெரியவரும்.*

உதாரணமாக, *26*ஆம் அதிகாரத்தோடு *36:8-38*உடன் ஒத்துப்பார்க்க. *26:1*இல் 'திரித்த மெல்லிய பஞ்சு நூலினாலும் இளநீல நூலினாலும் இரத்தாம்பர நூலினாலும் சிவப்பு நூலினாலும் நெய்யப்பட்ட பத்து மூடுதிரைகளால் வாசஸ்தலத்தை உண்டுபண்ணுவாயாக' என்று கர்த்தர் கற்பித்தபடியே, 'திரித்த மெல்லிய பஞ்சு நூலினாலும் இளநீல நூலினாலும் இரத்தாம்பர நூலினாலும் சிவப்பு நூலினாலும் பத்து மூடுதிரைகளைப் பண்ணினான்' என்று வாசிக்கிறோம் *(36:8)*. ஒவ்வொரு காரியத்திலும் அப்படியே.

அதாவது பெசலேயேல் முதலானவர்கள் வேலை செய்யும்பொழுது, பொதுவாக தேவ மாதிரியைப் பார்த்து வேலை செய்யாமல், அதை நுட்பமாய்க் கவனித்துப் பார்த்து, ஒன்றிலாவது அதை விட்டு விடாதபடி, அதிக கரிசனையோடும் ஜாக்கிரதையோடும் அதற்குச் சரியாகவே வேலைசெய்தார்கள் *(25, 40; எபி. 8:5)*.

நாம் தேவனுடைய வாசஸ்தலமாயிருக்க வேண்டுமானால் *(1 கொரி. 3:16, 17; 6:19; 2 கொரி. 6:16; வெளி. 21:3)*. பரிசுத்த இரட்சகர் காட்டின மாதிரியின்படியே நாம் இருக்கவும் நடக்கவும் வேண்டியது அவசியம்; நம்முடைய குணகிரியைகள் யாவும் அவருடைய குணகிரியைகளுக்கு ஒப்பாயிருக்க வேண்டும் *(யோவான் 13:15; 1 பேதுரு 2:21; 1 யோவான் 2:6; 4:17)*. அவரோடு ஐக்கியப்படுகிற விசுவாசிகளுக்கு இது தேவ ஆவியால் ஆகும் *(2 கொரி. 3:17, 18)*.

மேலும், கர்த்தருக்கென்று ஆவிக்குரிய வாசஸ்தலத்தை ஆயத்தப்படுத்தும் ஊழியக்காரியங்களிலும் *(எபே. 2:20-22; 1 பேதுரு 2:4, 5)*. நம்முடைய சுயயோசனையின்படி வேலைசெய்யாமல் அருள்வேதத்தில் காட்டின மாதிரியின்படியே நாம் வேலை செய்யவேண்டும். இந்தச்

சிறந்த மாதிரி முக்கியமாக நான்கு! சுவிசேஷங்களிலும் நடபடி புத்தகத்திலும் காட்டப்பட்டிருக்கிறது.

*2. வெளிப்புறத்தைப் பார்க்கிலும் உள்புறந்தான் மிகவும் சிறந்தது:* பொன் எல்லாம் வாசஸ்தலத்துக்குள்ளே உபயோகமானது *(36, 37 அதிகாரங்களை காண்க).*

உள்ளேநின்று தட்டுமுட்டுகளில் சிலது பொன்னினால் செய்யப்பட்டும். இன்னும் சிலது பொன்தகடுகளால் மூடப்பட்டிருந்தன. ஆகவே, உட்புறம் எல்லாம் பொன்மயமாயிருந்தது. வெளிப்பக்கத்திலோ வெள்ளியும் வெண்கலமும் உபயோகமானது *(அதி. 38).* அதுவும் நல்லதும் காரியத்துக்கு ஏற்றதுமாயிருந்தபோதிலும், உள்புறந்தான் அதிக அழகும் அலங்காரமுமாயிருந்தது.

எத்தனையோ ஜனங்களுடைய காரியம் இதற்கு முற்றிலும் பேதமாயிருக்கிறது. வெளிப்பார்வைக்கு பக்திமான்களாய்க் காணப்படுகிறார்கள்; உள்ளத்திலோ மெய் பக்தியில்லாதவர்களாயிருக்கிறார்கள் *(மத். 23:25-28; அப். 5:1, 2; 2 தீமோ. 3:5).*

'இராஜகுமாரத்தி உள்ளாகப் பூரணமகிமையுள்ளவள்; அவள் உடை பொற்சரிகையாயிருக்கிறது' என்பதுபோல *(சங். 45:13),* நம்முடைய வெளியரங்கமான கிரியைகள் நன்றாயிருப்பதுமன்றி, விசேஷமாய் நம்முடைய உள்ளான பக்தி சிறந்து விளங்கவேண்டும் *(எபே. 3:16-19;* கொலோ. *3:10).*

*3. வெண்கலத்தொட்டி ஸ்திரீகளின் தர்ப்பணங்கலால் உண்டாக்கப்பட்டது. 38:8:*

நம்முடைய முகத்தைப் பார்ப்பதற்கு நாம் கண்ணாடிகளை உபயோகம் செய்வதுபோல அவர்கள் வெண்கலத் தர்ப்பணங்களை உபயோகிப்பார்கள்.

இந்த ஸ்திரீகள் தங்கள் முகத்தைப் பிரியத்தோடு பார்ப்பதையும் தங்களை பெருமையோடு அலங்கரித்துக் கொள்வதையும் விட்டுவிட்டுத் தங்கள் தர்ப்பணங்களை கர்த்தருடைய காரியத்துக்கென்று கொடுத்துவிட்டார்கள். முன்பு வீண் பெருமைக்கும் சுயசிநேகத்துக்கும் ஏதுவாயிருந்த பொருள்கள் இதினால் தேவனுடைய மகிமைக்கும் ஆசாரியருடைய சுத்திகரிப்புக்கும் அனுகூலமாயினவென்று காண்கிறோம். அவ்வாறு, நம்மை சோதனைக்கு இட்டுச்செல்லும் காரியங்கள் இனி நமக்கு வேண்டாமென்று இரட்சகர் இயேசு பெருமானுடைய திருப்பாதத்தில் வைத்துவிடுவோமென்றால் அவருடைய பரிசுத்த நாமம் மகிமைப்படுவதற்கு அவைகள் அனுகூலமாகலாம் (*லூக்கா. 7:37, 38; 19:8, 9; பிலி. 3:4-11*).

ஸ்திரீகளுடைய காணிக்கை எவ்வளவோ விசேஷம் (*35:22, 25, 26*). அவர்களுடைய தர்ப்பணங்களால் செய்யப்பட்ட ஞானஸ்நானத்தொட்டியில் தேவனுடைய பணிவிடைக்காரர் தினந்தோறும் தங்கள் கைகளையும் கால்களையும் கழுவித்தான் கர்த்தருடைய சந்நிதானத்தில் பிரவேசிக்கவேண்டும். அதில்லாமல், ஆராதனையும் நடக்காது; பலியுமிராது, தேவாசீர்வாதமும் உண்டாகாது.

**4. பொன்னையும் வெள்ளியையும் வெண்கலத்தையும் தொகை பார்ப்பது.** *38:24-31:*

செலவான பொன் *29* தாலந்தும் *730* சேக்கலுமாம் (*வச. 24*); அதாவது! குறைந்தபட்சம், இருபத்தேழு லட்சம் ரூபாயைப் பெறத்தக்க பொன்.

சபையில் எண்ணப்பட்டவர்கள் கொடுத்த வெள்ளி *100* தாலந்தும் *1775* சேக்கலுமாம் (*வச. 25*) அதாவது, ஆறு லட்சம் ரூபாய்க்கு அதிகம் பெருமான வெள்ளி, (இந்தப் பாவநிவர்த்தி பணத்தைத்தவிர நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட வெள்ளிக் காணிக்கையும் வந்ததாகத் தோன்றுகிறது (*35:24*).

காணிக்கையாகச் செலுத்தப்பட்ட வெண்கலம் *70* தாலந்தும் *2400* சேக்கலுமாம் *(வச. 29)*. அதின் விலை நமக்குத் தெரியாது.

இவ்விதமாய், ஆசரிப்புக் கூடாரவேலைக்குக் கொடுக்கப்பட்ட பொன், வெள்ளி, வெண்கல முதலானதைக் கர்த்தர் திட்டமாய்க் கவனித்துத் தொகையிட்டுத் தமது கணக்கில் எழுதி வைத்திருக்கிறார். மீட்கப்பட்ட விசுவாசிகள் மன உற்சாகத்தோடும் நன்றியறிதலோடும் கொடுக்கிற தானங்களையும் செய்கிற ஊழியங்களையும் அவர் மறக்கிறவரல்ல *(மத். 26:13; அப். 9:36, 39; 2 கொரி. 8:1-4; எபி. 6:10)*.

***5. பரிசுத்த நெற்றிப்பட்டம் கடைசியில் செய்யப் பட்டது***. *39:30-32:* மற்றெல்லாம் தட்டுமுட்டுகளையும் வஸ்திரங்களையும் செய்தபின்பு பரிசுத்த கிரீடத்தின் பட்டத்தையும் பசும் பொன்னினாலேபண்ணி, கர்த்தருக்குப் பரிசுத்தம் என்னும் எழுத்துக்களை அதிலே முத்திரை வெட்டாக வெட்டி, அதை உயரப் பாதையின்மேல் கட்டும்படி இளநீல நாடாவினால் கட்டினார்கள் என்று சொல்லியிருக்கிறது. வேலையெல்லாம் இப்படி முடிகிறது தகுதியான காரியம். அந்த வேலையிலெல்லாம் 'கர்த்தருக்குப் பரிசுத்தம்' என்ற மேல்விலாசம் எழுதுவது போலிருந்தது.

நாம் என்னவேலை செய்தாலும் எங்கே போனாலும் கர்த்தருக்குப் பரிசுத்தமுள்ளவர்களாய் விளங்குவது அவசியம் *(2 இரா. 4:9; அப். 4:13; 1 கொரி. 10:31; கொலோ. 3:17)*.

தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி *(பிலி. 1:10)*. நாம் உத்தம விசுவாசிகளாய் ஊழியம் செய்து கர்த்தருடைய வாசஸ்தலமாகிய ஆவிக்குரிய கட்டட வேலையை நிறைவேற்றி வருவோமாக *(1 கொரி. 3:10-17)*.

*6.* **நடந்த வேலையைப் பரிசோதித்துப் பார்ப்பது.** *39:33-43:*

இவ்வதிகாரத்தில் திரும்பத் திரும்ப வருகிற வாசகம் என்னவென்றால், கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே என்பது *(வச. 1, 5, 7, 21, 26, 29, 31, 32, 42, 43).*

*இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் சுயபிரியத்தின்படியும் யோசனையின்படியும் ஒன்றையும் செய்யாமல் சகலத்தையும் செய்து முடித்தார்கள்.*

*பின்பு, 'மோசே அந்த வேலைகளையெல்லாம் பார்த்தான்; கர்த்தர் கற்பித்தபடியே அதைச் செய்திருந்தார்கள்.'*

அலங்காரமான பெரிய கட்டடம் ஒன்று கட்டி முடிந்தபின்பு, அதற்கு எழுதப்பட்ட மாதிரியை முதலாளியானவன் தன் கையில் வைத்துக்கொண்டு கட்டடத்தைப் பரிசோதித்துப்பார்த்து, கட்டுமான வேலை எல்லாம் அந்த மாதிரியின்படியே நடந்திருக்கிறதாவென்று நுட்பமாய்க் கவனிப்பதுபோல, மோசே ஆசரிப்புக் கூடாரத்தைப் பரிசோதித்தபின் கர்த்தர் காட்டின மாதிரியின்படியே யாவும் செய்தாயிற்றென்று கண்டறிந்து சந்தோஷப்பட்டான்.

நம்முடைய சுவிசேஷ ஊழியம்செய்து முடிந்தபிற்பாடு பரம எஜமான் அதைப் பரிசோதித்துப் பார்ப்பார். அவர் வேதத்தில் காட்டின பரிசுத்த மாதிரியின்படியே வேலை செய்தவனுக்கோ நஷ்டமும் நிர்ப்பந்தமும் வரும் *(1 கொரி. 3:9, 15; 2 தீமோ. 2:5, 15).*

*7.* **விசேஷித்த ஆசீர்வாதம் கூறப்படுவது.** *39:43: 'மோசே அவர்களை ஆசீர்வதித்தான்.'*

உண்மையோடும் ஜாக்கிரதையோடும், 'கர்த்தர் கற்பித்தபடியே, வேலை செய்த ஆள்களுடைய காதுக்கும்

மனதுக்கும் அந்தத் தலைவன் கூறின ஆசீர்வாதமான மொழிகள் எவ்வளவோ இன்பமாயிருக்கும்.

அதைப்போல, ஆண்டவர் புகழ்ந்து வாழ்த்தும் ஊழியக்காரர் ஆனந்த பரவசமாவார்கள் (மத். 25:21, 28; 1 கொரி. 4:1-5; 2 தீமோ. 4:7, 8; 1 பேதுரு 5:4).

**கேள்விகள்:**

*1. இவ்வதிகாரங்களிலுள்ள ஒவ்வொரு பொருள்களின் ஆவிக்குரிய போதனையையும் முன்படித்த அதிகாரங்களில் மறுபடியும் பார்த்து எழுதவும்.*

*2. விவரங்கள் முன் அதிகாரங்களில் எழுதியிருந்த போதிலும் வேலைகளை செய்யும்போது மறுபடியும் எழுதப்பட்டிருக்கின்றன. இதன் பயன் என்ன? நமது கிறிஸ்தவ வேலையிலும் ஜீவியத்திலும் நாம் பின்பற்றதக்க முன்மாதிரி இதில் உண்டா?*

*3. அதி. 36:6 "இனி புருஷர்களாவது ஸ்திரீகளாவது பரிசுத்த ஸ்தலத்திற்கென்று காணிக்கையாக ஒருவேலையும் செய்யவேண்டாம்.'' 'ஒரு வேலையும்' என்பது ஆஸ்தியையா, கைவேலையையா காண்பிக்கும்? கைவேலையானால் எந்தவகுப்பார் இதை அநேகமாய்ச் செய்திருப்பார்கள்? இப்படிப்பட்ட காணிக்கைகள் இக்காலத்தில் அதிகமா, குறைவா?*

*4. அதி. 38:8 ஆசரிப்புக் கூடாரம் கட்டப்படுவதற்கு முன் அதின் வாசலில் ஸ்திரீகள் எப்படிக் கூட்டமாய்க் கூடமுடியும்? எந்த ஆசரிப்புக் கூடாரத்தைப்பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறது?*

*5. அதி. 38:25-28: மனப்பூர்வமான காணிக்கைகள் அதிகமாயிருந்தும், ஒவ்வொரு ஆளிடத்திலும் அவர்கள் வீதப்படி வசூலித்தார்கள், இக்காலத்திலும் அவ்விதமான வசூலுக்கு நியாயமுண்டா?*

# 40ஆம் அதிகாரம்

## வாசஸ்தலம் தேவமகிமையால் நிரப்பப்படுதல்

**கவனிப்பு:** இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷம் 'முதலாம் மாதம் முதல் தேதியில்' (வச. 2). இந்த காரியங்கள் நடந்தபடியால், ஆசரிப்புக் கூடாரத்தை உண்டுபண்ணும் சகல வேலைகளும் ஆறுமாதத்துக்குள்ளே முடிந்திருக்கவேண்டும். ஏனெனில் அவர்கள் சீனாய் மலையில் வந்து சேர்ந்து ஒன்பது மாதமாத்திரமாயிற்று (19:1). அதிலே மோசே எண்பது நாள் மலையின்மேல் தேவ சமுகத்தில் தங்கினான். (24:18; 34:28). அதோடுகூட நியாயப்பிரமாணம் அருளப்படுவதற்கும் உடன்படிக்கைகள் நடப்பதற்கும் நாள்கள் செல்லும் (19:1 24:11). இப்படிப் பார்க்கும்பொழுது, இந்த வேலை மகா உற்சாகத்தோடும் சர்வ ஜாக்கிரதை யோடும் நடந்ததென்பது பிரத்தியட்சமான காரியம் (யோவான் 9:4; எபே. 5:16).

I. **கர்த்தருடைய கட்டளை.** *வச. 1-15: 'வை'-'வை' 'வை'.*

தெளிவும் திட்டமுமான கட்டளை. செய்யவேண்டிய காரியங்களை ஒவ்வொன்றாகக் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

1. 'வாசஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ணு.' வச. 2.

2. 'சாட்சிப்பெட்டியை அதிலே வை.' வச. 3.

3. 'பெட்டியைத் திரையினால் மறை.' வச. 3.

4. 'மேசையைக் கொண்டுவந்து. வை.' வச. 4.

5. 'குத்துவிளக்கைக் கொண்டுவந்து ... ஏற்று.' வச. 4.

*6. 'தூபபீடத்தைச் சாட்சிப்பெட்டிக்கு முன்னே வை.' வச. 5.*

*7. 'வாசலின் தொங்குதிரையைத் தூக்கி வை.' வச. 5.*

*8. 'தகனபலிபீடத்தை ... வாசலுக்கு முன்பாக வை.' வச. 6.*

*9. 'தொட்டியை ... வைத்து, அதிலே தண்ணீர் வார்.' வச. 7.*

*10. 'சுற்றுப்பிரகாரத்தை நிறுத்தி ... வாசல் தொங்கு திரையைத் தூக்கி வை.' வச. 8.*

*11. 'அபிஷேக தைலத்தையெடுத்து வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவையும் அபிஷேகம்பண்ணு.' வச. 9.*

*12. 'தகன பலிபீடத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும் அபிஷேகம்பண்ணு.' வச. 10.*

*13. 'தொட்டியையும் அதின் பாதத்தையும் அபிஷேகம் பண்ணு.' வச. 11.*

*14. 'ஆரோனையும் அவன் குமாரரையும் ... அபிஷேகம் பண்ணு.' வச. 12-15.*

இவ்வாறு நடக்கவேண்டிய காரியங்களைத் தேவன் வெகு திட்டவட்டமாக வரிசைப்படுத்திக் காண்பித்தார். அவர் கட்டளையிட்ட வார்த்தையின்படியும் வரிசையின் படியும் மோசே செய்தால்மாத்திரம் அவர் அங்கே எழுந்தருளி மகிமையோடே வாசம்பண்ணுவார். பரிசுத்த கர்த்தர் நம்மில் வாசம் செய்யவேண்டுமென்று நாம் விரும்புவோமானால், அவருடைய வார்த்தையின்படி நம்முடைய காரியங்களை எல்லாம் நாம் கிரமப்படுத்தி அவருடைய நல்ல கற்பனைகளைக் கைக்கொள்ளக் கடவோம் (யோவான் 14:21-23).

தகுந்த ஆயத்தமும் கீழ்ப்படிதலும் விளங்கும் போதுமாத்திரம் மகிமையின் இராஜா உட்பிரவேசிப்பார் *(சங். 24:4-10; ஆகாய் 1:72:9).*

II. **மோசேயினுடைய செய்கை.** *வச. 16-33:*

*1.* **கட்டளையின்படியே செய்தான்:**

'கர்த்தர்...கற்பித்தபடியே' என்ற வாசகம் எட்டுவிசை இங்கே வருகிறது *(வச. 16, 19, 20, 22, 24, 26, 28, 32).* வச. 2-15இல் காட்டிய வரிசையின்படி ஒன்றிலும் தவறாமல், வாசஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ணி, பணி முட்டுகள் ஒவ்வொன்றையும் அதனதன் ஸ்தானத்தில் வைத்தான். விசுவாசத்தோடுகூடிய கீழ்ப்படிதல் மிகவும் முக்கியமானது *(அப். 5:32; ரோமர் 1:7; 1 பேதுரு 1:2).*

2. **குறைவறச் செய்தான்.** முதற்பாகத்தில் *(வச. 2-15).* வராத சில விவரங்கள் இந்தப் பாகத்தில் வருகின்றன. உதா. "பெட்டியின் மேல் கிருபாசன மூடியை வைத்தான்." வச. 20. "அப்பத்தை வரிசையாக அடுக்கி வைத்தான்." வச. 23. "சுகந்தவர்க்கத்தினால் தூபங்காட்டினான்." வச. 27. "சர்வாங்க தகனபலியையும் போஜனபலியையும் செலுத்தினான்." வச. 29 முதலியவை. வச. 17-33 கவனமாய் வாசித்தால், மோசே வெகு கரிசனையாயும் பூரணமாயும் இக்காரியங்களிளெல்லாவற்றையும் செய்தானென்று தெரியவரும்.

கர்த்தர் நமக்குள் எழுந்தருளி மகிமையோடு வாசம் பண்ணுவது மேன்மையான காரியமல்லவா? ஆகையால் அதற்கு ஏதுவான சகல யத்தனங்களையும் ஊழியங்களையும் நாம் குறைவறச் செய்வது நியாயமும் அவசியமுமாமே *(லூக்கா 3:4-6; ரோமர் 12:6-8; 1 கொரி. 9:16, 17; 2 கொரி. 4:1-11; 6:1-10).*

*3.* **வேலையை முடித்தான்.** *வச. 33.* இதிலே நாம் கவனிக்கத்தக்க காரியம் இரண்டு:

அ. மனிதன் செய்யவேண்டியதை அவன் செய்து முடித்தபின்பு மாத்திரம் தேவன் மகிமையோடே எழுந்தருளுவார் *(யோவான் 2:7-11; 11:39-44; அப். 1:4, 5, 14; 2:1-4; 8:5-8; 14-16; 10:3-8, 24, 44-16).*

ஆ. மனிதன் தன் வேலையை எல்லாம் முடித்தாலும், வாசஸ்தலத்தைப் பரிசுத்தமாக்கவும் மகிமையால் நிரப்பவும் அவனால் சற்றாகிலும் முடியாது *(எபி. 4:10; 2 கொரி. 4:7; கலா. 3:14).*

III. **தேவனுடைய மகிமை.** *வச. 34-38:*

*1.* **சமயம்.** *வச. 34.* 'அப்பொழுது' அதாவது:

அ. மனுஷன் செய்யவேண்டியதெல்லாம் செய்து முடிந்த பொழுது. *(2 இரா. 3:16-20; 4:31-33; 1 இரா. 7:51, 8:11; அப். 19:1-7).*

ஆ. மனுஷன் தன் கிரியைகளையெல்லாம் விட்டோய்ந்தபொழுது, *(1 இரா. 18:31-39; ஏசாயா 41:17-20; எபி. 4:10).*

*2.* **சம்பவம்.** *வச. 34, 35;* "ஒரு மேகம் ஆசரிப்புக் கூடாரத்தை மூடினது; கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று."

'மேகம்' கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம் *(யாத். 14:20; 19:9; 24:15; 34:5; சங். 97:2; 104:3).*

'மகிமை' கர்த்தருடைய பரிபூரணத்திற்கு அடையாளம் *(ஏசாயா. 6:3; 60:2; யோவான் 1:14, 1:6; எபி. 1:3; கொலோ. 1:19).*

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அந்த மேகம் 'தங்கவும்' அந்த மகிமை நிரப்பவும்' வந்தது *(வச. 35).*

முன்பு மறுரூபமான மோசே முதலாய் *(34:1, 2)* 'ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கக்கூடாமலிருந்தது.

இதைப் பார்க்கிலும் மேன்மையான காரியங்கள் கிறிஸ்து இரட்சகர்மூலமாய் மெய் விசுவாசிகளுக்கு அருளப்பட்டிருக்கின்றன. சகல தேவ பரிபூரணமும் தம்மில் வசிக்கப்பெற்ற தேவகுமாரன் *(கொலோ. 1:19).* நம்முடைய இருதயங்களை வாசஸ்தலமாகத் தெரிந்துகொண்டு அங்கே வந்து வாசம்பண்ணி *(எபே. 3:17),* தமது பரிபூரண மகிமையால் நம்மை நிரப்பிப் பூரிப்பாக்குகிறார் *(யோவான் 1:16; எபே. 3:19).*

இவ்விதமாய், மீட்கப்பட்ட மனிதன் தேவனுடைய வாசஸ்தலமாகி அவருடைய மகிமையால் நிரப்பப் படுகிறான்.

***3. சகாயம்.*** *வச. 36-38:* அந்த மேகம் வழிகாட்டியு மாயிற்று. 'அவ்வாறு,' தங்கள் இருதயங்களில் தேவ மகிமையைப் பெற்ற உத்தம விசுவாசிகளும் அவராலே வழிநடத்தப்பட்டும் வருகிறார்கள் *(எபே. 1:20, 21; பிலிப்பு, அப். 6:3, 5; 8:26-28; பவுல், அப். 9:17; 13:2; 16:6-8; ரோமர் 8:14).*

நம்மை நிரப்பின ஆண்டவர் நம்மை வழிநடத்தியும் வருவார். அவரால் நடத்தப்பட்டவர்களுக்குச் சந்தேகமும் மனக்கவலையுமிராது *(மத். 11:2, 30).* மேகம் எழும்பும்போது பிரயாணம்பண்ணி, மேகம் எழும்பாதிருக்கும்போது தங்குவார்கள் *(வச. 36, 37).*

மேலும், இந்த நடத்துதல் 'எல்லாப் பிரயாணங்களிலும்' எல்லா விசுவாசிகளுக்கும் அருளப்படுகிறது *(வச. 38; சங். 48:18).*

*யாத்திராகமம் எவ்வளவு நன்றாய் முடிகிறது. 'பகலில் கர்த்தருடைய மேகமும் இரவில் அக்கினியும் வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருந்தது.'*

*1ஆம் அதிகாரத்தில் அடிமைகளாய்க் காணப்பட்ட ஜனங்கள் மீட்பும் விடுதலையுமடைந்து, தேவ உடன்படிக்கையால் கர்த்தருடைய சபையாகி, இந்தக் கடைசி அதிகாரத்தில் அவருடைய மகிமையால் நிறைந்த வாசஸ்தலமாய்ச் சிறந்து விளங்குகிறார்கள்.*

*கிறிஸ்துவின் திருஇரத்தத்தினாலே மீட்கப்பட்ட உத்தம சபையின் அனுபவம் அவ்வாறே. 'இதோ! மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது; அவர்களிடத்தில் வாசமாயிருப்பார்' (வெளி. 21:3).*

*அவருக்கு மகிமையும் ஸ்தோத்திரமும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.*

**கேள்விகள்:**

*1. "ஆசரிப்புக் கூடாரத்தின் வாசஸ்தலம்" "தரிசனக் கூடார வாசஸ்தலம்" (பு.தி.) என்பதைக் கவனிக்க. இதற்குமுன் ஆசரிப்புக் கூடாரம் ஒன்றிருந்தது. வசனங்களைக் குறிப்பிடுக. அதை வாசஸ்தலம்" என்று ஒருபோதும் சொல்லவில்லை.*

*2. இவ்வதிகாரத்தில் 'வாசஸ்தலம்' என்பது எத்தனை தரம் வருகிறது?*

SAMUEL BIBLE & BOOKS
Opposit Govt. Polytechnic
Palayamkottai Road
THOOTHUKUDI - 8.

சுவிசேஷ ஊழிய நூல் நிலையம் (ELS) வெளியிட்டுள்ள மிஷனரிகளின் வாழ்க்கை வரலாறுகள், வேத ஆராய்ச்சி நூல்கள், தின தியானங்கள், ஆவிக்குரிய வளர்ச்சிக்கேற்ற நூல்கள், பிரசங்கக் குறிப்புகள் மற்றும் சிறுவர் நூல்கள் அதன் தலைமையிடத்திலும், கீழ்காணும் கிளைகளிலும் கிடைக்கும்.

(முழு விலைப்பட்டியலைப் பெற்றுக்கொள்ள எழுதுங்கள்)

## கிளைகள்

**Evangelical Literature Service,**
287, Purasawalkam High Road,
Chennai - 600 007, Tamil Nadu.
Tel. : 2642 2722 / 2661 0888

**Evangelical Literature Service,**
55, Anna Salai, Chennai - 600 002
Tamil Nadu.
Tel. : 2851 4403

**Evangelical Literature Service,**
C.M.C. Hospital Compound,
Vellore - 632 004
Tamil Nadu.
Tel. : 0416-222 4808

**Evangelical Literature Service,**
Vasavi Complex,
1250, Big Bazaar Street,
Coimbatore - 641 001
Tamil Nadu.
Tel. : 0422-239 0694

**Evangelical Literature Service,**
Jeevan Complex,
84, 100 Feet Road, Gandhipuram,
Coimbatore - 641 012
Tamil Nadu.
Tel. : 0422-249 4434

**Evangelical Literature Service,**
133/1, St. John's Church Road,
Bangalore - 560 005
Karnataka.
Tel. : 080-2555 4034

**Evangelical Literature Service,**
Kesavadasapuram, Pattom. P.O.
Trivandrum - 695 004, Kerala.
Tel. : 0471-244 8916

**Evangelical Literature Service,**
Shop No.430-A3,
Ascension Square
Railway Station Road,
Collectorate P.O.
Kottayam - 686 002
Tel. : 0481-230 4790

**Evangelical Literature Service,**
F11, Dadar Manish Market,
Senapati Bapat Marg, Dadar (W),
Mumbai - 400 028
Tel. : 022-2437 9572

**Evangelical Literature Service,**
C.M.C. Hospital Compound,
Ludhiana - 141 008, Punjab.
Tel. : 0161-222 1052

**Evangelical Literature Service,**
7A/41, W.E.A., Western Chambers,
Channa Market, Karol Bagh,
New Delhi - 110 005
Tel. : 011-2573 9168

**Evangelical Literature Service,**
Satribari Christian Hospital Complex,
Kharga Choudhury Road, Satribari,
Guwahati - 781 008, Assam.
Tel. : 0361-260 3328

Pub. No. 320 - TAMIL

பரிசுத்த வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டு நூல்களுள் ஒன்றான யாத்திராகமத்திலுள்ள மறைபொருளான அநேக சத்தியங்களை, யாவரும் எளிய முறையில் அறிந்துகொள்ளும்படி, பல வருடங்களுக்கு முன்னர் மறைந்த சங்கை தாமஸ் உவாக்கர் அவர்களால் எழுதப்பட்ட வேதவாசிப்புக் குறிப்புகளை உள்ளடக்கியதே இந்நூலாகும்.

அருமையான இவ்வேதவிளக்கக் குறிப்புகள் ஏராளமான தமிழ் கிறிஸ்தவர்களுக்குப் பயனுள்ளதாகவும், ஆத்தும வாழ்வின் வளர்ச்சிக்கு ஏற்றதாகவுமிருந்தமையால், அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க முதலாவதாக தமிழ் கிறிஸ்தவ பத்திரிகையொன்றில் பகுதி பகுதியாக வெளியிடப்பட்டு, பின்பு அவைகள் தொகுக்கப்பட்டு, ஒவ்வொரு அதிகாரத்தின் இறுதியிலும் அதன் தொடர்புள்ள சில கேள்விகள் இணைக்கப்பட்டு, தற்போது ஒரே நூலாக வெளியிடப்படுகின்றது.

இன்றைய நம் வாழ்க்கைப் பயணத்திலும், பழைய ஏற்பாட்டு காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களின் வழியாக நாம் கற்று, எச்சரிப்படைய வேண்டியவைகளை இந்நூல் நமக்குத் தெளிவாக விளக்குகின்றது. யாத்திராகமப் புத்தகத்தின் உன்னதமான சத்தியங்களை கருத்துடன் ஆராய்ந்து, ஆத்மீக வாழ்வில் வளம் பெறுவதற்கு துணைநிற்கும் இந்நூலை வாஞ்சையுடன் வாசிக்கும் ஒவ்வொருவரையும் கர்த்தர்தாமே ஆசீர்வதிப்பாராக!

**BIBLE READINGS ON EXODUS**

The Rev. Thomas Walker

விலை ரூ. 45.00

36/-

**EVANGELICAL LITERATURE SERVICE**
95-A, VEPERY HIGH ROAD, CHENNAI - 600 007
Tel : 25323231, 26420173, 26420743
Fax : 91(44)26612295
E-mail : <elsindia@md4.vsnl.net.in>
Website : www.elsindiaonline.com